
அவன் ஒரு
தென்றல்
லக்ஷ்மி
பூங்கொடி பதிப்பகம்

| | |
|---|---|
| மறுபடியுமா? | 85.00 |
| மீண்டும் வசந்தம் | 100.00 |
| மீண்டும் பெண்மனம் | 70.00 |
| மோகத்திரை | 75.00 |
| ராதாவின் திருமணம் | 75.00 |
| வசந்திக்கு வந்த ஆசை | 75.00 |
| வாழ நினைத்தால் | 45.00 |
| ஸ்ரீமதி மைதிலி | 140.00 |

# அவள் ஒரு தென்றல்

தன் புது மனைவியுடன் முதல் வகுப்புப் பெட்டியில் பயணப்பட ஏற்பாடு செய்திருந்தான் முரளி.

ரெயில் நிலையத்திற்கு ரம்யாவின் பெரியப்பாவும் பெரியம்மாவும் தங்கள் இருபிள்ளைகளுடன் வந்திருந்தனர்.

திருமணமாகி முதல் முதலாக புகுந்த வீடு புறப்பட்ட எதிர் வீட்டுக் கலைவாணியை அவளது பெற்றோர்கள் வழி அனுப்பி வைத்த காட்சி ரம்யாவின் கண்முன் ஓடியது.

பெட்டிகள், படுக்கைகள், கட்டில்கள், இரும்புப் பீரோக்கள்-பாத்திரங்கள் என்று சீர்வரிசை சாமான்களை சுமந்து கொண்டு லாரி திணறியபடி வாசலில் நிற்க, சம்பந்தி வீட்டார்கள் வயிறு புடைக்க விருந்து சாப்பிட்டு விட்டு திணறியபடி விடை பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

இருபது வயது வரை வளர்த்து ஆளாக்கிவிட்ட தன் மகளை,

மஞ்சள் கயிற்றை கழுத்தில் முடிந்து விட்டான் என்ற தகுதிக்காக அவனுடன் உறவினர் புடைசூழ கூட்டி அனுப்பு கிறோமே, அவளை அவர்கள் நன்றாகக் கவனித்துக் கொள் வார்களா என்ற கவலையும் துயரமும் நெஞ்சை அடைக்க, பிரிவின் சுமையைத் தாளாது அம்மாவின் கண்கள் நீரைப் பொழிகின்றன.

அப்பா தனது தொண்டையை அடிக்கடி செருமிக் கொண்டும், உருண்டையாக அடைத்த பாசத்தின் அழுத்தத்தை விழுங்கிக் கொண்டும், வீட்டுக்குத் தலைவன் கலங்கக் கூடுமோ என்று தம்மைத் தாமே சமாதானப் படுத்திக் கொண்டு, 'சாமான்களை எடுத்து வச்சாச்சா?- பாக்கியம் அங்கே என்ன நின்னுக்கிட்டு! பரபரன்னு காரியத்தை கவனிக்காமல் என்ன பேச்சு? மீனாட்சி பலகார டப்பாக்களை எண்ணி எடுத்து வச்சியா- அதை கார் டிக்கியில் வைக்கணும். போகிற வழியிலே பசித்தால் சம்பந்தி வீட்டுக்காரங்களுக்கு சாப்பிட கட்டு சாதம் வேறே இருக்கு. அதையும் கவனிச்சு எடுத்து வை'' என்று ஆணை பிறப்பித்துக் கொண்டு இருந்தார்.

பிறகு மகளிடம் வந்தார். ''அம்மா கலைவாணி! உன் காமாட்சி விளக்கை எடுத்துட்டு போக மறக்காதே. காரில் உன் பக்கத்திலே வச்சுக்கோம்மா'' என்றார்.

அடுத்து மாப்பிள்ளையை அணுகினார். ''மாப்பிள்ளை இனி கலைவாணி உங்கள் பொறுப்பு- பார்த்துக்கோங்க. உங்களுக்கு நான் சொல்ல வேணாம். படிச்சவர் நீங்கள்'' என்று தழுதழுத்தார்.

விருந்து சாப்பிட வந்தவர் அத்தனை பேரும் மலர் தூவி வாழ்த்த, ''உம், நல்ல நேரம், கிளம்பலாமே'' என்று யாரோ இரைந்து உத்திரவிட, கலைவாணி புக்ககம் போக பிறந்த வீட்டில் சீராகத் தந்த தகடிச் சேலையை உடுத்திக் கொண்டு தங்கப் பொம்மை போல அசைந்து வந்து பெற்றோரை



வணங்கி விட்டு, மிடுக்காக முன்னால் நடந்த கணவரைத் தொடர்ந்து காரில் ஏறிக்கொண்டாள்.

''மகராசியா போய்ட்டு வாம்மா'' தெருவில் இருந்த பெரிய வயதுக்காரிகள் இரைந்து ஆசீர்வதிக்க, மண மக்களைத் தாங்கிய அந்தக் கார் புறப்பட்டது.

அந்தக் காட்சியை ஒரு பெரிய திருவிழாவைப் பார்ப்பது போல எல்லோரும் வியப்போடு பார்த்துக் கொண்டி ருந்ததை அவளால் மறக்கவே முடியாது.

ஒரு பெண்ணை புகுந்த வீடு அனுப்ப இத்தனை ஆர்ப்பாட்டங்களா?... ரம்யா அன்று அதிசயப்பட்டாள்.

ஆனால், ரம்யாவை அவள் பெரியம்மாவும் பெரியப்பா வும் புகுந்த வீடு அனுப்பிய விதம்?

சில கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள புறநகர் பகுதி ஒன்றுக்கு அனுப்புவதற்கு பஸ் நிலையத்திற்கு வந்தது போல பட்டும் படாமலும்- ஒட்டும் ஒட்டாமலும் உறவு என்ற கடமைக்காக ரெயில் நிலையத்தில் நின்றார்கள்.

அவர்களைச் சொல்லி குற்றமில்லை.

எதிர் வீட்டு கலைவாணி போல ரம்யாவுக்கு வசதியான பெற்றோர்கள் இல்லையே. வசதி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பெற்றோர்கள் என்ற உறவே இல்லாது அவளை பெரியப்பா நிழலில் வாழ விட்டு விட்டு அப்பாவும் அம்மாவும் ஒருவர் பின் ஒருவராக சிறு வயதிலேயே இறந்து போய் விட்டனர்.

ரெயில் நகரத் தொடங்கியது.

எதிர்வீட்டுக் கலைவாணிபோல, ரம்யாவின் கண்கள் நிறைய நீரை வழிய விட்டுக் கொண்டு புறப்படவில்லை.

வரிசைப் பற்கள் லேசாக மின்ன மெல்லியதாக முறுவலித்து விட்டு, ''வரட்டுமா பெரியம்மா? வரட்டுமா

பெரியப்பா வரட்டுமா'' என்று தலையசைத்து விடை பெற்றுக் கொண்டாள்.

வண்டி வேகமாக நகர, இரவில் இங்கும் அங்கும் பளிச்சிட்ட விளக்குகள் நிறைந்த சென்னை, கொஞ்சம் கொஞ்சமாக தன்னைவிட்டு நகர்வதை ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டு இருந்தாள். சில்லென்ற காற்று கூந்தலைப் புரட்டிக் கொண்டு அவள் முகத்திலே வேகமாக மோதியது.

''அப்பாடா'' அடிமை வாழ்க்கையில் இருந்து ஒரு விடுதலை என்று அவளுள் ஒரு நிம்மதி நிலவியது.

''சாமான்களை எல்லாம் சரியாக இருக்கான்னு பார்த்துட்டியா?'' முரளி கேட்டபோது ரம்யாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. சாமான்களா அவை?... அவளது துணிகள் கொண்ட ஒரு பெட்டி, ஒரு சிறு கூடைக்குள் ஒரு பொட்டலத்தில் கல்யாணத்தில் மீதமான சில லட்டுகளும், முறுக்கும் சுற்றி வைக்கப்பட்டு இருந்தன. இரண்டு வாலையிலை பொட்டலத்தில் வழிப்பயணத்துக்கு சாப்பிட தயிர் சோறு, ஒரு தண்ணீர் பாட்டில், இரண்டு சாத்துக்குடி பழம், அவை நடுவே... பேய் பிசாசுகளை விரட்ட ஒரு கொத்து வேப்பிலை குலதெய்வத்தின் விபூதி குங்கும பிரசாத பொட்டலங்கள், இவைதான் அவளுடைய சாமான்கள்.

கல்யாணத்திற்கு முரளி வாங்கித் தந்த கூரைப்புடவையும்- அவளது தாயின் காமாட்சி விளக்கும் பத்திரமாக இருந்தன. அவளது கைப்பையில் சோப்பு, சீப்பு, கண்ணாடி, பவுடர் என்ற ஒப்பனைப் பொருள்கள் பத்திரமாக வைக்கப்பட்டு இருந்தன.

நகைகள்...?

பொன் தோய்த்த மணிகூட அவளுக்கு பெரியப்பா விட்டில் ஏதும் போட்டு அனுப்பவில்லை. கழுத்தில் தொங்கிய தாலியைத் தவிர அவள் காது கழுத்து கை எல்லாவற்றையும் கவரிங் நகைகள் அலங்கரித்தன.



அவள் தாய் இறக்கும் முன் தன் கழுத்தில் கிடந்த இரட்டைச்சர தங்கச் சங்கிலியையும், கையில் இருந்த இரண்டு தங்க வளையல்களையும் மகளுக்கு சொத்தாக விட்டு விட்டுப் போயிருந்தாள். ஆயிரம் ரூபாய் வேறு மகளின் கல்யாண செலவுக்குத் தந்து விட்டுப் போயிருந்தாள்.

''பூ! ஆயிரம் ரூபாயில் இந்த காலத்தில் ஒரு சேலைகூட எடுக்க முடியாது. அரைக் காசில் கல்யாணமாம். அதில் கொஞ்சம் வாணவேடிக்கையாம்...'' என்று அவள் காதுபட பெரியம்மா நீலா பலமுறை சாடியிருக்கிறாள் அதைப் பற்றி.''

தம்பி, அண்ணா, அக்கா, தங்கை இந்த உறவினர்கள் ஒருவருக்கொருவர் பாசத்தைப் பொழிந்து ஒருவர் வாழ மற்றவர் தியாகத்தில் உருகி செத்து மடிவதெல்லாம் சினிமாப் படத்திலும்- சில கதாசிரியர்களின் கதைகளிலும் வரும் கண்ணீர் சரக்குகள். உண்மை வாழ்க்கையில் அண்ணனாவது தம்பியாவது- அவரவர்கள் சுகம் அவரவர்களுக்கு.

பெற்றவர்களை இழந்து போக்கிடம் இல்லாது பெரியப்பாவின் நிழலில் ஒண்டிக் கொண்டு இருந்தாள், ரம்யா.

அவளை அவர்கள் தங்கள் தலையில் சுமத்தப்பட்டதொரு பாராங்கல்லாக எண்ணியதில் வியப்பில்லை.

ரம்யாவும் ஒரு தவறு செய்து விட்டிருந்தாள். பெற்றோரைச் சிறுவயதில் இழந்து விட்டதின் பாதிப்போ? உண்மை அன்புக்கு ஏங்கித் துடித்த இளமைப் பருவத்தின் கோளாறோ?

அவள் செய்தது மிகமிகத் தப்பானதொரு காரியம்.

பெரியம்மா அவளை புகுமுக வகுப்புடன் நிறுத்தி விட்டு, வீட்டில் தனக்கு உதவியாக இருக்க வைத்திருந்தாள்.

பெரியம்மாவுக்கு இரண்டும் பிள்ளைகள். மூத்தவன் என்ஜினியர் பட்டம் பெற்று ஒரு பெரிய நிறுவனத்தில் வேலைக்கு அமர்ந்து கொண்டு இருந்தான். இளையவன் பி.காம். இறுதி ஆண்டில் படித்துக் கொண்டு இருந்தான். பெரியப்பா இன்னும் சில ஆண்டுகளில் வேலையில் இருந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டி வந்து விடும். அதற்குள் பிள்ளைகள் முன்னுக்கு வந்து விட்டார்கள்.

ஆனால், தம்பி விட்டுப்போன இந்தப் பெண் ரம்யா?

அவருக்கு அவளைப்பற்றி உள்ளூரக் கவலையாகத்தான் இருந்தது. மேலே கல்லூரிப் படிப்பு கொடுத்து பட்டதாரி யாக்க பெரியம்மாவுக்கு மனம் இருக்கவில்லை.

வரதட்சணை சல்லி காசு இல்லாமல் எவன் கட்டுவான் என்ற கவலையும் அவளைப் பிடுங்கித் தின்றது.

சாதாரணமாக பெரியம்மாவின் வார்த்தைக்கு பெரியப்பா சரியென்று தலையாட்டுவது அந்த வீட்டின் வழக்கம். பெரியம்மாவுக்கு அவர் பயந்தவர்.

அருகில் இருந்த தட்டெழுத்து நிறுவனம் ஒன்றுக்கு ரம்யாவை அனுப்பி பயிற்சி பெற செய்தால், அவரால், அவருடைய நண்பர் சிபாரிசின் மூலம் எங்கேயாவது ஒரு அலுவலகத்தில் தட்டெழுத்தராக சேர்த்துவிட முடியும். அவளே கொஞ்சம் சம்பாதிக்கத் தொடங்கினால், அதை சேர்த்து வைத்து வரதட்சணை, கல்யாண செலவுக்கு ஒப்பேத்தி விடலாம் என்ற யோசனையை பெரியப்பாதான் சொன்னார்.

முதல் முதலாக பெரியம்மா அவர் வார்த்தைக்குக் கட்டுப் பட்டு தலைஅசைத்து அனுமதி வழங்கி விட்டாள்.



பள்ளிக்கூடம், பின் கல்லூரி... அதற்குப் பின் வீடு என்று சுழன்றபடி வாழ்ந்த ரம்யா முதல் முதலாக தன்னிச்சையாக, அந்த தட்டெழுத்து நிறுவனத்துக்குப் போய்வரத் தொடங் கினாள்.

''சன்னலை சாத்தவா- காத்து ரொம்ப குளிருதில் லையா?'' பரிவுடன் கேட்டபடி அருகில் வந்து சன்னலை சாத்தினான் முரளி.

அந்த முதல் வகுப்பு பெட்டியில் இன்னமும் இரண்டு பேர்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் ஏதோ அலுவல் காரணமாக அவசரமாக வெளியூர் போகும் இள வயதினர். ஆளுக்கு ஒரு சிறு கைப் பெட்டியுடன் வந்திருந்தனர்.

பெண்பிள்ளை ஒருத்தி பெட்டியில் அவர்களுடன் இருப்பதைக் கண்டு சங்கடப்பட்டவனாக ஒருவன், ஒரு சிறு துணிப் பையுடன் பாண்ட், சட்டை ஆகியவற்றை துணிப் பையில் மடித்து வைத்துக் கொண்டு கழிவறைப்பக்கம் ஓடினான். சிறிது பொழுதில் படுக்க சவுகரியமாக லுங்கி பனியனுடன் உள்ளே வந்தான்.

''கொஞ்சம் நகருகிறீங்களா சார்'' என்று முரளியை எழுப்பி விட்டு அவன் மேல் பலகையை பொருத்திக் கொண்டு ஒரே தாவலில் ஏறி உயரப் படுத்துக் கொண்டான். பெட்டியைத் தலையணையாக வைத்துக் கொண்டு அவன் உறங்கத் தொடங்கி விட்டான். அடுத்தவன் பக்கத்து பெட்டியில் இருந்த நண்பர்களுடன் அரட்டையடிக்க எழுந்து போய் விட்டிருந்தான். அவன் வந்து ரம்யாவை எழுந்திருக்க சொல்லுமுன் முரளி முந்திக் கொண்டான். ''இப்படி இந்தப் பக்கம் உட்கார்'' என்று அவளை எழுப்பி எதிர் ஆசனத்தில் சன்னல் ஓரமாக உட்கார வைத்தான். பிறகு பலகையை நிமிர்த்தி வரப்போகிறவனுக்கு படுக்கத் தயாராக கொக்கியில் தொங்க விட்டு உட்கார்ந்தான்.

அவனுக்கு அவளிடம் ஒரு வார்த்தை மனம் விட்டுப் பேச இன்னமும் வாய்ப்பு அமையவில்லை.

காலையில்தான் அவர்களது திருமணம், பெரியப்பா வசித்த தெருக் கோடியில் இருந்த அம்மன் கோவில் கல்யாண மண்டபத்தில் நடந்தது. பகல் உணவுக்குப் பின் வீட்டுக்கு வந்தனர். உடனடியாக அவளது பெட்டி மற்ற சாமான்களைக் கட்டிக் கொடுத்து கணவனுடன் புகுந்த வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள்.

அவளுக்கு முரளி ஒரு சில மணி நேரமே அறிமுகமான ஒரு மனிதன்.

பெண் பார்க்கும் படலத்தின் போதும், சில நிமிடந்தான் அவனை அவள் பார்க்க அனுமதிக்கப்பட்டாள். அவனும் அவளைக் கொஞ்ச நேரம்தான் பார்க்க முடிந்தது. அவனைப் பிடிக்கிறதா? என்று பெரியம்மா ஒப்புக்குக்கூட கேட்க வில்லை.

நாங்கள் பார்த்து சரி என்றால் நீ கழுத்தை நீட்டி விட்டு இங்கிருந்து அவனுடன் கிளம்ப வேண்டியது என்கிற வீம்பு பெரியம்மாவுக்கு.

அந்த அனுபவத்திற்குப் பிறகு அவள் எந்த ஆணையும் நம்பப் போவதில்லை என்று தன்னுள் உறுதியாகத் தீர்மானித்து விட்டிருந்தாள்.

அவளை நீண்ட காலம் வீட்டில் வைத்துக் கொண்டு கவலைப்படப் போவதில்லை. வந்த வரன் தலையில் கட்டி வெளியே ஓட்டி விட வேண்டியது என்பது பெரியம்மாவின் முடிவு.

''பசித்தால் தயிர் பொட்டலத்தை எடுத்து சாப்பிடு. எனக்குப் பசிக்கலை'' சொல்லிக் கொண்டே முரளி தண்ணீர் பாட்டிலை எடுத்துத் திறந்து சிறிது பருகி விட்டு மூடி கூடைக்குள் வைத்தான்.



''எனக்கும் பசிக்கலை... சாப்பாடு வேண்டாம்'' பட்டென்று கூறி விட்டு அவள் சன்னல் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

''யாருக்காவது ஏழை பாழைங்களுக்கு சாப்பாட்டை கொடுத்து விடலாமா?''

''செய்யுங்கள் இதென்ன கேள்வி...'' என்பதுபோல அவள் அவனைத் திரும்பிப் பார்த்து வெறித்தாள்.

இப்படித்தான் பரிவாக குழைவாக அன்பாக பேசுவது போல நடித்தான் அந்தக் கயவன் கபாலி.

ரம்யா வசித்த தெருவைத் தாண்டி நெடுஞ்சாலையில் தான் அந்த தட்டெழுத்து நிறுவனம் ஒரு ஐந்தடுக்கு கட்டடத்தில் இரண்டாவது தளத்திலே இருந்தது. மற்ற மேல் தளங்களில் அலுவலகங்கள் இருந்தன. கீழ்ப்பகுதியில் கடைகள்.

மூன்றாவது தளத்தில் இருந்த மின்விசைப் பொருள் அலுவலகம் ஒன்றில் கபாலி மேற்பார்வையாளராக வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன் மாடிப்படிகளில் இறங்கியபோது அவள் மீது மோதிக் கொள்ளும் வேகத்தில் இறங்கிய கபாலி ''மன்னிக்கவும்'' என்று தடுமாறினான்.

வெள்ளை பாண்ட்டும்- வெளிர்நீல சட்டையும் அணிந்து கச்சிதமாகக் காணப்பட்டான்! சுருண்ட முடியும் அரும்பு மீசையும் அவனுக்கு ரொம்பவே அழகாக இருந்தன. மாநிற மேனி- ஆனாலும் சிரித்தபோது களைகட்டிய முகம். பார்த்த அளவிலேயே அவளுக்கு ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது.

அடுத்த நாள் படிகளில் அவசரமாக இறங்கி ஓடியவன், அவளை வராந்தாவில் சந்தித்து ''அலோ!'' என்று அறிமுகம் செய்து கொண்டான்.

மூன்றாம் நாள், ''எத்தனை நாளா தட்டெழுத்துப் பயிற்சி எடுத்துக்கிறீங்க, பேர் என்ன சொன்னீங்க?'' என்று அக்கறையாக விசாரித்தான்.

அந்தச் சில மாதங்களில் அவளுக்கு அவனைப் பார்க்கவும் பேசவும் பிடித்துப் போயிற்று.

## 2

கபாலியின் பெற்றோர்கள் சேலத்தில் வசிக்கிறார்கள் என்றும் அவனுடைய ஒரே சகோதரிக்குத் திருமணமாகி விட்டதென்றும், ஆரம்பத்தில் அவன் தன் தமக்கை வீட்டில்தான் தங்கி வேலை செய்தான் என்றும் இடவசதி குறைவாக இருந்ததால், நண்பரின் அறையைப் பகிர்ந்து கொண்டு இருக்கிறான் என்றும், இன்னமும் திருமணமாகா தவன் என்றும், அவ்வப்போது வராந்தாவிலும், கட்டடத் தின் வாசலிலும் சந்திக்கும்போது பல சங்கதிகளைச் சொல்லி விட்டிருந்தான்.

அவளும் தன்னைப் பற்றி அவனிடம் கூறிக் கொண்டு விட்டிருந்தாள்.

''அய்யோ பாவம்! பெற்றோர்களை இழந்து, அடிமை போல பெரியப்பாவின் நிழலில் வசிக்கிறீங்களா? கேட்க வருத்தமா இருக்கு...'' அனுதாபத்தில் கரைந்தான்.

பெரியப்பா வாசுதேவன் சிறு தவறுகளுக்கெல்லாம் அவளை அதட்டி மிரட்டுவார். அதனால் அவரிடம் அவளுக்கு எப்பவுமே பயம்.

பெரியம்மா நீலா பொல்லாதவள். அவளுக்கு ரம்யாவை என்றுமே பிடிக்காது. கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று இல்லாத தவறுகளை எடுத்துப் போட்டு சண்டை பிடிப்பாள்.



இப்படிப்பட்ட சூழ்நிலையில் கபாலியும் அவளும் கண்ட இடங்களில் சந்தித்துப் பேசி மகிழ இயலுமா?

அந்த நிறுவனக் கட்டடத்தின் தோட்டத்திலும், வாயில் புறத்திலும் நின்று கொண்டு அவ்வப்பொழுது பேசுவதை வழக்கமாக்கியிருந்தாள்.

சில சமயம் யாராவது பார்த்து விடுவார்களோ என்ற பயத்தில் ''அலோ!'' என்று மட்டும் ஒரு புன்னகையை வீசி விட்டு, மறைந்து விடுவாள்.

ஆனாலும் நாளுக்கு நாள் அவன் மீது அவளுக்கு ஒரு பற்றுதல் அதிகரித்துக் கொண்டுதான் போயிற்று.

சில நாளில் அவர்கள் நின்று ஒருகணம் பேசக்கூட நேரம் இல்லாது போய் விடுவதும் உண்டு. அந்த மாதிரி சமயங்களில் அவன் தனது எண்ணங்களை, உணர்ச்சிகளை கவிநயமான சொற்களால் ஒரு கடிதம் முழுவதும் கொட்டி அளந்து யாரும் பாராத சமயம் அவள் கையில் வைத்து விட்டுப் போய் விடுவான்.

குளியலறைக் கதவைச் சாத்திக் கொண்டு, அந்தக் கடிதத்தை பலமுறை படித்து மகிழ்ச்சியில் பூரித்துப் போவாள்.

அவனது கடிதங்களை கிழித்துப் போட மனமின்றி, புத்தகத்துள் பத்திரமாக மடித்து வைத்துக் கொண்டிருந்தாள். பின்னால் அது அவளுக்குத் தீமையாக முடிந்தது.

அவளுக்கு பதில் கடிதம் எழுத ஆசை ஏற்பட்டதுண்டு. ஆனால், சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவ்வாறு செய்ய விடாது தடுத்து விட்டன.

''என் கடிதத்தை படிச்சியா- உன் பதில் என்ன?'' என்று ஆவலுடன் அவன் கேட்டால், புன்முறுவலுடன் தலையை ஆட்டி தன் மகிழ்ச்சியைத் தெரிவிப்பது தவிர வேறு வழியின்றி இருந்தாள்.

தட்டெழுத்து முதல் தேர்வு நாள் நெருங்கிக் கொண்டு இருந்த சமயம் அவன் ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்தான்.

''அன்புள்ள ரம்யா, உன்னை நான் உயிரினும் மேலாக நேசிக்கிறேன் என்பதை சொல்லி நேரிடையாக உன் பெரியப்பாவிடம் நம் கல்யாணத்திற்கு சம்மதம் வாங்க என்னால் முடியும். ஆனால், என் பெற்றோர்கள் எனக்கு மிகப் பெரிய இடங்களில் பெண் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். உன்னை மணக்க ஒப்புதல் தரமாட்டார்கள். ஆனாலும் உன்னை என்னால் மறக்க இயலாது. என்னை நீ நம்புவது உண்மை என்றால், என் மீது அன்பு கொண்டிருப்பது உண்மை என்றால், வரும் திங்கட்கிழமை மாலை ஏழு மணிக்கு நீ கந்தசாமி பூங்கா அருகில் உள்ள பஸ் நிலையத்தில் சந்திக்க வேண்டும். நாம் இருவரும் வேறு ஊருக்குப் புறப்பட்டுச் சென்று பதிவுத் திருமணம் செய்து கொண்டு பின்னர், பெரியவர்களை அணுகினால் அவர்கள் நம்மை ஒதுக்க முடியாது. முதலில் கொஞ்சம் ஆர்ப்பாட்டம் செய்யக் கூடும். அதற்கு நாம் அஞ்சக் கூடாது. சம்மதம் என்றால், அதற்கு அறிகுறியாகத் தலையில் நீ ஒரு ரோஜா பூவைச் சூடிக் கொண்டு வகுப்புக்கு வரவேண்டும். சம்மதம் இல்லை என்றால் நாம் ஒருவரையொருவர், மறந்து விடுவோம். அன்பன் கபாலி.''

திக்கென்றது அவளுக்கு. வீட்டை விட்டு அவனுடன் புறப்பட்டுப் போய் விடுவதா?

போகாதிருந்தால் ஒரு நல்லவரை திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பும்- வளமான வருங்காலம் போய் விடுமே? பெரியம்மாவுக்கு அடிமையாக எத்தனை காலம் அங்கேயே இருப்பது?

அப்பொழுது ரம்யாவுக்கு வயது பதினெட்டு, உலக அனுபவம் என்பதே தெரியாது வீட்டுக்குள்ளேயே



முடங்கிக் கிடந்த ஒரு புத்தகப் புழு. சில மாதங்களாகத்தான் தட்டெழுத்து கற்றுக் கொள்ள வெளியே வந்தவள். திடீரென்று கிடைத்த சுதந்திர உணர்வை சிறப்பாகக் கையாளத் தெரியாத அறிவீனம். அவள் முதல் முதலாக சந்திக்கிற ஆண் மகன் கபாலி. அன்புக்கு ஏங்கிக் கொண்டிருந்தவளுக்கு அவனது தூண்டுதல் ஒரு வடிகால் போல அமையவும், அவனை அன்று மாடி வராந்தாவிலே சந்தித்தபோது, ''சரி'' என்று அடிக்குரலில் ஒப்புதல் தந்தாள்.

''வரும்போது உன் நகை, பணம் ஏதாச்சும் இருந்தால் கூடவே எடுத்து வந்துவிடு. துணிப் பெட்டியுடன் புறப்பட்டு விடாதே. யார் கண்ணிலாவது பட்டு விட்டால் ஆபத்து...!'' என்று கிசுகிசுத்தான்.

அவன் கூறுவதெல்லாம் வேத வாக்கியமாக அப்போது அவளுக்கு இனிப்பாகத்தான் இருந்தது.

''தலையணையை வைத்துக் கொண்டு படுத்துக் கொள். இந்தா போர்வை...'' என்றபடி தன் படுக்கைச் சுருளில் இருந்து ஒரு சிறு தலையணையையும்- துப்பட்டியையும் எடுத்து அவளிடம் நீட்டினான், முரளி.

வேறு வழியில்லை. கடந்து போனதை சிந்தித்துக் கொண்டு அவள் சன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்தால், அவன் காவல் தெய்வமாக எதிரே உட்கார்ந்து கொண்டு, திருதிருவென்று விழித்துக் கொண்டு இருந்தான்.

புது மணப்பெண். அதனால், அதட்டி மிரட்டிப் பேச அவனுக்கு சங்கடமாக இருக்கு போலிருக்கு என்று எண்ணியபடி அவள் தலையணையை பலகையின் ஓரத்தில் வைத்து தலையை சாய்த்துக் கொண்டு, துப்பட்டியை தலை வழியே போர்த்திக் கொண்டு படுத்து விட்டாள். அவனும் எதிர்ப் பலகையில் அவள் பக்கம் திரும்பிய நிலையில், ஒரு சிறு தலையணை மீது சாய்ந்து கொண்டு இன்னொரு துப்பட்டியால் மார்புவரை போர்த்திக் கொண்டான்.

வம்படிக்கச் சென்ற நான்காவது பயணி- பெட்டிக்குள் நுழைந்தான்.

''கதவைச் சாத்திடட்டுமா?... இப்பவெல்லாம் ரொம்ப திருட்டு நடக்குது...'' என்று உரத்துக் கேட்டு விட்டு கதவை உள்ளேதாளிட்டான். பளிச்சென்ற விளக்குகளை அணைத்து விட்டு நீல ஒளி வீசிய சிறிய விளக்கை மட்டும் எரிய விட்டு, ஒரேதாவலில் மேல் பலகை மீது ஏறிக் கொண்டு விட்டான்.

வண்டி கடக்...கடக் என்று தாளமிட்டபடி இடை இடையே உறுமி பெருமூச்செறிந்து கொண்டு வேகமாக ஓடிக் கொண்டு இருந்தது.

ரம்யா கண்களை இறுக மூடிக்கொண்டிருந்தாள். ஆனாலும், அவள் கணவன் தூங்காது அவளைப் பாதுகாக்கும் பணியில் எதிர் பலகையில் அவள் பக்கமே திரும்பிப் படுத்திருப்பது புரிந்தது.

இப்போது நகையை மட்டுமா பறிகொடுக்க நேரும்! இளம் மனைவி ரம்யா, பார்க்கக் கொஞ்சம் அழகான பெண்கூட... பயணங்களில் எத்தனையோ ஆபத்துகள் இருக்கின்றனவே?

திடீரென்று அவளது சிந்தனை ரெயில் வண்டியைப் போல தொடர்ந்து ஓடியது. அந்த சம்பவத்தை நோக்கி.

இளமைப் பருவத்து உணர்ச்சி வேகத்திலே அவள் எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்க இருந்தாள்?

# 3

கபாலி கூறியபடி அன்று பெரியம்மாவுக்குத் தெரியாமல், பீரோவைத் திறந்து அவள் தாய் விட்டுப்போன அந்த இரண்டு கொத்து சங்கிலியையும்- வளையல்களையும் எடுத்துக் கைப்பையில் பத்திரமாகப் போட்டுக் கொண்



டாள். பெரியம்மா வீட்டுச் செலவுக்கு வைத்திருந்த பணத்தில் ஒரு நூறு ரூபாயைத் துணிவுடன் எடுத்துக் கொண்டாள். கொஞ்சம் சில்லறையை எடுத்துத் தன் சிறு மணி பர்சில் வைத்து இடுப்பில் சொருகிக் கொண்டாள். முன்னறை சுவரில் குடும்பத்துப் படம் ஒன்றில் பெரியப்பாவுக்குப் பின்னால் நின்ற அப்பா அம்மாவை வணங்கிக் கொண்டாள்.

சமையல் அறையில் வேலையாக இருந்த பெரியம்மா விடம் அவசரமாக தேர்வு பற்றி ஒரு விவரம் தெரிய வேண்டி யிருப்பதாக சொல்லி விட்டு அவள் வந்து கதவைச் சாத்தக் கூடக் காத்திராது காற்றாகப் பறந்து போய் விட்டாள்.

கபாலி சொல்லியபடி ஏழு மணி அளவில் வந்தான். அவன் கையில் ஒரு சிறு பெட்டி. புத்தம் புது சட்டையும் பாண்ட்டும் அணிந்து கொண்டு புது மாப்பிள்ளைபோல புன்னகையுடன் துணிவாகத்தான் வந்திருந்தான்.

'உன் நகைகளை இப்படிக் கொடு. நான் பத்திரமாக வைத்திருக்கிறேன். பணம் இருந்தால் அதையும் கொடுத்துடு...'' என்றபோது, அவள் நம்பி சடுதியில் தன் தோள் பையிலிருந்து எடுத்து அவனிடம் தந்தாள்.

''இரு! அதோ பார்- எனக்குத் தெரிந்த என் ஊர்க்காரர் ஒருவர் வருகிறார். சித்த இந்த மரத்துக்குப் பின்னால் போய் நில்லு... நான் எதிர்ச்சாரி கடையிலே சாமான் வாங்கி றாப்பல போக்கு காட்டிட்டு வரேன். சீக்கிரம் அதோ பார் அந்த சிகப்பு சட்டை'' என்று, அவள் சற்று தூரத்தில் பாதையோரமாக நடந்து வந்தவனை காட்டியபோது அவள் நெஞ்சு எப்படி வேகமாக அடித்துக் கொண்டது? பதறிப்போய் விட்டாள்.

''அவர் கண்டு கொண்டால் ஆபத்தா?'' பதட்டமாகக் கேட்டாள்.

''நான் சொல்கிறபடி சீக்கிரம் அந்த மரத்துக்குப் பின்னாலே மறைவா போய் நில்லு. நான் இந்தக் கடைக்குப் போறாப்பல...'' முழுவதும் முடிக்காது அவசரமாக ஒரே தாவலில் தெருவைத் தாண்டி எதிர்த்த தெருவை அடைந்து விட்டான். சிவப்பு சட்டை நெருங்கி வருவதைக் கண்டதும் நடுநடுங்கிப் போன ரம்யா, வேகமாக கந்தசாமி பூங்காவின் முன்னால், அரக்கனைப் போலப் பாதையோரம் பெரிதாக வளர்ந்து நிழல் கொடுத்துக் கொண்டிருந்த வேப்ப மரத்தின் பின்னால் போய் ஒண்டிக் கொண்டாள்.

சிவப்பு சட்டை அவளைத் தாண்டி நெடுந்தூரம் போய் விட்டது. மெல்ல ஒண்டியிருந்த மரத்தின் பின்னால் இருந்து எட்டிப் பார்த்தாள். எதிர்ச்சாரியில் பல கடைகள் அந்தி வேளையின் கும்பலில், அவளுக்கு அவனை அடையாளம் காண முடியவில்லை.

குறித்த இடத்திலேயே நிற்போம். வந்து விடுவார் என்ற நம்பிக்கையுடன் பஸ் நிலையத்தின் பாதையோரத்தில் நின்றாள். நின்று கொண்டேயிருந்தாள்.

கையில் கடிகாரமும் இல்லை. நேரம் என்ன என்பதுகூட விளங்காது அவள் நின்று கொண்டு இருந்தாள்.

கபாலிக்கு என்ன ஆயிற்று?... ஒரு சமயம் அந்த சிவப்பு சட்டைக்காரர் அடையாளம் கண்டுபிடித்து பேசத் தொடங்கி விட்டாரா?

இருக்க முடியாது. சிவப்பு சட்டை நேராக சாலையின் மறுகோடிக்குப் போய் மறைந்து விட்டதே.

மயக்கம் போட்டு விழுந்து விட்டாரா?... சே! என்ன நினைவு இது? அவருக்கு மது அருந்தும் பழக்கம் கூடக் கிடையாதே.

அய்யோ நேரம் என்ன இப்போது? நெஞ்சு காய்ந்து போன உணர்வில் திகிலுடன் பார்த்தாள். காத்திருக்கும் போது காலம் எப்படி வேகமாக விரைகிறது என்பது சில சமயம் புத்திக்கு எட்டுவதில்லை.



அவளைத் தாண்டிச் சென்ற ஒரு நடுத்தர வயது மனிதனிடம் கேட்டாள். ''சார்! மணி என்ன?''

நெருப்பைக் கக்கும் விழிகளால் அந்த மனிதன் அவளை உறுத்துப் பார்த்தான். ''ராத்திரி பத்து மணியாகப் போறது? அழகா உடுத்திக்கிட்டு மணி என்ன என்று கேட்கிற உங்கள் கூட்டத்தைப் பற்றித் தெரியும். இந்த சின்ன வயதில் இந்த ஈனமான தொழிலா?... வெட்கமில்லை'' படபடவென்று பேசி விட்டுப் போனான்.

அதிர்ந்து போனாள் அவள். அந்த மனிதன் அவளைப் பற்றி அசிங்கமாக அல்லவா எண்ணிக் கொண்டு போகிறான்.

அவளை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டு போன அத்தனை பேரும் அங்கே அவள் நிற்பதைப் பற்றி எத்தனை அருவருப்பானதொரு கற்பனை செய்து கொண்டு போயிருப்பார்கள்.

கபாலி ஏன் வரவில்லை?... அவளது நகைகளையும் பணத்தையும் மோசம் செய்து விட்டு ஓடிவிட்டானா? இப்படி நடுத்தெருவிலே நாலுபேர் முன்னிலையில் அவமானப்படும்படி நிற்க வைத்து விட்டுப் போய் விட்டானே?

அதுசமயம் அவ்வழி சென்ற நாலு முரட்டு இளைஞர்கள் தன்னந்தனியாக நடைபாதை ஓரம் அவள் நிற்பதைக் கண்டு, மெல்ல அவளை நெருங்கத் தொடங்கினார்கள்.

''ஊருக்கு புதுசா?... தொழிலுக்குப் புதுசா!'' என்று கேட்டபடி சிகரெட்டு புகையை ஊதினான் ஒருவன்.

நான்குபேரும் சுற்றி வளைத்துக் கொண்டு, அவளை அருகில் இருக்கும் பூங்காவுக்கு கடத்திக் கொண்டு சென்று

விடுவார்கள் போன்று அவர்கள் முகத்திலே ஆத்திரம் தெரிந்தது.

'அய்யோ!...' என்று கூக்குரல் போட்டு எதிர்சாரி கடைகளில் எஞ்சி நிற்கும் சிலரை உதவிக்குக் கூப்பிடக்கூட அவளுக்கு குரல் எழும்பவில்லை.

'கபாலி! கடன்காரா! ஏமாத்திட்டியே?' என்று ஓவென்று மனம் அலறியதே ஒழிய, வார்த்தைகள் எழும்பவில்லை.

பட்டப் பகலிலேயே, சந்தடியற்ற சந்துக்களில் நகரத்தில் பல அட்டூழியங்கள் நடப்பதை நாளேடுகளில் படித்திருக் கிறாள். இரவில் மரம் பரப்பிய நிழலில், பஸ் நிலையத்தை விட்டுத் தள்ளி ஒதுக்குப்புறமாக நிற்கும் அவளை அந்த முரட்டு வாலிபர்கள் லபக்கென்று கொத்திக் கொண்டு, அருகில் இருக்கும் பூங்காவின் புதர் ஒன்றுக்குள் இழுத்துச் சென்றால்... யாரும் பார்க்கப்போவதில்லை. பார்த்தாலும் இரவில் அந்தக் காட்சி பளிச்சென்று கண்களுக்குப் புலப்படப் போவதில்லை. அய்யோ! அவள் என்ன செய்வாள்? குலதெய்வம் மருதமலை முருகனை மனதிற்குள் கூப்பிட்டாள். ''மருதமலையானே, காப்பாத்து, பயமா இருக்கு'' கண்கள் கலங்க, மனமுருக தன்னுள் வேண்டிக் கொண்டாள்.

''என்ன பொண்ணு ஊமையா?...'' என்றபடி அவள் அருகே நெருங்கத் துணிந்தவன் பிடரி மீது மருதமலை யானே மனித உருவில் வந்து கையைப் போட்டதுபோல, காவல்துறை அதிகாரி ஒருவர், ''என்ன இங்கே கூட்டம்? என்று அதட்டியபடி அவன் முதுகைத் தட்டியதும், கணப்பொழுதில் நால்வரும் மாயமாகினர்.

காலில் இருந்து தலைவரை காவல்துறை அதிகாரி தன்னை பார்ப்பதைக் கண்டு கூசிப்போனாள் அவள்.

''என்னம்மா? என்ன? இந்த வேளையில் இங்கே வந்து என்றவர், திடீரென்று அதிர்ச்சியுற்றவராக, ''ஏம்மா! நீ ரம்யா



இல்லே?... நம்ப வாசுதேவன் மகள் ரம்யாதானே...'' என்று வியப்புடன் கேட்டார்.

தெரிந்தவர் என்றதும், பொலபொலவென்று கண்ணீர் அவள் கன்னங்கள் மீது உதிர்ந்தது.

''இங்கே வந்து ஒரு தோழி காத்திருக்கச் சொன்னாள். வந்து... வந்து...'' அழுகையுடன் உளறினாள்.

''தோழியா தோழனா?'' சந்தேகத்துடன் கேட்ட அந்த காவல்துறை அதிகாரி அவளை பஸ்சில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தபோது, வீடு இரண்டுபட்டுக் கொண்டு இருந்தது.

வெளியே போனவள் வரவில்லை என்றதுமே, பெரியம்மாவுக்கு சந்தேகம் வந்து விட்டது. வேலையில் இருந்து திரும்பி வந்த பெரியப்பா, அவருடைய பிள்ளைகள் எல்லோரும் கடைத் தெருவை சல்லடை போட்டுத் தேடி அலுத்துப் போனார்கள். அவர்களது நண்பர்கள் வீட்டிற்கு தொலைபேசியில் நாசூக்காக விசாரித்துப் பார்த்து தோல்வியடைந்தார்கள். இரவு மணி பதினொன்றாகப் போகிறது என்றதும் பெரியம்மா அவளது பெட்டி, அலமாரி, புத்தகங்கள் அனைத்தையும் துப்பு தேடியபோது, புத்தகத்துக்கு அடியில் கத்தையாக அந்த காதல் கடிதங்கள் கிடைக்கவே அனைவருக்கும் புரிந்து விட்டது.

''பாவி மகள், என் வீட்டுச் செலவு பணத்தையும், அவள் அம்மாவோட நகைகளையும் எடுத்துக் கொண்டு கள்ளக் காதலனோட ஓடிவிட்டாளே... இவளுக்கு மேல் படிப்பு வேண்டாம் என்று சொன்னப்போ கேட்டீங்களா... வரதட்சணைக்கு சம்பாதிச்சுத் தருவாள் என்று சொன்னீங்க... இப்ப அவமானத்தை நிறைய சம்பாதிச்சுத் தந்திருக்காள்'' உரத்த குரலில் அலறி, பெரியம்மா ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தபோது, குடும்ப

நண்பரான காவல்துறை அதிகாரி, ரம்யாவுடன் உள்ளே நுழைந்தார்.

வீட்டின் நிலைமையைக் கண்டதும் அவர் புரிந்து கொண்டு விட்டார். இந்தப் பெண் ரம்யா தன் காதலனுடன் ஓடத்தான் அங்கே தனியாக நின்றுகொண்டிருந்தாள். நல்லவேளை சமயத்திற்கு அந்தப் பக்கம் அவர் போக நேரிட்டது. இல்லா விட்டால்... அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''ரெங்கநாதா! பார்த்தியா- இவள் செய்திருக்கும் காரியத்தை?'' காதல் கடிதங்களை அவர் முன் தூக்கிப் போட்டார் பெரியப்பா.

''திருட்டுக்கள்ளி. வெட்கமில்லாமல் எந்த முகத்தோட இங்கே வந்து நிக்கிறே! உன்னை...'' பற்களைக் கடித்துக் கொண்டு பெரியம்மா அருகில் நெருங்க, இடைமறித்து கையை நீட்டித் தடுத்தார் ரங்கநாதன்.

''ரம்யாவுக்கு இப்போ வயசு என்ன?'' பெரியப்பாவைக் கேட்டார்.

''எருமை மாடு போல பதினெட்டு முடிஞ்சு போச்சு. அறிவு கெட்ட ஓடுகாலியா இருப்பான்னு யார் கண்டா?'' ஆத்திரத்தில் குமுறினார்.

''அப்போ நீங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது. உங்கள் பணத்தை திருடிக் கொண்டு ஓடி விட்டான்னு வேண்டுமானால் புகார் கொடுத்து, பிடிச்சு இழுத்து வரச் செய்து, நடவடிக்கை எடுக்க எங்ககிட்ட விட்டுடலாம். பதினெட்டு வயதுக்கு மேலே ஆகி விட்டது, மேஜர். அவளுக்கு யாரையும் காதலிக்கவும்- கல்யாணம் செய்துக்கவும் சுதந்திரம் இருக்கு. உங்கள் அனுமதி தேவையில்லை. விஷயம் தெரிஞ்ச பொண்ணுதான்.''



''நகை எங்கேடி பாவி; பணம் எங்கே? கத்தினாள் பெரியம்மா.''

''என்னைக் கேளுங்கள். இதுமாதிரி ஒரு நாளைக்கு எத்தனை கேஸ்கள் நாங்கள் பார்க்கிறோம். வயசு பதினெட்டாகியும் உலக அனுபவம் இல்லாத இந்த மாதிரி இளசுகளை சில அயோக்கியன்கள் தேர்ந்து எடுத்து... காதல் என்று கதை விட்டு, வீட்டை விட்டு காசு பணத்துடன் ஓடிவரச் செய்து கடைசியில் எங்கேயோ ஒரு படுகுழியில் கொண்டு தள்ளி விடுகிறது ரொம்ப சாதாரணமாகி விட்டது. உலகம் தெரியாத பெண் குழந்தைகளை வளர்க்கிறது சாதாரணப் பொறுப்பா?'' ரங்கசாமி தமது நண்பரின் தோளை ஆறுதலாகத் தட்டினார்.

''ஏம்மா! நகைகளை எல்லாம் நீதானே அவன்கிட்ட கொடுத்தே. இதோ வரேன். நின்னுகிட்டு இருன்னு சொன்னவன் வரவே இல்லை. மாயமாகிட்டான் இல்லையா?''

முகம் சிவந்து உடல் வெட்கத்தில் குறுகிப் போக தரை பிளந்து தன்னை விழுங்கித் தொலைக்காதா என்ற அவமான உணர்வில் அவள் தலைகுனிந்து நின்றாள்.

''சொல்லேண்டி. வாயில் கொழுக்கட்டையா வைத்து இருக்கிறாய்?'' பட்டென்று பெரியம்மா கன்னத்தில் ஒரு அறை விட்டபோது, வீடே தலையில் இடிந்து விழுந்து விட்டதொரு வேதனையில் துடித்துப் போனாள், ரம்யா.

''பொருள் போகட்டும். பெண் மானத்தோட வீடு வந்து சேர்ந்தாளேன்னு மகிழ்ச்சியா இருங்கள். அடிச்சு நொறுக்கினால் ஓடினவன் திரும்பி வந்துவிடப் போறதில்லை. இப்படி அவன் பல இடங்களில் பல பெண்களை ஏமாற்றியிருப்பான்- அவனது பெயர்கூட உண்மையாக இருக்காது. ஊருக்கு ஒரு பெயர்... ஏதாவது ஓர்

அலுவலகத்தில் எடுபிடி ஆளாக கொஞ்ச காலம் வேலை செய்திருப்பான். டீக்காக உடுத்தியிருக்கானே பெரிய ஆபீசர் என்று ரம்யா அவனையும் அவனது பேச்சையும் கேட்டு மயங்கி ஏமாந்து போயிருப்பாள். போலீசில் புகார் கொடுத்தால் நாங்கள் அவனைத் தேடிப் பிடிக்க முயலுவோம்.''

போலீஸ் என்றதுமே பெரியம்மா அடங்கிப் போனாள். ''பொருள் போனதோடு ஒழியட்டும்... மானம் கப்பலேற வேண்டாம். இவளை பத்திரமா கொண்டு வந்து சேர்த்ததுக்கு நன்றி'' என்று கைகூப்பி வணங்கினாள்.

ரங்கநாதன் சிறிது பொழுதில் விடை பெற்றுக்கொண்டு போனதும், பெரியப்பா இடுப்பு பெல்ட்டை கழற்றிக் கொண்டார்.

''எல்லோரும் அப்பால் போங்க. என் மானத்தை வாங்கவே வந்திருக்கும் இவளை...'' என்றபடி ஓங்கி ஓங்கி... ரவிக்கை கிழிய, முதுகில் ரத்தம் கசிய- வீசிய... வீச்சை இன்று நினைத்தாலும்...

# 4

கண்களில் நீர் பெருகி, கன்னத்தில் உருண்ட கண்ணீரை மெல்லத் துடைத்துக் கொண்டு, போர்வையை சற்று தள்ளி விட்டு, எதிர் பலகையில் படுத்திருந்த முரளியைப் பார்த்தாள். கண்களை மூடிக் கொண்டிருந்தான். ஆனால் தூங்கவில்லை என்பதை அடிக்கடி அசைந்து கொடுத்து அவனது கால்கள் காட்டிக் கொடுத்தன.

மறுபடியும் போர்வையை தலைமீது வழிய விட்டுக் கொண்டாள். தடக் தடக்கென்று ஒரே ரீதியில் வண்டி ஓடியதுபோல அவளது நினைவும், அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது.



''அய்யோ! அம்மா...'' என்று அவள் வாய் திறந்து அலறவேயில்லை. அத்தனை அடியையும் வாங்கிக் கொண்டு வலி தாள முடியாது அவள் துவண்டு தரையில் தானே விழுந்தபோதுதான் பெரியப்பா பயந்து போய் விட்டார்.

செத்துத் தொலைக்கப் போகிறாள்... கொலை கேசில் வந்து முடிந்து விட்டால் என்ற அச்சம்.

கைத்தாங்கலாக அவளைப் பிடித்து உள்ளே அறைக்குள் ஒரு பாயின் மீது கிடத்தி, முதுகில் கொஞ்சம் தேங்காய் எண்ணையைத் தடவினாள் பெரியம்மா.

''என்ன இருந்தாலும் அவள் உங்கள் மகள்தானே! இப்படி பிண அடி அடிப்பானேன்...'' பெரியம்மா கத்துவது அரைகுறையாகக் காதில் பட்டது.

அதற்குப்பின் முதுகில் பட்ட காயத்தில் சீள் கோர்த்துக் கொண்டு காய்ச்சலும், நோவுமாக அவள் பத்து நாட்கள் படுத்து விட்டாள்.

டாக்டரை அழைத்துக் காட்ட பெரியம்மாவுக்குப் பயம். 'இப்படி மிருகத்தனமாக காயம் ஏற்படும்படி யார் அடிச்சது?' என்று டாக்டர் கேட்டுத் தொலைப்பாரே?

தனக்குத் தெரிந்த கைவைத்தியமாக, வேப்பிலையை மஞ்சளுடன் வைத்து அரைத்து முதுகில் தடவினாள்.

''நாயை அடிப்பானேன்- அசிங்கத்தை சுமப்பானேன் என்பாங்க. அது சரியாப் போச்சு. இவள் எழுந்து வீட்டு வேலைகளுக்கு உதவரதுக்குள்ளே இவளுக்கு பணிவிடை செஞ்சு நான் மேலே போயிடுவேன் போலிருக்கு'' அலுத்துக் கொண்டாள் பெரியம்மா.

ரம்யா பெல்ட் காயத்தில் ஏற்பட்ட புண்ணால் செத்து விடுவாளா என்ன?

''இன்னும் என்ன என்ன அனுபவங்கள் பாக்கி இருக்கின்றனவோ?''

சில நாட்களில் காயம் ஆறி, காய்ச்சல் குறைந்து எழுந்து விட்டாள். பெரியம்மாவுக்கு கொஞ்சம் ஓட்டைவாய்கூட. தன் சகோதரிகளிடம் ரகசியமாக ரம்யா செய்த காரியத்தைச் சொல்லி அது மெள்ள மெள்ள அங்குமிங்குமாகப் பரவி விட்டிருந்தது.

அதற்குப்பின் அவளை சட்டென்று யாருக்காவது கட்டிக் கொடுத்து தலை முழுகிவிட வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்ததில் தவறு இல்லை. அவளது பெற்றோர்களும் அப்படித்தான் முடிவு செய்திருப்பார்கள்.

ஆனால், வந்த வரன்கள் பெண்ணைப் பார்த்து முதலில் இசைந்தனர். பின்னர் எப்படியோ காற்றுவாக்கில் நடந்த கதையைக் கேட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர்.

ஆண்டு ஒன்று இரண்டு என்று நகர்ந்து ரம்யாவுக்கு வயது இருபத்திரண்டை எட்டி விட்டது. இன்னமும் அவள் பாரமாக, அவர்களுக்கு பெரும் தலைவலியாக- கல்யாண மாகாத ஒரு சுமையாக வீட்டிலே இருந்து கொண்டிருந்தாள்.

மகனுக்கு கல்யாணம் கூடி வந்து கொண்டிருந்த சமயம் அது. ஒரு நல்ல இடத்தில் பெண் அமைந்து விட்டிருந்தது.

ரம்யாவின் கதையை அவர்கள் கேட்டு விட்டு ஓட்டம் எடுக்குமுன்- அவளை யாருக்காவது சட்டென்று கல்யாணம் செய்து வைத்து வீட்டை விட்டு அப்புறப்படுத்தி விடவேண்டும்.

அந்த முயற்சியில் பெரியம்மாவும்- பெரியப்பாவும் தீவிரமாக ஈடுபட்டு இருந்தனர்.

கல்யாணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பார்கள். அவளைப் பொறுத்தவரை, அவளது கல்யாணம் ஒரு நாளேட்டில் வந்த மணமகள் தேவை என்ற ஒரு விளம்பரத்துக்கு பெரியப்பா எழுதிப் போட்ட கடிதத்திற்கு வந்த பதிலில் நிச்சயிக்கப்பட்டு விட்டது.



''முப்பது வயதைத் தாண்டி விட்ட வாலிபருக்கு மணமகள் தேவை. மணமகன் ஒரு பட்டதாரி... சொந்த வீடு உள்ளவர்... விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்... குடும்பப் பொறுப்பான கொஞ்சம் படித்த பெண்ணாக இருந்தால் போதும்...''

குலம் கோத்திரம் எல்லாம் பொருத்தமாகத்தான் இருந்தது. பெண்ணைப் பார்க்க வந்த முரளி, வயதைத் தாண்டி விட்டவன்போலத் தெரியவில்லை. இன்னும் சற்று இளையவனாகவே தெரிந்தான். வாட்ட சாட்டமாக நல்ல நிறமாகவே இருந்தான்.

''வரதட்சணை தேவையில்லை. பெண்ணைக் கட்டிக் கொடுத்தால்போதும். நகைகள் தேவையில்லை. நோயாளி யாகப் படுத்திருக்கும் தாயின் நகைகள் அனைத்தும் வரப் போகிறவளுக்குத்தான்'' என்றான்.

''அண்ணன், தம்பி, அக்கா என்ற நெருங்கிய உறவினர் யாரும் இல்லை'' என்றான்.

''கல்யாணத்தை ஒரு கோயிலில் நடத்திக் கொடுத்தாலும் போதும்'' என்றான்.

இப்படி ஒரு நல்ல வரன் ரம்யாவுக்கு எங்கே கிடைக்கப் போகிறான்! அவளை ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை. வேண்டாம் என்று சமயத்தில் அவள் சதி செய்து விடப் போகிறாளோ என்ற பயம்.

மிகத் துரிதமாக, அவசரமாக நடந்தது அவர்கள் கல்யாணம். மாப்பிள்ளை வேண்டாம் என்று சொல் வதையே காரணம் காட்டி, சீர், நகை, துணி என்று கைவிட்டு எதையுமே செய்யாது, அவள் தாய் விட்டுப்போன அந்தப் பணத்திற்குள்ளேயே ஒரு சிக்கனமான கல்யாணத்தை அவர்கள் செய்து முடித்து விட்டார்கள். கூரையும், தாலியும் மாப்பிள்ளை முரளி கொண்டு வந்து விட்டான். வேட்டியும்

அங்கவஸ்திரமும் எடுத்துக் கொடுத்து, தெரு மனிதர்களை வாயாலே அழைத்து, தெருக்கோடி கல்யாண மண்டபத்திலே, ஒரு அவசரக் கல்யாணமாக அதை முடித்து, அந்தக் கையோட அவளைப் புகுந்த வீடு அனுப்பி விட்டிருந்தார்கள் அவளது பெரியம்மாவும், பெரியப்பாவும்.

அவர்கள் வீட்டுக்கு மாடாக உழைத்தும் மதிப்பின்றி, அந்த ஒரு குற்றத்திற்காக மனம் நோகும்படி அவர்களால் அடிக்கடி சாடப்பட்டு, வாழவும் முடியாது சாகவும் துணிவின்றித் தவித்துக் கொண்டிருந்த அவள், அந்தத் திருமணத்தை ஒரு விடுதலையாக எண்ணி மனமுவந்து ஏற்றுக் கொண்டாள்.

ஆனால், அந்த அனுபவத்திற்குப் பின் ஆண் குலத்தின் மீதே அவளுள் ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டிருந்தது உண்மை. "ரம்யா! பார்க்க ஆள் நல்லாவே இருக்கான் என்று மயங்கி விடாதே... மஞ்சள் கயிற்றால் கழுத்திலே மூன்று முடிச்சு போட்டு விட்டான் என்பதற்காக, நீ தூக்குப் போட்டுக் கொண்டு விடாதே. இந்தக் கல்யாணம் உன் வரை ஒரு விடுதலை... அந்த வீட்டில் இருந்து சட்டிக்குள் விழுந்தது போல ஒரு அடிமை வாழ்வில் இருந்து கல்யாணம் என்ற கொத்தடிமை நிலைக்கு மாறிவிடாதே!..."

"தாகமா இருக்கா... சாத்துக்குடி உரிச்சுத் தரவா?" முரளி திடீரென்று போர்வையை விட்டெறிந்து விட்டு எழுந்து உட்கார்ந்து பரிவுடன் கேட்டபோது அவள் முணங்கினாள்.

"வேண்டாம், தூக்கம் வருது" என்றபடி திரும்பி பலகைத் தடுப்புப் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ரம்யா பத்திரம்... ரம்யா பத்திரம் என்பது போல தடக் தடக்கென்று வண்டி தண்டவாளத்திலே ஓசை எழுப்பிக் கொண்டு சென்றது. அவள் அலுப்பிலே உறங்கிப் போய் விட்டாள்.



# 5

வண்டி திருச்சி ஜங்ஷனை அடையும் முன்பே விடிந்து விட்டது. விடுக்கென்று அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

தலையணை, போர்வை இரண்டையும் அவளிடம் இருந்து வாங்கித் தன் படுக்கையுடன் வைத்து சேர்த்துக் கட்டியபடி அவன் சொன்னான்.

"நம்ப ஊருக்குப் போக, இதுக்கு மேலே பஸ் பிடிச்சாகணும். ரெயில் நிலையத்தில் இறங்கினதும் பயணிகள் தங்கும் அறையில் பல் துலக்கி, முகம் கழுவிக் கொண்டு, காபி பலகாரம் சாப்பிட்டபின் கிளம்பலாம். ரொம்ப அலுப்பா இருக்கா?"

"இல்லை" என்பதற்கு அடையாளமாக அவள் தலையை அசைத்தாள்.

அவள் திருமணம் நிச்சயமாகி பின்னர் ஒருநாள் பெரியம்மாவிடம் பெரியப்பா சொல்லிக் கொண்டிருந்ததை கேட்டு விட்டாள்.

பேச்சில் தன் பெயர் அடிபடுவதைக் கேட்டுத் துணுக்குற்று சமையல் அறையிலிருந்து வெளிப்பட்டு, நடையில் வந்து நின்று கொண்டு உற்றுக் கேட்டாள்.

அவளை யாரும் மனிதப் பிறவியாகக் கருதி, அவளது கல்யாணத்தைப் பற்றிய முழு விவரத்தையும் சொல்லவில்லை. இங்குமங்கும் பேச்சு வாக்கில் காதில் பட்ட விவரங்களில் இருந்து அவள் தன் புகுந்த வீட்டைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொண்டிருந்தாள்.

"சங்கரபுரம் சுத்தப் பட்டிக்காடாமே?" பெரியம்மாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

''ஆமாம்! ரம்யா செய்த காரியத்துக்கு இந்தப் பிள்ளை யாண்டனாவது வந்து கட்டிக் கொண்டு போரானேன்னு நீ சந்தோசப்படணும். இதுக்கு மேலே உசத்தியான வரன் இவளுக்குக் கிடைக்குமா?''

''சோத்துக்கும் துணிக்கும் பஞ்சமில்லாத இடம் தொலையட்டும்.''

''சேலம் போற நெடுஞ்சாலையின் திருப்பத்திலே சில கல்லு தூரத்திலே இந்த கிராமம் இருக்காம். ஆனால், மின்சாரம், தண்ணீர்க் குழாய் எல்லா வசதியும் வந்து விட்டதாம். காவேரிப் பாசனம், வெற்றிலை கொடிக்கால், காய்கறித் தோட்டம், நஞ்சைப் பயிர்ன்னு நல்ல செழிப்பான ஊராம்.''

''கடை கண்ணியெல்லாம் இருக்காமா?''

''நீயா போய் குடித்தனம் பண்ணப் போறே? தன் பெண்டாட்டிக்கு வேண்டிய சாமான்களை அவனே வாங்கிக் கொண்டு வந்து போடறான். உனக்கேன் கவலை?''

''வீட்டு உபயோகத்துக்கு ஒரு மாட்டு வண்டி இருக்காமே?''

''பின்னே, ஒரு விவசாயி, பென்ஸ் காரா வச்சுக்கிட்டி ருப்பான்?''

''இந்தப் பட்டணத்து ராணி அந்தப் பட்டிக்காட்டிலே போய் எப்படித்தான் குப்பை கொட்டப் போறாளோ?''

பெரியப்பா திரும்பும் சத்தம் கேட்டதும் அவள் சட்டென்று சமையல் அறைக்குள் புகுந்து கொண்டு விட்டாள்.

நெஞ்சு பக்கென்று அடித்துக் கொண்டது. ''கையை விட்டுப் போனாலே போது''மென்று அவளை அவர்கள் ஒரு பட்டிக்காட்டுக்கு கல்யாணம் என்ற பந்தத்தில் விரட்டுகிறார்கள்.



அவளுக்கும் அவர்களை விட்டுத் தொலைந்தால் போதும் என்கிற வெறுப்பு மூண்டு விட்டிருந்தது.

''பெண்ணுவருது பெண்ணு வருது பெட்டி வண்டியிலே மாப்பிள்ளைவரார் மாப்பிள்ளைவரார் மாட்டு வண்டியிலே'' என்று எப்பொழுதோ கேட்ட ஒரு பாட்டின் அடி நினைவுக்கு வர அவள் கோபத்துடன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

வண்டி நிலையத்தை அடைந்தது. பளிச்சென்று பொழுது நன்றாகவே விடிந்து விட்டிருந்தது.

பரபரப்புடன் சாமான்களை இறக்கி விட்டு, அவளுடன் தானே கனமானவைகளைச் சுமந்து கொண்டு, பயணிகள் தங்கும் அறைக்குச் சென்றான் முரளி.

''பல் துலக்கி, முகம் கழுவி, முடியை சீராக்கிக் கொண்டு பெட்டியில் இருந்து புதுசா சேலை ஒண்ணை எடுத்து உடுத்திக் கொள். ஏன்னா, புது மணப்பெண்ணான உன்னை எங்கள் ஊருக்குக் கூட்டிக்கிட்டுப் போகப் போறேன்... வீட்டில் நாலுபேர் வந்திருப்பாங்க...'' தொண்டையைக் கனைத்துக் கொண்டான் முரளி.

''ஆகட்டும் என்று மவுனமாக அதற்கும் அவள் தலையை அசைத்தாள். பெரியம்மா வாங்கித் தந்திருந்த அந்த சில்க் சேலையை எடுத்து உடுத்திக் கொண்டாள். பஸ் புறப்படுமுன் பூக்கூடையை வைத்து கூவிக்கொண்டு இருந்த பூக்காரியிடம் இருந்து இரண்டு முழம் கதம்பம் வாங்கி அவளிடம் கொடுத்தான்.''

அவள் மவுனமாக அதை வாங்கித் தலையில் சூட்டிக் கொண்டாள்.

மனதில் விருப்போ வெறுப்போ இல்லாத ஒரு விரக்தி நிலையில் அவள் பஸ் பிரயாணத்தைத் தொடங்கினாள்.

பஸ் வெகு நேரம் ஓடுவது போன்ற பிரமை. மணி என்ன இருக்கும் என்று அருகில் உட்கார்ந்திருந்த கணவனிடம் கேட்க மனம் இல்லை. சன்னல் வழியே தெரிந்த வெளிப்புறக் காட்சிகளைப் பார்த்தபடி இருந்தாள்.

பெரியப்பா சொல்லியபடி செழிப்பான பகுதிதான் அது. அகன்று, கரை தெரியாது புரண்டு ஓடிய காவிரி... நெடுஞ்சாலையில் வெகு தூரம் பஸ் பயணத்தில் அவளைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

காவிரிக்கும், நெடுஞ்சாலைக்கும் இடையே பசிய வயல்கள். மறுபக்கம் நீலத் தொடராக மலை, குன்றுகள். அதற்கும் சாலைக்கும் இடையே வெற்றிலை கொடிக்கால்கள் பார்க்க கண்களுக்கும் இதமான காட்சி. நெடுஞ்சாலையின் திருப்பம் ஒன்றில் பஸ் குலுக்கலுடன் நின்றது.

''சங்கரபுரம் பயணிகள் இறங்குங்கள்'' நடத்துனர் குரல் கொடுத்தார்.

அவர்கள் அங்கே இறங்கினார்கள். சாமான்களை இறக்கி வாங்கி சாலை ஓரமாக வைத்துக் கொண்டான் முரளி.

''இதோ போகுது பார் குறுக்கே ஒரு மண்பாதை. அது வழியா நாம் இன்னும் கொஞ்ச தூரம் நடக்கணும். நம்ப வீடு ஊருக்கு எல்லையிலே இருப்பதால் சீக்கிரம் போய் சேர்ந்து விடலாம்'' சாமான்களைத் தூக்கிக்கிட்டு நடக்கணுமா? என்று அவள் பிரமிப்புடன் பார்த்ததைப் புரிந்து கொண்டவன் போலப் புன்னகைத்தான் முரளி. ''நம்ப வீட்டு வண்டியை நாகப்பன் கொண்டு வருவான். முன்னாடியே ஏற்பாடு செஞ்சிருக்கேன். அதோ, அது நம்ப வண்டிதான்'' மகிழ்ச்சியுடன் மண்பாதை வழியாக சலங்கைகள் ஒலிக்க, காங்கேயக் காளைகள் பூட்டிய அழகானதொரு வில்வண்டி வந்து கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டினான்.



பெரியம்மா சொன்னதுபோல மாட்டு வண்டி ஒன்றும் கேவலமானதாக இருக்கவில்லை. பஞ்சு மெத்தை வைத்து பச்சை வண்ணம் பூசப்பட்டு சக்கரங்களுக்கு ரப்பர் அடித்திருந்த அந்த வண்டியில் அவள் ஏறிக் கொண்டபோது சென்னையில் அவள் பஸ்களில் நின்று கொண்டும், சாய்ந்தாடிக் கொண்டும் பயணப்பட்டதை விட இந்த மாட்டு வண்டி சுகமாகவே இருந்தது.

சிறிது பொழுதிலே வண்டி ஒரு சுற்றுச் சுவர் எழுப்பிய வீட்டின் கேட்டின் முன் நின்றது. நாகப்பன் கேட்டைத் திறந்து விட்டு வண்டியை உள்ளே ஓட்டினான்.

வேப்பமரம், மாமரம், புளியமரம் என்று பல்வேறு மரங்கள் அடர்ந்த சிறிய காடு போன்று தென்பட்ட முன் தோட்டத்தைத் தாண்டி உள்ளே சிறிது தூரம் சென்று, புதிதாக சாயமடிக்கப்பட்டு இருந்த ஒரு நீலவண்ணக் காரைக் கட்டடத்தின் முன் நின்றது.

அவள் இறங்கியபோது பார்த்தாள். தூண்களில் இரு பக்கமும் வாழை மரங்கள், வாசலில் செம்மண் கட்டிய பெரியதொரு கோலம், புது மருமகளை வரவேற்க பளிச்சிட்டுக் கொண்டிருந்தன.

உள்ளேயிருந்து ''ஆரத்தி சுத்திக் கொட்டு'' என்று ஒரு குரல் கேட்டது.

இரண்டு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தியுடன் வந்தனர். மஞ்சள் நீரைச் சுழற்றிக் கொட்டியதும் ஒருத்தி அவள் கன்னத்தைத் தொட்டுத் தடவி, திருஷ்டி சொடுக்கினாள்.

''வலது காலை எடுத்து வச்சு உள்ளே வாம்மா'' உத்திரவிட்டாள் இன்னொருத்தி.

கூடம் போன்ற பகுதியில் பலர் உட்கார்ந்து இருந்தனர்.

''தம்பி! முதல்லே பெண்ணை விளக்கேத்தச் சொல்லு. பிறகு உங்கப்பா படத்துக்கு விழுந்து கும்பிட்டு விட்டு,

உங்கம்மாகிட்ட கூட்டிட்டுப்போ'' யாரோ பெரியவர் உத்திரவிட்டார்.

அவர் சொன்னதை எந்திரமாகச் செய்தான் முரளி.

அவன் சொன்னதை எந்திரமாகச் செய்தான் முரளி.

கையோடு கொண்டு வந்த தன் அம்மாவின் காமாட்சி விளக்கையும் வீட்டின் பூஜை அறையில் இருந்த பெரிய குத்து விளக்கையும் ஏற்றி விட்டு, கூடத்து சந்தன மாலையில் அலங்காரமாகத் தென்பட்ட தெய்வமாகி விட்ட மாமனாருக்கு மரியாதையாக விழுந்து கும்பிட்டாள்.

''இப்படி வா. அம்மா அறைக்குள்ளே படுத்திருக்காங்க'' என்று முரளி அந்தப் பெரிய அறைக்குள் அழைத்துச் சென்றான். கூடத்தை ஒட்டிய அறையில் வெளிப்புற சன்னலைத் சாத்தியிருந்ததால் வெளிச்சம் குறைவாக இருந்தது. மேலே தெரிந்த வெண்டிலேட்டர் வீசிய மெல்லிய ஒளியில் பெரிய கருங்காலிக் கட்டிலின் மீது மெத்தை விரிப்பில் படுத்துக் கிடந்த நோயாளிப் பெண்மணி ஒருத்தி தன்னைக் கண்டதும் தலையைத் திருப்ப முயலுவதைப் பார்த்தாள்.

''அம்மாவுக்கு பாரிச வாயு. ஒரு கையும் காலும் விளங்காமல் படுத்திருக்காங்க. பண்ணாத வைத்தியம் பாக்கியில்லை. இடது பக்கம் மரத்துப் போய்க் கிடக்காங்க. அதனால்தான் நம்ம கல்யாணத்துக்கு வர முடியலை. அம்மாவைக் கவனிச்சுக்கிறது உன் பொறுப்பு...'' முரளி முறுவலித்தான்.

முன்தலை பட்டையாக வெளுத்து, முகம் சிறிது உப்பிக் காணப்பட்ட அந்த அம்மாளா அவளுடைய மாமியார்?

அவளுடைய மாமியார் ஒரு நோயாளி என்பதை யாரும் இதுவரை தெரிவிக்கவில்லையே.

''அம்மா? உங்கள் மருமகளைப் பாருங்கள். நல்லா இருக்கணும்னு வாழ்த்துங்கள்'' முரளி கண்கலங்கியவனாகத் தன் கைகளைக் கூப்பிக் கொண்டு நின்றான். ரம்யாவும் கைகளைக் கூப்பிக் கொண்டாள்.



படுத்திருந்தவள் மிகவும் சிரமப்பட்டுத் தலையை அவர்கள் பக்கம் திருப்பினாள். ரம்யாவைக் கண்டதும் அவள் முகம் பளிச்சென்று ஒளிவிட்டது.

''வாம்மா!... கிட்ட வா இப்படி...'' என்று மெல்லிய குரலில் தடுமாற்றமாக அழைத்தாள்.

அருகில் வந்த மருமகளை வலது கையால் மெல்லத் தொட்டாள்.

''மகராசியா என் மகனோட பூவும் பொட்டுமா நீண்ட காலம் சுகமா இருக்க இறைவன் அருளட்டும்னு பிரார்த்திச்சுக்கிறேன்'' தழுதழுத்தாள். அவள் கண்களில் இருந்து பெருகிய கண்ணீரை சட்டென்று மகன் தன் மேல் துண்டினால் துடைத்து விட்டான்.

''என்னம்மா இது... இப்போ?''

''இது ஆனந்தக்கண்ணீர், முரளி. பெண்ணை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நம் குடும்பத்துக்கு ஏத்தவளா நீ கொண்டு வந்திருக்கே. கையும் காலும் நல்லா இருந்தால் இத்தனை நாழி நான் உங்களை வரவேற்க வீட்டை இரண்டு படுத்தியிருப்பேன்'' என்றாள்.

பின்னர், தனது தலையணையின் அடியில் கிடந்த கொத்து சாவியை மெல்லத் துழாவி வலது கையால் சிரமத்துடன் எடுத்து மருமகள் முன் நீட்டினாள்.

''இந்தாம்மா ரம்யா! இனி இந்த வீட்டுப் பொறுப்பு உன்னுடையது. சாவியை நீயே வச்சுக்கிட்டு குடும்பத்தை சீராகக் கவனி. முரளிக்கு சில சமயம் ரொம்ப கோபம் வரும். அப்பனைப்போல கொஞ்சம் முன் கோபி... ஆனால், நல்ல பிள்ளை. அவன் இந்தக் காலத்துப் பிள்ளையில்லேம்மா... பெரியவங்ககிட்ட பாசமும் பிரியமுமா இருக்கிற ஒரு நல்ல பிள்ளை. போகப் போக அவனை நீ தெரிஞ்சுப்பே. சாவியை எடுத்துட்டுப் போய் இரும்புப் பெட்டியைத் திறந்து உள்ளே

வச்சிருக்கிற நகைகளை எடுத்துப் போட்டுக் கொள். மேலே போட்டு கிட்டிருக்கிற இந்த கவரிங் சமாசாரங்களை முதல்லே கழற்றி வை. எங்கள் வீட்டு மருமகளா லட்சணமா என் நகைகளைப் போட்டுக்கிட்டு நல்லா இரும்மா.''

இதுவரை யாரும் ரம்யாவிடம் இப்படி அன்பாகப் பேசியதேயில்லை என்ற காரணத்தினாலோ, அவள் எதிர் பார்த்தபடி புகுந்த வீடு ஒரு பயங்கர சிறையாக இல்லை என்ற நிம்மதியாலோ ரம்யா கண்கலங்கிப் போனாள்.

மாமியார் நீட்டிய சாவியை இரண்டு கைகளை நீட்டி ஏந்திப் பெற்றுக் கொண்டாள்.

# 6

சென்னையில் பெரியப்பா சொந்தமாகக் கட்டி யிருந்த அந்தச் சிறு புறாக்கூண்டு வீட்டுடன் ஒப்பிட்ட போது, அவர்களது கிராமத்து வீடு அவளுக்கு ஒரு அரண்மனை போல வியப்பைத் தந்தது.

பெரியதொரு தோட்டத்திற்குள் கட்டப்பட்டு இருந்த பழைய காலத்து வீடு முன் பகுதியை சமீப காலத்தில்தான் சீர்திருத்தி மாடிக் கட்டடமாக மாற்றியமைத்தான். அப்படியே மாடியில் ஒரு அறையும் கட்டிவிட்டிருந்தான். பின்பகுதி, பழைய பாணியில் கூடம், தாழ்வாரம் என்றபடி இருந்தது. அது ஓட்டுக் கட்டடம். பின்பக்கம் இரண்டாவது கட்டு. அங்கு சாமான்கள் சேமிக்க சில அறைகளும், நடுவில் வெளிச்சம் தர முற்றமும் இருந்தது. அதைத் தாண்டி அந்தப் பெரிய கதவைத் திறந்து வெளியே வந்தால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரு பெரிய தோட்டத்திலே பூச்செடி களும், காய்கறி வகைகளும், தோட்டத்தின் ஒரு பகுதியிலே ஒரு பெரிய கிணறு, அதன் அருகே மின்சாரத்தால் இயங்கும் பம்பு செட்டு. சற்று தொலைவில் மாட்டுக் கொட்டில்,



அதில் இரண்டு டெல்லி எருமைகளும், இரண்டு கறவைப் பசுக்களும் தன் கன்றுகளுடன் நின்று கொண்டிருந்தன.

வந்திருந்தவர்கள் விருந்து சாப்பாட்டை முடித்து வாழ்த்தி விட்டுப் போனதும், மெல்லத் தானே சுற்றிப் பார்த்து தன் சூழ்நிலையைப் புரிந்து கொண்ட ரம்யாவுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது... மனதில் வருத்தமாகவும் இருந்தது. சாப்பாட்டிற்கும் துணிக்கும் பஞ்சமில்லாத இடம் என்று பெரியப்பா சொன்னது மிகவும் உண்மையே. அந்த சூழ் நிலையில் அவள் பட்டினியாக- கிழிந்த ஆடையில் வறுமையிலே வாடி நிற்கப் போவதில்லை... உறுதிதான்.

ஆனால், அத்தனையையும் ஏற்கப் போகும் அவள் மனதிலே முரளி மீது ஏன் இந்த வெறுமையான உணர்வு?

''கொஞ்சம் வெளியில் போயிட்டு சீக்கிரம் வந்துடறேன். அதுவரை துணைக்கு நம்ப வீட்டு வேலை செய்யும் வேலம்மா இருப்பாள்... கவலை வேண்டாம். கதவை தாள் போட்டுக் கொள்'' என்று கூறி விட்டு முரளி வெளியே போய் விட்டிருந்தான்.

கொத்து சாவியை இடுப்பில் சொருகிக் கொண்டு விட்டால் மட்டும் போதுமா? வீட்டை நிர்வகிக்கத் தெரிய வேண்டுமே?

மாமியார் ரத்தினம்மா படுத்திருந்த அறைக்குள் மெள்ளப் போய் நின்றாள்.

''நானே உன்னைக் கூப்பிடணும்னு நினைச்சேன், இந்த வேலம்மா விருந்தாளிகளை கவனிக்கிற மும்முரத்திலே இந்தப் பக்கமே வரலை. இப்படி அந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்கிட்டு உட்கார்'' உத்தரவிட்டாள்.

நோயாளியாகப் படுக்கையில் இருந்தாலும், ரத்தினம் மாளின் பேச்சில் ஒரு ராணிக்கு உண்டான அதிகார தோரணை தொனிப்பதை கவனித்தாள் ரம்யா. நாற்காலியை நகர்த்திப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

அன்றாடம் வீட்டில் செய்ய வேண்டிய வேலைகளை விரிவாக எடுத்துச் சொன்னாள் ரத்தினம்மாள்.

''மாடுகளை கவனிக்க தனியாக ஒரு ஆள் இருக்கிறார். வீட்டைப் பெருக்கி, பாத்திரம் துலக்கிக் கொடுத்து துணி துவைக்க வேலம்மாள். சமைக்கவும், மாமியாரைப் பார்த்துக் கொள்ளவும்தான் அவள் பாடுபட வேண்டும் என்று புரிந்த போது, அவளது கவலை பாதியாகியது. பெரியப்பா வீட்டில் அவள் அடிமையாக நாள் முழுவதும் முதுகு உடைய, கை நகங்கள் தேய எப்படி உழைத்திருக்கிறாள்?

ஆனால், இங்கே? கடின உழைப்பையெல்லாம் வேலையாட்கள் பகிர்ந்து கொள்ள, அவள் குடும்பத் தலைவி என்ற பெருமையானதொரு பொறுப்பைத்தான் ஏற்கப் போகிறாள். கேட்கத் தெம்பாக இருந்தது.

மெல்லக் கை நீட்டி மருமகள் முகத்தை வருடினாள் ரத்தினம்மாள்.

''நான் இப்படி நோயாக விழுந்திட்டதினாலே கல்யாணத்தை ரொம்ப எளிமையா செய்து முடிச்சுக்கிட்டு உன்னை அழைச்சிட்டு வந்துட்டான் முரளி. ஆனால் உனக்கு குறை ஏதும் இருக்காது. இரும்பு பீரோவிலே இன்னிக்கு நீ உடுக்க ஒரு சேலை எடுத்து வைக்கச் சொன்னேன், வச்சிருப்பான். ஊரைக் கூட்டி எதுவும் செய்யப் போறதில்லை. இரவு சாப்பாட்டை சீக்கிரம் முடிச்சிட்டு நீ உங்கள் அறைக்குப் போயிடு...'' மருமகளைப் பார்த்து, லேசாகச் சிரித்தாள் ரத்தினம்மாள்.

அதன் பொருள் அவளது மூளையில் உறைக்க சிறிது நேரம் ஆனது.

இப்பொழுது அவள், அவளது கணவனைத் தனியே முதல் முதலாகச் சந்திக்க வேண்டும்.



ஏன் இப்படி பயத்திலே அவள் உடல் பதறுகிறது... ஏன் இப்படி ஒரு அச்சம்... முன்பின் தெரியாத மனிதன் என்பதினாலா! எச்சிலை விழுங்கிக் கொண்டாள். ''ஆகட்டும் அத்தை'' என்று மெல்லிய குரலில் பதில் அளித்து விட்டு, வெளியே வந்தாள். அந்த முதல் சந்திப்பில் என்ன பேசுவது? அவள் மனதிற்குள் பலவிதமான ஒத்திகைகள் துரிதப்படத் தொடங்கின.

மாமியாருக்கு இரவு உணவிற்காக தானே தயாரித்த புழுங்கல் அரிசிக் கஞ்சியை தம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்தாள். மெல்ல அவளைத் தன் தோள்மீது சாத்திக் கொண்டு கஞ்சியை மெதுவாகப் புகட்டினாள். பின்னர் வாயைத் துடைத்து விட்டு படுக்கை மீது தலையணைகளை உயரமாக வைத்து அவளை மெல்ல சாத்தினாள்.

வீட்டுக்கு வந்ததும் வராததுமாக இப்படி ஒரு பணிவிடையா? ரத்தினம்மாள் மகிழ்ந்து போய்விட்டாள். உண்மையில் அவள் மகன் பாக்கியசாலிதான். இத்தனை நாளும் இவளுக்காகத்தான் காத்திருந்தானோ?

''உன்னைக் கல்யாண கோலத்தில் பார்க்கக் கொடுத்து வைக்கலை. இராத்திரி உங்கள் அறைக்குப் போறதுக்கு முந்தி, இங்கே வந்து உன் அலங்காரத்தை கொஞ்சம் எனக்குக்காட்டி விட்டுப் போம்மா. நகையும் நட்டுமா புதுச் சேலையிலே உன்னைப் பார்க்க ஆசையாய் இருக்கு'' குழைவாகக் கேட்டுக் கொண்டாள் ரத்தினம்மாள்.

முன்பு ஒரு நாள் அவள் தன்னைக் கொஞ்சம் அலங்கரித்துக் கொள்ள முயன்றபோது, பெரியம்மா எப்படிக் கத்தினாள்? ''கண்ணாடி முன்னாலே எத்தனை நாழி பார்த்துக்கிட்டே நிப்பே. இருக்கிற அழகுதானே தெரியும்? ஆமாம், தோட்டத்திலே இருக்கிற நித்திய மல்லிகையை பரிச்சு கட்டி சாமி படங்களுக்குப் போடச் சொன்னேன். அத்தனையையுமா தலையிலே வச்சுக்

கிட்டே? எந்த மன்மதன் உன்னைப் பார்க்கப் போறான்னு அலங்காரம்?'' நெருப்புத் துண்டுகளை அவள் மீது கொட்டுவதுபோல பெரியம்மா கூப்பாடு போட்டு விட்டாள்.

படங்களுக்குப் போட்டு மீதியிருந்த துளிப் பூவை வைத்துக் கொண்டதற்கு அத்தனை பேச்சு.

இங்கே மாமியார் அவளை சிங்காரித்துக் கண் குளிரப் பார்க்க ஆசைப்படுகிறாளே?

ரத்தினம்மாளின் தங்கச் சங்கிலியும், அட்டிகையும் புது மெருகில் பளபளக்க, கண்ணாடி வளையல் நடுவே மாமியாரின் தங்க வளைகளும் கொலுசும் குலுங்க, காதுகளில் நீல ஒளியை வீசிய வைரக் கம்மலும், இடையில் நீலபனாரஸ் பட்டு சேலையுமாக, தலை கொள்ளா குண்டு மல்லிப் பூவுடன் அழகு ஓவியமாக கையில் பால் செம்புடன் உள்ளே வந்து நின்றாள், ரம்யா.

ரத்தினம்மாள் கண்களை அகலத் திறந்து வியப்பும் மகிழ்ச்சியுமாக மருமகளைப் பெருமிதத்துடன் பார்த்தாள்.

''இங்கே வா. என் கண்ணே பட்டுடும் போல இருக்கு. என் உடம்பு குணமாகி, கொஞ்சம் எழுந்து நடக்க தெம்பு கூடிட்டா, அடுத்த வருடமே இந்த பாட்டி மடியில் விளையாட ஒரு பேரன் வேணும்... தெரியுமா?'' கண்களைச் சிமிட்டியபடி அவள் கன்னத்தைத் தன் வலது கையால் மெல்ல வருடினாள்.

நெஞ்சு படபடக்க, கால்கள் தள்ளாட ரம்யா விடை பெற்றுக் கொண்டாள்.

அறைக்குள் நுழையும் முன்பே ஊதுவத்தியின் நறுமணம் முகத்தில் மோதியது.

பட்டு வேட்டியும், சட்டையும், சரிகை உத்திரியமுமாக மாப்பிள்ளை அலங்காரத்தில் பெரிய கட்டிலின் மெத்தை விரிப்பின் மேல் ஓரமாக முரளி உட்கார்ந்து இருந்தான்.



பால் செம்பை அருகில் இருந்த முக்காலி மீது வைத்து விட்டுக் கதவைத் தாளிட்டாள். அவளது கரங்கள் நடுங்கின. எத்தனையோ முறை ஒத்திகை செய்து வைத்திருந்த வார்த்தைகள், கோர்வையாக வெளிவர மறுத்தன.

புதுப்புடவையை மடக்கிக் கொண்டு, தரையில் அவன் எதிரே ஒருபுறமாக உட்கார்ந்து கொண்டாள்.

''ஏன் அங்கே உட்கார்ந்து விட்டாய்? இப்படி இங்கே உட்காரலாமே'' முரளி முறுவலித்தான்.

''இனியும் பேசாதிருப்பது தவறு'' என்று நெஞ்சம் உறுத்தியது. ''என்னைப் பற்றிய விவரம் பூராவும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்க நியாயமில்லை. இதற்கு முன் வந்த பல வரன்கள் நடந்த சங்கதியைக் கேள்விப்பட்டு என்னை ஒதுக்கிட்டு போய் விட்டாங்க.''

''அந்த விவகாரத்தைப் பற்றி உன் பெரியப்பா விவரமாகவே சொன்னார். அதை நான் பெரிதாகப் பாராட்டலை.''

''அறியாத வயதில் ஏதோ தவறு செய்திட்டே. நல்லவேளை நிலைமை விபரீதமாகி விடும்முன் பத்திரமாக வீடு வந்து சேர்ந்துட்டே.''

கண் இமைகளை நீர் சுடுவதை உணர்ந்தாள்.

அப்படி யாரும் அந்தத் தவறைச் சுலபமானதாக, எடுத்துக் கொண்டதில்லை.

பெரியம்மாவும், அவளது உறவினர்களும் எத்தனை முறை குத்தலாக இடித்துக் காட்டியிருக்கின்றனர்?

''ஓடுகாலிப் பொண்ணுன்னு தெரிஞ்சதும் மரியாதை உள்ள எவனும் உன் முகத்தை நிமிர்ந்து பார்க்க ஆசைப்பட மாட்டேங்கிறான்? இந்தக் கதையைக் கேட்டபின் எவன் இவளைக் கட்டிப்பான்?'' என்ற கொடுமையான வசைச் சொற்களைக் கேட்டு மனம் புண்ணாகிப்போய், காதல் என்ற

அந்த வார்த்தை எட்டிக் காயாகக் கசக்க, அவள் மனம் வெறுத்துப் போய் விட்டிருந்தாள்.

''நீங்கள் எல்லாம் கேட்ட பிறகு துணிஞ்சு என்னைக் கல்யாணம் செய்து கொண்டதுக்கு ஒரு வகையில் நான் நன்றி சொல்லணும். இல்லாவிட்டால் என் கொத்தடிமை வாழ்க்கையில் இருந்து எனக்கு விடிவே கிடைச்சிருக்காது'' அவள் குரல் கரகரத்தது.

''எனக்கும் நீ ஒருவகையில் உதவியிருக்கிறாய் என்பதைத் தெரிந்து கொண்டால், என்ன சொல்வாயோ?''

திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள், ரம்யா. ''உங்களை எனக்கு முன்பின் தெரியாது. பத்திரிகையில் வந்த விளம்பரத்தை பார்த்துட்டு பெரியப்பா, இந்தக் கல்யாணத்தை அவசரமாக முடிச்சு வச்சார். என்வரை எனக்கு அந்த வீட்டில் இருந்து விடுதலை வங்கித் தந்திருக்கீங்க அதுக்கு நன்றி கூறுவதைத் தவிர...'' பேச முடியாது துயரத்துடன் தரையில் விரல்களால் கோலமிட்டாள்.

''உங்களை என்னால் நேசிக்க இயலாது. ஏற்கனவே ஏற்பட்ட அனுபவத்தில் உணர்வுகள் சிதைந்து மனம் சூனியமாகி விட்டிருக்கிறது. மேலும், மணமேடையில் பலர் முன்னிலையில் நாம் சந்தித்துக் கொண்டோம். சடங்குகள் நம்மை தம்பதிகள் ஆக்கிவிட்டன. முன்பின் தெரியாத இருவர் நாம். சட்டென்று எப்படி நெருங்கி கணவன் மனைவியாக வாழ முடியும்? என்னைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட வாழ்க்கை வன்முறைக்கு அடங்கிப்போன உப்புச்சப்பில்லாத ஒரு துயர வாழ்வு. மனைவி என்கிற தர்மத்துக்குக் கட்டுப்பட்டு இந்த அறைக்குள் வந்து உட்கார்ந்திருக்கிறேன். ஆனால், மனமும் உணர்வுகளும் உளுத்துப்போய் விட்டிருக்கின்றன. இந்த நிலையில் நான் உங்கள் அருகில் வந்து உட்காருவது



போலித்தனம் என்று தானே சொல்ல நினைத்தாய்?'' மெலிதாகச் சிரித்தான் முரளி.

பொலபொலவென்று கண்ணீர் சிந்த அவள், ''ஆமாம்'' என்று தலையை அசைத்தாள்.

''நானும் சில அனுபவங்களால் மனம் நொந்து வாழ்க்கையை வெறுமையாக்கிக் கொண்டிருக்கிறவன்.

''பின் எதற்காக என்னைக் கட்டிக் கொண்டீர்கள்? என்று, கேட்கிறியா? சொல்றேன். என் தாயார்தான் என் தெய்வம். தந்தைக்குப் பின் என்னை ஆளாக்க அவங்க பட்டபாட்டை நான் அறிவேன். வயது காலத்தில் அவங்களை சுகமாக வைத்துக் காப்பாத்தணும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன் அதிகமான இரத்த அழுத்தக் கோளாறினால் சில மாதங்களுக்கு முன் திடீர்னு மயக்கம் போட்டு விழுந்திட்டாங்க. உடனடியாக திருச்சியிலே ஒரு பெரிய மருத்துவ மனையில் கொண்டு சேர்த்தேன். பல டாக்டர்களை வச்சுப் பார்த்தேன். மயக்கம் தெளிஞ்சு கண் விழிச்சு பார்த்தாங்க- நினைவு வந்தது. ஆனால், ஒரு காலும் கையும் விளங்காம பாரிசத்தால் தாக்கப்பட்டு விட்டன.

''தக்க கவனிப்பு தந்தா மெள்ள மெள்ள குணமாகி எழுந்து நடக்கக் கூடும்னு டாக்டர்கள் நம்பிக்கை தெரிவிச்சாங்க. வீட்டுக்கு எடுத்துட்டு வந்து, அவங்களை தனி அறையிலே வச்சு கவனிக்க முயன்றேன். என்னால் சாத்தியப்படலை.''

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். ''ஒரு நல்ல நர்சாக வச்சு கவனிக்கிறது...''

பதிலுக்கு அவன் விரக்தியாக சிரித்தான். ''இது சின்ன கிராமம். ஓரளவுக்கு நாங்கள் வசதியா இருக்கிறவங்க... நான் கல்யாணம் ஆகாது தனித்திருப்பவன். என் வீட்டில்

ஒரு இளம் நர்சை கொண்டு வந்து வச்சால் பாவம் அந்தப் பெண்ணின் பெயர் வீணாகப் பாழாகிவிடும்.''

''ஒரு வயதான நர்சாகப் பார்த்து வைக்கிறது?''

''அம்மாவைத் தூக்கிப் பிடிச்சு உட்கார வைக்க உடம்பைத் துடைச்சுவிட, வேளைக்கு ஆகாரம் கொடுக்க, கருத்தா கவனிக்க ஒரு துடிப்பான இளம் பெண் ஒருத்தி தேவைப் பட்டாள். அவள் நெருங்கிய உறவுக்காரியாக'' இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அப்படி ஒரு பெண்ணை வீட்டுக்குள் உறவுக்காரியாக நான் கொண்டு வரவேண்டுமானால், அவளை நான் கல்யாணம் செய்து கொண்டுதான் அழைச்சிட்டு வர முடியும். இளம் பெண் என்றால் யாரையாவது நான் கட்டிக்கொண்டு வந்துவிடவும் முடியாது. வீட்டை நிர்வகிக்கத் தெரிஞ்ச கொஞ்சம் பொறுமையான பெண்ணாக இருக்கணும்னு தேடிக் கிட்டிருந்தேன்- விளம்பரம் செய்தேன்.

''நான் அந்தத் தகுதியுடையவள்னு உங்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட்டது.''

''முகராசி என்பார்களே அதுதான்னு வச்சுக்கோ. உன்னைப் பெண் பார்க்க வந்தப்போ ஒரே தடவை பார்த்தேன். இந்தப் பொண்ணு அம்மாவை நல்லா கவனிச்சுக்கும்னு மனது சொல்லிச்சு. உடனே ஒப்புதல் தந்துட்டேன்.

''ஒரு நல்ல மருமகளாக இருக்க முடியும். ஆனால்!... ஒரு அன்பான மனைவியாக கடமைகளைச் செய்ய இயலாதுன்னு சொல்ல வர்றே? அக்கறை இல்லே. என் தாய்க்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. அதுவே பெரிய வெற்றி. அவங்களைக் கருத்தா நீ கவனிச்சுக்கிட்டாப் போதும். நீ என் மனைவி என்கிற நிலையில் இருக்கிற மாபெரும் கடமைன்னு சந்தோசப்பட்டுக்குவேன்- என்னைப்பத்தி உனக்கு ஏதும் தெரியாது அல்லவா?''

அவள் இல்லை என்று தலையை அசைத்தாள்.



''என் வாழ்வில் நான் காதலில் ஏமாற்றமடைந்தவன். அவமானத்தால் குன்றி, மனம் நொறுங்கி, இனி எனக்கு வாழ்க்கை என்பதே கிடையாது என்று வெறுப்படைந்து போயிருக்கிறவன், சுருங்கச் சொன்னால் நான் ஒரு பட்ட மரம்.''

வியப்புடன் அவனை அவள் பார்த்தாள்.

''நீயும் வாழ்வில் மனம் கசந்து போய்விட்டிருக்கிறவள். நானும் ஏமாற்றத்தை மனம் அனுபவித்து வெறுமையாகி விட்டிருக்கிறவன். வெளி உலகத்திற்காகவும் கணவன்-மனைவி என்ற உறவிற்காகவும் மிருகத்தைப் போல நான் உன்னை அணுகமாட்டேன். பயப்படாதே.

''இருவரும் சேர்ந்து ஒரே வீட்டில் வாழ்வோம். என் தாயைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளும் நன்றிக் கடனுக்காக உன்னை நான் காலம் முழுவதும் என் மனைவி என்கிற நிலையில் வைத்துக் காப்பாற்றுவேன் நிச்சயம்.''

''மிக்க நன்றி'' என்றாள் தடுமாறிய குரலில் ரம்யா.

''என்றாவது நம்மையும் மீறி நம் மனம் மாறி ஒருவர் மேல் ஒருவருக்கு அன்பு ஏற்பட்டால், உலகத்தில் உள்ள மற்ற தம்பதியரைப் போல நெருங்கி இணைந்து வாழ்வோம். இல்லாவிடில் ஒரே வீட்டில் நண்பர்கள் போல் வாழ்ந்து முடிப்போம். என்ன சொல்றே?

ரம்யா பிரமிப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''இந்தப் பட்டுச்சட்டை அலங்காரம் எல்லாம் அம்மாவுக்காகப் போட்டுக்கொண்ட வேடம். இந்தப் படுக்கையில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு. நான் அடுத்த அறையில் போய் படுத்துக்கிறேன். அம்மா எழுந்திருக்க முடியாத நோயாளி. நமது உண்மை நிலை அவங்களுக்குத் தெரிய வராது'' சொல்லிக் கொண்டே எழுந்து அவன் கதவை மெள்ளத் திறந்து கொண்டு வெளியேறினான். விருந்தாளிகள் வந்தால் தங்கத் தேவைப்படும் என்று அவர்களது பெரிய

அறைக்குப் பக்கத்திலே கட்டப்பட்டு இருந்த சிறு அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு கட்டிலின் மீது முடங்கிக் கொண்டான்.

ரம்யா எழுந்து தன் அறைக்கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு, தரை மீது வந்து மறுபடியும் சுவற்றோரமாக உட்கார்ந்து கொண்டாள்.

அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. வியப்பு கலந்த ஒரு அச்சத்தில் உடல் பதறுவதை உணர்ந்தாள்.

இவர் ஒரு அதிசய மனிதராக இருக்கிறாரே? இவர் சொன்னதெல்லாம் உண்மையா... அல்லது அவளை மயக்க உபயோகித்த ஒரு உன்னத நடிப்பா?

சிந்தித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தவளுக்கு முடிவில் உறக்கம் கண்களை அழுத்தியது.

எழுந்து கட்டிலின் அருகே வந்தாள். அவர்கள் உறங்கத் தயாராக பஞ்சு மெத்தையைப் பரப்பி அலங்காரமாக காஷ்மீர் விரிப்பைப் பரத்தி விட்டுப் போயிருந்தான் வேலையாள். குற்ற உணர்வில் தவித்த அவள் மனம் அதில் படுக்க இடம் கொடுக்கவில்லை. விளக்கை அணைத்து விட்டு தரை மீது கைமடக்கில் தலையை வைத்துக்கொண்டு படுத்தாள். விரைவில் உடல் அயர்ச்சியில் உறங்கிப் போனாள்.

# 7

கோழி கூவும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். பெரியம்மா வீட்டில் அப்படி விடியற்காலை எழுந்து பழக்கம். இப்போது அவள் அந்த வீட்டு மருமகள் ஆயிற்றே விடியுமுன் எழுந்து விரைவாக வேலையைக் கவனிக்க வேண்டாமா?



என்ன இது? கட்டின பட்டுச் சேலையோடு அப்படியே உறங்கிப் போய் விட்டிருக்கிறோம்? பரபரப்புடன் தன் பெட்டியைத் திறந்து மாற்று ஆடை, துவாலை, சோப்பு பல் துலக்க பேஸ்ட் - பிரஷ் இவைகளை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

வீடு அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. கூடத்து கடிகாரத்தின் முள், மணி ஐந்தை நெருங்குவதை விடி விளக்கின் வெளிச்சத்தில் கண்டாள்.

வேகமாக குளியலறையை நோக்கி விரைந்தாள். குளித்து முடித்தபின், மாற்றுடை அணிந்ததும், அவள் காலையில் இருந்து இரவு வரை செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி தான் மாமியார் அவளுக்கு விரிவாகச் சொல்லி விட்டிருந்தாளே?

அன்று வெள்ளிக்கிழமை. அவள் தலை முழுகி விட்டு பூஜை விளக்கை ஏற்ற வேண்டும்.

அந்த நாளில் காலை காபி பலகாரத்துக்குப் பின் கணவன் அவனது கொடிக்கால்களையும், வயல்களையும் பார்வையிட வெளியே சீக்கிரம் கிளம்பி விடுவார். சில சமயம் நடந்தே போய் விடுவார். சில சமயம் வில் வண்டியில் புறப்படுவார். எரு வாங்கவோ, மற்ற வங்கி காரியங்களை கவனிக்கவோ அவசியப்பட்டால், ஸ்கூட்டரில் புறப்பட்டுப் போவார். மாமியார் கிளிப் பிள்ளைக்கு சொல்வது போல, படிக்கும் மாணவிக்கு வாரப் பாட அட்டவணை தருவது போல, அவள் வீட்டில் கவனிக்க வேண்டிய காரியங்களைப்பற்றி விரிவாகச் சொல்லித் தந்திருந்தாள்.

தலை முழுவி விட்டு, மாமியாருக்குக் கேழ்வரகு கூழ் காய்ச்சி பாலுடன் கலந்து தயாராக வைக்க வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் காப்பி பலகாரத்துக்கு இட்டலியும் தேங்காய் சட்டினியும் சம்பாரும் தயாராக்க வேண்டும்.

வேலம்மாள் முதல் நாளே மாவை அரைத்துத் தயாராக சமையல் மேடை மீது மூடி வைத்து விட்டுப் போயிருந்தாள்.

முதல் முதலாக ரம்யா வீட்டை நிர்வகிக்கப் போகிறாள். தவறு ஏதும் செய்யக்கூடாது.

பரபரப்பாகப் பச்சைத் தண்ணீரை அண்டாவில் இருந்து மொண்டு தலையில் ஊற்றிக் கொண்டாள்.

விசித்திரமானதொரு வாழ்க்கைதான். ஆனாலும் எத்தனை வித்தியாசம்? பெரியப்பா வாசுதேவன் வீட்டில் அவளுக்கிருந்த அடிமைத்தளை நீங்கி, இப்போது பூரண உரிமையுடன் தன் வீட்டின் தலைவியாக அவள் வளைய வந்து கொண்டிருந்தாள். விடிந்ததில் இருந்து படுக்கும் வரை உடல் சோர, கை கால்கள் தள்ளாட அவள் இங்கே உழைக்கத் தேவையிருக்க வில்லை.

வீட்டை நிர்வகித்து, சமைத்து, கணவனையும், மாமியாரையும் பொறுப்புடன் கவனித்துக் கொள்ளும் பணி அவளுக்குப் பாரமாகவே இருக்கவில்லை.

பெரியம்மா நீலா ஒருமுறை ஆஸ்பத்திரியில் ஒரு சிறு அறுவை சிகிச்சை செய்துகொண்டு வந்து வீட்டில் பத்து நாள் படுக்கையில் கிடந்தாள். அப்போது அவள் ரம்யாவைப் படுத்தியபாடு!

ஆனால், கையும் காலும் திடமாக இல்லாத நிலையில் கூட மாமியார் ரத்தினம்மாள் அவசியம் இல்லாதபோது அவளைத் தனது அறைக்கு அழைத்துத் தொந்திரவு செய்யவில்லை.

மருமகள் தன்னைத் தூக்கிப் புரட்டி உட்கார வைக்க நேர்கிறதே என்ற கவலையில், ரத்தினம்மாள், தன்னால் முடிந்தவரை வலது கை கால்களைத் திருப்பிக் கொடுத்து அவளுடன் ஒத்துழைத்தாள். ''மூச்சை பிடிச்சுக்கிட்டு தூக்காதேயம்மா, தோள்பட்டை சுளுக்கிட்டு அவதிப்



படுவே. வேலம்மாளைக் கூப்பிடு உதவி செய்யச் சொல்'' மருமகளுக்கு அனுசரணையாகப் பேசினாள். பகல் உணவு நேரம் மட்டும் ரத்தினம்மாள் மற்றவர்களைப் போல வீட்டில் எல்லோருக்கும் சமைத்த உணவை தானும் சாப்பிடுவது வழக்கம். பத்தியங்களை அனுசரிப்பதில்லை. சாதத்தை தட்டில் போட்டு குழம்புடன் பிசைந்து பொரியல் - கூட்டு முதலியவற்றை வைத்து, எடுத்துத் தின்ன ஒரு கரண்டியும் அதில் வைத்து, அவள் கை காட்டும் இடத்தில் தட்டை வைத்து சாப்பிடச் சொல்லி உதவத் தெரிந்து கொண்டு இருந்தாள் ரம்யா.

பக்கத்திலேயே கவனமாக நின்று தேவைப்பட்டபோது சட்டென்று தண்ணீர் தம்ளரை எடுத்து மாமியார் வாய் அருகில் வைத்து குடிக்கச் சொல்லி உதவினாள். சாப்பிட்ட பின்னர் வாயைத் துடைத்து விட்டு, மீண்டும் அவளை மெல்லப் படுக்கை மீது சாய்ந்த நிலையில் படுக்க வைத்தாள். கை கால் விளங்காது படுத்துக் கிடந்த மாமியாருக்கு வெகு விரைவில் ஒரு கைதேர்ந்த நர்சைப் போலப் பணிவிடை செய்யக் கற்றுக் கொண்டிருந்தாள். தினசரி ஒருமுறையேனும் ரத்தினம்மாள் தன் மருமகளைப் புகழாது இருந்ததில்லை.

''எந்தப் பாவமோ என்னை இப்படிப் படுக்கையிலே தள்ளிடுச்சுன்னு வருந்திக்கிட்டிருந்தேன். ஆனால், பாவங்களின் இடையே கொஞ்சம் புண்ணியமும் செய்திருக்கேன். இல்லாட்டி இப்படி ஒரு நல்ல மருமகள் எனக்குக் கிடைப்பாளா? நானே பெத்த பெண் ஒருத்தி இருந்தால் கூட என்னை இப்படி அன்பாக கவனிக்கவே மாட்டாள். மகராசியா இரும்மா'' கண்கலங்கி நெஞ்சுருகிப் போவாள்.

வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டதும், சில நேரங்களில் ரம்யா மாமியார் அருகே அமர்ந்து, அவளுக்குப் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் படித்துக் காட்டுவாள்.

கண்களை மூடிக்கொண்டு, இனிய குரலில் அவள் வாசிப்பதைக் கேட்டு லயித்துப் போய்க் கதையுடன் ஒன்றிப் போனாலும் அவளுக்குக் கூர்மையான காது, வாசலில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டு விட்டால் போதும் பரபரப் படைந்து விடுவாள்.

''நாளைக்கு மீதியை வாசிக்கலாம்- முரளி வந்துட்டான். அவனுக்குப் பசி தாங்காது. போம்மா... சீக்கிரம் போய் அவனைக் கவனி'' தாயின் இயற்கையான ஆதங்கம் அவள் குரலில் தொனிக்கும். நோயாளியாகப் படுத்துக் கிடக் கிறோம் என்று சுணங்கிக் கொள்ளாமல் தன்னைப் பார்க்க வீட்டுக்கு வந்தவர்களிடம் உற்சாகமாகப் பேசி அனுப்பும் ஒரு தோரணையும்- மருமகளை- மகள் போலப் பாவித்துப் பரிவு காட்டத் தெரிந்த பண்பினையும் கண்டு வியப்பில் மூழ்கிப்போன ரம்யாவுக்கு மிக விரைவில் மாமியாரை ரொம்பவும் பிடித்து விட்டது. தனது சொந்தத் தாயைப் போல எண்ணிக் கொண்டு பாசமும் நேசமுமாக அவளுக் குப் பணிவிடை செய்ய முற்பட்டாள்.

முரளி?

ஆரம்பத்தில் அவன் அவளுக்கு ஒரு அந்நியனாகத்தான் தென்பட்டான்.

கசந்துபோன நெஞ்சு, வெறுமையாகி விட்டிருந்ததினால் முதலில் அவளுக்கு மண வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட வில்லை. ஆனால், என்ன விந்தை?... போலியான நிலையில் மனைவி என்று அவனைக் கவனித்துக் கொண்டு அதே வீட்டில் அவனுடன் வாழ நேர்ந்த ஒரு நெருக் கத்தினாலோ, அல்லது அவனிடம் காணப்பட்ட கண்ணிய மும் கட்டுப்பாடான பழக்க வழக்கங்களும் விளைவித்த வியப்பின் காரணமோ...

அல்லது இயற்கையின் விளையாட்டோ? சூன்யமாகி விட்டிருந்த அவள் மனம் மிக விரைவில் மாறத் தொடங்கி விட்டது.



வெகு தொலைவில் வண்டி மாடுகளின் சலங்கை குலுங்கும் சத்தம் கேட்டதுமே, அவளையும் அறியாது அவள் நெஞ்சு பரபரப்பில் துடிக்கத் தொடங்கியது.

சட்டென்று அறைக்குள் ஓடி, தன் கூந்தலையும் ஆடையையும் சீர்செய்து கொண்டு நெற்றிப் பொட்டை நேராக்கிக் கொண்டு வாயிற் கதவைத் திறந்து வைத்து விட்டு, கூடத்தில் தயாராக அவன் வருகைக்குக் காத்து நிற்கத் தொடங்கினாள். ஆனால், முரளியிடம் மாறுதல்கள் எதையும் காண முடியவில்லை.

அவன் வாக்குக் கொடுத்தபடி, மிகவும் கண்ணியமாக- தூரமாகவே இருந்து கொண்டிருந்தான்.

அன்பாகப் பேசினான்- அவளைக் கருத்தோடு கவனித் துக் கொண்டான். ஆனால், கணவன் என்ற உரிமையில் மூச்சுக்காற்றுக்கூட அவள் மீது விழாது. மிகவும் எச்சரிக்கையாக விலகியே இருந்து கொண்டிருந்தான்.

உணவு பரிமாறும்போது அவளது கைகளில் குலுங்கிய புதுவளையல்களை அவன் கவனிக்கத் தவறவில்லை.

''கடைத் தெருவுக்கு வேலம்மாளுடன் போயிருந்தியா? புதுசா வளையல்கள் வாங்கினியாக்கும்... நல்லா இருக்கு'' புகழ்ந்தான்.

எங்கே பார்க்கட்டும் என்று அவளது கையைத் தொட்டு அவள் கைகளுக்கு அந்தப் புது தினுசு வளையல்கள் ரொம்ப நன்றாக இருக்கு என்று சொன்னால் என்னவாம்? அவளது உள்ளம் சிணுங்கியது.

''பூப்போல இட்லி சுடப் பழகிக்கிட்டே... எனக்குப் பிடிச்சாப்பல கொஞ்சம் காரம் காரமாகவே குழம்பையும் வச்சிருக்கே'' காப்பி பலகாரத்துக்கு அவள் பரிமாறிய இட்லிச் சாம்பாரை சுவைத்துக் கொண்டே அவளைப் புகழ்ந்தான்.

''நம்ப கொடிக்கால் வெத்திலை சாப்பிட்ட பிறகு நீ வெத்திலை போடற பழக்கத்தை இங்கே வந்து கத்துக்கிட்டிருக்கியே. உனக்காக நல்ல துளிர் வெத்திலையா கிள்ளிக் கொண்டு வந்தேன்'' வாழை இலைக்குள் சுருட்டி மடக்கிக் கட்டி எடுத்து வந்த வெற்றிலையை ஊஞ்சல் பலகை மீது வைக்கும்போது, அவள் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்து போனது. அவனது மகிழ்ச்சி- அன்பான செய்கைகள்- கேலிப் பேச்சு எல்லாம் அவளுக்கு இனித்தன. ஆனால், அவளது மனம் மாறி, அவன் மீது அன்பு வளர்ந்து கொண்டு வருவதை அவன் புரிந்து கொள்ளாதது அவளுக்குப் புதிராக இருந்தது- வேதனையாகவும் இருந்தது.

எப்படி அவள் தன் மனதை அவனுக்குத் தெரியப்படுத்த முடியும்? பழையதொரு முட்டாள் தனமான அனுபவத்திலே மனம் நொறுங்கிப்போய் அப்படி வெறுப்பாகப் பேசிவிட்டேன். இந்த சில நாட்களில் உங்களை நன்றாகவே புரிந்து கொண்டு விட்டேன். என் மனமும் நன்றாகவே மாறி விட்டது. இப்போது அது உங்கள் அன்புக்கு ஏங்குகிறது. உங்களது உண்மையான மனைவியாக வாழ ஆசைப்படுகிறது என்று தன் உள்ளத்திலே கொந்தளிக்கும் உணர்வுகளை கொஞ்சமும் கூச்சமின்றி அவள் எப்படிக் கொட்டுவாள்?

அன்று காலை அவன் பல் துலக்கியதும், முகத்தை மழித்துக் கொண்டு குளியலறைக் கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தான். அவனது மாற்றுடைகளை எடுத்துக் கொண்டு வந்து அறையின் கம்பி மீது தொங்க விட்டு விட்டுத் திரும்பியவள் துணுக்குற்றாள். சோப்பு நுரைக்கு இடையே தாடையில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. ''ஆ! அவசரத்தில் சதையையும் சேர்த்து மழிச்சுட்டேன்'' சொல்லிக் கொண்டு அவன் தாடையைத் தடவியபடி நிற்பதைக் கண்டதும் பரபரப்புடன் அவள் துவாலையை எடுத்துக் கொண்டு அருகில் ஓடி வந்தாள்.



''இருங்க... கொஞ்சம் ஒத்தி எடுக்கிறேன். காயம் பெரிசா இருந்தா, மருந்து போட்டு பிளாஸ்திரி போட்டுப்பீங்க'' துவாலையுடன் நெருங்கியபோது அவன் துள்ளிக் கொண்டு பின்னால் நகர்ந்து நின்றான்.

''துவாலையை இப்படி வை. நானே துடைச்சுக்கிறேன். காலைவேளை தலை முழுகிட்டு நீ சுத்தபத்தமா இருக்கே- பூஜையறை விளக்கை ஏத்தனும், என்மேல் கை பட்டுட்டா, மறுபடி நீ தலைமுழுகிட்டு விளக்கேத்தணும்? ஏன் உனக்கு வீண் வேலை'' சிரித்தான்.

அவளுக்கு வெட்கமும்- துக்கமும் தாள முடியவில்லை. கண் இமைகளைச் சுட்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு புன்னகைத்து விட்டு, சட்டென்று உள்பக்கம் சென்று விட்டாள்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை சேலத்தில் இருந்து உறவுக்காரர் ஒருவர் ரத்தினம்மாளைப் பார்த்துப் போக வந்தார். இரவு தங்கி விட்டு மறுநாள் ஊர் போவதாக ஏற்பாடு. விருந்தாளிக்கு என்று அமைக்கப்பட்ட அந்தச் சிறு அறையில் அவருக்கு படுக்க வசதி செய்து கொடுத்து விட்டு, ஒரு தலையணையை கூடத்து ஊஞ்சல் மீது போட்டுக் கொண்டு சாய்ந்தான் முரளி.

பால் தம்ளருடன் வந்த ரம்யா கேட்டாள். ''இத்தனை பெரிய வீட்டிலே உங்களுக்கு படுக்க இடமில்லாமலா போச்சு. வெறும் பலகையிலே படுத்தா நாளைக்கு உடம்பெல்லாம் நோகும். பக்கத்து டவுனுக்கு எரு வாங்க போகிற வேலை இருக்கு எழுந்திருங்க'' என்றாள்.

பாலைப் பருகிவிட்டு தம்ளரை முக்காலி மீது வைத்தான். ''தாழ்வாரத்திலே படுக்கலாம்னு நினைச்சேன்- இங்கே மேலே விசிறியிருக்கு. அதனாலே பலகையிலேயே படுத்துட்டேன்.''

''உங்கள் அறையிலே பெரிய கட்டிலும் மெத்தையும் கிடக்கச்ச உடம்பை போட்டு ஏன் தண்டிக்கணும் எழுந்து வந்து அறையிலே படுத்துக்கோங்க.''

''வேண்டாம். உனக்குப் பிறகு சிரமமாயிடும். நீ தரையிலே படுத்துக்குவே. உன் உடம்பு என்னத்துக்கு ஆகும். காலையிலே எழுந்து பரபரவென்று வீட்டு வேலைகளை கவனிக்கணுமே?''

உதட்டைக் கடித்துக்கொண்டு, மவுனமாக அவள் படுக்கை அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அவளால் அழுகையைக் கட்டப்படுத்த இயலவில்லை. இவ்வளவு வெளிப்படையாகக் கூறியும் இவருக்குப் புரிய வில்லையா? புரியாதது போல நடிப்பா அல்லது அவள் மேல் அப்படி ஒரு வெறுப்பா?

மூலையில் சுருட்டி வைத்திருந்த பட்டுப் பாயைத் தரை மீது வழக்கம்போல விரித்துக் கொண்டு தலையணையைப் போட்டு, விளக்கை அணைத்து விட்டு சாய்ந்தாள்.

உடம்பை விம்மல்கள் குலுக்க, அடக்கமாட்டாது தன் ஆதங்கத்தைக் கண்ணீரில் தோய்த்து வெகுநேரம் அழுது கொண்டிருந்தாள்.

திடீரென்று அந்த நினைப்பு சிந்தனையில் பளிச்சிட அவள் வெடுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

அவளுக்கு இப்போது புரிந்து விட்டது. முதல் சந்திப்பி லேயே அவர் சொன்னாரே? அவருக்கும் ஒரு காதல் அனுபவம் இருந்ததாகவும், அதில் தோல்வி ஏற்பட்டதில் மனமுடைந்து போனதாகவும் சொல்லவில்லையா?

ஒரு சமயம் அந்தக் காதலியை அவர் இன்னமும் நினைத்து உருகிக் கொண்டிருக்கிறாரோ?

ஆமாம், அவள் யார்?... ரொம்ப அழகியோ?... உள்ளூர்க்காரியா... வெளியூரில் இருப்பவளா?... அவள் பேர்- எங்கிருக்கிறாள் என்ற விவரம் தெரிந்தால் அனுகூலமாக இருக்குமே?



ஒரு சமயம் அவள் மிகவும் படித்தவளாக- புத்திசாலியாக இருக்கக்கூடும். பெரிய மனிதர் வீட்டு பெண்ணோ என்னவோ? யாரிடம் போய் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும்? வேலம்மாளிடம் கேட்டால்... சே! சே! வேலைக்காரர்களிடம் வீட்டு ரகசியங்களைப் பரிமாறிக் கொள்வது தவறு. கணவனின் மதிப்பு கெட்டுப் போய் விடுமே. ஐயோ! யார் அவளுக்கு அந்த ரகசியத்தைச் சொல்வார்கள்?

# 8

சில நாட்களுக்குப் பின் ஊரில் எல்லை காளியின் திருவிழா ஆரம்பமாகியது. அது தொடங்கி விட்டால் ஊரே இரண்டு பட்டுவிடும் சங்கதி. திருவிழா பத்து நாட்களுக்கு தொடர்ந்து நடக்கும். எல்லை காளி மக்களின் நன்மைக்காக ஆண்டுதோறும் ஒரு கோர தவத்தில் இருப்பதாகவும் அந்த ஏழு நாட்கள் அவளை யாரும் பார்த்து வணங்கக் கூடாது என்ற சம்பிரதாயத்துக்காக, பூசாரி விரதம் இருந்து காப்பு கட்டிக் கொண்டதும், கோயிலில் கொடியேற்றி விட்டு அம்பாளுக்கு பூஜைகள் முடித்து, சந்நிதியில் பெரிய அண்டா நிறைய ஆவி பொங்கும் சோற்றைப் போட்டு, பல டின்கள் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றி வைத்து விட்டு, பூசாரி மந்திரங்கள் ஓத, கதவு அடைக்கப்பட்டு விடும். அந்த ஏழு நாளும் ஊர் மக்கள் அன்றாடம் தலை முழுகி விட்டு, காளி மாதாவை மனதில் தியானித்து விட்டு, மிகக் கட்டுப்பாடான உணவு பழக்கவழக்கங்களுடன் வசிக்க முயலுவார்கள். இல்லாவிடில் எல்லைக்காளி கோபம் அடைவாள்- குடும்பம் நசிந்து விடும் என்றதொரு தீவிர பயம்.

எட்டாவது நாள் விடியற்காலை- மங்கள வாத்தியங்களுடன் கதவுக்கு முன்னால் ஒரு வாழை மரத்தை வெட்டிக் கொண்டு வந்து, மந்திரங்கள் சொல்லி, ஒரு கம்பத்தில் கட்டி விட்டு, மக்கள் பயபக்தியுடன் கை தொழுது நிற்க, பூசாரி மிகவும் பக்தி சிரத்தையாகக் கதவைத் திறந்து விட்டு ஒதுங்கிக் கொள்வார். ஆலய மணி ஓம்ஓம் என்று முழங்க, அம்மா தாயே காப்பாத்து என்று மக்கள் அருளை வேண்டி ஏகோபித்து கத்த, உள்ளேயிருந்து வரும் அனல் காற்றிலே வாழை மரத்தின் இலை கருகிச் சுருண்டு விடும். உயிர்ப் பலிக்குப் பதிலாக சமீப காலமாக அப்படி ஒரு முறையை அவர்கள் கையாண்டதாக சொல்லப்பட்டது. உள்ளே ஏற்றி வைத்த விளக்கு அணையாது இன்னமும் எரிந்து கொண்டிருந்தால், அந்த ஆண்டு ஊர் மக்கள் நோய்கள் ஏதும் இன்றி, வறுமையில்லாது மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்- அன்னை அருள் பாலித்து விட்டாள் என்று பொருள் கொண்டு மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரிப்பார்கள். விளக்கு அணைந்து விட்டால், ஏதோ துன்பம் ஊருக்கே பெருவாரியாக நேரப் போகிறது என்று பயந்து, அன்னையின் கோபத்தை சாந்தப்படுத்தப் பல சடங்குகள் செய்வார்கள்.

கதவு திறந்ததும் அன்னைக்கு அபிஷேக ஆராதனை பலமாக நடக்கும். பின்னர் அவள் அலங்காரத் தேரில் ஊர்வலம் வருவாள். இரவு வாண வேடிக்கை தடபுடல் படும். பத்தாவது நாள் மறுபடி கோயிலில் குடியேறி, அபிஷேக ஆராதனையை ஏற்றுக்கொண்டு, அன்னை ஊரில் எல்லை காக்கும் தெய்வமாக இருந்து அருள் பாலிப்பாள்.

திருவிழா தொடங்கு முன்பே கடைகளைப் பரப்பி விடுவார்கள் வியாபாரிகள். மிட்டாய் கடையிலிருந்து- பொம்மை- பாத்திரங்கள்- ரிப்பன்- வளையல்- சோப்பு, சீப்பு, கண்ணாடி என்று பலவகைக் கடைகள் பக்கத்து



ஊர்க்காரர்கள் பத்து நாளுக்கு அந்தக் கிராமத்தை நோக்கிப் படையெடுத்து விடுவார்கள். தெருவெல்லாம் மக்கள் இரவு முழுவதும் ஒலிபெருக்கியில் அம்மன் கீர்த்தியைப் புகழும் பக்தர்களின் பாடல்கள். இடையே ஐஸ்கிரீம், பஞ்சு மிட்டாய் விற்பவர்களின் மணி ஓசை. கோயிலுக்கு அருகாமையிலேயே அவர்கள் வீடு இருந்ததால் பத்து நாட்களும் அவர்களுக்கு சிவராத்திரிதான். மாமியார் ரத்தினம்மாள் எல்லாவற்றையும் விவரமாக சொல்லி விட்டிருந்தாள்.

பட்டணத்தில் ரம்யா இது மாதிரியான விழாக்களை எங்கே பார்த்திருக்கிறாள்?

பச்சைக் குழந்தைபோல் திருவிழாவில் கலந்து கொள்ள துடியாகத் துடித்தாள்.

காலையில் தன்னிடம் சிறிது பேசிவிட்டுப் போக அறைக்குள்ளே வந்த மகனிடம் தாயார் சொன்னாள்.

''திருவிழா தொடங்கி விட்டது. ரம்யாவுக்கு காசு ஏதாச்சும் கையிலே கொடு. சுமங்கலிப் பொண்ணுங்க விழா கடையிலே குங்குமம்- மஞ்சள்- கண்ணாடி இதுகளை வாங்கி வச்சுக்கணும்பாங்க. இந்த வருசம் முதல் முதலாக நம்ப வீட்டிலேயும் இதுகளை வாங்க ஒரு பெண் வந்திருக்காளே'' மாமியார் மெலிதாகச் சிரித்தாள். காலை வேளை உணவளிக்க வந்த ரம்யாவைப் பார்த்து முறுவலித்தான் முரளி.

''அம்மா உத்தரவு ஐம்பது ரூபாய் தந்துடறேன். திருவிழாக் கடைகளில் என்ன வேணுமோ வாங்கிக்கோ'' சிரித்தபடி சட்டைப் பையிலிருந்த பர்சை எடுத்து பத்து ரூபாய் நோட்டுக்கள் ஐந்தை உருவிக் கொடுத்தான்.

''மறக்காம முதல்லே மஞ்சள்- குங்குமம் வாங்கி வச்சுக்கோ. இது சமயம் வாங்கினால், மங்களம்

உண்டாகும்னு ஊர் சனங்கள் நம்பறாங்க'' என்றாள் ரத்தினம்மாள்.

''மறக்காம, புது தினுசு வளைகள் நிறைய வாங்கிப் போட்டுக்கோ'' கேலியாகச் சிரித்தான் கணவன்.

''வேலையெல்லாம் சீக்கிரம் முடிச்சுட்டு, வேலம்மாளின் தாயை எனக்குத் துணையாக வச்சுட்டு, வேலம்மாளோட நீ கடைக்கு போயிட்டு வாம்மா ராசாத்தி'' மாமியார் கொஞ்சி உத்திரவிட்டாள்.

வேலம்மாளுக்கு எஜமானி ஐந்து ரூபாய் கொடுக்க உத்தரவிட்டிருந்தாள். அந்தப் பணத்தைக் கடையிலே விரயமாக்க அவள் ரம்யாவை கூட்டத்திலே இடை இடையே விட்டு விட்டு இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தாள்.

''மஞ்சள் குங்குமம் வாங்கிட்டு இரும்மா'' அந்தக் கடையருகே அவளை நிறுத்தி விட்டு வேலம்மாள் மாயமாகினாள்.

அத்தனைப் பணத்தை அவள் தனக்காக இதுவரை கையாண்டதில்லை. மாமியார் தன்னிடம் கொண்டுள்ள பிரியத்தில் மனம் கரைந்து, பெருமையில் பூரித்தவளாக, கடைக்கு முன் சாக்கு விரிப்பின் மீது துணிப் பைகளில் கும்பாரமாக நிறைத்து வைத்திருந்த வண்ணக் குங்குமங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு எதை வாங்குவது என்று திகைத்துப்போய் நின்றாள்.

''மஞ்சளில் சுத்தமாக செய்தது. பொட்டு வச்சிகிட்டா நெத்தியிலே கறை ஏதும் ஏற்படாது'' சொல்லிக் கொண்டே கடைக்காரர் அவள் கேட்ட வண்ணக் குங்குமத்தை எடை போட்டு வேகமாக காகிதத்தில் பொட்டலமாக்கிக் கொண்டிருந்தார்.

''அப்படியே மஞ்சள் கிழங்கு... கொஞ்சம் எடை போட்டுத் தாங்க'' பணத்தை நீட்டினாள்.



பத்து மஞ்சள் கிழங்கை அவர் திராசில் எடை போட்டு காகிதத்தில் சுற்றிக் கொடுத்து விட்டு, சில்லரையை எண்ணிக் கொடுத்தார்.

அடுத்தது வளைகளா, ரிப்பனா, இந்த வேலம்மாள் எங்கே தொலைஞ்சு போயிட்டா? என்று அவள் தேடியபடி திரும்பியபோது யாரோ தன் தோளைத் தொடுவதை உணர்ந்து திடுக்கிட்டுப் போனாள்.

அவளைவிட கொஞ்சம் மூத்தவள் போலத் தென்பட்ட முன்பின் தெரியாத ஒரு இளம்பெண் பார்க்க மிகவும் அழகாக இருந்தாள். லேசாக ஒப்பனை அணிந்து, உயரமாகக் கொண்டையிட்டு பூச்சூட்டிக் கொண்டிருந்தாள். கையில் ஒரு சிறு பையனைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

''மஞ்சள் குங்குமம் திருவிழாக் கடையில் வாங்கிக்கிறது ரொம்ப நல்லதும்பாங்க'' சிரித்தாள்.

யார் இவள்? ரொம்ப பழக்கப்பட்டவள் போல வந்து பேசுகிறாள். ரம்யாவுக்கு ஒரே வியப்பு.

''அடுத்த கிராமம் என் பிறந்த ஊர். இந்த தடவை திருவிழா சமயம் பிறந்த வீட்டுக்கு வந்திருக்கோமேன்னு கடைகளைப் பார்க்க- சாமி கும்பிட இந்த ஊருக்கு வந்தேன். பிற்பகல் அவங்களை வந்து பார்க்கிறேன்னுட்டு அத்தை கிட்ட சொல்லுங்க...'' தோளைக் குலுக்கினாள்.

''நீங்க யாருன்னு தெரியலையே?'' ரம்யா மென்று விழுங்கினாள் குழப்பத்துடன்.

''நான் உங்களுக்கெல்லாம் தூரத்து உறவு- திருநெல்வேலியில் இருந்து சுகந்தி வந்திருக்கான்னு சொல்லுங்க. அவங்களுக்குத் தெரியும். நீங்கதானே பெரிய வீட்டுக்கு வந்திருக்கும் மருமகள்- முரளியின் மனைவி?'' தூக்கி வாரிப்போட்டது. இவ்வளவு தெரிந்து கொண்டிருக்கும் இந்தப் பெண் யார்?

தூரத்து உறவு என்கிறாள். அதனால் விவரம் தெரிந்து கொண்டிருக்கலாம். சட்டென்று அவளை எப்படி கண்டு பிடித்தாள்?...

''வேலம்மா வளையல் கடையில் நின்றுக்கிட்டிருந்தா. உங்க வீட்டு அம்மா திருவிழாக் கடைக்கு வரலையான்னு கேட்டேன். ஓ... வந்திருக்காங்களே- அதோ அந்த மஞ்சள் குங்கும கடைகிட்டே... பச்சை காஞ்சிபுரம் பட்டுச் சேலை கட்டிக்கிட்டு தலை நிறைய பூ வச்சிகிட்டு உயரமா நிக்கறாங்களே- அவங்கதான் புதுசா எங்க ஊருக்கு வந்திருக்கும் எங்க வீட்டு மருமகள். பேரு ரம்யான்னு சொல்வாங்க... அப்படின்னு உங்களை தூரத்தில் இருந்து அறிமுகம் செய்து வைத்தாள். முரளிக்கும் உங்களுக்கும் கல்யாணம் ரொம்ப எளிமையாக நடந்தது. பெண் பேர்கூட தெரியாது. ஏன்னா கல்யாண பத்திரிகையை எல்லோருக்கும் அவங்க கொடுக்கலை போலிருக்குன்னு என் அம்மா ரொம்ப வருத்தமா சொன்னாங்க. அத்தைக்கு உடம்புக்கு முடியலையாம்- எதுக்கும் பார்த்திட்டு போகலாம்னு நினைக்கிறேன். சுகந்தி உங்களைப் பார்க்க வரேன்னான்னு மறக்காமச் சொல்லுங்க'' முத்துப் பற்கள் ஒளியிட சிரிப்பை சிந்திவிட்டு அவள் விடை பெற்றுக் கொண்டாள்.

திருவிழாக் கடையில் தான் வாங்கி வந்த சாமான்களை மகிழ்ச்சியுடன் மாமியாரிடம் காட்டி விட்டு ரம்யா அந்தத் தகவலையும் சொன்னாள். ''இன்னிக்கு திருவிழாக் கடையிலே ஒரு பெண்ணை சந்திச்சேன். நம்ம தூரத்து உறவாம். நீங்க உடம்புக்கு முடியாம இருக்கிறதை கேள்விப் பட்டாளாம்- இன்னிக்கு உங்களைப் பார்க்க வரப்போவ தாக சொல்லி அனுப்பியிருக்கா...''

''தன் ஊர் பேர் ஒண்ணும் அவள் சொல்லலையா?'' மாமியார் ஆவலுடன் கேட்டாள்.



''திருநெல்வேலியில் இருந்து சுகந்தி வந்திருக்கான்னு சொல்லுங்க தெரிஞ்சுக்குவாங்கன்னாங்க.''

மகிழ்ச்சியில் மலர்ந்திருந்த ரத்தினம்மாளின் முகம் சிறுத்துப் போனது. ''அப்படியா? வரட்டும்'' சுருக்கமாகக் கூறிவிட்டு மவுனமாகி விட்டாள்.

சிறிது பொழுதிலே வாயிற்கதவு பலமாகத் தட்டப் பட்டது.

ஓடிச் சென்று ரம்யா திறந்தபோது, அந்த திருநெல்வேலிக் கார உறவுப்பெண் சுகந்தி தன் குழந்தையுடன் கையில் ஒரு பிளாஸ்டிக் பை நிறைய திருவிழாவில் வாங்கிய சாமான்களுடன் உள்ளே புகுந்தாள்.

''அத்தை? எப்படியிருக்கீங்க... அடப்பாவமே ரொம்ப இளைச்சுப் போயிட்டீங்களே? எழுந்திருக்க முடியாமல் படுத்துட்டீங்களாமே? டாக்டர் வச்சு கவனிக்கிறாங்க இல்லையா?...'' படபடவென்று பேசிக்கொண்டு ஒரு பிஸ்கெட் பொட்டலத்தை முக்காலி மீது வைத்தாள்.

''மலைவாழைப்பழம் வாங்கலாமான்னு நினைச்சேன்'' உங்க தோட்டத்திலே இல்லாத வாழை தினுசுகளான்னு நினைச்சுக்கிட்டு இதை வாங்கிட்டு வந்தேன்'' லேசாகச் சிரித்தாள்.

''நீ மறக்காம என்னைப் பார்க்க வந்திருக்கிறாயே அதுவே போதும். இதெல்லாம் என்னத்துக்கம்மா'' என்றாள் ரத்தினம்மாள்.

''எழுந்திருக்கக்கூட முடியாம படுத்திருக்கீங்க, கைகால் விளங்காம சங்கடப்படுறீங்கன்னு அம்மா சொன்னப்போ எனக்கு வேதனையா இருந்திச்சு. உடனே வந்து பார்க்க ஆவலாக இருந்திருச்சு.''

''நடக்க முடியாட்டா என்ன? படுக்கையிலே வச்சு கருத்தா என்னைக் கவனிச்சுக்க ஒரு நல்ல மருமகள் வந்திருக்காளே அது போதும் எனக்கு''

''அழகான பொண்ணைத்தான் தேர்ந்து எடுத்திருக்கீங்க. என்ன படிச்சிருக்கா- பாட்டு வருமா - வாத்தியங்கள் ஏதாச்சும் கத்துக்கிட்டிருக்காளா?''

''உன்னாட்டமா பி.ஏ. படிக்கலை. எங்களைப் போன்ற ஒரு விவசாய குடும்பத்தைத் திறமையாக நிர்வகிக்கிற அளவுக்கு நல்லாவே படிச்சிருக்கா. பூஜை அறையிலே சாமி படத்துக்கு முன்னாலே ஏதோ ரெண்டு தோத்திரத்தை நல்ல குரலில் பாட தெரிஞ்சு வச்சுக்கிட்டிருக்கா. உன்னைப்போல வீணை வாசிக்க அவளுக்குத் தெரியாது. தெரிஞ்சாக்கூட எங்களுக்கு என்ன பயன் சொல்லு. நீகூட நல்லா வீணை வாசிப்பே. இப்போ புக்ககத்தில் வீணையும் கையுமாவா உட்கார்ந்திருக்க முடியறது. சங்கீதத்தைத் தீவிரமாகத் தங்கள் வாழ்க்கை லட்சியமா எடுத்துக்கிட்டா பாடக் கத்துக்கலாம்- வாத்தியம் இசைக்க பழகிக்கலாம்- சாதாரணப்பட்ட வர்களுக்கு மனசு சந்தோஷத்துக்கு ஏதோ ரெண்டு பாட்டு முணுமுணுக்கத் தெரிஞ்சா போதும்.''

''பரவாயில்லை- மருமகளுக்குரொம்பவே பரிஞ்சு பேசுகிறீங்க அத்தை. மாமியார் மெச்சின மருமகளா உங்க ரம்யா!'' கலகலவென்று சிரித்தாள் சுகந்தி.

''முரளியின் மனம்கோணாம நடந்துக்கிற தங்கமான பொண்ணு அது போதுமே?'' ரத்தினம்மாள் விட்டுக் கொடுக்காது பேசினாள். மாமியார் உத்தரவுப்படியே, வந்தவளுக்குத் தாகத்துக்கு ஓவலும், தட்டில் தின்ன நெய் முறுக்கும் எடுத்துக் கொண்டு வந்த ரம்யாவின் காதுகளில் அவர்கள் பேசியது கேட்டு விட்டது. குப்பென்று அவள் முகம் சிவந்து போனது, நெஞ்சு படபடத்தது.

''நீங்களா முறுக்கைச் சுட்டீங்க? வாயிலே சட்டுனு கரைஞ்சுபோகுதே... முரளி அத்தானுக்கு நெய் முறுக்கு ரொம்பப் பிடிச்ச பலகாரமாச்சே'' சுகந்தி முறுவலித்தாள்.



''கணவனுக்கு இது பிடிக்கும்னு வந்த சில நாளிலேயே தெரிஞ்சு கொண்டுதான் பக்குவமா முறுக்கைச் சுட்டு எடுத்து வச்சிருக்கா'' மருமகளுக்காக மீண்டும் பரிந்து கொண்டு பேசினாள் ரத்தினம்மாள்.

''சாப்பிடும்மா சுகந்தி?'' உபசரித்தாள்.

சிறிது நேரம் தங்கியிருந்து விட்டு சுகந்தி விடை பெற்றுக் கொண்டு எழுந்தபோது வாசலில் வண்டிச் சதங்கை ஓசை கேட்டது. ''அத்தானும் வந்துட்டாப்பல இருக்கு. வண்டி யிலே கொஞ்சம் பஸ் நிலையம் வரை கொண்டு விடச் சொல்லுங்க அத்தை. இன்னிக்கு திருவிழாக் கடைகளைச் சுற்றிப் பார்த்து நடந்து கால் ஓஞ்சுபோயிடுச்சு.''

''ஆமாம் சுகந்தி. உன் புக்ககத்திலே காரிலே போய் உனக்கு பழக்கமாகி விட்டது. இங்கே பிறந்த வீட்டுக்கு வந்தால் பஸ்சில் போகணும். இல்லாட்டி நடக்கணும். சங்கடந்தான்'' ரத்தினம்மாள் பதிலளித்தாள்.

குளியலறைக்குள் சென்று முகம், கைகால் கழுவித் துடைத்து, முடியைச் சீராக்கிக் கொண்டு தாயைப் பார்க்க உள்ளே வந்த முரளி திடுக்கிட்டுப் போனான்.

''அத்தான்! உங்க கல்யாணத்துக்கு எங்களுக்கு அழைப்புக்கூட அனுப்பலை, ஆனாலும் உங்க மனைவியை நான் திருவிழா கடையிலே அறிமுகம் செய்து கொண்டு விட்டேன்...'' சுகந்தி மெல்லியதாகச் சிரித்தாள்.

தாடை இறுக, ஒருகணம் மவுனமாக அவளைப் பார்த்து விட்டு முரளி தொண்டையைச் செருமிக் கொண்டான். ''மகிழ்ச்சி'' என்றான் சுருக்கமாக.

''அத்தையைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். நாழியாச்சு, வெயிலில் நடக்க அலுப்பா இருக்கு, உங்க வண்டியில் என்னைப் பஸ் நிலையம் வரை அனுப்பி வைக்க இயலுமா?''

''நாகப்பா!'' ... என்று இரைந்து கூப்பிட்டான் முரளி. ''இவங்களை கொண்டுபோய் இவங்க வீட்டிலே விட்டுட்டு வந்துடு'' உத்தரவிட்டான்.

''மன்னிச்சுக்கோங்க. எனக்குத் தோட்டத்திலே கொஞ்சம் வேலையிருக்கு. எரு மூட்டைகளை கிடங்கிலே அடுக்கிக்கிட்டிருக்காங்க. நான் போய்க் கவனிக்கணும்'' கூறிவிட்டு வேகமாக பின்பக்கத் தோட்டத்திற்குள் மறைந்து விட்டான்.

சுகந்தி எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு வண்டியில் கிளம்பிப் போனதும், சிறிது பொழுது கழிந்து உள்ளே வந்தான் முரளி. அவன் மிகவும் கோபமாகக் காணப்பட்டான்.

சமையல் அறைக்கு எதிரில் தாழ்வாரத்தில் தரையில் இலையைப் பரப்பி, உட்காரப் பாயைப் போட்டு, இலையில் நீர் தெளித்துவிட்டு, சூடாக பதார்த்தங்களையும், சோற்றையும் பரிமாறி குழம்பையும் அதன் மீது ஊற்றினாள் ரம்யா.

''அவளை யார் இங்கே கூப்பிட்டது?'' கோபத்துடன் கேட்டபடி சோற்றைக் குழம்புடன் அவசரமாகப் பிசைந்தான்.

''திருவிழாக் கடையிலே அவங்களா- வந்து எங்கிட்ட பேசினாங்க... அறிமுகம் செய்து கொண்டாங்க. உறவுக் காரங்கன்னு சொன்னாங்க.''

''உடனே நீ வீட்டுக்கு வரச்சொல்லி உபசரிச்சியா?'' திடீரென்று அதட்டலாகக் கேட்டான். அவனது கண்கள் கோவைப் பழமாக சிவந்து விட்டன.

அவனது வீட்டில் மனைவியாகப் புகுந்து மாதங்கள் சில ஆகிவிட்டபோதிலும், முரளி அவளிடம் இப்படிக் கத்திப்



பேசுவது இதுதான் முதல் தடவை. எனவே கையும் காலும் வெலவெலக்க, நடுங்கிப் போய்விட்டாள் ரம்யா.

மகன் முன்கோபக்காரன் என்று மாமியார் எச்சரித்திருந் தார். அவருக்குஇப்படியா ஒரு கோபம் வரும்? ''நான் கூப்பிடலை, தானே வருவதாகச் சொல்லி அனுப்பினாங்க. நான் எப்படித் தடை சொல்ல முடியும்?'' அவள் குரல் மெலிதாக தேய்ந்து ஒலித்தது. ''ஏதோ தப்பு செய்து விட்டோமோ?'' எண்ணி பயந்து போனாள். நெஞ்சு தீவிரமாக அடித்துக் கொண்டது. அழுகை தொண்டையை அழுத்தியது. குழம்பு சட்டியும் கரண்டியுமாக சற்று தூர நின்றாள்.

''குழம்பு சோறு மட்டும் போதும். வேறு எதுவும் வேண்டாம்'' எரிச்சலுடன் அதட்டிய முரளி, அவசரமாக இலையில் இருந்ததை அள்ளி விழுங்கி விட்டு, கையை உதறிக் கொண்டு எழுந்து விட்டான். உணவுக்குப்பின் ஓய்வாக சிறிது நேரம் ஊஞ்சலில் அமர்ந்தபடி பத்திரிகை களைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பது வழக்கம்.

ஆனால், இன்று உடனடியாக வெளியே கிளம்பி விட்டான். ''கதவைத் தாள் போட்டுக்கோ'' உத்தரவிட்டபடி பதிலுக்குக் காத்திராது நடையில் நிற்க வைத்திருந்த ஸ்கூட்டரைத் தள்ளிக் கொண்டு விரைந்து விட்டான்.

''இந்த வெயிலில் சாப்பிட்டதும் உடனே வெளியில் போகாட்டி என்ன?'' கேட்க மனம் துடித்தது. ஆனால், அவனது கோபம் கொதித்த முகத்தைப் பார்க்கவே அச்சமாக இருந்தது.

மாமியார் ரத்தினம்மாளும் கண்களை மூடிக்கொண்டு உறங்கும் பாவனையில் இருந்தாள். அவளிடமும் போய் எதுவும் கேட்க இயலவில்லை.

ரம்யாவுக்கு அழமாட்டாத் துக்கம்.

அவள் இப்போது என்ன தவறு செய்து விட்டாள்? அவள் இப்போது கணவன் ஆத்திரப்பட்டுக் கொண்டு இப்படி அவள் கணவன் ஆத்திரப்பட்டுக் கொண்டு வெளியே போய் விட்டார்? மாமியாரும் முகம் சூம்பி மவுனமாக இருக்கக் காரணம்? கண்களில் நீர் புரள, துயரம் மார்பைக் கவ்வ, அவள் குழப்பத்துடன் வளைய வந்து கொண்டிருந்தாள்.

பொழுது சாயும் வேளையில் வீடு திரும்பினான் முரளி. சமையல் அறையில் இரவு உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த ரம்யா வாயிற்படியில் நிழலாடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள். கடுமை தெரிந்த முகத்துடன் அன்று பகல் வெளியேறிய முரளி இப்போது சாந்தமாகக் காணப்பட்டான்.

''தாகத்துக்கு கொஞ்சம் சூடா காப்பி ஏதாச்சும் தர முடியுமா?'' பழையபடி கேலியாகக் கேட்டுக் கொண்டு புன்னகைத்தபடி வாயிற்படி மீது சாய்ந்த வண்ணம் அவளைக் கனிவாகப் பார்த்தான்.

அவளால் நம்பவே முடியவில்லை. இத்தனை குழைவாக அன்பாகப் பேசத் தெரிந்த மனிதர் பகல் பொழுது உணவு நேரத்தின்போது எப்படி வெடித்தார்? அந்த சுகந்தியைக் கண்டு ஏன் ஆத்திரம்? நெஞ்சை என்னவோ கெட்டியாகப் பிடித்துக் கசக்குவது போன்ற வேதனையை உணர்ந்தாள்.

வீடு முழுவதும் மணந்த காப்பியைக் கலந்து ஆற்றி தம்ளரில் எடுத்து வந்து வழக்கமாக அவன் அமர்ந்து கொள்ளும் ஊஞ்சல் பலகை மீது ஒரு பக்கம் வைத்தாள்.

அன்று பகல் முழுவதும் வேதனையில் வெந்து, ரகசியமாக கண்ணீர் உகுத்து உணர்வுகள் தொய்ந்து போய் விட்டிருந்தாள் அவள். பலவீனமாக கால்கள் தள்ளாடுவது போல் இருந்தன. சட்டென்று ஊஞ்சல் பலகையின் சங்கிலியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மவுனமாக நின்றாள்.



கை கால் கழுவிக் கொண்டு அங்கே வந்தான் முரளி. ''டவுனுக்குப் போயிருந்தேன்; உனக்காக லாலா கடையில் அல்வாவும், தஞ்சாவூர் கதம்பமும் வாங்கிட்டு வந்திருக்கேன்'' இரண்டு பொட்டலங்களை பலகை மீது ஒரு பக்கம் வைத்து விட்டு, காபி தம்ளரை எடுத்துக் கொண்டான். அவள் அசையாது நின்று கொண்டிருந்தாள்.

''உனக்குத்தான் வாங்கிட்டு வந்திருக்கேன். கதம்பன்னா உனக்கு ரொம்ப ஆசையாச்சே? தலையில் வச்சுக்கோ'' உபசரித்தான்.

குபீர் என்று பொங்கி வந்த கண்ணீரை அடக்கமாட்டாது ஒரு விம்மலுடன் அவள் உள்ளே ஓடி மறைந்து கொண்டாள்.

சாப்பிட்ட காபி பாதியை அப்படியே வைத்து விட்டு அந்த பொட்டலங்களை கையில் எடுத்துக்கொண்டு அவன் சமையல் அறைக்குள் புகுந்தான்.

''ரம்யா! மன்னிச்சுக்கோ. என்னவோ கோபத்தில் அப்படி கத்தி விட்டேன். இதோ பார், நீ பூ வைச்சுக்கிட்டு அல்வாவை ஒரு துண்டு எடுத்து உடனே சாப்பிடாட்டி நானும் இன்னிக்கு ராத்திரி சாப்பிடாம படுத்துக்குவேன். தெரியாம உன் மேலே எரிஞ்சு விழுந்துட்டேன். மன்னிப்பு கேட்கிறேனே?'' கொஞ்சலாக, குழைவாக அவன் பேசியதும் அவள் திரும்பினாள். கதம்பத்தை எடுத்து அவன் கையாலேயே தலையில் சூட்டி அவள் முகத்தை நிமிர்த்தி, தன் கையால் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டு, ஒரு துண்டு அல்வாவை எடுத்துத் தான் ஒரு துளி கடித்துத் தின்று விட்டு மீதியை வாயில் ஊட்டி விட்டால் என்னவாம்?... அவள் புண்பட்ட மனத்திற்கு அவனது வார்த்தைகளும் அந்த சிறு அனுசரணையும் எத்தனை இதமாக இருக்கும்.

மின்விசை தாக்கி விடும்போல, எட்டி நின்று கொண்டு கொஞ்சிப் பேசுவானேன்? மனதில் பலவும் எண்ணினாள். ஆனாலும் அதிகம் பிகு செய்தால் மீண்டும் அவன் கோப வசப்பட்டு போய்விட்டால்?

புக்ககம் புறப்பட்டபோது, அடுத்த வீட்டு அம்மாளிடம் ஆசி வாங்க சென்றிருந்தாள். அந்த அம்மாள் சொன்னது இப்போது சட்டென்று நினைவுக்கு வந்தது.

''என் மகள் செண்பத்தைப் போல அடிக்கடி சண்டை பிடிச்சுக்கிட்டு நிற்காதே, ஆண் பிள்ளைகள் வெளியே போய் உழைச்சு அலுத்துப் போய் வர்ற சமயம், எரிச்சலா சில சமயம் ஏதாச்சும் சொல்லிடலாம். அதைக் கண்டுக்காதது போல இருந்தால்தான் உனக்கு சுகம். அப்படிப் பலத்த சண்டை ஏதாச்சும் ஏற்பட்டாக்கூட ஆத்திரப்பட்டு அவசரப்பட்டு வார்த்தைகளை வாரி இறைச்சுடாதே. அவைகளை மறுபடி வாரி எடுக்க முடியாது. தாம்பத்திய வாழ்க்கையிலே ஏற்படும் சிக்கல்கள் முள்ளு மேலே போட்ட சேலையைப் போல. மெள்ள பொறுமையா பேசி ஒருத்தருக்கு ஒருத்தர் விளக்கிக்கணும் அவசரப்பட்டு சேலையை உருவி எடுத்தா கிழிஞ்சு போயிடுமில்லையா? அதுபோல சின்ன மனத்தாங்கல்களை பெரிசு பண்ணி, ஆத்திரப்பட்டு, சண்டை போட்டா சிக்கல்கள் அதிகமாகி, மண வாழ்க்கையிலே ஒட்டை விழுந்திடும். கணவன் சலிச்சுப் போய் விடுவான். இவள் என்ன பத்திரகாளியாட்டமா இப்படி சதா கத்திக்கிட்டிருக்கான்னு, வீட்டுக்கு வர பிடிக்காம வெளியே சுத்த தொடங்கிடுவான். என் பொண்ணுக்கு சதா சொல்ற புத்திமதியைத்தான் உனக்கு சொல்றேன். கேட்டு நல்லா நினைப்பு வச்சுக்கோ.

''என் பொண்ணு ஆத்திரக்காரி. சதா கணவனோட சண்டை, நாயும்- பூனையுமா என்னமோ வாழ்ந்து கிட்டு



இருக்காங்க. ஆனால், நீ பொறுமையான பொண்ணு. புரிஞ்சுக்குவே. அதனாலே பூவும் மணமும் போல உன் புருஷனோட நல்லா இரும்மா'' அடுத்த வீட்டு மகராசி அவளை வாயார வாழ்த்தியது நினைவு வந்தது.

சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''பரவாயில்லை. அன்பா பேசற நீங்கதானே, ஏதோ மன சங்கடத்திலே அப்படி கத்திட்டீங்க. உங்களுக்கு இல்லாத உரிமையா?'' சாமர்த்தியமாகக் கேட்டுப் புன்னகைத்தாள்.

''அல்வா நல்லாவே இருக்கு. நீங்கள் ஒரு துண்டு எடுத்துக்கோங்க. அத்தைக்கும் ஒருதுண்டு கொடுக்கிறேன். எப்பவாச்சும் ஒரு தடவை இது மாதிரி நெய் பலகாரம் சாப்பிட்டா உடம்பு ஒண்ணும் கெட்டுடாதுன்னு தைரியம் சொல்றேன்'' என்று கூறியபடி கதம்பத்தை அவிழ்த்துக் கொண்டையில் அழகாகச் சுற்றிக் கொண்டாள்.

''உங்களுக்குப் பிடிச்ச கிச்சடி சாதமும், குருமாவும் செய்திட்டு இருக்கேன். பகல்கூட நல்லாச் சாப்பிடலை. ராத்திரியாவது கொஞ்சம் நல்லாச் சாப்பிடுங்கோ. உடம்பிலே தெம்பு வேணுமே? நாளைக்கு நீங்க டவுன் வரை உங்கள் வக்கீலைப் பார்க்கப் போகணும். இன்னும் நிறைய வேலையிருக்கு. நினைவுபடுத்துன்னு போன வாரமே சொன்னீங்க. அதிகப்படி வேலை செய்ய தெம்பு வேணாமா?...'' புன்முறுவலுடன் கேட்டாள்.

''நல்லவேளை நினைவுபடுத்தினாய். அந்த வக்கீல் சமாசாரத்தை மறந்தே போயிருந்தேன். இப்பவே போய் பீரோவைத் திறந்து அந்த காகிதங்களையெல்லாம் தயாராக என் பையில் எடுத்து வச்சுடறேன். பரவாயில்லை! நீ என் காரியங்களை எனக்கு நினைவூட்டும் ஒரு காரியதரிசியாகவும் இருக்கே.''

'அத்தோடு மட்டுமல்ல, உங்களது உணர்வுகளுடன் ஒன்றிப்போகும் பக்குவத்தைப் பெற்றுவிட்ட ஒரு

உண்மையான மனைவியாகவும் நான் மாறிவிட்டிருக்கிறேன். உங்களுக்குத்தான் புரியலை. அல்லது புரியவிடாது ஏதோ ஒரு சக்தி உங்களை என்னிடமிருந்து பிரிக்கிறதா... அந்த சக்தி என்ன?'' சொல்ல வேண்டும் போன்று ஆவலில் துடித்தாள். சொல்லத் துணிவின்றி, வேதனையை விழுங்கிய படி வேலையை கவனிக்கலானாள்.

# 9

அன்று இரவு தன்னை கவனிக்க வந்த மருமகள் உள்ளே நுழையுமுன் தஞ்சாவூர் கதம்பம் மணம் கம்மென்று முன்னே வந்து வீசுவதை ரத்தினம்மாள் உணர்ந்தாள்.

சுகந்தி வந்த பிறகு என்னவெல்லாம் நடந்திருக்கும் என்பதை படுத்தபடியே அவளால் ஊகிக்க முடிந்தது. கஞ்சி தம்ளரை வாய் அருகில் வைத்து உபசரித்த மருமகளின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

முகம் கழுவி, லேசாகப் பவுடர் பூசி, பொட்டு வைத்துக் கொண்டு வந்திருந்தாள். ஆனால், அந்த ஒப்பனையை மீறி இமைகள் சிறிது வீங்கி கண் கரையோரம் சிவந்திருந்ததை நன்றாகவே பார்த்து விட்டாள் ரத்தினம்மாள். முரளியின் முரட்டுத்தனமான பேச்சுதான் அவளது அழுகைக்குக் காரணம்.

இயல்பாக ஒரு தாயின் மனதிலே எழும் கோபம் அவளுக்கு ஏற்பட்டது. மூடி மறைப்பானேன். அவளிடம் விளக்கமாகச் சொல்லிவிடுவது நல்லது.

''ரம்யா, இப்படி உட்காரம்மா'' மாமியார் அன்புடன் தன் அருகில் கிடந்த நாற்காலியைக் காட்டினாள்.

''முரளி படுக்கப் போயிட்டானா'' முன் எச்சரிக்கையாகக் கேட்டுக் கொண்டாள்.



''இன்னிக்கு என்னைப் பார்க்க வந்தாளே சுகந்தி, அந்தப் பெண் நமக்கு ஒரு வகையில் தூரத்து உறவு.''

''அப்படித்தான் அவங்க சொன்னாங்க'' ரம்யா முணுமுணுத்தாள்.

''பக்கத்து கிராமம் அவங்க ஊர். அவளுடைய அப்பா ஓய்வு பெற்ற பள்ளிக்கூட வாத்தியார். சுகந்திக்கு ஒரே ஒரு அண்ணன்தான் கூடப் பிறந்தவன். அவன் படிச்சு ராணுவத்திலே சேர்ந்து விட்டான். அவனுக்குக் கல்யாணம் ஆகி, ஆக்ரா பக்கம் இருக்கிறதாகக் கேள்வி. எப்போவாவது தான் விடுமுறை கிடைச்சால் வருவான். வந்தால் என்னைப் பார்த்துட்டு போற பழக்கம் உண்டு.''

''ஓரளவுக்கு அந்தக் குடும்பம் உங்களோட நெருங்கிப் பழகிட்டு வந்ததுன்னு சொல்றீங்க''

''ஆமாம். அவள் அப்பாவுக்கு தமது மகளை சகலகலா வல்லியாக்கணும்னு ஆசை. சின்ன வயசிலேயே அவளுக்கு பக்கத்து டவுனிலிருந்து வாத்தியாரை வர வழைச்சு வீணை கத்துக் கொடுத்தார். அவளும் கெட்டிக்காரியா அதை வாசிக்க விரைவில் கத்துக்கிட்டா. உள்ளூர் பள்ளிக்கூடப் படிப்பு முடிஞ்சதும் அவளை திருச்சிக்கு அனுப்பி படிக்க வச்சார். அங்கே ஹாஸ்டலில் தங்கி பெண்கள் கல்லூரியில் பி.ஏ. படிச்சுமுடிச்சாள். லீவுக்கு வரும்போதெல்லாம் அவளும், அவள் அம்மாவும் எல்லை காளி கோயிலுக்கு கும்பிட வருவாங்க. சாயங்காலமா ஊருக்கு போற பழக்கம். என்னை அந்தப் பொண்ணு அத்தைன்னு உறவு கொண்டாடறது உண்டு. பி.ஏ. பட்டம் வாங்கின பிறகு இங்கே அதிகம் வரதில்லை. கல்யாண வயசு பொண்ணை இங்கும் அங்கும் அவங்க அம்மா அழைச்சிட்டு போறதில்லை. வீட்டோட அடக்கமா இருக்குன்னு நான் எண்ணிகிட்டு இருந்தேன். நான் ஒரு முட்டாள் உண்மையை தெரிஞ்சுக்கலை.

''என்ன நடந்தது அத்தை'' கவலையுடன் ரம்யா குறுக்கே கேட்டாள்.

''என்ன நடக்குமோ அதுதான் நடந்தது. முரளியும் அப்போது திருச்சியிலே ஆஸ்டலில் தங்கி பட்டப்படிப்பு படிச்சுகிட்டிருந்தான் இல்லையா? இவங்க இரண்டு பேரும் சந்திச்சு, பழகி, ஒருத்தரை ஒருத்தர் ரொம்பவே விரும்பிட்டாங்க.''

ரம்யாவின் நெஞ்சு வேகமாக பக்பக் என்று அடித்துக் கொண்டது. காதல் அனுபவம் உண்டு என்றாரே? அந்த அனுபவத்தின் கதாநாயகியா இந்த சுகந்தி... அடிவயிற்றை நெருப்பு கவ்விக்கொண்டு விட்டது போன்றதொரு அடக்கமாட்டாத எரிச்சல்?

''முரளி தன் எண்ணத்தை என்கிட்ட சொன்னப்போ நான் ஒத்துக்கலை.''

''ஏன் அவங்களும் பார்க்க அழகா இருக்காங்க. வீணை வாசிப்பாங்கன்னு சொல்றீங்க. நல்ல குடும்பம். பக்கத்து ஊர் வேறே, ஏன் மறுத்தீங்க?''

''படிச்சுட்டா, வாத்தியம் இசைக்க தெரிஞ்சுட்டா அழகா இருந்துட்டா போதுமா? சுகந்திக்கு பொறுமையே கிடையாது. ரொம்ப டாம்பீக பழக்க வழக்கங்கள் உண்டு.

இரைஞ்சு பேசுவாள்... இவள் நம்ப குடும்பத்துக்கு ஒத்து வரமாட்டாள். முரளியைப் பாடாய் படுத்துவாள்னு மறுத்தேன். முரளி பிடிவாதமாக இருந்தான். நானும் சட்டுனு விட்டுக்கொடுக்கலை.

''காதலுக்குக் கண்ணில்லை என்பாங்க. முரளிக்கு அவள் மேல் இருந்த மோகத்திலே மூளை மங்கிப் போயிருந்தது. கட்டிக்கிட்டா அவளைத்தான் கட்டிப்பேன். இல்லாட்டா காலம் முழுவதும் தனி மனிதனா வாழ்ந்துட்டுப் போவேன்னு விம்பு புடிச்சான்.



''கடைசியிலே நான் விட்டுக் கொடுத்தேன். முறைப்படி ஒருநாள் நான்போய் பெண் கேட்டேன். ஒப்புதல் கொடுத்தாங்க பெரியவங்க.

''கல்யாண செலவிலிருந்து நகைகள் போட்டு, கூரை எடுக்கிறவரை, எல்லாம் பிள்ளை வீட்டைச் சேர்ந்தது. வரதட்சணை என்பதில் நம்பிக்கையில்லை. பெண்ணை மட்டுந்தான் கட்டிக் கொடுப்பேன். மீதி பொறுப்பு உங்களுடையதுன்னு வாத்தியார் அய்யா கண்டிப்பா பேசிவிட்டிருந்தார். எல்லாத்துக்கும் ஒத்துக்கிட்டேன். அறுவடைக்குப் பிறகு கல்யாணத்தை வச்சுக்கலாம்... அப்பத்தான் கையில் நாலு காசு இருக்கும்னு கேட்டுக் கிட்டிருந்தேன். ஒப்புக் கொண்டாங்க. அதுவரை இந்த சங்கதி கொஞ்சம் ரகசியமாகவே இருக்கட்டும்னு சொன்னார்.

''இரண்டு வீட்டவங்களுக்கும் ரொம்ப நெருக்கம் என்பது பலருக்குத் தெரியும். ஆனால், கல்யாணப் பேச்சு வார்த்தை நடந்திருக்கு என்பது யாருக்கும் தெரியாது.''

''முரளி அப்போதெல்லாம் வீட்டிலேயே தங்குவது ரொம்ப அரிதாப்போச்சு. வயக்காட்டு வேலைகளை அவசரமா கவனிச்சுட்டு, பக்கத்து கிராமத்திற்குப் போயிடுவான். நினைச்சப்போ அங்கே ஓடிப்போய் நிக்கவேணும்னேதான் ஸ்கூட்டர்கூட வாங்கிக் கிட்டான்.''

''அப்படி ஒரு ஈர்ப்பா அந்த சுகந்தி மேல்?'' கேட்கக் கேட்க ரம்யாவுக்கு பொறாமை பொங்கிக் கொண்டு வந்தது.

''எனக்கு மட்டும் உள்ளூர ஒரு உறுத்தல் இருந்தது. இந்தக் கல்யாணம் நடக்குமா? இந்த வாத்தியார் அய்யா பண ஆசை பிடிச்சவர்னு சொல்லிக்கிறாங்களேன்னு கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.''

''எங்க மகனுக்கு அந்தப் பெண்ணைக் கேட்டிருக்கோம். ஒப்புதல் தந்திருக்காங்கன்னு நான் ஊர் முழுதும் டமாரம் அடிக்காம இருந்தது ஒரு வகையில் நல்லதாப் போச்சு.''

''என்ன நடந்தது? கல்யாணம் கூடி வராது நின்னு போச்சா அத்தை?''

''நிச்சயதார்த்தம் ஊர் அறிய செய்து முடிக்கிறதுக்கு முந்தியே பெண்ணைப் பெத்தவர் முந்திக் கொண்டு விட்டார். ஒரு நாள் காலை அந்த வாத்தியார் அய்யா திடுதிப்னு இங்கே வந்து நின்றார். எங்க குலதெய்வத்துக்குப் பூ கட்டி வச்சுப் பார்த்தோம். மறுப்பு வந்து விட்டது. மனசு நல்லாயில்லை. அதனாலே நீங்க முரளிக்கு வேறே இடத்திலே பெண் பார்த்துக்கோங்கோ... ஒரே வார்த்தையில் என்னையும் என் மகனையும் மேல் வேட்டியை உதறி எரியறாப்பல பேசிட்டார்.

''வெறும் பேச்சு வார்த்தையோடத்தானே நின்ன சங்கதி. அதனாலே பெண்ணை கொடுக்க அவர் மறுத்ததால், நாங்க ஏதும் செஞ்சுக்க முடியலை.''

''கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர். உங்க மனசிலே நெருடல் ஏற்பட்ட பிறகு சம்பந்தம் செய்துக்கிறது குடும்பத்துக்கும் நல்லதில்லை. நானும் விட்டுக் கொடுக்காது பேசி முடிச்சேன்.''

''சங்கதி வேறுன்னு பிறகுதான் தெரிஞ்சது. திருநெல்வேலியில் பிரபல வியாபாரியான அவருடைய தூரத்து உறவுக்காரர், தன் மகனுக்கு சுகந்தியை கேட்டுக் கிட்டு வந்திருக்கார்.''

''கார், பங்களா, வைர நகைகள் என்றதும் சுகந்தி ஒரு வீச நாழியில் காதலை ஊதியெறிந்து விட்டு, அந்தப் பையனைக் கட்டிக்கத் தயாராகிட்டா. ஒரே மாசத்திலே விரைவா கல்யாணம் நடந்தேறி, அவள் புக்ககம் போயிட்டாள்.''



மவுனமாக கேட்டுக் கொண்டிருந்த ரம்யாவின் மனம் வேதனைப்பட்டது.

காதல் என்று ஒரு கயவன் அவளது நகைகளுடன் அவளை ஏமாற்றி விட்டு ஓடிப்போனபோது, அவள் எப்படி மனம் இடிந்து போனாள்? வெட்கத்திலே துடித்துப் போனாள்? செத்து விடக்கூட ஒரு நாள் முடிவு செய்தாளே! அப்பப்பா எத்தனை பெரிய அதிர்ச்சி. அதே அதிர்ச்சியை பாவம் அவள் கணவனும் அனுபவித்திருக்கிறார். காதல் என்று கல்யாணம் வரை நெருங்கவிட்டு, மனதை மாற்றிக்கொண்டு வேறு ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டி விட்ட அந்த அக்கிரமக்காரியை- பணப் பேயை-டாம்பீகப் பிசாசைக் கண்டதும் அவருக்கு கோபம் பொங்கிக் கொண்டு வந்ததில் வியப்பில்லை.

''அவள் நன்றாக குடியும் குடித்தனமுமா வாழ்ந்து கொண்டிருந்தாள். ஒரு குழந்தைக்குத் தாயாகிப் போனாள். ஆனால், முரளி பைத்தியக்காரன். அந்தக் காதலில் ஏற்பட்ட தோல்வியால் அதிர்ந்துபோய் ரொம்பவும் ஆடிப் போனான். ஏக்கம் பிடிச்சவனாக சந்நியாசி போல் அவன் எதிலும் பிடிப்பில்லாம இருந்ததைப் பார்த்த பெத்த மனம் எப்படி இருக்கும்? நீயே யோசிச்சுப் பாரு?''

''அத்தை! நீங்க ரொம்பவே சங்கடப்பட்டு போயிருப்பீங்க. எனக்குப் புரியுது.''

''வெளியிலே போன மகன் சட்டுனு வீட்டுக்கு வராட்டா நான் பயந்து போய் வாசலிலேயே நின்னுக் கிட்டிருப்பேன்.''

''குளியலறையில் இருந்து சீக்கிரம் வெளி வராம குளிச்சுக்கிட்டிருந்தாகூட பயந்து போய், ''முரளி... முரளி இன்னுமா குளிக்கிறேன்னு -பல தடவை கூவி அழைப்பேன்.''

''காதல் தோல்வியைத் தாங்க முடியாம, தன்னை மாய்ச்சுக்கிறவர்களைப் பத்தி பத்திரிகையிலே அப்பப்போ படிக்கிறோமில்லையா... எனக்கு அப்படி ஒரு திகில்கூட இருந்துச்சு.''

''நம்ப புள்ளை இப்படி இருக்கானே, ஏதாவது எக்கச் சக்கமாகச் செய்துகிட்டா என்ன செய்வேன்? ஒரே மகனை பெத்து வச்சுகிட்டு தொட்டு தொட்டுப் பார்த்து வளர்த்தவளாச்சேன்னு கவலைப்பட்டு, அதுவே எனக்குப் பெரிய சிக்காக போயிட்டுது. ஏற்கனவே ரத்த அழுத்தத்திலே சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்தக் கவலை நோயாகி ஒருநாள் நான் மயக்கம் போட்டு நினைவில்லாம விழுந்துட்டேன். பாவம், முரளி என்னை ரொம்பவே கவனிச்சான். ஆனால், அதுக்குப் பிறகு ஒரு பக்கம் கை கால் விளங்காம இப்படி ஒரேயடியா படுத்துட்டேன்.''

மாமியாரின் கண்களில் புரண்ட கண்ணீரை மெல்ல துவாலையால் ஒத்தி எடுத்தாள் ரம்யா.

''வருத்தப்படாதீங்க. உங்களையெல்லாம் கவனிச்சுக்க நான் வந்திருக்கேனே அத்தை. ஏன் மனசு சங்கடப்படறீங்க'' தெம்பாகப் பேசினாள், ரம்யா.

''கல்யாணமே வேண்டாம்னு மனசு ஒடிஞ்சு போய் நான் பார்த்த பெண்களையெல்லாம் அதுக்குப் பிறகு ஒதுக்கிட்டே வந்தான். எனக்கு கை கால் விளங்காம போனது ஒரு விதத்திலே நல்லதாச்சு. வீட்டையும் என்னையும் கவனிக்க ஒருத்தி வேணும்கிற எண்ணம் அவனுக்கே வந்தது. பிறகு நீ வந்தே...'' தழுதழுத்தாள் ரத்தினம்மாள்.

''நடந்து போனதைப் பத்தி நாம மறந்துடுவோம். அத்தை'' ஆறுதலாகச் சொன்னாள்.

''நீ வந்த பிறகு எல்லாத்தையும் மறந்து மகிழ்ச்சியோட குடித்தனம் பண்ணிக்கிட்டிருக்கான் முரளி. நானும் என் நோயை மறந்து, நிம்மதியாகத்தான் இருக்கேன். அதுகளை கெடுக்கறாப்பல இன்னிக்கு வீட்டுக்குள்ளே வந்து நின்றாளே படுபாவி சுகந்தி அவளுக்கு என்ன துணிச்சல், என் மகனை வேண்டாம்னு உதறி விட்டவளுக்கு அத்தை உறவு கொண்டாட என்ன யோக்கியதை? பணத்திமிர்.''



''உங்களைப் பார்க்க வந்தாங்க. வந்துட்டுப் போகட்டுமே. மனதை வீணாக ஏன் இப்படி அலட்டிக்கிறீங்க?''

''என்னைப் பார்க்க வரலை. உன்னைப் பார்த்துட்டு, நீயும் முரளியும் எப்படி குடித்தனம் செய்றீங்கன்னு வேவு பார்க்க வந்தாள். கபடமில்லாத மனிதனை காதல் என்று மோசம் செய்து மனதை உடையவிட்டு, வேடிக்கை பார்க்கிற பெண்களும் இருக்காங்க என்கிறதுக்கு இவள் ஒரு உதாரணம். இப்படிப்பட்டவங்க எல்லாம் வெறும் பட்டாம் பூச்சிகள். ஆசைகாட்டி மினுக்குவதோட சரி. ஒரு ஆண் பிள்ளைக்கு மனைவி என்று உறுதியான துணையாக இருக்க மாட்டாங்க. வெறும் பகட்டுக்காரிகள். நல்ல வேளை என் மகன் தப்பினான். இல்லாட்டா நட்டாத்திலே நிப்பான். என்ன புண்ணியமோ நீ வந்திருக்கே'' பெருமூச்செறிந்தபடி ரத்தினம்மாள் சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள்.

''நீ தூங்க வேணாமா? நேரமாச்சு, போம்மா'' என்றாள்.

அவளும் முரளியும் நடத்தும் போலி வாழ்வை மாமியார் புரிந்து கொண்டு விட்டால்? பாவம் எத்தனை வேதனைப் படுவாள்? குற்ற உணர்வுடன் குழல் விளக்கை அணைத்து விட்டு, விடி விளக்கைப் போட்டாள். கதவை மெல்ல சாத்திவிட்டு, வெளியே வந்தாள்.

முரளி உறங்கப் போகாது, மாலை பத்திரிகையைப் புரட்டிய வண்ணம் ஊஞ்சலில் அமர்ந்திருந்தான்.

''நேத்து நீங்க பால் சாப்பிட மறந்து படுத்துத் தூங்கிட்டீங்க'' பால் தம்ளரை அவனிடம் நீட்டினாள்.

தொட்டால் சுட்டு விடும்போல அவளது கைவிரல் தன்மீது படாதபடி அவன் தம்ளரை வாங்கிக் கொள்வதை கவனித்தாள்.

ரத்தினம்மாள் தமது மகனைப் பூரணமாகப் புரிந்து கொள்ளவில்லை. அவருக்கு அந்தக் காதல் ஏமாற்றத்தில் ஏற்பட்ட பாதிப்பு இன்னும் மனதைவிட்டு அகலவில்லை.

சுகந்தி வந்ததும் அப்படி அவர் கோபப்பட்டதின் காரணம் புரிந்து விட்டது. இன்னும் அவருக்கு அவள் மீது காதல், கனலாக மனதில் மூண்டு எரிகிறது.

தன்னை உயிருக்குயிராக நேசித்தவள் இன்னொருவன் மனைவியாகி விட்டாளே. இனி என்ன செய்ய முடியும்? இயலாமையால் பொங்கி எழுந்த கோபம்.

இவர்கள் இருவருக்கும் ஒரே தினுசான அனுபவம். ஆனால், அவள் அதனால் ஏற்பட்ட கசப்பை மறந்து இப்போது எப்படி மாறி விட்டிருக்கிறாள்?

மெள்ள துளிர்விட்டு, வளர்ந்து அரும்புகட்டி மொட்ட விழ்த்துக் கொண்டு விட்ட மலர் போல அவள் உள்ளத்தில் கணவன் மேல் அன்பு வளர்ந்து விட்டிருக்கிறது. ஆனால், அவர் இன்னமும் சுகந்தியை நினைத்துக் கொண்டு மருகிக் கொண்டிருக்கிறார்? அவளது வாழ்க்கையின் வருங்காலம் இதே ரீதியில் போய்க் கொண்டிருந்தால்?...

ரொம்ப களைச்சுப் போயிருக்கே... நீ போய் படுத்துத் தூங்குகிறதுதானே?'' முரளி கேட்டதும் திடுக்கிட்டுப் போனாள் ரம்யா.

''இங்கே நிக்காதே. நான் என் பழைய காதலியை நினைத்து உருகிக் கொண்டிருக்கிறேன். நீ என் அறைக்குப் போய்விடு; என் மனதைக் குழப்பாதே!'' என்று மறைமுக மாக உத்திரவிடுகிறரரா?



சமையல் அறை காரியங்களை துரிதமாக முடித்து விட்டு, அவள் அவனைத் தாண்டிக் கொண்டு தன் அறைக்குப் போனாள். அதைக்கூட கவனிக்காது பத்திரிகையும் படிக்காது, அவன் எங்கேயோ பார்த்தபடி மெய்மறந்து உட்கார்ந்திருந்தான்.

தமது பழைய காதலியை நினைத்துத்தான் இந்த மனப் போராட்டம், சந்தேகமே இல்லை.

அறைக் கதவை சாத்திக்கொண்டு, விளக்கை அணைத்து பாயின்மீது படுத்தவளுக்கு, துக்கம் குமுறிக் கொண்டு வந்தது. அவளைப் போல கணவனும் மனதை மாற்றிக் கொண்டு விட்டிருந்தால்?... வாழ்க்கை இருவருக்கும் சுவையாகி விட்டிருக்குமே?

இப்போது முரளி பழைய காதலி சுகந்தியை நினைத்து மனம் புழுங்க, அவள் தனது கணவனது மனப் போராட் டத்தை உணர்ந்து கண்கலங்க, வேடிக்கையான வாழ்க்கை தான். வெகுநேரம் அமைதியின்றி பாயின் மீது புரண்டு கொண்டிருந்தாள்.

# 10

அன்று காலை தபாலில், பெரியம்மாவிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

''நீங்கள் சுகமாக ஊர் சேர்ந்து விட்டதாக மாப்பிள்ளை கடிதம் போட்டிருந்தார். அதற்குப் பின் உன்னிடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்தோம். காணவில்லை. நீ சுகமாக இருக்கிறாயா? ஊர் பிடித்திருக்கிறதா? என்று கவலையாக இருக்கிறது. வருகிற மாதம் ஏழாம் தேதி உன் அண்ணன் சரவணனுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டிருக்கிறது. பெண் சென்னையைச் சேர்ந்தவள். பெரிய இடம். லலிதா கல்யாண மண்டபத்திலே நடக்கப்போகிறது. நீயும் உன்

கணவரும் கட்டாயம் கல்யாணத்திற்கு வரவேண்டும். முன்னதாக வந்தால், மிக்க உதவியாக இருக்கும்னு பெரியப்பா எழுதச் சொன்னார்.'' கடிதத்தைப் படித்ததும், அவளுக்கு ஒரு பரபரப்பு.

கணவனது காதலுக்கு ஏங்கியபடி அமைதியின்றி உள்ளூரப் புழுங்கினாள் என்பது பெரியப்பா வீட்டுக்குத் தெரியவே கூடாது. அவள் மிகவும் வசதியாக மகிழ்ச்சியாக கணவனுடன் வாழ்கிறாள் என்று அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் பெட்டி நிறைய பட்டுச் சேலைகளுடன், மேனியை நகைகள் அலங்கரிக்க, கைப்பையில் பணம் குலுங்க, பெரியப்பா வீட்டில் போய் இறங்க வேண்டும். வேளைக்கு ஒரு அலங்காரத்தில் அவர்களை திகைக்க வைக்க வேண்டும். கந்தல் சேலையிலே சிண்டிர்லா போல இருந்த ரம்யாவை இப்போது பாருங்கோ என்று அவர்களை வியப்பில் ஆழ்த்த வேண்டும்.

''வீடா? பெரிய மாளிகை போல இருக்கு... தோட்டத்திலே காய்கள் மீதியாகிறது... கறவை மாடு நாலு கொட்டிலில் நிக்குதே, பாலுக்கும் தயிருக்கும் நெய்க்கும் பஞ்சமே இல்லை.

''பூச்செடிகள் ஏராளம். அத்தனையையும் தொடுத்து தலையில் வச்சுக்கத்தான் எனக்கு நேரமில்லை. தலையில் சுமையா நான் பூ வச்சுக்கிறதை பார்க்க மாமியாருக்கு கொள்ள ஆசை. என் கணவர் வீட்டு சாமான்களை தாமே வாங்கிப்போட்டு வருகிறார். ஆனாலும் என் கைச் செலவுக்குன்னு மாசம் கணிசமாக பணம் வேறு தரார்.''

''இந்த நகையெல்லாம் என் மாமியார் செய்து போட்டது. இந்த சேலையா?... போன வாரம் திருச்சிக்குப் போன என் கணவர் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தார். மாதத்துக்கு ஏதாச்சும் ஒரு புதுச்சேலை வாங்கிட்டு வந்துடுவார். வேண்டான்னாலும் கேட்க மாட்டார்'' பெரியம்மா கேட்கப்



போகும் கேள்விகளுக்கு பட்பட்டென்று பதிலளிக்கப் போகிறாள்.

யார் தலையிலாவது கட்டணும்னு என்னை வீட்டை விட்டு சட்டென்று வெளியே அனுப்பினீங்க. இப்போ பாருங்க... எல்லா நிறைவுகளுடனும் வந்து நிக்கிறேன். பெரியம்மா பொறாமையிலே மனம் குமைய வேண்டும். கற்பனையில் பல எண்ணியவளாகக் கடிதத்தை கணவனிடம் காட்டினாள்.

''நாலுநாள் முன்னதாக உன்னை அனுப்புகிற உத்தேசமில்லை'' எடுத்த எடுப்பிலேயே சொல்லிட்டான் அவன்.

''கல்யாண காரியங்களுக்கு உதவ ஆள் தேவைப்பட்டால் சம்பளம் கொடுத்து ஒரு ஆளை அமர்த்திக்கிறது. கல்யாணத்துக்கு முந்தி அவங்க வீட்டிலே அண்டிக் கொண்டிருந்தே; அதனாலே ஆட்டிப் படைச்சாங்க. இப்போ நீ என் மனைவி. அங்கே போய் அடுப்படியிலே நின்னுகிட்டு நீ கல்யாணப் பலகாரம் சுட்டுக் கொண்டிருக்க நான் அனுமதிக்க மாட்டேன்.''

மவுனமாக அவனை சிறிது ஏமாற்றத்துடன் பார்த்தாள்.

''உனக்கு அதுதான் பிறந்த வீடு- ஒத்துக்கிறேன். ஆனால், உங்கள் பெரியப்பா- பெரியம்மா இருவரும் உன்னைத் தங்கள் மகளாக ஒருநாள்கூட நினைச்சு நடத்தலை. ஆனால், உறவு என்கிற மரியாதைக்கு நாம் இருவரும் கல்யாணத்துக்குப் போய்விட்டு வந்து விடுவோம். சரிதானே.''

''அம்மாவைத் தனியே விட்டுட்டு அதிக நாள் வெளியூரில் தங்க முடியாது. அதையும் மறக்காதே.''

முரளி தன் தாயையும் வீட்டையும் தற்காலிகமாக பார்த்துக் கொள்ள வேலம்மாளையும் அவள் கணவனையும் வைத்து விட்டு, மனைவியுடன் சரவணனின் திருமணத்திற்குப் புறப்பட்டான்.

''நாலுநாள் முன்னாடி வரச்சொன்னேன்... முகூர்த்தத்துக்கு சித்த நாழிக்கு முன்னாடி வந்து நிக்குறே, சரி... சரி நீயும் உன் வீட்டுக்காரரும் முதல்லே போய் காபி பலகாரம் சாப்பிட்டுட்டு பந்தலுக்கு வாங்கோ'' வழக்கமான அதட்டல் தோரணையில் பெரியம்மா கல்யாண மண்டபத்திற்குள் நுழைந்தவளை வரவேற்றாள்.

ரம்யாவின் நகைகளையும், அவள் உடுத்தியிருந்த பட்டுச் சேலையையும் பார்த்த பெரியம்மாவுக்கு உண்மையில் திகைப்பாகத்தான் இருந்தது.

''ஏதோ ஒரு பட்டிக்காடு- அதிலே விவசாயம் பண்றவன்னு கட்டிக் கொடுத்தோம். முன்னைவிட உப்பி தளதளன்னு தக்காளிப்பழம் போல வந்திருக்காளே.'' பொறாமையாகவும் இருந்தது.

பெரியம்மாவின் நாத்தி கமலா சதா பற்றாக்குறையில் வருந்துகிறவள். கொஞ்சம் பளிச்சென்று இருப்பவர்களைக் கண்டாலே அவளுக்கு வயிறு எரியும். கல்யாணத்திற்கு முன்னர் பல தடவை அவள் தன் அண்ணி வீட்டில் ரம்யாவைப் பார்த்திருக்கிறாள். அட! இந்தப் பொண்ணுக்கு வந்திருக்கிற யோகம்; அவள் நெஞ்சு பொறாமையில் வெந்தது.

ஏதாவது குற்றம்கூறி, வந்தவளை மட்டம் தட்ட வேண்டும் என்று மனது அடித்துக் கொண்டது. ''என்ன அன்பளிப்பு வாங்கிட்டு வந்திருக்கே உன் அண்ணனுக்கு'' ரிசப்ஷனுக்குப் பின் விருந்து நடந்து கொண்டிருந்தபோது பலர் முன்னிலையில் கேட்டாள். அவள் கொண்டு வந்த பரிசுப் பொட்டலத்தை துணிவுடன் அவிழ்த்துப் பார்த்தாள்.

''ஸ்டீல் பால் குக்கர். நூறு ரூபாய் இருக்குமா?'' கமலா கேட்டதும் ரம்யா முகம் சிவந்து போனாள்.

அந்தப் பரிசை வாங்கிக் கொண்டு வந்த கணவன் முரளி அதை வண்ணக் காகிதத்தில் பத்திரப்படுத்துமுன் அவள்



கேட்டாள். ''இதுதானா நாம் அண்ணனுக்கு கொடுக்கப் போகிற அன்பளிப்பு?''

''அவங்க நமக்குக் கொடுத்த சீர்வரிசைகளைவிட இது எத்தனையோ பங்கு உசந்தது?''

அதற்குமேல் தர்க்கிக்கப் பயந்து சும்மாயிருந்து விட்டாள்.

அவர்கள் கொண்டு வந்த கல்யாணப் பரிசை, கமலா நாலு பேர் முன்னால் அவிழ்த்து கேலி பேசியதைக் கேட்டு மிகவும் வெட்கிப் போனாள்.

''பரிசு என்கிறது ஒரு முக்கியமல்ல. அதைக் கொடுக்கிற மனதில் இருக்கிற அன்புதான் முக்கியம்'' விட்டுக் கொடுக்காது அவள் பேசியதைக் கேட்டு அருகில் நின்ற சில இள வட்டங்கள் கைதட்டி, ''பலே! சரியாகச் சொன்னீங்க'' என்று ஆமோதித்தனர்.

''அண்ணன் கல்யாணத்துக்கு பெரியப்பா எனக்கு வாயில் சேலைதான் எடுத்துக் கொடுத்தார். பட்டுச்சேலை தரலைன்னு நான் தவறா எண்ணிக்கலை. அவரால் முடிஞ்சதை அன்போட செய்தார். பிறந்த வீட்டிலே ஒரு தூசியைக் கொடுத்தாலும் பெண்கள் அதைப் பொன்னாக பாவித்து போற்றி வச்சுக்கணும். அதுபோல தங்கை எதைக் கொண்டு வந்து கொடுத்தாலும் அண்ணன் அதை ரொம்ப உசந்த பொருளா எண்ணி எடுத்துக்கணும் இல்லையா?'' ரம்யா படபடவென்று பேசியதைக் கேட்டதும் அவள் முகத்தில் ரத்தம் ஏறிக்கொண்டு விட்டது.

அவள் கேள்விப்பட்ட அந்த சங்கதியைச் சொல்லி ரம்யாவை ஒரு கலக்கு கலக்கி ஊருக்கு அனுப்பணும். மனதிற்குள் சவால் விட்டுக் கொண்டாள்.

ரிசப்ஷனுக்குப் பின் அவசரமாகச் சாப்பிட்டு விட்டு அவர்கள் ஊருக்குக் கிளம்பினார்கள்.

''காலில் கஞ்சியை ஊத்திட்டு வந்திருக்கே. சரி... சரி, கமலா, ரம்யாவுக்கு வெத்திலை பாக்கு, பலகாரப் பொட்டலம் எல்லாம் குடுத்தனுப்பு'' பெரியம்மா தன் நாத்திக்கு உத்திரவு போட்டாள்.

வெத்திலை பாக்கு தட்டை நீட்டிய கமலா, அடிக் குரலில் பேசினாள். உன்கிட்ட ஒரு முக்கியமான சங்கதியைச் சொன்னனும்னு காலையிலிருந்து துடிச்சுக்கிட்டிருக்கேன். தனியா நின்னு பேச ஒரு நிமிஷம்கூட கிடைக்கலை. உங்க ஊர்க்காரி ஒருத்தி இங்க வாக்கப்பட்டிருக்காளே அவள் அம்மா வந்திருந்தா, மகளைப் பார்க்க, அப்போ உன்னைப் பத்தி விசாரித்தேன்.''

வெத்திலை, பாக்கு பலகாரப் பொட்டலங்களைக் கையில் எடுத்துக்கொண்டாள் ரம்யா. ''அப்படியா? எனக்கு எங்க ஊரில் ரொம்ப பேரைத் தெரியாது. வீட்டுக்கு வரவங்களிடம் பேசிப் பழகிக்கிறேன் அவ்வளவுதான். மாமியார் படுத்த படுக்கையாக இருப்பதால் அவங்களை விட்டுட்டு மத்தவங்களைப் பார்த்துப் பேசிப் பழக நேரமில்லை.''

''அதான் அந்தம்மா சொன்னாங்க; பட்டணத்து பொண்ணாயிருந்தும் பெரிய பத்தாம்பசலியாக இருக்கு. கண் முன் நடக்கிறதை கண்டுக்க முடியலை.''

''என்ன சொல்றீங்க?''

உன் கணவர் உங்கிட்ட நல்லா நடந்துக்கிறதா ஏமாந்துடாதே. அவருக்கு ஒரு வைப்பு ஒருத்தி இருக்காளாம். எச்சரிக்கிறேன்.''

பகீர் என்ற உணர்வில் ரம்யா கலங்கிப் போனாள்.

''நெருப்பில்லாமல் புகை வருமா? விசாரித்து தெரிஞ்சுக்கணும்.''

''பேர், தெரு இல்லாமல் சொல்லலையா?''



கலங்கிவிட்ட அவளது கண்களைப் பார்த்து கமலாவுக்கு பரம திருப்தி.

''சொன்னாங்க, வாய்க்கால் தெரு வீடாம், நாச்சியப்பன் அப்பன் பேரு. ஆனால், அவன் செத்துட்டானாம். மகளும் தாயும்தான் வீட்டிலே இருக்காங்களாம். பொண்ணுக்கு சின்ன வயசுதான். மல்லிகான்னு பேரு. ரொம்ப காலமா இது நடக்குதாம்.''

ரம்யாவுக்கு தலை சுற்றியது. இதென்ன புதுக் கதை... போதும் என்று கத்த வேண்டும் போன்றதொரு ஆவேசமான ஆத்திரம். விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டாள்.

ரயில் பயணத்தின்போது முரளி, அவளிடம் முன் போலவே மிகவும் அன்பாகத்தான் நடந்து கொண்டான்.

''குளிருதா? இந்த விசிறியை நிறுத்தட்டுமா?'' என்று கேட்டபோது ஆத்திரம் தொண்டை வரை எழும்பிப் பேச முடியாது, கண்களில் நீர் புரள, தலையை ஆட்டி விட்டு தடுப்புப் பலகைப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாக வாய்க்கால் கரை வீட்டைப் பற்றித் தெரிந்து கொண்டாக வேண்டும்.

ரொம்பக் காலமாக என்கிறார்களே? சுகந்திமேல் கொண்ட காதல் தோல்வி ஏற்பட்ட ஏமாற்றத்துக்கு வடிகால் தேடி இப்படி ஒரு தொடர்பை அமைச்சுக்கிட்டாரா? அதை விளக்கமாக சொல்ல கூச்சப்பட்டுக் கொண்டு பழைய காதல் விவகாரத்தை மட்டும் சொல்லி அவளை எட்டத்திலே ஒதுக்கி வச்சுட்டாரா?

இருக்கும். அப்படி ஒரு சங்கதி இருப்பதால்தான் எத்தனை அழகாக அவள் சிங்காரித்துக் கொண்டு எதிரே போய் நின்றாலும்கூட பார்க்காததுபோல் அசட்டையாக இருக்கிறார்.

வாய்க்கால்கரை வீட்டுக்காரி மேலே அப்படி ஒரு மோகமா? சுகந்தியாவது கைவிட்டுப் போன விவகாரம். மல்லிகா? ஒரு தொடர்கதையாக இருப்பாள் போலிருக்கே? போலியான வாழ்விலே, உணர்வுகள் பொடிப் பொடியாக வாழாவெட்டியாகி விடும் ஒரு நிலை.

இதைவிட பெரியப்பா வீட்டு அடிமை சோகம் மேல் போலத் தோணுதே? இப்போ அவங்களும் அவளைத் திரும்ப வரவேற்க மாட்டார்கள். ''முன்பு எங்களுக்கு தேடிக் கொடுத்த அவமானம் போதாதா? வாழாவெட்டியாக வந்து எங்க உயிரை ஏன் வாங்குகிறே'' என்று காளி போல கத்துவாள் பெரியம்மா. பெரிய இடத்திலிருந்து வந்திருக்கும் புது மருமகள், அவளை ஏளனமாகப் பார்ப்பாள்.

உகும். முதலில் அவள் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். இப்படி ஒரு காரியம் உங்க மகன் செய்கிறது தெரியாதா உங்களுக்குன்னு அத்தையிடம் கேட்டாகணும்.

கடைசியாக, பயத்தைவிட்டு கணவனிடமே கேட்டு விட வேண்டும். ''ஆமாம்... உண்மை! இப்போ என்ன செய்யப் போறே?''ன்னு முரளி முறைத்தால்?...

என்ன செய்யப் போறேன்னா கேட்கிறீங்க; உயிரை மாய்ச்சுக்கப் போறேன்னு சொல்லாம காரியத்தைச் சாதிச்சுடணும்?

இப்படி ஒரு அவல வாழ்க்கையை தொடர்ந்து அனுபவிக்கணுமா?... திருச்சி நிலையம் வரை அவள் உறங்கவில்லை. கண்களில் வழிந்த கண்ணீரும் ஓயவில்லை.

பயணிகள் தங்கும் அறையில் மனைவியின் உப்பிய முகத்தைப் பார்த்த முரளி, திடுக்கிட்டுப் போனான். ''என் மாமனார் வீட்டிலே முதல் முதலா நடக்கிற கல்யாணம்னு உன்னை அழைச்சிட்டுப் போனேன். உன்னை அவமதிச்சு அனுப்புவாங்கன்னு தெரியும். இனிமேல் நீ எதுக்கும்



அங்கே போகத் தேவையில்லை. எதுக்காக வருத்தப்படறே? அவங்க குணந்தான் தெரிஞ்ச சங்கதியாச்சே'' ஆறுதலாகச் சொன்னான்.

அவளுக்கு இன்னும் அதிகமாக அழுகை குமுறிக் கொண்டு வந்தது. ''அவள் துயரத்திற்குக் காரணம் தான் என்பது புரியவில்லையா? புரியாததுபோல நடிக்கும் திறமையா?'' ஆத்திரத்துடன் குமைந்தாள். ஆனால், பதில் பேசவில்லை.

# 11

**வீ**ட்டு நடப்பு முன்போல எந்திர கதியில் இயங்கிக் கொண்டிருந்தது. நாட்கள் நழுவின. ஆனால், அவளது உள்ளத்தில் உருவாகி விட்ட சந்தேகப் பொறி, பெரும் நெருப்பாகி நெஞ்சை எரித்துக் கொண்டிருந்தது.

கொளுத்தும் வெயில் திடீரென்று தணிந்து, வானம் கருத்துக் கொண்டு இடியோடு மழை கொட்டத் தொடங்கியது.

உணவுக்குப் பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த முரளி, பளீர் என்று ஒளியிட்ட மின்னலையும், வீட்டையும் கிடுகிடுக்க வைத்த இடியோசையையும் ரசித்துக் கொண்டிருந்தான்.

''இந்த மழைக்காக பயிர்கள் எல்லாம் எப்படி வாடிக்கிட்டுக் காத்திருந்தது தெரியுமா? இன்னும் ரெண்டு நாள் பலத்த மழை கொட்டினா நமக்கு ரொம்ப நல்லது...''

''உங்க அன்பு மழைக்கு இந்த பயிர் வாடுகிறது புரியலை. வயக்காட்டுப் பயிரைப் பத்திதான் எப்பவும் நினைப்பு...''

''வாய்க்காலில்கூட நிறையத் தண்ணீர் ஓடும்...''

''ஓடாதா? உங்களுக்கு அங்கேதான் சதா குடியிருப்பு''

''என்ன கண்களை மூடிக்கொண்டு காதைப் பொத்திக் கிறே? இடின்னா உனக்குப் பயமா? அம்மாவுக்குப் பயமே கிடையாது. வானத்துக்குக் கீழே குடியிருந்து கொண்டு இடிக்கு பயந்தா முடியுமான்னு சிரிப்பாங்க'' அவன் உற்சாகமாகப் பேசிக்கொண்டு போனான்.

''என் வாழ்விலேயே பெரிய இடி விழுந்தாச்சு. இந்த இடிக்கு நான் ஏன் பயப்படணும்?''

அவனது பேச்சுகளுக்கு மனம்தான் பதிலளித்தது. அவள் மவுனமாக சுவற்றில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தாள். கல்யாணத்திற்குப் போய் திரும்பி வந்ததிலிருந்து இவள் ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாள்? முரளி அவளைக் கவலையுடன் பார்த்தான்.

''சரி நீ போய் அம்மாவைப் பார்த்துட்டு ஒய்வு எடுத்துக்கோ'' என்றான் அவன். பளிச்சென்று அவள் அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

அன்று இரவு முழுவதும் நல்ல மழை.

வாய்க்காலில்கூட தண்ணீர் நிரம்பி வழியும் என்ற வார்த்தை ஏனோ அவளது மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது.

மறுநாளும் மழை. அதற்கு அடுத்த நாளும் முரளி விரும்பியபடி மழை கொட்டித் தீர்த்து விட்டது.

தெருவும், தோட்டமும் சேறும் சகதியுமாக இருந்தன. அடுத்த நாள் புறப்பட்ட சூரியன் சுரீர் என்று தாக்கியபடி பளிச்சென்று வீசியது.

தோட்ட வேலையாள் ஆண்டியப்பனிடம் அவள் காய்கள் பறித்துத் தரச் சொல்லி கேட்பது வழக்கம். சமையலுக்குத் தேவைப்பட்டவைகளை பறித்து வரச் சொல்லி விட்டு கிணற்று மேடையருகே நின்றவள் மனதில்



சட்டென்று ஒரு எண்ணம் பளிச்சிட்டது. வேலம்மாள், நாகப்பன் இவர்களைக் கேட்டால் முரளியிடம் சொல்லி விடுவார்கள். பெரிய வம்பாகி விடும்.

பணிவாக அவளிடம் குழைந்து பேசும் தோட்டக்காரக் கிழவர் அந்த வீட்டில் வெகுகாலமாக வேலை செய்கிறார். அவரிடம் கேட்டால்? ''பெரியவரே! உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும்'' என்று ஆரம்பித்தாள். காய்கறிக் கூடையைத் தோய்க்கும் கல்மீது வைத்து விட்டு கிழவர் அவளை ஊன்றிப் பார்த்தார்.

''வயசு போயிடுச்சு, இனி மேலே இந்தக் கடினமான வேலை செய்ய என் உடம்பு தாக்குப் பிடிக்காது. என் மச்சான் மகனைக் கொண்டு வேலைக்கு வச்சுட்டு நான் விலகிக்கலாமான்னு பார்க்கிறேன்.''

''அப்படியே செய்யுங்க பெரியவரே. பாவம் தாகத்துக்கு கொஞ்சம் மோர் கொண்டு வரட்டுமா?''

''உங்களுக்குப் புண்ணியமுண்டு, நாக்கு வரண்டு போகுது.''

ஒரு அலுமினிய செம்பில் மோரில் உப்புப் போட்டு நிறைத்துக் கலக்கி எடுத்துக் கொண்டு வந்தாள். ''சாப்பிடுங்க பெரியவரே!'' உபசரித்தாள்.

கடகடவென்று மோரைக் குடித்து விட்டு, துண்டால் வாயைத் துடைத்துக்கொண்டு கிழவர் செம்பைக் கீழே வைத்தார். அலுப்புடன் கிணற்று மேடை மீது சாய்ந்தபடி நின்றார்.

''பெரியவரே! ரொம்ப காலமா இங்கே வேலை பாக்குறீங்க இல்லையா?''

''ஆமாம் ஏன் கேக்கிறீங்க?''

''வாய்க்கால்கரை நாச்சியப்பனை நல்லா தெரியுமா?''

''தெரியாம என்ன. பாவம் வெத்தலைக் கட்டுகளை ஏத்திக்கிட்டு டவுன் மண்டிக்குப் போன வழியிலே எதிர்ப் பக்கம் லாரி வந்து மோதி செத்துட்டார்.''

''அவன் குடும்பம் இப்பக் கஷ்டப்படுதாமே?''

''யார் சொன்னா? நம்ப ஐயா உட்டுடுவாரா நல்லா கவனிச்சுக்கிறாரே. தாயும் ஒரு மகளும் இருக்காங்க. அவங்க தங்கியிருக்கிற வீடுகூட நம்ப பண்ணையைச் சேர்ந்ததுதான். ஐயா அடிக்கடி போய் அவர்களைக் கவனிச்சுக்கிறாரே. ஐயாவுக்கு தங்க மனசும்மா. போன வாரம்கூட நம்ப ஐயா அவங்க வீட்டுக்கு ஸ்கூட்டரிலே போனதைப் பார்த்தேன்?''

நெஞ்சு வேகமாகத் துடிக்க மூச்சு முட்டி விடும் ஆத்திரத்தில் துவண்டு போனாள் அவள்.

''வயசாகிப் போச்சு கிழவா உனக்குப் புத்தியும் மங்கிப் போச்சு. ஐயாவுக்குத் தங்க மனசா? பின்னே இருக்காதா? கொடிபோல அங்கே ஒரு பொண்ணு ஐயாவை மயக்கி இழுத்தா, அவர் மனசு தங்கமாகவும் மாறும்- வைரமாகவும் மின்னும், பட்டணத்துவரை விவகாரம் எட்டியிருக்கு. ஆனால், உன் அறிவுக்கு எட்டலையே?' கோபத்துடன் அவள் மனம் கொதித்தாள்.

''வாய்க்கால்கரை வீடு எந்தப் பக்கம் இருக்கு?''

''நம் தோட்டத்துப் பின்னாலே மதில் சுவரில் ஒரு கதவு இருக்கு இல்லையா? அதைத் தொரந்தா வாய்க்கால் கரையில் இறங்கலாம். கரையோரமா மேற்கால போனா, கொஞ்சதூரத்திலே இறங்குதுறை வரும். அதுக்கு அப்பால பிள்ளையார் கோயில். அதுக்கு கொஞ்ச தூரத்திலே ஆலமரங்கள் அடர்த்தியா வளர்ந்து நிற்கும். அந்த ஒத்தை யடிப் பாதையிலே கொஞ்சதூரம் போனால் ஒரு ஓட்டு வீடு தென்படும். அது உங்க மாமனார் காலத்திலே கட்டப்பட்ட வீடு. நாச்சியப்பனுக்குக் குடியிருக்க ஐயா குடுத்து



வச்சிருந்தாங்க. அவன் செத்துப் போனதும் குடும்பத்தைத் தெருவில் துரத்த ஐயாவுக்கு மனம் கேட்கலை. பாவம், நாச்சியப்பன் பெண்டாட்டியும் வயசுப் பொண்ணும் எங்கே போவாங்க?'' கிழவன் பெருமூச் செறிந்தான்.

'எங்கேயும் போகவேண்டாம்னுதானே வச்சுக்கிட்டி ருக்கார்'' எண்ணியபடி பற்களைக் கடித்தாள் அவள்.

அதற்குப்பின் அவளுக்கு வேலையே ஓடவில்லை. இந்த அநியாயத்துக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்... அந்தப் போலித்தனமான வாழ்க்கை அவளுக்கு இனித் தேவை யில்லை.

பகல் உணவுக்குப் பின் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு முரளி பக்கத்து டவுனுக்கு ஒரு காரியமாகப் புறப்பட்டான்.

வர நேரமாகலாம் என்று எச்சரித்து விட்டு கிளம்பியிருந் தான். இதைவிட அவளுக்குச் சரியான சந்தர்ப்பம் வேறு எப்போது கிடைக்கப் போகிறது?

மாமியாரிடம் பிள்ளையார் கோயில்வரை போய்வர உத்திரவு வாங்கிக் கொண்டாள். வேலம்மாளை வீட்டுக்கும் மாமியாருக்கும் காவலாக வைத்து விட்டு, தேங்காய்ப் பழக் கூடையுடன் பின்பக்கமாகக் கிளம்பினாள்.

அன்று அடித்த வெயிலில் தோட்டத்து சேறு சிறிது காய்ந்து தரை இறுகி விட்டிருந்தது. ஆனல், வாய்க்கால் கரையோரம் இன்னும் ஈரக்கசிவோடு மண் சகதியாகி விட்டிருந்தது.

பல இடங்களில் சேற்றில் கால் புதையும், அருவருப்பு டன் அவள் தேங்காய் பழக்கூடையுடன் ஓரமாக ஒதுங்கி நடந்தாள். வாய்க்கால் இறங்கு துறையில் கால்களைக் கழுவிக்கொண்டு முதலில் பிள்ளையார் கோயிலுக்குச் சென்றாள்.

சக்கிரமாக பிரார்த்தனையை முடித்துக் கொண்டு கை நீட்டிக்கொண்டு நின்ற சிறுவர்களிடம் தேங்காய் பழங்களை கொடுத்து விட்டு, விபூதியும், குங்குமப் பிரசாதமும், வெறுங்கூடையுமாக நடந்தாள்.

அடர்த்தியாக வளர்ந்திருந்த ஆலமரங்களுக்கு அப்பால் சிறிது தூரத்தில் தெரிந்த தன்னந்தனியான ஓட்டு வீட்டைப் பார்த்ததும் அவள் நெஞ்சு வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

சுற்றும் முற்றும் பார்த்தாள். எதிர்க்கரையில் எங்கேயோ ஒரு சிறுவன் வீட்டை நோக்கி வரப்பின் மீது ஓடிக் கொண்டிருந்தான். சில ஆடுகள் கரையோரத்தில் புதர் செடிகளை கடித்துத் தின்றபடி இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தன. வயல்களில் வேலை செய்கிறவர்கள் வீடு திரும்பி விட்டிருந்தனர். ஆள் அரவமின்றி சுற்றுப்புறம் வெறிச்சென்று இருந்தது. அந்த ஓட்டு வீட்டுக்கு அப்பால் ஒரு தென்னந்தோப்பு நெடுஞ்சாலையை மறைத்துக் கொண்டிருப்பதைக் கவனித்து மெல்ல ஒத்தையடிப் பாதையில் புகுந்து வீட்டை நோக்கி நடந்தாள். பொழுது சாயும் வேளை. இருளுடன் கலந்த லேசான வெளிச்சத்திலே ஒரு கருப்பு நாய் அவள் மீது பாய ஓடி வந்தது. பயந்து போய் விட்டாள்.

''யாரது?'' என்று அதட்டியபடி வெளியே வந்த சிவப்பு நூல் சேலைக்காரி, முன்நெற்றி முடியில் வெள்ளிக் கம்பிகளாக நரை ஓடிய கூந்தலை அள்ளிச் செருகிக் கொண்டிருந்தாள். வெள்ளை ரவிக்கையையும் வெறுமையான அவளது நெற்றியையும் கண்டதுமே ரம்யா புரிந்து கொண்டாள்.

''நீங்க நாச்சியப்பன் சம்சாரந்தானே?'' குமுறினாள்.

''யாரும்மா அது?'' எட்டிப் பார்த்த நீல வாயில் சேலையில் மாநிறமாக- உயரமாக கொடிபோல வந்த இளம் பெண்ணைப் பார்த்ததும், இதயமே வாயிற்குள் வந்து விட்டதொரு பதட்டம் அவளுக்கு ஏற்பட்டது.



''உன் பேர் மல்லிகாதானே?'' அவள் குரல் சன்னமாகியது.

''ஆமாம்! நீங்க யாருன்னு சொல்லலையே?'' வள்வள் என்று குரைத்த கறுப்பு நாயை சங்கிலியால் பிணைத்து கம்பம் ஒன்றில் கட்டியபடி கேட்டாள் பெரியவள்.

''நான்தான் சின்ன ஐயாவோட மனைவி'' மேலே என்ன சொல்வது என்ற பயத்தில் அவளுக்கு வார்த்தைகள் தடுமாறின.

''அட! நம்ம ஐயோவோட சம்சாரமா? வாங்கம்மா. மல்லிகா, பாயை எடுத்து திண்ணையிலே போடு. அம்மாவுக்கு தாகத்துக்கு உள்ளாற இருக்கிற செவ்விள நீரில் ஒண்ணை கண் திறந்து தம்ளரோட எடுத்தா'' உத்திரவிட்டாள்.

''அதெல்லாம் இப்ப ஒண்ணும் வேண்டாம். நான் கோயிலுக்கு வந்தேன். அப்படியே உங்களைப் பார்த்துட்டு வரச்சொன்னாங்க என் மாமியார்'' சட்டென்று வாயில் வந்ததைச் சொல்லிவிட்டு பாயின் மீது உட்கார்ந்தாள். வீடு மிகச் சிறியது என்றாலும், வீட்டின் உள்ளும் வெளியும் சுத்தமாகஇருப்பதைக் கவனித்தாள்.

ஆனாலும் அது அவர்கள் வீட்டிலே வேலை பார்த்த முன்னாள் வேலையாளான நாச்சியப்பன் குடும்பம் வசிக்கும் வீடு. அந்த மல்லிகா அப்படி ஒன்றும் பேரழகி இல்லையே. எதைக் கண்டு மனிதர் இப்படி இங்கே அடிக்கடி வருகிறாராம்...?

''இந்தக் கேவலமான காரியத்தைச் செய்ய அவருக்கு எத்தனை துணிச்சல்?''

பெரியப்பா சொல்வாரே அடிக்கடி... படித்து முடிக்க வேண்டும் என்று உறுதியான தீவிரத்துடன் செயல்படும் மாணவன் தூக்கத்தையும் பசியையும் கண்டு அஞ்ச மாட்டான்.

பெண்மோகம் கொண்ட ஒரு பித்தனுக்கு, ஊராரிடம் அச்சம் இருக்காது. அவமான உணர்வு மரத்துப் போயிடும்.

பெரிய வீடு என்று கிராமம் உயர்வாக மதித்துப் பேசும் வீட்டின் தலைவன் முரளி. கேவலம் இப்படிப் பெண் மோகத்தில் சமதையில்லாத ஒரு இடத்திலா தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்?

சுகந்தியிடம் நேருக்கு நேர் பேசிவிட முடியும். எத்தனை கோபம் வந்தாலும் அவள் படித்தவள் பண்பு கெட்டுப் பதிலளிக்கமாட்டாள். இவர்கள் இருவரும் பள்ளிக்கூடப் பக்கமே தலைசாய்த்துப் படுத்திருக்க மாட்டார்கள். இவர்களிடம் 'வாய் கொடுத்தால், அம்மாவும் பெண்ணும் அடிக்க வந்தாலும் அதிசயப்பட ஏதும் இல்லை. உகும். இங்கே வந்தது தப்பு. இவர்களிடம் நியாயம் கேட்டு எதுவும் நடக்காது. மெள்ள கிளம்பிவிடுவதுதான் மரியாதை. மல்லிகாவின் தாய் கோபத்தில் மட்டமாக ஏதாவது பேசி விட்டால்?... பிசகு அவளது கணவருடையது- இவர்களிடம் தப்புக் கண்டுபிடித்துக் கோபமாகத் தர்க்கிப்பதில் லாபம்?

நேரே மாமியாரிடம் இதைப்பற்றி முறையிட்டுக் கொண்டு ஒரு முடிவு காண வேணும். புத்திகெட்டுப் போய் ஆத்திரப்பட்டு, பொறாமை உந்த இங்கே வந்தது தப்பு... பெரும் தப்பு.

''இந்தத் தென்னந்தோப்புக்கூட நம்முடையதுதான் அம்மா. ஒரு இளநீராவது சாப்பிடக்கூடாதா?'' குழைவாகக் கேட்டாள் பெரியவள்.

''நேரமாச்சு. இருட்டிப் போகுமுன்னே வந்துடுன்னு என் மாமியார் உத்தரவு. பிறகு நிதானமா ஒரு நாள் வந்து பேசறேன்'' பரபரப்புடன் எழுந்திருந்தாள்.



''பெரியம்மாகூட எங்களை மறக்கலை. நாங்க ஒரு வழியில் குடுத்து வச்சவங்க. அவர் போயிட்டாரேன்னு எங்களை சின்ன ஐயா சிரமப்பட வைக்கலை. நல்லா கவனிச்சுக்கிறார்.''

ஏன் கவனிக்க மாட்டார்? அவருக்கு வேண்டியது இங்கே இருக்கே. எண்ணியபடி பற்களைக் கடித்தாள். பிரசாதக் கூடையைத் தூக்கிக் கொண்டு திண்ணையில் இருந்து இறங்கினாள்.

''மல்லிகாவுக்குக் கல்யாணம்கூடகூடி வந்திருக்கம்மா. ஐயா சொல்லலையா? அதுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து உதவுவதாக வாக்குத் தந்தார். இன்னிக்கு டவுனிலிருந்து வரும்போது வங்கியில் இருந்து ரூபாய் எடுத்து வரேன்னு சொல்லிட்டுப் போனார். நாளைக்கு நல்ல நாள். ஒரு சேலை துணிமணி எடுக்கணும்; பணம் தேவைப்படும்னு சொன்னேன், கவலைப்படாதீங்கன்னார். அம்மா நீங்களும் கல்யாணத்துக்கு வரணும். மாப்பிள்ளை அடுத்த கிராமந்தான். வண்டி வச்சுக்கிட்டு நீங் கல்யாணத்துக்கு வரலாம். மறந்துடாதீங்க.''

''வேறு எவன் தலையிலாவது கட்டி மல்லிகாவின் உறவை மெள்ள வெட்டிக் கொள்கிறார் போலிருக்கு. ஆசாமி லேசுப்பட்டவர் இல்லை'' ஆத்திரம் இன்னும் அதிகமாக கையும் காலும் பதற, ''வரேன் நான்'' என்றாள்.

''இதென்ன ஸ்கூட்டர் சத்தம்?'' அச்சத்தில் உறைந்து போனாள்.

''ஐயாகூட வரார் போலிருக்கு. இருந்து ரெண்டு பேரும் இளநீர் சாப்பிட்டுட்டு மெதுவாகப் போகலாமே'' உபசரித்தாள் சிவப்பு சேலைக்காரி.

ஸ்கூட்டர் சத்தம் அடங்கிப் போனது. தென்னமரத்து இடைவெளியில் இருள் கலந்த லேசான வெளிச்சத்தில் முரளியின் வெள்ளைச்சட்டையும் வேட்டியும் தெரிவதைக்

கண்டாள். ''அத்தை என்னை இங்கே அனுப்பியது, அவருக்குத் தெரியாது. நான்; உதவி செய்துகிட்டு இருக்கும்போது குறுக்கே உங்களை யார் தலையிடச் சொன்னதுன்னு கோவிச்சுக்குவார். பின்னாலே இன்னொரு நாள் வந்து உங்களையெல்லாம் பார்க்கிறேன். இங்கே வந்ததைப் பத்தி அவர்கிட்ட பேசாதீங்க'' என்றாள்.

''புரியுது அம்மா. இந்த வேளையில் தனியா ஏன் வந்தேன்னு கோவிச்சுக்குவார். நியாயந்தானே'' சிவப்பு சேலைக்காரி முறுவலித்தாள்.

கணவன் அந்த வீட்டை அடையுமுன் அவள் வாய்க்கால் கரையை அடைந்துவிட வேண்டும். பின்னர் ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்து ஒன்றுமே நடக்காதது போல இருந்து கொள்ள வேண்டும் என்று பலவும் எண்ணி ஒரே வேகமாக அவள் ஒத்தையடிப் பாதையில் நடந்தாள். சதக் சதக்கென்று சேறு புடவை மீது தெளிக்க, ஓரத்தில் அழுத்தமாகக் காலை வைத்ததும் என்ன இது வழுவழுப்பு காலில் ''ஐயோ...'' அவளையும் அறியாது உரத்த குரலில் அலறி விட்டாள்.

மறுகணம் அந்தக் களிமண் சரிவிலே உருண்டு வாய்க்கால் இறங்குதுறை படி ஒன்றின்மேல் மோதி, ஆ... என்ற சத்தத்துடன் அலறி, பின்னர் ஒரே இருட்டில் ஆழ்ந்து போய்விட்டாள்.

# 12

கண்களை விழித்துக் கொண்டபோது, தன் அறையில் அந்தப் பெரிய அலங்காரக் கட்டிலின் வெள்ளை விரிப்பின் மேல்படுத்துக் கிடப்பதை மெள்ள உணர்ந்து கொண்டாள். அம்மாடி... நெற்றியை ஒட்டி இழுத்த வலியைத் தாளாது கையைத் தூக்கினாள்.



''அம்மா தொடாதீங்க. டாக்டர் தையல் போட்டிருக்கார். உடம்பிலிருந்து கொஞ்சமாக ரத்தம் அந்த துளியூண்டு காயத்தில் இருந்து கொட்டுச்சு. நாங்கள்ளாம் பயந்தே போயிட்டோம். நேத்து பூரா நீங்கள் கண்ணையே திறக்கலை. டாக்டர் தூக்கத்துக்கு ஊசி போட்டதினாலே அப்படியே அசையாம படுத்து இருந்தீங்களாம். நல்ல வேளை, காயம் நெத்தி முடி ஓரத்திலேதான் ஏற்பட்டிருக்கு. தையலைப் பிரிச்சா வடுகூட அசிங்கமா தெரியாதாம்; முடி மறைச்சுக்குமாம். அவங்கள்ளாம் பேசிக்கிட்டாங்க.''

அலங்கார மேசையின் ஆள் உயரக் கண்ணாடியில், தன்னைப் பார்த்துக்கொண்டு திடுக்கிட்டுப் போனாள்.

முகம் உப்பி, கண்கள் இடுங்கி, பத்து நாள் காய்ச்சலில் படுத்திருந்தவள்போல நெற்றியில் பிளாஸ்திரியுடன் கண்ணாடியில் தெரிந்தாள்.

தாறு மாறாகப் புரண்டு கிடந்த முடியை அள்ளி சுற்றிக் கட்டிக்கொள்ளக் கைகளைத் தூக்கியபோது, தோள்பட்டை தெறித்துவிடும்போல வலிக்கவே, சோர்வுடன் கையைத் தொங்கப்போட்டுக் கொண்டாள்.

''இருங்கம்மா, தலைமுடியை நான் சீர் செய்கிறேன். முகத்தை தொடச்சுவிடறேன். மெள்ள எழுந்திருக்க முடியுமானா, பல் துலக்கிட்டு, கொஞ்சம் காப்பி சாப்பிடுறீங்களாம்மா... கொண்டாறேன்'' வேலம்மாள் உபசரித்தாள்.

பல் துலக்கிவிட்டு, முகத்தை மெல்ல கழுவித் துடைத்துக் கொண்டு கைத்தாங்கலாக வேலம்மாள் உதவியுடன் படுக்கை மீது உட்கார்ந்தாள். வேலம்மாள் அவளது நீண்ட முடியை மெல்ல வாரி பின்னலிட்டாள்.

''அத்தை எப்படி இருக்காங்க'' ரம்யா மெல்லிய குரலில் விசாரித்தாள்.

''ஐயா உங்களைத் தூக்கிட்டு வந்து உள்ளே போட்டதைப் பத்தி கேள்விப்பட்டு பெரியம்மா அழுதுட்டாங்க, அவங்களைச் சமாதானப்படுத்த பட்டபாடு...''

அதற்குள் அறைக் கதவு மெள்ளத் திறக்கப்பட்டது. முரளி உள்ளே வந்ததும், வேலம்மாள் வேகமாக வெளியேறி விட்டாள். கதவைச் சாத்திக்கொண்டு கட்டிலின் விளிம்பின் மீது பட்டும் படாமலும் முரளி வந்து உட்கார்ந்து கொண்டான்.

''இப்போ எப்படி இருக்கு?'' மெல்லிய குரலில் கேட்டான்.

''முதுகிலே கொஞ்சம் வலி- தோள்பட்டையிலே சிராய்ப்புக் காயத்தின் எரிச்சல். மத்தபடி குற்றமில்லை.''

''பேசறதுக்கு தெம்பு இருக்கா?''

''நல்லாவே இருக்கு'' சொல்லிக்கொண்டு படுக்கை மீது உட்கார்ந்தாள்.

''ஆமாம், அம்மாகிட்டக்கூட சொல்லாம- இருட்டும் சமயம் வாய்க்கால்கரை ஓரமா நடந்து நாச்சியப்பன் வீட்டுக்கு ஏன் போனியாம்?''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். மார்பு படபடத்தது. உள்ளங்கைகள் வியர்த்துப் போயின. ஒரு உண்மையை தெரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டேன். போனேன்.''

''தனியாப் போனது தப்பில்லையா? அப்படியெல்லாம் இருட்டும் வேளையில் வாய்க்கா ஓரமா வளர்த்திருக்கும் புல்லும் புதரையும் தாண்டி நடந்தா ஏதாவது பூச்சி பொட்டு தீண்டிவிட்டிருந்தா?''

''அப்படி அதுகள் கடிச்சு நான் செத்துவிட்டிருந்தா உங்களுக்கு நிம்மதிதானே?''

''பைத்தியக்காரத்தனமா பேசாதே. உனக்கு ஏற்பட்ட இந்தக் காயங்களைப் பார்த்துட்டு அன்னிக்கு நான் பட்ட



கவலை, டாக்டர் தைரியம் சொல்லுறவரை எனக்கு கூண்டிலே உயிர் இல்லை. என்னைக் கண்டதும் நீ பயந்து கொண்டு ஏன் ஓடினே? அவசரமாக சேத்திலே ஓட முயன்றபோதுதான் வழுக்கி விழுந்து, மண்டையிலே லேசா அடிபட்டு உடம்பெல்லாம் சிராய்ப்பு காயமாகி விட்டது. ஆமாம் ஏன் அப்படி பயந்து ஓடினே?''

''அந்த பாவத்தை என் கண்ணாலே பார்க்க வேண்டாம்னுதான்.''

''என்ன உளருகிறே?''

''உண்மையைச் சொல்றேன்... சுகந்தி சங்கதிலே ஏமாத்தமடைஞ்சு போன நீங்க- அந்த மல்லிகாவோட...''

''சே! அபத்தம். யார் இப்படி கதை கட்டி உங்கிட்ட சொன்னது?''

''இந்தக் கதை பட்டணத்திலிருந்து வந்தது.''

''புரிகிறது. பட்டணத்தில் உங்க வீட்டுக் கல்யாணத்துக்கு பிறகு நீ மூஞ்சியை பரங்கிக்காய்போல வச்சுக்கொண்டு வந்ததின் காரணம் இதுதானா? யாரோ வம்புக்காரி எனக்கும் மல்லிகாவுக்கும் உறவு சேர்த்து கதை கட்டியிருக்கா. அதை நீ நம்பிக்கொண்டு துப்புத் துலக்க அந்த வீட்டுக்குப் போனியா? அவங்ககிட்ட எதுவும் தாறு மாறா நீ பேசலையே?''

''ஏன் பயமா இருக்கா, உங்களுக்கு?''

''ரம்யா! நீ படிச்ச பெண்- பட்டணத்துவாசி- பண்பா நடந்துக்குவேன்னுதான் நம்பினேன். இப்படி மட்டமா என்னை எடை போட்டுட்டியே. நாச்சியப்பன் நம்ப வீட்டிலே வெகுநாள் வேலை பார்த்தவன். கொடிக்கால் வெத்திலைக் கட்டுகளை மண்டிக்குக் கொண்டு சேர்க்கப் போனவன் விபத்திலே செத்துப் போனான். ஏதோ அப்போ ஒரு ஐயாயிரம் ரூபாய் அவன் குடும்பத்துக்கு அம்மா

கொடுத்து உதவினாங்க. ஆனால் அந்தப் பெரிய இழப்பை அந்தச் சிறு தொகையால நாம் ஈடு செய்துவிட முடியுமா?

''அம்மாதான் சொன்னாங்க, அந்த விதவையும் அவள் மகளும் அதே வீட்டில் தங்கியிருக்கட்டும். மாசம் செலவுக்கு ஏதாச்சும் கொடுத்துடு. எந்த பாவம் செய்தோ நான் படுக்கையில் விழுந்து கிடக்கேன். நாச்சியப்பன் சாவினால் இன்னும் எனக்குப் பாவம் வந்து குவிய வேணாம்னு வருத்தப்பட்டாங்க.

''அம்மாவின் வாக்கு எனக்குத் தெய்வ வாக்குப்போல, உதவி செய்துக்கிட்டிருக்கேன். அவங்க ரொம்ப நன்றி பாராட்டறாங்க. நம்ம தென்னந்தோப்புக்கு காவலா இருக்காங்க.''

''அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு. உதவி செய்து அவளுக்கு ஒரு வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கிறது நம்ப கடமை இல்லையா? நம்ப வீட்டுக்கு வேலை செய்து உயிரைப் பலி கொடுத்து விட்டான், நாச்சியப்பன். அவனது ஒரே மகள் நல்லா வாழ நாம் பொருள் உதவியாவது செய்ய வேண்டாமா? அம்மாவும் நானும் கலந்து ஆலோசித்து எடுத்த முடிவு இது.''

''அப்போ நீங்க அந்தப் பெண் மேலே...''

''பைத்தியம்... அந்தப் பெண் மேலே எனக்கு இரக்கம். ஐயோ பாவம் என்கிற தவிப்பு. மனிதாபிமானத்திலே உதித்த கருணை, அவ்வளவுதான். நான் அவர்களுக்குப் பணம் தந்து உதவுகிறது கிராமத்துப் பஞ்சாயத்துக்குத் தெரியும். எல்லோருக்கும் அதைப்பத்தி மகிழ்ச்சிதான். இந்தக் கிராமத்தில் அதை யாரும் தவறாக எண்ணியதே இல்லை. ஆனால், பட்டணத்தில் உள்ள உன் உறவுக்காரங்களுக்கு ரொம்பக் குறுகின புத்தி. ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு உதவினால் கட்டாயம் அங்கே ஒரு காரணம் இருக்கும். அந்தப் பெண்மேல் அவனுக்கு ஈர்ப்பு என்ற



கணிப்பு. மனிதாபிமானம் என்கிற உணர்வையே மறந்து விட்டவர் கள். பாவம்- யந்திரகதியில் வாழ்கிற அவங்ககிட்ட நாம் வேற எதை எதிர்பார்க்க முடியும்'' படபடவென்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்.

துக்கமும் வெட்கமும் தாளாது, ''இதெல்லாம் எனக்குத் தெரியாது'' என்று ரம்யா முனகினாள்.

''இன்னும் ஒண்ணும் உனக்குத் தெரியாது இல்லையா?''

''என்ன அது?''

''இந்த முரளி மனதில் ஒரு பெண் கொஞ்சம் கொஞ்சமாக வந்து நல்லா உறுதியா இடம் பிடிச்சுக் கொண்டுட்டாங்கிற சங்கதி.''

ரம்யாவின் மார்பு படபடத்தது. உண்மையாகவா சொல்கிறார்? ''புரியும்படி பேசக் கூடாதா... ரொம்ப குழப்புகிறீங்க.''

''குழப்புகிறது நீ. எனக்கு என் மனநிலை நன்றாகத் தெரிந்து விட்டிருக்கு. இந்த வீட்டுக்குள்ளே நீ வந்த பிறகு எனக்குள்ளே ஒரு திடீர் மாறுதலை நான் அனுபவிக்க ஆரம்பிச்சேன்.

''உன்னிடமிருந்து தூர விலகி இருந்து வாழ்ந்த நிலையில் கூட பட்டுக் காய்ந்து வரண்டு கிடந்த என் மனதில் அன்பு லேசாத் துளிர்விட ஆரம்பிச்சது. அது இப்போ எத்தனை பெரிசா வளர்ந்து விட்டிருக்குன்னு சொன்னா உனக்குப் புரியுமா?''...

''என் மனது தீவிரமாக உன்னை நேசிக்கத் தொடங்கி விட்டது. ஆனால் உன் மனநிலை எனக்குப் புரியலையே. ஏன் புரியலையாம்?... அப்படி நீ ஒட்டுதல் இல்லாம இருந்தே. ஆண்மகன்- கணவன் என்ற உரிமையில் என் அன்பை வற்புறுத்தி உன்னைப் பலவந்தமாக அணுக எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

''எத்தனயோ முறை பால் தம்ளரை பிடித்திருக்கும் உன் கையை தம்ளரோடு சேர்த்துப் பிடித்து உன்னை அருகில் இழுத்து அணைச்சுக்க வேண்டுமென்று மனம் துடிக்கும். அது பலவந்தமாச்சே என்று உள்மனம் சாடும். அப்பப்பா... ஆசை என்கிற நெருப்பிலே நான் வெந்து கருகி சாம்பலாகிக் கொண்டு தவித்தது- இன்னும் தவிக்கிறது உனக்குப் புரியுமா- புரியாதா?''

''அப்போ அவரும் என்னைப் போலவே அன்புக்கு ஏங்கி இருக்கிறார். என்ன அதிசயம்? இருவர் மனதிலும் ஒரே சமயம் அன்பு பொங்கிக் கொண்டு வளர்ந்திருக்கிறது. மனம் விட்டுப் பேசாத கொடுமையால் இப்படி விலகி வாழ்ந்து வாழ்வை நாசப்படுத்திக் கொண்டதுடன், அவரை வீணாகச் சந்தேகித்து என்ன காரியம் செய்து விட்டேன்.'' என்று நெஞ்சுருகிப் போனாள்.

''வளையல்கள் நல்லா இருக்குன்னு புகழும்போது, இவர் நம்ப கையைத் தொட்டு நல்லா இருக்குன்னு சொல்ல மாட்டாரான்னு நானும் நினைச்சு ஏங்கினதுண்டுன்னா நம்புகிறீங்களா? இத்தனை நாள் பிடிக்கப் பயந்த அந்தக் கையை இப்படிக் கொடுங்க'' கொஞ்சிக் கொண்டே அவனது கரத்தைப் பற்றி தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டாள்.

''ரம்யா இந்த உண்மையைத் தெரிஞ்சுக் கொண்டதும் என் மனம் எப்படி இருக்கு தெரியுமா?''

''எப்படி இருக்கு?''

''நெருப்பா எரிஞ்ச மனதிலே திடீர்ன்னு தென்றல் வீசினாப்போல இதமா இருக்கு. உண்மையில் என் வாழ்விலே நீ ஒரு தென்றல்.''

''உங்களை நான் ரொம்ப நேசிக்கிறேன்.''



''நானும் உன்னை ரொம்ப நேசிக்கத் தெரிஞ்சு கொண்டு விட்டேன். இங்கே பார்'' என்றபடி அவளது கரத்தைப் பற்றி இழுத்து மார்புடன் அவளை அணைத்துக் கொண்டு, அந்தப் பட்டுக் கன்னத்துடன் தன் கன்னத்தை வைத்துக் கொண்டு ''ரம்யா! என் மனதிலே நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்கு. நீ உண்மையிலே என் தென்றல்.''

கதவு லேசாகத் திறக்கப்பட்டது. மெட்டி ஓசை கேட்டதும் திடுக்கிட்டு நகர்ந்து கொண்டான் முரளி.

சின்ன அய்யா மடியில் சின்ன அம்மா சாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு வேலம்மாள் காபி தம்ளரை மேசை மேல் வைத்தாள்.

''கொஞ்சம் எழுந்திருக்க முடிஞ்சா, சின்னம்மாவை பெரியம்மா பார்க்க ஆசைப்படறாங்க. மெள்ள அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க.'' சுவற்றைப் பார்த்தபடி பேசிவிட்டு வேலம்மாள் வேகமாக வெளியே ஓடி விட்டாள்.

''அம்மா என்ன நினைச்சுக் கொண்டிருப்பாங்கன்னு என்னால் ஊகிக்க முடியும். அந்தக் கவலையில்தான் உன்னை உடனே பார்க்கணும்னு துடிக்கிறாங்க. நீ முழுகாதிருப்பதால்தான் மயக்கம் போட்டு விழுந்து விட்டேன்னு அம்மாவின் கணிப்பு. அப்பவே சொல்லிட்டேன். அவங்க ஆசையை பூர்த்தி செய்ய வேண்டியது உன் கடமை' மகிழ்ச்சியுடன் சிரித்தான்.

''போங்க... நீங்க பொல்லாதவர்'' செல்லமாகச் சிணுங்கியபடி, அவன் கைத்தாங்கலாக நடத்தி அழைத்துச் செல்ல, மாமியாரின் அறைக்குள் வந்து நின்றாள்.

''ஏம்மா... முழுகாமல் இருக்கிறதைப்பத்தி என்னிடம் ஒரு வார்த்தை சொல்லலையே?...'' மாமியார் கேட்டபோது திடுக்கிட்டு வெட்கி முகம் சிவந்து போனாள்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை'' ரம்யா தடுமாறியதைப் பார்த்து ரத்தினம்மா உரக்கச் சிரித்தாள்.

''எனக்குத் தெரியும்; ரகசியமா வைத்திருந்து எனக்கு வியப்பைக் கொடுக்கணும் என்கிறது உங்க திட்டம்.''

''இப்பவே சொல்லிட்டேன்- விழுந்து போன என் கை கால் கொஞ்சம் தெம்பாகிட்டு வரது. பேரன் பிறக்கிறதுக் குள்ளே நான் எழுந்து உட்கார்ந்துடுவேன். மடியில் அவனைப் போட்டுகிட்டு நான் கொஞ்ச வேண்டாமா?'' அவள் சிரித்தாள். கள்ளத்தனமாகக் கணவனைப் பார்த்து ரம்யா முறுவலித்து விட்டு, சன்னல் வழியே தோட்டத்தை நோக்கினாள். பாவாடை குலுங்க- தண்டை ஒலிக்க- பெண் குழந்தை ஒன்று ஒரு சிறுவனைப் புல்வெளியில் துரத்திப் பிடித்து விளையாடுவது போன்று ஒரு கற்பனை கண்களில் விரிய, ஆனந்தத்தில் மெய் சிலிர்த்து கண்ணீர் பனிக்க, பிரமித்துப் போனாள்.

அவளுக்கு எத்தனை அழகானதொரு வருங்காலம் பளிச்சென்று விடிந்து விட்டதே?...

■ ■ ■

# விடியாத இரவு

அந்த ஒருவார காலமுழுவதும் அலுவலகத்திலே ஒரு பெரும் மாறுதலை அவன் கவனிக்கத் தவறவில்லை. குற்றமுள்ளவன் மனம் குறுகுறுக்கும் என்று சொல்ல முடியாது. குற்றமற்றவன் அவன். மனசாட்சிக்கும்- கடவுளுக்கும் தெரிந்த உண்மை. ஆனால் சூழ்நிலையில் உள்ளவர்கள் கண்களுக்கு அவன் இப்பொழுது ஒரு குற்றவாளியாக நின்றான். இன்னும் நீதிபதி முன் அவன் போய் விசாரணைக் கூண்டில் நிற்கவில்லை. அதற்குச் சில நாட்கள் பிடிக்கும் என்று வக்கீல் சொன்னார். ஆனால் அதற்குள் அவனைச் சுற்றிலுள்ளவர் பார்வையாலும்- பேச்சாலும்- தமது செய்கையாலும் ஆளுக்கு ஒரு நீதிபதியாகி அவனை எப்படித் தண்டிக்கிறார்கள்?

நீதிமன்றத்தில் அந்தக் குற்றத்திற்கு அவன் ஒரே ஒருமுறைதான் தண்டிக்கப்படப் போகிறான்.

ஆனால் அலுலகத்திலேயே அவன் எத்தனைமுறை பார்வையால் தண்டிக்கப்பட்டான்... பேச்சால்... செய்கைகளால்... அப்பப்பா? ஆத்மராமன் சுபாவத்திலே மென்மையான உணர்வுகளுடையவன். அதனால்தானோ என்னவோ மனசாட்சிக்குப் பயந்து நல்லவனாக நடந்து கொண்டான்.

நல்லவர்களுக்குக் காலமில்லை! அம்மா சொல்வது எத்தனை பெரிய உண்மையாகப் போய்விட்டது?

'டாம்ஸெல் இன் டிஸ்டிரஸ்'- அதை பி.ஜி. உட்ஹவுஸா எழுதினார். ஆசிரியர் பெயர் நினைவில் இல்லை. கதை நினைவில் இருக்கிறது. அத்தனை துயரங்களுக் கிடையிலும், விரக்தியுடன் சிரிப்பு வந்தது அவனுக்கு.

ஃபைலை தொப்பென்று போட்டு விட்டு சுகந்தி ஏன் அப்படி ஓட வேண்டும்? இதே சுகந்தி, ஆரம்ப நட்களில், ''ஸார் உங்களுக்கு இந்த ஷர்ட் ரொம்பவும்நல்லா இருக்கு! உங்கம்மாகிட்டச் சொல்லி சுத்திப் போடச் சொல்லுங்க'' என்பாள். அடிக்கடி ஃபைலைப் பற்றிய சந்தேகங்கள் அவளுக்கு ஏற்பட்டு விடும். பலமுறை அவனது உதவியையே நாடி, மேஜையை விட்டு அகலாமல் அவனையே கொஞ்சலாக விழித்தபடி நிற்கும் சுகந்திக்கு இப்போது என்ன நேர்ந்தது?

புரிகிறது. பத்திரிகையில் வந்த அவனைப் பற்றிய அந்தச் செய்திக்குப் பிறகு, சுகந்தி அவனைத் திடீரென இப்போது விரோதியாகப் பாவிக்கிறாள்.

டெலிபோன் மணி கிணுகிணுத்தது. ''ஹலோ'' என்றதுமே, சன்னமான குரலில் சர்க்கரையாகக் குழைந்த ஷர்மிளா, வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்றபடி ''ஸார்! பரதன் அண்ட் கம்பெனியிலிருந்து ஃபோன்'' இரண்டே வார்த்தைகளில் முடித்து விட்டாள்.



இதே ஷர்மிளா, பல நாட்கள், ஒரு 'ஃபோன்' வரும் வாய்ப்புக் கிடைத்தால், அதைச் சாக்காக வைத்துக் கொண்டு, தனது தேன் குரலால் பசையாக ஒட்டிக் கொள்வாள்.

தனது குரல் ஒன்றினால், வாட்ட சாட்டமான அவனை வீழ்த்திவிட முடியும் என்ற அபார நம்பிக்கை அவளுக்கு!

இப்போது...? ஃபோன் வழியாக பூச்சாண்டி பிடித்து விடுவது போல, நடுங்குகிறாள்! பரதன் கம்பெனியாருடன் பேசி முடித்த பின், மேஜை மீது இருந்த அழைப்பு மணியை அழுத்தினான்.

ஆபீஸ் பையன் காளிமுத்து, அம்பாக வந்து நின்றான். ஆனால் முகத்தில் பழைய பணிவு இல்லை. குழைவு இல்லை. பற்களைக் காட்டிப் போடும் வழக்கமான கூழைக்கும்பிடுகூட இல்லை. மாறாக... ''என்ன ஸார் கூப்பிட்டீங்களா? ஏதாச்சும் வேணுமா?'' என்றான் கரகரத்த குரலில்.

ஏதாச்சும்! எதற்காக அழுத்தம் கொடுத்துப் பேசுகிறான்? அவன் கண்களில் ஏளனமும் உதட்டில் நமட்டுச் சிரிப்புமாக- சே! சே! நானே கற்பனை செய்து கொள்கிறேனா?

ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தான் அனந்தராமன்.

முகம் கழுவப் பின்னறைக்குப் போனபோது அந்தப் பக்கம் உள்ளே பேசிக் கொண்டிருந்தவர்களின் குரல் கணீரென்று கேட்டது நினைவுக்கு வந்தது.

''ஸ்கூட்டர் ரிப்பேராயிடுத்து?- பஸ்ஸில்தான் இன்னைக்குப் போகணும்''- மாதவன் குரல்...

''நீயும் சேலை கட்டிட்டு இருந்தா, ஜம்முனு கார்லே 'லிப்ட்' கிடைச்சிருக்கும். பிறகு பெரிய லிப்டா ஆயிப் போயிருக்கும்'' கொல்லென்று சிரிப்பு பரவியது.''

காதும் மூக்கும் சிவக்க, நெஞ்சு துடிக்க... உள்ளே போக அஞ்சியவனாக வெளியே வராந்தாவிலேயே நின்று விட்டான் அனந்தராமன்.

''ஆளைப் பார்த்தா இந்த பூனையும் பாலைக் குடிக்குதான்னு இருந்தானே?''... வியப்பானதொரு கேள்வி உள்ளே எழுந்தது.

''அதுக்குத்தான் சொல்றது... நல்ல குலத்துல-குடும்பத்திலே வளர்ந்தவங்களா இருக்கணுமின்னு. படிச்சுட்டா சரியாப் போச்சா... பாக்கி ரவுண்டு நல்லா இருக்க வேண்டாமா?''

மற்றொரு குரல்... அலுத்துக் கொண்டது.

''அதான் அப்படிப்பட்ட மிருகத்தன்மை மட்டும் வெளியே வந்திருக்கு...'' என்றது இன்னொரு குரல்.

தொடர்ந்து பீறிட்டெழுந்த சிரிப்பலைகள் அவன் காதுகளில் நாராசமாக விழுந்தன. முகத்தில் நெருப்பை வாரி வீசியது போன்ற உணர்வில்... அவமானத்தில் குன்றியவனாக... உடலெல்லாம் பற்றி எரியும் உணர்வில் முகம் கழுவாமலேயே தன் அறைக்குள் திரும்பி விட்டான்.

''என்ன வேணும் சார்?'' காளிமுத்துவின் குரலில் சிறிது அதட்டல் தெரிந்தது.

''தண்ணி கொண்டு வா'' காளிமுத்து மறுகணம் அலட்சியமாகக் கொணர்ந்து வைத்து விட்டுச் சென்ற தண்ணீர் டம்ளரை கையில் எடுத்தான்.

அந்தச் சம்பவத்தின் அதிர்ச்சிக்குப் பிறகு அவன் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தான். உள்ளமும் உடலும், நொந்து சோர்ந்து, அடிபட்ட பறவைபோல் தளர்ந்திருந்த நிலையில், பசி... தாகம் எதுவுமே உணர முடியாத நிலையில் இருந்தான்.



ஆனால் அம்மாதான் அவனை எவ்வளவு கனிவுடன் இதமாக ஆறுதல் வார்த்தைகளால் மாற்ற முயன்றாள்.

''யாராவது நமக்கு வேண்டியவா, செத்துப் போயிட்டாக்கூட செத்தவாளை வழியனுப்பிட்டு வரோம். பக்கத்தாத்துலே பொங்கி வச்சிருக்கிறதை வாங்கி வந்து சாப்பிடறோமே ஆத்மா! அது ஏன்? பசி வந்துட்டா பத்தும் பறந்து போயிடும்பா. என்ன செய்யலாம்? உடம்பை முதல்ல காப்பாத்திக்கோ, அப்புறம் அபவாதத்திலேயிருந்து உன்னைக் காப்பாத்திக்க வழி தேடலாம். சொன்னதைக் கேளுப்பா. வயித்துப் பசிக்காக, வேணுங்கிறதை சாப்பிடுப்பா'' கெஞ்சினாள்.

ஆத்மராமன், அன்ன ஆகாரத்தை ஏறிட்டுப் பார்க்கவும் மறுத்து விட்டிருந்தான். இனி அவன் எப்படி, பிறர் முன் தலை நிமிர்ந்து, ''நான் பரிசுத்தமானவன்'' என்று ருசுப்படுத்துவான். பிறர், அவன் மீது நம்பிக்கை கொண்டு, மதிப்பு தரும் அளவிற்கு பழைய நிலையை அடைவான்?

சில நாட்களாக, மனதினுள் புழுவாக அரித்துக் கொண்டு இருந்த துயரம், இப்போது பசியையும் தூண்டி குடலை முறுக்க ஆரம்பித்து விட்டிருந்தது.

காளிமுத்து கொணர்ந்த தண்ணீர் அவனது பசியைத் தணிக்க முடியவில்லைதான். கூடவே, மனதின் உளைச்சலையும் தூண்டி அவனை இருக்கவிடாமல் செய்து விட்டதென்னவோ உண்மை.

பிற்பகல் உணவு நேரம். மற்ற ஊழியர்கள் யாவரும் உணவைத் தேட, பறந்து விட்டிருந்தனர். அருகிலிருந்த ''பிரான்ஸிஸ் ஜோஸப்'' தெருவில் உள்ள ஓட்டல்கள் முழுவதும் இப்போது மனிதத் தலைகளாக நிரம்பி வழிந்து கொண்டிருக்கும்.

மேனேஜிங் டைரக்டர், எதிர்ப்பக்கம் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமது காரில் ஏறுவதை தன் அறை

ஜன்னல் வழியே பார்த்தான். ஓட்டலில் சாப்பிட்டு விட்டு நேராக, அம்பத்தூரிலுள்ள தமது தொழிற்சாலைக்குச் சென்று விடுவார். பிற்பகல், அலுவலகத்துப் பொறுப்பு முழுவதும் அவனுடைய கவனிப்பில் இருக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

பணிவும் அன்பும் குறைந்த ஊழியர்களிடமிருந்து இனி எந்தவிதமான ஒத்துழைப்பை அவன் எதிர்பார்க்க முடியும்?

இருபத்து நாலு மணி நேரத்திற்குள், ஒரு மனிதனுடைய வாழ்வில் இப்படி ஒரு திருப்பமா? அந்த இரவு விடியாமலே போயிருக்கக்கூடாதா?

''இந்த இரவு விடியாதோன்னு பயந்து போயிட்டேன்'' என்று அவனைப் பார்த்ததும், அம்மா தேம்பித் தேம்பி அழுதாள். ஆனால் அவனுக்கோ அந்த இரவு ஏன் விடிந்தது. ஏன்... ஏன்? மனதிற்குள் கேள்வியாகக் குடைந்து கொண்டே இருந்தது. இத்தனை முகங்களும் அவனை வக்கிரமாகப் பார்க்கவா பொழுது விடிந்தது?

பசி மீண்டும், அவனை உசுப்பியது. மெதுவாக இடத்தை விட்டு எழுந்தான். தயக்கமாக பிரான்ஸிஸ் ஜோசப் தெருவிற்குள் வழக்கம்போல நுழையும் 'ரஞ்சனா' ஓட்டலில் நுழைந்தான்.

சாப்பிடும்மேஜையருகில் அமர்ந்தபடி மனதிற்குத் தோன்றியதை ஆர்டர் செய்து விட்டு நிமிர்ந்தான்.

சற்றுத் தள்ளி எதிர்பக்கம் அன்றைய தினத் தாளை முகத்திற்கு நேராகப் பிடித்தபடி அக்கௌண்டண்ட் சுகுமாரனும் டெஸ்பாட்ச் குமாஸ்தா குருசாமியும், வேண்டுமென்றே அவன் வருவதைப் பார்த்து விட்டு மறைவாக உட்கார்ந்திருந்தனர்.

மேஜை மீது கொண்டு வைக்கப்பட்ட சப்பாத்தியும்-குருமாவும் அவனைப் பார்த்து விழித்தன.

''காப்பியா ஸார்?''



''உம் ஸ்ட்ராங்கா...'' என்றபடி சப்பாத்தியைக் கிழித்து குருமாவில் தோய்த்தான்.

''அட! இன்னொரு கற்பழிப்பு கேஸு கவனிச்சியா?'' சுகுமாரன் உரக்கப் பேசினான்.

''காலம் ரொம்பக் கெட்டுப்போச்சு, யாரை நம்பறது? யாரை நம்பக்கூடாதுன்னே தெரியல்லேப்பா'' குருசாமியும் ஒத்துப் பாடினான்.

ஆத்மராமனின் தொண்டைக்குள் சப்பாத்தி, முள்ளாகக் குத்திக் கொண்டது. யாரைச் சொல்கிறார்கள்? அடக்கடவுளே! இப்படியும் ஒரு இழி நிலையா? இப்படியும் ஒரு அபவாதமா?

ஆத்மராமன் பாதியிலேயே எழுந்தான். 'பில்' பணத்தைக் கொடுத்து விட்டு வெளியே வந்தான். உள்ளமும் உடலும் எரிச்சலாக எரிந்தன. ''பசி வந்திடப் பத்தும்பறக்க வில்லையே அம்மா. பதிலாக பசியைத் தணிக்கப் போய். பத்துப் பேர் வார்த்தைகளால் என்னைப் பறக்க விட்டாச்சம்மா.''

அலற வேண்டும்போல் ஆத்திரம் முட்டியது.

மூச்சு திணற, வேகமாக ஆபீஸ் அறைக்குள் சென்றவன் நேராக டெலிபோன் ரிசீவரைக் கையில் எடுத்தான்.

மானேஜிங் டைரக்டர் அறைக்குள் காலையில் ஒரு 'டிஸ்கஷனி'ல் இருந்த சமயம் சங்கீதா போனில் அவனைக் கூப்பிட்டு விட்டிருந்தாள்.

திரும்பி வந்தபோது பார்த்தான். மேஜை மீது சங்கீதா அவனை 'போனில்' பேசச் சொல்லியிருந்த செய்திக் குறிப்பு இருந்தது. ஆனால் அப்போதிருந்த அவசரத்திலும் அலுவலக வேலைகளிடையேயும் அவனுக்கு நேரம் இருக்க வில்லை.

இப்போது, மற்றவர் தொல்லை இல்லாத வேளை... சங்கீதாவிடம் நிறையப் பேசலாம். மனம் விட்டு அவளிடம் அவனது மனதில் அழுத்திக் கொண்டிருக்கும் துயரை எடுத்துக்கூறி ஆறுதல் பெறலாம். சங்கீதா நிச்சயமாக அவனுக்கு மென்மையாக அவன் மனப்புண் ஆறும் வகையில் சமாதானம் கூறுவாள். அவனுடைய சங்கீதா அவனைக் கைவிடமாட்டாள்.

டெலிபோன் எண்களைச் சுழற்றினான். மனதில் சிறிது அமைதி. மறுமுனையில் கேட்ட குரல் அவளுடையது அல்ல.

''ஹலோ, யார் வேணும்?''

''நீங்க யார் பேசறது? சங்கீதா இல்லையா?''

''நீங்க யாரு?'' அதட்டலாகக் கேட்டது மறுமுனைக் குரல். சங்கீதா மன்னியாக இருக்கலாம்.

''நான் ஆத்மராமன் பேசுகிறேன்.''

''எந்த ஆத்மராமன். எத்தனையோ ஆத்மராமன்கள் இருக்கிறார்களே'' குரலில் குத்தல் தெரிந்தது.

எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டான். ''ஜகதீஷ் பிளாஸ்டிக் ஒர்க்ஸ்... ஆத்மராமன் பேசுகிறேன். சங்கீதாவோட பேசனும்.''

''அப்படியா! சங்கீதா ஊர்லே இல்லை. பெங்களூர் போயிருக்கா'' தொடர்பு வெடுக்கென துண்டிக்கப்பட்டது.

முகத்தில் அடித்தது போன்ற வலி. ஆத்மராமன் துடித்துப் போனான். பற்களைக் கடித்துக் கொண்டான். சங்கீதாதான் அவனைப் போனில் பேசும்படிச் செய்தி விடுத்தாள் என்று கூற முடியவில்லை அவனால். ஊரிலேயே இருக்கும் சங்கீதாவை அவனது மன்னி பெங்களூருக்கு மூட்டை கட்டி அனுப்பும் அளவிற்கு, அவன் கசந்து போய் விட்டானா?



அவனிடம் குழைந்து குழைந்து பேசும் சங்கீதாவின் மன்னி ஜெயாவின் குரலில் மட்டும்தானா கடுமை? அவளது அண்ணன் ராமசாமியின் முகத்தில் எத்தனை கொடூரம் குடி கொண்டிருந்தது.

அந்தத் துயரக் கேடான சம்பவத்திற்கு மறுநாள் சங்கீதாவைத் தேடி அவன் போனபோது...?

முன்புற வாயில் கேட்டருகில் நின்றவன், ஒரு விநாடி தயங்கினான். ஏனெனில் வீட்டின் வெளி வராந்தாப் பகுதியிலிருந்து அவனைக் கண்டதும் ராமசாமி வேகமாக ஓடி வந்தான். அவனைத் தொடர்ந்து இரண்டு அல்சேஷியன் நாய்களும் வந்தன.

வீட்டு எஜமானைத் தவிர வேறு எவரையுமே மதிக்கத் தெரியாத நன்றியுள்ள பிராணிகள் அவை. இரண்டும் தங்களது பயங்கர உறுமல்களுடன் அவனை நோக்கிப் பற்களைக் காட்டின.

எஜமானன் அவைகளுக்குச் சளைத்தவனல்ல என்று காட்டுவதைப்போல ராமசாமி கண்களால் அவனை வெறித்தான்.

''எங்கே வந்தே?''

''சங்கீதாவைப் பார்க்க.''

''எந்த மூஞ்சியை வெச்சிண்டு என் தங்கையைப் பார்க்க வந்தே? வெக்கமா இல்லே- ஐ ஸே கெட் அவுட்'' உறுமினான்.

அதற்குமேல் அவமானம் தாளாதவனாய், முகம் சிறுத்துப் போய், உடலெல்லாம் சுருங்கிப்போன உணர்வில் வீடு திரும்பியதை இப்போது நினைத்தாலும் பதை பதைக்கிறதே அவன் நெஞ்சம்.

''சங்கீதா! உன்னை நான் நேராகப் பார்க்க முடியாதா? உன்னிடம் உண்மையாக நடந்ததைச் சொல்லி ஆறுதல் பெற

முடியாதா? இந்த உலகமே என்னைத் தன் காலடியில் போட்டு நசுக்கட்டும். அதைப்பற்றித் துளியும் நான் கவலைப்படமாட்டேன். ஆனால், நீ... நீ மட்டும் ஒரே ஒரு வார்த்தை சொல்லு. அந்த ஆறுதல் எனக்குப் போதும்'' மனம் புலம்பித் தவித்தது.

சங்கீதா விரும்பினாலும் அவளை அவளது அண்ணன் அனுமதிக்க மாட்டார். ஏனெனில் அவர்களது காதல் அங்கீகரிக்கப்படுவதற்குள் எத்தனை சிரமங்கள், எத்தனை முட்டுக்கட்டைகள்...?

ராமசாமியின் அந்தஸ்திற்கு ஏற்றவனாக ஆத்மராமன் இருக்கவில்லை என்ற முதற் காரணமே அவர்களது காதலுக்கு முதல் தடையாக இருந்தது.

தனது ஒரே தங்கைக்கு ஏற்றபடி மிக உயர்ந்த இடத்தில் சம அந்தஸ்து உள்ள வாலிபனை மணமகனாகத் தேர்ந்தெடுக்க அவன் முயன்று கொண்டிருந்த சமயம், ஆத்மராமன் அவளது காதலனாகத் தோன்றியது அவனுக்கு மிகுந்த ஆத்திரத்தை ஊட்டியதில் சந்தேகமில்லை. அப்போது பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல மிகுந்த திருப்தியுடன் ராமசாமி இந்த சம்பந்தத்தைத் துண்டிக்கத் தயாராக இருப்பதில் வியப்பில்லையே.

ஆத்மராமன் கண்கள் பனித்தன. அவன் யாருக்கு என்ன தீங்கு செய்தான்? உண்மையான உழைப்பால் உயர்ந்த ஒரு மனிதன், உண்மையான அன்பால் உறவை நாடிய மனிதன், அவனுக்கேன் இப்படி ஒரு இழிவான நிலை?

பிறருக்கு உதவப் போன அவனுக்கேன் இப்படி ஒரு பரிதாபமான முடிவு? மனம் ஊளையிட்டது. உணர்வுகள் உள்ளே பொங்கி எழுந்தன. அடிவயிற்றில் கசப்பு சுருட்டி இழுத்தது.

மனித சமுதாயத்தின் மீதே அவனுக்குக் காரணமில்லாக் கோபம் பிறிட்டது. அத்தனைபேரும் சந்தர்ப்ப சாட்சியம்



பேசுபவர்களா? 'காதால் கேட்டதும் பொய், கண்ணால் கண்டதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' என்ற விவேகம் அவர்களுக்கு ஏன் ஏற்படவில்லை?

ஆபீஸ் முடியும் நேரம் நெருங்கியதை உணர்த்துவது போல இதர ஊழியர்கள் பரபரப்புடன் புறப்படத்தயாராகிக் கொண்டிருந்தனர். அதுவரை இயந்திரம் போல் வேலை செய்தபடி இருந்த ஆத்மராமன் தனது அறையை விட்டு வெளியே வந்தான்.

இனி, வீட்டிற்குப் போய் விட்டால் மட்டும் அவன் மனச்சுமை குறையப் போகிறதா? பாவம் அம்மா அவன் மனம் மாறி பழையபடி ஆகிவிட வேண்டும் என்று என்னவெல்லாம் கூறி உபசரிக்கிறாள்.

## 2

மந்தைவெளியிலுள்ள சுப்பையா காலனிக்குள், அவனது கார் நுழைந்தபோது அம்மா ஆவலாக எட்டிப் பார்த்தாள். கம்பெனிக் கார், வீடு என்று மனம் மகிழ்ந்து போயிருந்த அம்மா முன்புறமிருந்த பத்தடி மண்ணில் ஒரு பசுமை புரட்சியே நடத்தி விட்டிருந்தாள்.

அடிநாளில் சரியான வீடும், வாசலும், இல்லாமல் வாழ்ந்த சிரமத்தின் எதிரொலி அவள் வளர்ந்து வந்த தோட்டம்.

மகனது வரவிற்காக வாயிற்புறக் கேட்டைத் திறந்து வைத்திருந்தாள். காரை உள்ளே கொணர்ந்து வீட்டின் கராஜில் நிறுத்திப் பூட்டியவன் உள்பக்கம் விரைந்து சென்றான்.

''கைகால் அலம்பிண்டு வா, வெஜிடபிள் உப்புமாவும் சட்னியும் செஞ்சிருக்கேன்... சுடச்சுட சாப்பிடு'' அருமையாக உபசரித்தாள்.

ஆபீஸ் உடையை மாற்றி முகம் கழுவி விட்டு சமயலறைப் பக்கம் வந்தான் ஆத்மராமன். விஜிடபிள் உப்புமாவும் சட்டினியும் அவனுக்கு விஷமாகக் கசந்தன.

''ராத்திரிக்கு என்ன சமைக்கட்டும்'' அம்மா கனிவுடன் கேட்டாள். மகனது முகத்தில் தோன்றிய கவலையும் சோர்வும் அந்தத் தாயுள்ளத்தைப் படாதபாடு படுத்தி இருக்க வேண்டும்.

''ஏதாவது செய்யேன்'' சூள் கொட்டியபடி எழுந்தான் அவன்.

''அப்படிச் சொல்லாதே ஆத்மா. உனக்கு வாய்க்குப் பிடிச்சதை செஞ்சு போடத்தானே நான் இருக்கேன்.''

''வாய்க்கு வந்தபடி ஊரெல்லாம் பேசுகிறார்களே, இங்கே வாய்க்குப் பிடித்ததை எப்படி என்னால் சாப்பிட முடியும் அம்மா... கத்த வேண்டும்போல தோன்றியது அவனுக்கு. சிரமத்துடன் அடக்கியபடி அம்மாவைப் பார்த்தான்.''

''வீணாக மனசைப் போட்டுப் பிச்சுக்காதே ஆத்மா. நான் சொல்றதைக் கேளு. பாபா கோவில் வரைக்கும் போய்ட்டு வரேனப்பா. உனக்காக நான் அவர்கிட்ட வேண்டிக்கிறேன். கட்டாயம் அவர் நம்மை கைவிடமாட்டார்.'' அவள் குரல் உணர்ச்சிவசத்தால் தடுமாறியது.

ஆத்மராமன் பதில் பேசவில்லை.

''ராத்திரிக்குச் சுடச்சுட வத்தக் குழம்பு வச்சு அப்பளம் பொரிச்சுடறேன் என்ன'' அம்மா கேட்டபடியே கோவிலுக்குப் புறப்பட்டாள்.

ஆத்மராமன் தலையை மட்டும் ஆட்டி வைத்தான். மனதினுள் கொதித்த வெறுப்பில் 'வத்தக் குழம்பை நீங்கதான் சாப்பிடப் போறேள். என்னோட நேரத்தை வீணடிக்காதீங்கோ'' என்று அலறத் தோன்றியது.



அம்மா போனதும் வாயிற் கதவை மூடிவிட்டு உள்ளே வந்தமர்ந்தான். மனம் பரபரப்பாகச் செயல்பட்டது.

போலீசிற்கு ஒரு கடிதம். ''எனது இந்த முடிவிற்கு எவரும் பொறுப்பாளியல்ல. நானே எனது முடிவை தேடிக் கொள்கிறேன்.''

அம்மாவிற்கு மற்றொரு கடிதம்.

அம்மா,

என்னை நல்லதொரு மனிதனாக்க நீங்கள் எத்தனையோ பாடுபட்டீர்கள். ஆளாக்கினீர்கள். ஆனால், நான் நல்லவன்தான் என்று இப்போது என்னைச் சுற்றியுள்ள சமூகம் ஏற்க மறுக்கிறது.

உங்களை அநாதரவாக விட்டுப் போவதாக நினைக்காதீர் கள். பாங்கில் சிறிது பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். அதை உங்கள் காலம் முழுவதும் வைத்துக் கொள்ளுங்கள். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களை அநாதரவாக விட்டுச் செல்லும்,

துரதிருஷ்டம் பிடித்த மகன்

ஆத்மராமன்.

அம்மாவிற்குக் கடிதத்தை கண்ணில்படும்படி மேஜையின் மீது வைத்தான். போலீஸ் கடிதத்தை ஷர்ட் பையில் பத்திரப்படுத்தியபடி வெளியே வந்தான். கதவை பழையபடியே மூடி வைத்து விட்டு தெருவில் இறங்கியதும் 'சில்'லென்ற குளிர்காற்று அவன் முகத்தில் அடித்தது.

தெரு விளக்குகள் இன்னும் எரிய ஆரம்பிக்கவில்லை. மாலைப்பொழுதின் மங்கலான வெளிச்சத்தில், அவன் மனமும் சோர்ந்திருந்தது.

தெருமுனையைக் கடந்து, ஸாந்தோம் நெடுஞ்சாலை மீது வந்தவன் கண்களில் அந்தக் கடைசி ஊர்வலக் கோஷ்டி பட்டது.

தாரையும், தப்பட்டையும், சேமக்கலமுமாக, நான்கு பேர் சுமக்க பூத உடலை நீத்த ஒரு உயிர் பூப்பல்லக்கில் பயணித்துப் போய்க்கொண்டிருந்தது.

ஆத்மராமன் ஒருகணம் உடலைச் சிலிர்த்துக் கொண்டான். இன்னும் சற்று நேரத்தில் அவனது பூத உடலும்... இதே போல... தவறு... இந்த வித ஓசைகளும், அலங்காரங்களும், ஆரவாரமும் இல்லாமல், கடற்கரையில் ஒதுங்கிக் கிடக்கும்.

பத்திரிகைகளில், கொட்டை எழுத்துக்களில் அவனது சடலத்தைப் பற்றிய செய்தி வரும். சட்டைப் பையில் அவன் எழுதி வைத்திருந்த கடிதம் பிரசுரிக்கப்படும்.

ஆத்மராமன், வேகமாக நடந்தான். சவயாத்திரை கோஷ்டி கண்ணிலிருந்து மறைந்து விட்டதும், அவனுக்குள்ளேயே சிரிப்பும் வந்தது.

செத்த பிறகு, யார் என்ன செய்தால் என்ன? பத்திரிகையில் செய்தி வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? ஆனால் ஒரு நிம்மதி, எதுவுமே தெரியாத யாருடைய சுடுசொற்களும், பார்வைகளும் பாதிக்காத ஓர் உலகத்திற்கு அவன் போய்விடுவான். அவ்வளவே.

பெருமூச்சுடன் நின்றான். அகில இந்திய ரேடியோ கட்டடத்தின் எதிர்ப்புறமுள்ள கடற்கரை ஓரத்தில் அவன் வந்து விட்டிருந்தான்.

நடைபாதையை விட்டு, இறங்கி, மணலில் கால்கள் புதையப் புதைய நடந்தவன் திடீரென சிரிப்பொலி கேட்டு சட்டெனத் திரும்பிப் பார்த்தான்.

இளம்ஜோடி ஒன்று உலகை மறந்து சிரித்தபடி, பேச்சுக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

இருபது வயது இளம் மங்கை, தன் வரிசைப் பற்கள் தெரிய அவன் மீது சாய்ந்தபடி எதையோ, சொல்லிக் கிளுகிளுத்துக் கொண்டிருந்தாள். அவள் அருகில் உலகையே மறந்த மந்தகாசப் புன்னகையுடன் அந்த இளைஞன்-



ஆத்மராமன் ஒரு விநாடி நின்றான். இப்படித்தான் அவனும் சங்கீதாவும் எத்தனையோ நாட்கள் கடற்கரை மணலில் அமர்ந்து உலகையே மறந்திருக்கிறார்கள். வருங்காலத்தைப் பற்றி பேசி மகிழ்ந்திருக்கிறார்கள்.

இப்போது அவனைப் பொறுத்த மட்டில் வருங்காலம் சூன்யமாகி விட்டது. ஆனால் சங்கீதா என்ன செய்வாள்?

இவன் போய்விட்டான் என்று தெரிந்ததுமே அவள் மனம் ஒடிந்து போய் விடுவாளா? போகலாம். அதற்காக, வாழ்நாள் முழுவதும் சந்நியாசியாக வாழ்ந்துவிட முடியுமா? அவளுக்கும் வாழ உரிமை உண்டு.

இப்போது பொய்யாகப் பெங்களூருக்கு அனுப்பிய அண்ணா ராமசாமி, அவளை உண்மையாகவே அனுப்பி வைக்கலாம். அல்லது காஷ்மீர், கொடைக்கானல் என்று மன மாற்றத்திற்கு என அனுப்பி வைத்து, அவள் என்னைப் பற்றிய எண்ணங்களை மறந்து போன பிறகு, திரும்பக் கூட்டி வரலாம்.

காலம் என்பது மறதிக்கு மாபெரும் மருந்து என்பார்களே, எப்பேர்ப்பட்ட துயரையும் அது மெல்ல, மெல்ல மறக்கச் செய்யும் என்பார்களே, அதுபோல் சங்கீதாவும், தன் துயரை மெல்ல மறந்து, வேறு ஒருவரை மனமார விரும்பலாமே. அதில் தவறு எதுவும் இல்லை. மனிதராகப் பிறந்த எவருக்கும், வாழ்வதற்கு உரிமை உண்டு. அதைத் தடை செய்ய யாருக்கும் தகுதி கிடையாது.

சங்கீதாவாக, வேறு ஒரு காதலனைத் தேர்ந்தெடுக்கா விட்டால்தான் என்ன? ராமசாமியே, முன்வந்து, தங்கள் தகுதிக்கேற்ற உயர்மட்டத்து வாலிபனைத் தேர்ந்தெடுத்து அவளுக்கு மண முடித்து வைத்து விடுவார்.

பிறகு... பிறகு, இதே கடற்கரையில் சங்கீதாவும் அவளது கணவனும் வந்து அமர்ந்து கதை பேசிக் களித்துக் கொண்டிருப்பார்கள்.

திடீரென நாயின் குரைப்பொலி கேட்டது. ஆத்மராமன் அலைகடல் ஓரத்தை உற்றுப் பார்த்தான்.

கடற்கரை ஓரத்தில், நாயுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன், தன் கையிலிருந்த பந்தை குதூகலமாக விட்டெறிந்து கொண்டிருந்தான். அலைகள் ஏந்திச் சென்ற பந்தை, தாவிச் சென்று வாயில் கவ்விக் கொண்டு ஓடிவந்த நாயைக் கண்டு, கைதட்டி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தான் சிறுவன்.

சட்டென நாயின் குறி தவறிய பந்து, அலைகளின் வீச்சினால் கரையோரத்தில் வீசி எறியப்பட்டு ஒதுங்கியது.

''இதேபோல, இதேபோல எனது உடலும் இன்னும் சற்று நேரத்தில் ஒதுங்கும்...'' நினைத்தபடி மேலே நடந்தான் அவன்.

ஒரு காலத்தில் தனக்கு நீச்சல் தெரியாது என்ற குறை அவனுக்கு இருந்தது என்னவோ உண்மை. இப்போது அதே குறையே அவனுக்கு நிறைவாக, கை கொடுத்தது. ''நீச்சல் தெரியாதவன் நீரில் இறங்கி விட்டால்...?''

தற்கொலை முயற்சிக்குத் தண்ணீரைவிடச் சிறந்த வழி எதுவும் இல்லை என்று யாரோ கூறியது நினைவில் வந்தது. மாத்திரைகள், கயிறு, விஷம் என்பவற்றைவிட இது மிகச் சிறந்தது. ஒருமுறை மூக்கில் தண்ணீர் ஏறி விட்டால் பிறகு...

இருட்ட ஆரம்பித்தது. பையில் கடிதம் இருக்கிறதா எனத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். சுற்று முற்றும் ஆட்கள் நடமாட்டம் குறைவதைப் பார்த்தபடி, மெதுவாக நடந்து சற்றுத் தள்ளி நின்றான்.



இருட்டில் இனி நிற்பது நல்லதல்ல என்பதைப் போலக் கூட்டம் அலைந்து கொண்டிருந்தது. இருட்டில் நிற்பதுதான் நல்லது என்று ஆத்மராமன் நின்று கொண்டிருந்தான்.

மேலே வானத்தில் கருங்கும்மென்று இருள் கருநீல மாகப் பந்தல் விரித்தது. கீழே அவன் மனதைப் போலக் கொந்தளிக்கும் கடல். இனி தாமதிக்கக்கூடாது. கடற்கரைப் பகுதி விளக்குகள் பளிச்சென எரிய ஆரம்பித்து விட்டன.

''ஐயா! சாமி! எங்கப்பா...'' கிழவி ஒருத்தி அலறியபடி அவன் காலடியில் பொத்தென விழுந்தாள்.

சட்டென அதிர்ந்து போனான் அவன். கையிலிருந்த ஊன்றுகோல் மணலில் சிக்கி நிலைதடுமாறி விழுந்து கிடந்தாள் ஒரு பிச்சைக்காரக் கிழவி.

அவனது உபகாரச் சிந்தை தன்னிச்சையாக முன் வந்து குனிந்து பரபரப்புடன் கிழவியைத் தூக்கி நிறுத்தினான். கீழே கிடந்த கம்பை எடுத்துக் கையில் கொடுத்தான்.

''ஏன் பாட்டி அலையோரத்துக்கு வந்து விட்டீங்களே...'' என்றான்.

''கண்ணு தெரியலேப்பா, யாரும் உதவி செய்யலே. நானே தட்டுத் தடுமாறிக்கிட்டு இங்கே வந்திட்டேன்'' அழுகையுடன் பேசினாள் கிழவி.

''வாங்க, சாலைப்பக்கம் உங்களை கொண்டு விடறேன்'' ஆத்மராமன் தனது தீர்மானங்களை மறந்தான். அந்த வயதான மாதை மெல்லப் பிடித்துக் கடற்கரை நடைபாதை மீது கொணர்ந்து விட்டான். நடைபாதை மீது எரிந்து கொண்டிருந்த தெரு விளக்கு பிரகாசமாக கிழவி முகத்தில் விளையாடியது.

''யார் பெத்த புள்ளையோ நீ நல்லா இருக்கணும்பா. எத்தனைப் பேருக்கு நான் செஞ்சேன். இப்ப எனக்குன்னு

இந்த வயசான காலத்திலே செய்ய யாரும் இல்லைப்பா'' கிழவி புலம்பினாள்.

''பாவம்'' ஆத்மராமன் அனுதாபம் தெரிவித்தான்.

''எனக்குன்னு சொந்த பந்தம் யாருமே இல்லைப்பா'' இருக்கறதையெல்லாம் விட்டுவிட்டு, இப்படி அலையறேன்.

ஆத்மராமன் பொட்டில் ஓங்கி யாரோ அறைந்தது போன்ற உணர்வு. அவன் தாயாருக்கு என்று அருமைப் பிள்ளையாகப் பிறந்த அவன் என்ன செய்ய இருந்தான்?

அவனது தாயும் இதேபோல் வயதான காலத்தில் தெருத் தெருவாக சே! சே! எப்படிப்பட்ட கிராதகன், சுய நலக்காரன், கோழை அவன்?

''என்னைக் கரையேத்தி விட்டுடுப்பா'' என்று அம்மா அடிக்கடி அவனிடம் சொல்வாளே. அதற்குப் பதிலாக தனது சடலத்தைக் கரையேற்றப் பார்த்த கோழையாக வல்லவா மாறி விட்டான்?

''நீ மகாராசனா இருப்பா'' கிழவி ஆசீர்வதித்ததும் அவசரமாக பையில் கையை விட்டான் அவன். பையில் எப்போதோ போட்டு வைத்திருந்த ஒரு ஐந்து ரூபாய் நோட்டு சிக்கியது.

கிழவி கையில் நோட்டை வைத்து ''நல்லா சாப்பிடுங்க பாட்டி'' என்றவன் அவள் பிரமிப்புடன் நிற்பதைப் பொருட்படுத்தாமல் வேகமாக, வீட்டை நோக்கி நடந்தான்.

''வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உயர்ந்த தத்துவத்தை உணர்த்திய அந்த கிழவிக்கு ஐந்து என்ன, ஐந்து கோடி கூடத் தரலாமே!

வீடு திரும்பிய வேகத்தில் அம்மாவிற்கு எழுதி வைத்த கடிதம் நினைவில் சுழன்றது. அம்மா பார்த்திருப்பாளோ



இல்லை, இன்னமும் கோவிலிலிருந்து வீடு திரும்பாமல் இருந்திருப்பாளோ?

வீட்டின் வாயிற் கதவு திறந்திருந்தது. அம்மா திரும்பி விட்டாள். படபடக்கும் இதயத்துடன் உள்ளே நுழைந்தான் அவன்.

காலடியோசையைக் கேட்ட அம்மா, ஓடி வந்தாள். கண்கள் கோவைப் பழமெனச் சிவந்திருந்தன.

''ஆத்மா!'' பேச முடியாதபடி சொற்கள் சிதறின. உதடுகள் துடித்தன.

''கடுதாசைப் படிச்சேளா?'' கண்கள் கலங்கின அவனுக்கு.

''ஆத்மா! என்ன காரியம் செய்ய இருந்தேடா! கடுதாசைப் படிச்சேன். அப்படியே அந்த பாபா காலடியில் வச்சேன். என் பிள்ளையைக் காப்பாத்து காப்பாத்துன்னு கதறிண்டே இருந்தேன்டா ஆத்மா! உனக்கு எப்படிடா இப்படி ஒரு புத்தி தோணித்து? இந்த அம்மாவை விட்டுப் போக உனக்கு எப்படி மனசு வந்தது'' 'ஓ' வென்றலறியபடி, மகனை அணைத்தபடி கதறினாள் தாய்.

சிறு குழந்தையைப்போல் ஆத்மராமன் தேம்பினான். ''அம்மா! அம்மா! இனிமே உங்களை விட்டுப் போகவே மாட்டேன்.''

''எனக்குத் தெரியும். அந்த பாபா ஒரு நாளும் என்னை அனாதையா விடமாட்டார். எனக்குத் தெரியும். என் பிள்ளை என்னை கைவிடமாட்டான்'' திரும்ப திரும்ப அம்மா புலம்பியபோது, கடற்கரையில் தோன்றித் தன்னைத் தடுத்தாட்கொண்டது பாட்டியல்ல. பாபாவே என மெய்சிலிர்த்துப் போனான் ஆத்மராமன். விடி விளக்கின் மெல்லிய ஒளியில் தன் அறைக் கட்டிலின் மீது புரண்டபடி தலையைத் தூக்கிப் பார்த்தான் ஆத்மராமன்.

அவன் தன் தாய்க்கு ஒரு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்து விட்டான் என்ற உண்மை புலனாகியது.

கடவுள் காப்பாற்றுவார்... என்று தீவிரமாக நம்பிய போதிலும் தானும் ஓரளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறவள்போல பார்வதி அவனது எதிரே வாயிற்படி ஓரத்தில் நடைமீது பாயை விரித்துக் கொண்டு படுத்திருந்தாள். நாள் முழுவதும் செய்த வேலையின் அலுப்பு- வயது- சமீப காலமாக அவளைத் தொந்திரவு செய்து வந்த சில்லரை நோய்களின் உபாதைகள்- மகனின் கடிதம் மாபெரும் அதிர்ச்சி எல்லாம் அவளை ஒட்டு மொத்தமாக குலுக்கி எடுத்து விட்டிருந்தன. அவள் ஒரு சிறு புழு போல் பரிதாபமாக பாய்மீது சுருண்டபடி ஆழ்ந்த உறக்கத்திலே கிடந்தாள்.

வாஞ்சையும் அனுதாபமுமாக அவன் தன் தாயை ஊன்றிப் பார்த்தான்.

# 3

அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவன் தன் தாயை விதவைக் கோலத்தில்தான் பார்த்திருக்கிறான். நெற்றியில் திருநீற்றுக் கீற்று, வெள்ளை ரவிக்கை அழுக்குத் தெரியாதிருக்க ஆழ்ந்த வண்ணத்தில் நூல் சேலை- காதுகளில் சிவப்புத் தோடு... வெறுமையான கைகள்- கழுத்து... தனது அடர்ந்திருந்த கூந்தலை முடிச்சிட்டுக் கொண்டிருப்பாள். எளிமையான தோற்றத்தில்கூட அவள் பொம்மைபோல அழகாக பழையதொரு நூல் சேலை யில்கூடப் பளிச்சென்று தெரிவாள்.

வறுமை, ஓயாத உழைப்பு... அவனை நல்லபடியாக வளர்த்து ஆளாக்க வேண்டுமென்ற பொறுப்பு இவை எல்லாம் அவளது இளமையைக் குடித்து விட்டிருந்த



போதிலும் அழகு முழுவதையும் அழிக்க முடியவில்லை. வாடிப்போன மல்லிகை மாலை போல சுருண்டு கிடந்த அவள் முகத்திலே... காலம் விரித்த திரைகளைத் தாண்டி... இன்னமும் அந்த நாளின் அழகின் சாயல் இங்குமங்கும் பளிச்சிட்டது.

அவர்கள் பொருளாதார நிலையில் அடிமட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவன் தாத்தா கல்யாணக் காலங்களில் சமையல் செய்து உதவும் சமையல் கோஷ்டியில் ஓர் ஆளாக நீண்ட காலம் உழைத்துக் கொண்டிருந்தவர். அடிக்கடி தமது வேலை நிமித்தம் நகரத்தின் பல பகுதிகளுக்குப் போக வேண்டியிருந்ததால் தமது மகளைத் தன்னந்தனியே வீட்டில் விட்டுவிட்டுப் போகப் பயந்து அவளையும் ஒரு இடத்தில் வேலைக்கு அமர்த்தி விட்டிருந்தார். கிராமத்தில் வசித்தபோது தெரிந்த குடும்பம் அது. இப்போது தொழில் மூலம் வெகுவாக முன்னுக்கு வந்து பங்களாவும் காருமாக ஓகோவென்று வாழ்ந்தவர்கள். ஆனாலும் அண்டை அயலா ரையும்... அன்று வாழ்ந்த நிலையையும் அவர்கள் மறக்க வில்லை. அந்தக் குடும்பத்தின் தலைவி... ஞானாம்பாள் மிகவும் பொறுப்பானவள்- பொறுமை யானவள். இரக்க மிக்கவள். ''வைத்தி! பயப்படாதே... உன் பேரனையும் உன் பொண்ணையும் எங்க வீட்டிலே தாராள மாக விட்டுட்டுப் போகலாம். எனக்கு முன்போல தள்ளரதில்லே. அதனாலே பார்வதி கையிலே ஸ்டோர் ரூமையும் சமையற்கட்டையும் ஒப்படைச்சுடறேன்... குழந்தை ஆத்மன் ... யார்? அவனும் நம்மாத்துக் குழந்தை களில் ஒருத்தனாக இருந்துட்டுப் போகட்டும்'' அபயம் அளித்தாள்.

ஞானாம்பாள் வீட்டில் சமையற்காரியிலிருந்து சகல வேலைகளையும் மேற்கொண்டு ஓயாது உழைத்தாள். ஆரம்ப காலத்தில் சாப்பாடும்- தங்க இடமும் வருடத்திற்கு இரண்டு புடவைகளும், குழந்தைக்குச் சட்டைத்

துணிமணிகளும்... பள்ளிப் படிப்புக்கும் உதவியதால் சம்பளம் என்று எதுவும் தரவில்லை. சில ஆண்டுகளுக்குப் பின்னர்... ஞானாம்பாளுக்குப் பேத்தி பேரன் என்று குடும்பம் பெருகத் தொடங்கியதும், ஒரு குறிப்பிட்ட தொகையைச் சம்பளம் என்று போட்டுக் கொடுத்தனர். மகனின் வருங்காலத்தை எண்ணி, பார்வதி அந்தப் பணத்தைப் பத்திரமாக பாங்கில் போட்டு வைத்துக் கொண்டிருந்தாள்.

ஆரம்பத்தில் அவர்கள் இருவரும் பங்களாவின் பின் கட்டில் தங்கி வசிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆத்மராமன் பள்ளிக்கூடத்தில் படிக்கத் தொடங்கியதும், பத்து வயது சிறுவனாக வளர்ந்த பின்னர் அவர்களை வீட்டு ஏஜமானர் அவுட் ஹவுசில் வசிக்கும்படி உத்தரவிட்டு விட்டார். வளர்ந்து கொண்டு வரும் தமது பேத்திகளுடன் சமதையாக அந்தச் சிறுவன் விளையாடத் தொடங்குவதைக் கண்டு அவருக்குக் கவலை ஏற்பட்டு விட்டது. ஹைஸ்கூல் வகுப்பைத் தாண்டியதும் கல்லூரி மாணவனான போது அவன் ஹாஸ்டலிலேயே தங்கிப் படிக்க ஏற்பாடாகி விட்டது. மாதம் ஒருமுறை வந்து பங்களாவின் தோட்டத்தின் பின் வழியாகத் தன் தாயை அவுட் ஹவுசில் சந்தித்து விட்டு, அவள் போட்ட சாப்பாட்டை அவசரமாகச் சாப்பிட்டு விட்டு, கிளம்பிவிட வேண்டிய நிர்ப்பந்தம் தாத்தாவும் அப்படியேதான் எப்பொழுதாவது வேலையில்லாத சமயம் தமது கோஷ்டியிலிருந்து பிரிந்து வந்து... மகளையும், பேரனையும் அபூர்வமாக வந்து சந்திப்பார். கையில் இருக்கும் சொற்பத் தொகையை பேரனுக்கு புத்தகங்கள் வாங்கக் கொடுப்பார். கையைக் கட்டிக் கொண்டு வீட்டு எஜமான் முன்பு சென்று தாம் மகளைப் பார்க்க வந்த செய்தியைச் சொல்லி விட்டு... பற்கள் அனைத்தையும் காட்டி, எஜமானி அம்மாளிடம் ஷேமம்



விசாரிப்பார். மகள் போட்டுக் கொடுக்கும் காப்பியை ஒரே வாயாக விழுங்கி விட்டு... வேகமாக விடை பெற்றுக் கொண்டுபோய் விடுவார். தாத்தா சமையல் கோஷ்டியுடனும்- அவன் ஹாஸ்டலிலும்- அம்மா அந்த பங்களாவின் அவுட் ஹவுசிலும்... ஆளுக்கு ஒரு மூலையாகக் குடும்பம் வறுமை காரணமாகச் சிதறி... நாடோடிகள் போல வாழ்ந்த அந்த இளமைப் பருவத்தை அவன் மறக்கவே முடியவில்லை.

விரைவில் படித்துத் தேறி... ஏதேனும் வேலை ஒன்றில் அமர்ந்து ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்து தாத்தாவையும் அம்மாவையும் தன்னுடனேயே வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆசை தீவிரமாகியது... பொறுப்பு உணர்வு மேலோங்கியது... படிப்பிலே மிகவும் கெட்டிக்காரனாக வகுப்பிலே முதல் மாணவனாக இருந்தான். ஆனால் அவனது ஆசை முழுவதும் வெற்றி பெறவில்லை. கல்லூரிப் படிப்பு முடியுமுன்பே அவனது தாத்தா மாரடைப்பால் ஒரு கல்யாண வீட்டில் திடீரென்று சமையல் செய்து கொண்டிருந்த சமயம்... மயங்கி சுருண்டு விழுந்து விட்டார். கல்யாணத்தின் நடுவே இதென்ன அசம்பாவிதம் என்று அஞ்சிய வீட்டவர்கள் காரில் அவரை வாரிப்போட்டு ஆஸ்பத்திரியில் அனுமதித்து செய்தியை மகளுக்குச் சொல்லி விட்டார்கள். ஹாஸ்டலிலிருந்து அவன் விரையுமுன் தாத்தா வேறு உலகிற்கு விரைந்து விட்டிருந்தார்.

"ஒரு மனிதனுக்கு எத்தனை பெரிய நிலம் தேவை?"

டால்ஸ்டாயின் குழந்தைகளுக்கான கதையை அவன் பள்ளிப் பருவத்தில் படித்திருந்தான்.

ஆறடி நிலம் போதும் அடக்கம் செய்ய என்று டால்ஸ்டாய் முடித்திருந்தார் கதையை.

இந்து மதத்தைச் சார்ந்தவனுக்கு அந்த ஆறடி நிலம் கூடத் தேவையில்லை. ஒரு பிடி சாம்பலாகி... நீருடன் ஐக்கிய

மாகப் போகிற உடலுக்கு ஒரு அடி நிலம் கூடத் தேவையில்லை என்று நண்பர்களுடன் விவாதித்துச் சிரிப்பான் அவன்.

ஆஸ்பத்திரியிலிருந்து அப்படியே தாத்தாவின் உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்ல நேரிட்டபோதுதான்... இறுதி காலத்தில் சடலத்தை உறவினர் கண் பார்வைக்கு வைக்க... ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க என்று- அவனுடையது என்று சொல்லிக் கொள்ள வாடகைக்காகிலும் கொஞ்சம் இடம் வேண்டும் என்ற உண்மை புலனாகியது...

எஜமானியம்மாள் மிகவும் இரக்கமுடையவளாக- பிரியமுடையவளாக நடந்து கொண்ட போதிலும் பார்வதியால் தனது தந்தையின் உடலை- அந்த பங்களா அவுட்ஹவுசுக்கு எடுத்துப் போய் இறுதிச்சடங்குகள் செய்ய இயலவில்லை.

''கடைசிப் பெண்ணுக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கு... சம்பந்திப் பேர் வறதும்... போறதுமாக இருக்கிற போது அச்சானியாட்டமா... இங்கே வந்து உங்கப்பாவுக்கு எல்லாம் செய்வது சாத்தியப்படாது...'' கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

ஆத்மராமன் அதைக் கேட்டு அதிர்ந்து போய் விட்டான். சமூகத்திலே ஏழை பணக்காரர்களிடையே உணர்வுகளுக்குக்கூட வித்தியாசமானதொரு மதிப்பீடா? இது மாதிரியான துன்பச் சம்பவம் எஜமானியம்மாள் வீட்டில் நேர்ந்து விட்டிருந்தால்? அப்பொழுதே அவனுள் அந்தப் பிடிவாதம் திவிரமாக உருவாகத் தொடங்கியது.

படித்து... முன்னுக்கு வந்து அவனும் உயர்மட்டத்தை எட்டிப் பிடிக்க வேண்டும்.

எஜமானியம்மாள் கருணைமிக்கவள்தான். ஆனாலும் அவளது உறவினர்கள் அந்தஸ்து என்ற அகம்பாவத்தில்



அவ்வப்போது சொற்களால் சிறு ஊசிகளைப்போல அவனது உணர்வுகளைக் குத்திக் குதறியது உண்மையே.

ஏழு வயது பள்ளிச் சிறுவனாக இருக்கும்போது ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து காது வலியுடன் வந்தான்... தாங்க முடியாத வேதனையில் கண்களில் நீர் பெருக... மெல்லிய குரலில் விசும்பியபடி புத்தக மூட்டையைச் சுமக்கமுடியாது வந்து சமையற்கட்டின் பின் தாழ்வாரத்திலே நின்ற மகனைக் கண்டு பதறிப்போனாள் பார்வதி. ''காது வலிக்கிறதம்மா தாங்க முடியலை'' பற்களைக் கடித்தபடி விசும்பினான். பரபரப்புடன் அவள் அலமாரியின் மீது காது வலிக்காக எஜமானியம்மாள் வாங்கி வைத்திருந்த மருந்தை எடுத்து வந்து அவன் காதில் ஊற்றி பஞ்சை வைத்து அழுத்தினாள். கண்ணீரைத் துடைத்து விட்டு... தாழ்வாரத்தில் அமர்ந்து கொண்டு அவனை மடியில் போட்டுக் கொண்டு முதுகைத் தட்டி ஆசுவாசப்படுத்தினாள்.

தாயின் அணைப்பே பெரும் மருந்தாகி, வலி குறைந்தது. அவன் கண்கள் நித்திரையைத் தழுவ முயன்றபோது காலடிச் சத்தம் கேட்டது.

''இங்கே வந்து உட்கார்ந்துட்டேளா? இதென்ன வேடிக்கை! இத்தனைப் பெரிய புள்ளையை மடியிலே போட்டுண்டு கொஞ்சரத்துக்கு இதுதானா நாழி...'' எஜமானியம்மாளின் மூத்த மருமகள் சிடுசிடுத்தாள். மருந்து பாட்டிலைப் பார்த்ததும் அவள் கோபம் அதிகரித்தது.

''கேட்காம கொள்ளாமே இதென்ன நாட்டாமை? என் குழந்தைக்கு வாங்கி வச்சிருக்கிறதை நீங்க எடுத்து எப்படி உபயோகப்படுத்தலாம் பேஷ்...'' சீறினாள் அவள்.

பார்வதி வாயைத் திறக்குமுன் அவள் எரிந்து விழுந்தாள்.

''குழந்தையை சீராட்டறதை விட்டுட்டு கொஞ்சம் உள்ளே எழுந்து வாங்கோ. நாத்தனார் அகத்துக்காரர்

பம்பாயிலிருந்து வந்திருக்கார். அவருக்குக் காப்பி கலந்து கொடுக்கணும். இதெல்லாம் யார் செய்வா? டேய்! ஆத்மா... அவுட் ஹவுசிலே படுத்துக்கோ. இங்கேயே படுக்கையை நீட்டிடாதே...'' இரைந்து விட்டு உள்ளே சென்று விட்டாள்.

லோகிதாசனுடன் சந்திரமதிபோல அம்மா அவனை வாரி எடுத்துக் கொண்டு அவுட்ஹவுஸ் தரையில் பாய் மீது படுக்க வைத்தாள். காது வலியைவிட அவனுக்கு இப்போது மனம் ரணமாக வலித்தது.

அன்று இரவு அவள் வேலைகளை முடித்துக் கொண்டு அவுட்ஹவுசிற்குப் படுக்க வந்தபோது அவன் கேட்டு விட்டான்.

''அம்மா இந்த பங்களாவிலேதான் நீங்க வேலை பார்க்கணுமா? வேறே எங்கேயாவது இன்னொரு வீட்டில் தாத்தாகிட்டே சொல்லி ஏற்பாடு பண்ணச் சொல்லுங்க.''

''எஜமானியம்மா ரொம்ப தங்கமானவ ஆத்மா. இது மாதிரியான இடம் எனக்குக் கிடைக்காது.''

''வந்து கத்தினாளே அந்த அம்மாவை எனக்குப் பிடிக்கலை.''

''அவள் பெரிய இடத்துப் பெண். இப்போ பெரிய இடத்தில் வாக்கப்பட்டிருக்கா... வீட்டுக்கு மூத்த நாட்டுப் பெண். அதனாலே அதிகாரம் செஞ்சுட்டா... நாம இதெல்லாம் பொருட்படுத்தக்கூடாது.''

ஆனாலும் அவனால் அந்தச் சம்பவத்தை மறக்கவே முடியவில்லை. எஜமானரின் மூத்த மருமகளைக் கண்டு விட்டால் அவன் அவுட்ஹவுசை விட்டு வெளியே வரவே மாட்டான். அப்படி ஒரு அச்சம் கலந்த வெறுப்பு?

கல்லூரியில் ஹாஸ்டலிலேயே தங்கி படிக்க நேரிட்டபோது ஒரு சமயம் தாத்தா அவனைப் பார்க்க வந்திருந்தார்.



இருவரும் பஸ் பிடித்து கடற்கரைப் பக்கம் காற்றாட வந்திருந்தனர். தாத்தாவின் தோளுக்கு மேலே உயரமாக வளர்ந்து விட்ட பிள்ளை அவன் இப்போது. கல்லூரியில் பட்டப்படிப்புக்கு படித்துக் கொண்டிருக்கும் மாணவன்... உரிமைகளைப் பற்றி மிகவும் தீவிரமாக சிந்திக்கத் தெரிந்து கொண்டு விட்டான். தாத்தாவிடமே அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டான்.

''தாத்தா... இந்த ஞானாம்மாள் அம்மாள் வீட்டைத்தவிர அம்மாவுக்கு வேலை செய்ய வேறு இடம் கிடைக்காதா?''

திடுக்கிட்டுப் போனார் கிழவர். ''ஏன் கிடைக்காது. வேலை தெரிந்தவர்களுக்கு வேலைக்குப் பஞ்சமே யில்லை.''

''பின்னே ஏன் அம்மா இவர்கள் பங்களாவோட அடிமையிலும் அடிமையாக கைகட்டி வாய் பொத்தி வேலை பார்க்கணும்? சமையலிலிருந்து துணி தோச்சுக் காயவைத்து பீரோவிலே அடுக்கி சமையல் பாத்திரங்களை தேய்க்கிற வேலை வரை சகல பொறுப்பு அம்மாவுடைய தாக இருக்கு. காலை விடியுமுன்பே பச்சைத் தண்ணீரில் கிணற்றடியில் குளிச்சிட்டு பங்களாவுக்குள்ளே நுழைகிறவள்... பகல் ஒரு பத்து நிமிஷம்கூட வந்து பாயில் படுக்க முடிகிறதில்லை. இரவு பத்து மணி வரை ஓயாது உழைக்கிறாள். சனி-ஞாயிறு ஒரு நாள்கூட ஒய்வு கிடையாது. அம்மா ஒரு சினிமாவுக்கோ கோயிலுக்கோ போனதில்லை. இதென்ன தாத்தா இப்படி ஒரு வாழ்க்கை?'' கோபமும் ஆத்திரமுமாக கேட்டான்.

''எல்லாம் உனக்காகத்தான் அப்பா அவள் பாடுபடு கிறாள்'' தாத்தாவின் குரல் கரகரத்தது.

''நீ ஒரு வயசுக் குழந்தையா இருக்கச்சே உங்க அப்பா போயிட்டான். அவன் உசிரோட இருந்தா பார்வதியின் நிலைமையே வேறாயிருக்கும். நமக்கு அவ்வளவுதான்

ப்ராப்தம். அதுக்கப்புறம் ஒரு இளவயசுப் பொண்ணை வச்சுண்டு தன்னந்தனியாக கைக்குழந்தையோட அவளை விட்டு விட்டு நான் எப்படி வேலைக்குப் போக முடியும்? நமக்குத் தெரிஞ்சவா- ஞானம்பா வீட்டவா... அந்தம்மா ரொம்ப நல்லவ... உனக்குப் படிப்பிலிருந்து சகல வசதியும் தந்து உன் அம்மாவை சின்ன வயசிலேயிருந்து கட்டிக்காத்து வரவா. அதனாலே அன்பு இருக்கிற இடத்தில் ஆத்திரமும் இருக்கும். இதெல்லாம் நீ பாராட்டக் கூடாது. பதிலுக்கு அவா மேலே நன்றி விசுவாசமா இருக்கணும்.''

''ஏன் தாத்தா இதே போல வேற வீடுகளில் அம்மா வேலை செய்து கொண்டிருந்தா சம்பளமும் சலுகைகளும் அதிகம் கிடைச்சிருக்குமே. இவா தயவிலே நான் படிக்க வேண்டிய சிரமம் இல்லையே. அம்மா சம்பளத்திலேயே சுதந்திரமா படிச்சு முன்னுக்கு வர முடியாதா?''

''உனக்கு படிப்பு இருக்கு. ஆனால் உலக விவகாரம் தெரியலை. உங்கம்மா சின்ன வயதிலே விதவையாகிட்டா. பார்க்க லட்சணமான பொண். இந்த இரண்டுமே அவளுக்குப் பெரிய ஆபத்தாச்சே. முன்னே பின்னே தெரியாதவா வீட்டிலே பணத்துக்கு ஆசைப்பட்டு நான் கொண்டு வேலைக்கு வச்சுட்டு பின்னாடி ஏதாவது தப்பு தண்டா நடந்துட்டா? என் காலத்திலே நான் எத்தனையோ பார்த்திருக்கேன். கேள்விப்பட்டிருக்கேன். என்னோட சமையல் வேலை பார்க்கிற கோதண்டத்தின் தங்கை கதி என்ன ஆச்சு தெரியுமா? பெரிய மனுஷன்னு நம்பி... ஒரு இடத்திலே அவளை சமையலுக்கு அமர்த்தினேன். விதவைப் பெண் எட்டு மாசம் கர்ப்பம். கேட்டா... பழியை எஜமான் டிரைவர் மேலேயும் தோட்டக்காரன் மேலேயும் போட்டார்... கோதண்டத்துக்கு நாக்கை பிடுங்கிட்டு சாகமாட்டோமான்னு அவமானம். நாங்கள்லாம் அவனுக்கு ஆறுதல் சொல்லாட்டா தங்கையையும் கொன்னு தானும் தற்கொலை பண்ணிண்டு இருப்பான். கடைசியிலே குழந்தை பிறந்ததும் அதை ஆஸ்ரமத்தில் விட்டுட்டு தங்கையை ஒரு பெண்கள் பள்ளிக்கூட ஹாஸ்டலில் சமையல் காரம்மாளுக்கு உதவியாக யார் காலிலோ விழுந்து வேலை தேடிக் கொடுத்தான். எதுக்காக இதைச் சொல்றேன்னா...



ஆத்மராமனுக்கு பளிச்சென்று புரிந்து விட்டது. அவனது தாய், தன்னை சமூகத்தில் உள்ள கழுகுகளின் பார்வையினின்று காத்துக் கொள்ள குறைந்த சம்பளத்துக்கு அவனது படிப்பை உத்தேசித்து உழைக்கிறாள். அவனுக்காக வாளிகள் நிறைய சோப்பு நுரைத்து நிற்கும் துணிகளை கிணற்றடியில் பல மணி நேரம் துவைக்கிறாள். அடுப்பருகில் பல மணி நேரம் நெருப்புடன் வெந்து கொண்டிருக்கிறாள். தூக்கமின்றி வெகு நேரம் கண் விழித்து உடலை ஓடாகத் தேய்த்துக் கொள்கிறாள். எல்லாம் ஆத்மராமனின் வருங்காலத்தை வளமாக்க...

ஒரு தாயின் அன்புக்கு ஈடு உண்டா இணை உண்டா?...

# 4

**தா**த்தா காலமாகிப்போனதும் அவன் தன் பட்டப் படிப்பு முடிந்த கையுடன் ஒரு கம்பெனியில் கணக்கர் வேலையை மிகவும் பாடுபட்டுத் தேடிக் கொண்டான். வேலையிலிருந்தபடியே... பாதி நேரப்படிப்பு வசதியைத் தேடிக் கொண்டு- கம்பெனி செக்ரட்டரிக்கு படிக்கத் தொடங்கினான். சம்பளம் குறைவுதான். ஆனாலும் தொடர்ந்து தன் தாய் வேலை செய்வதை அவன் அனுமதிக்க வில்லை. சிந்தாதிரிப்பேட்டையில் ஒண்டிக்குடித்தனத்தில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து... முதல் முதலாக தங்களுக்கு என்று ஒரு வீட்டை அமைத்துக் கொண்டான்.

அதற்குப் பின்னர், அதே கம்பெனியில் அவனது நிலைமை மாறியது... கணக்கு வழக்குப் பகுதிக்கு படிப்படியாக சில ஆண்டுகளில் உயர்ந்து... தலைமைக் கணக்கராகி விட்டான். சம்பளம் உயர்ந்தது. வீட்டை மாற்றிக் கொண்டான். கம்பெனி செக்ரட்டரி கோர்ஸ் முடிந்ததும் அவனது திறமைக்குத் தக்க வேலை வலிய அவனைத் தேடிக்கொண்டு வந்தது. ஏதோ அவர்களது கம்பெனி வியாபார காரியமாக வந்த ஜகதீசன் அவனைப் பார்த்தார்.

முகராசி என்பார்களே... அது அவனிடம் அந்த சமயம் எக்கச்சக்கமாக இருந்திருக்க வேண்டும். அவன் பேசிய தோரணை, நடந்துகொண்ட முறை எல்லாம் அவருக்குப் பிடித்து விட்டிருந்தன. 'என்னை வந்து பார்!' என்று கூறி விட்டு தமது விசிட்டிங் கார்டைக் கொடுத்து விட்டுப் போனார்.

சில நாட்களுக்குப் பின்னர் ஒரு நாள் காலை அவன் அவரை அவரது அலுவலக அறையில் போய்ப் பார்த்தான். உரிய நோட்டீஸ் கொடுத்து விட்டு தமது கம்பெனியில் வந்து சேர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டதை அவனால் நம்ப முடியவில்லை.

''கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்'' அம்மா கேட்டு விட்டு மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தாள். உண்மையில் கூரையைப் பிய்த்துக் கொண்டுதான் அதிர்ஷ்டம் அவனை நாடி உள்ளே வந்து குதித்தது என்றே கூற வேண்டும். ஒரு மாத காலம் முன் அறிவிப்பு கொடுத்து விட்டு அந்தக் கம்பெனியினின்று அவன் ஜகதீஷ் பிளாஸ்டிக் ஒர்க்ஸ் எனும் நிறுவனத்தில், விற்பனைப் பகுதியின் உயர் அதிகாரியாக நல்ல சம்பளத்தில் சலுகைகளுடன் சேர்ந்தான்.



''இந்த வீடுகூட உனக்கு முதலாளி கொடுக்கிறாரா... காரும் கொடுத்திருக்கிறாரே!...'' கண்கள் வியப்பில் விரிய அம்மா... அந்த வீட்டை சுத்தி வலம் வந்தது போக காரைத் தொட்டுப் பார்த்து பிரமித்து நின்றதைக் கண்டு அவன் சிரித்தான்.

''என்னம்மா இப்படி அதிசயப்படுறே? உங்கள் பிள்ளையின் படிப்புக்கு தகுந்தபடியான இடம் கிடைச்சிருக்கு...''

''நான் பட்டபாடு வீணாகலை... பாபா கோவிலை சுத்தினது வீணாகலை... உனக்கு வழி காட்டி விட்டார்'' என்றாள். அம்மாவின் ஆசை... மெல்ல நீண்டது.'' உன் குணத்துக்கு ஏத்தபடி ஒரு பொண்ணும் கிடைச்சுட்டா'' சொல்லிக் கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அந்த வீட்டில் அவர்கள்குடியேறி அவன் ஜகதீஷ் பிளாஸ்டிக் வொர்க்ஸுக்கு அந்தப் பதவியில் வந்து வேலையைச் செம்மையாக்கத் தொடங்கிய பின்னர், இரண்டாண்டுகளுக்குப் பின்னர்... அம்மாவின் ஆசை... சங்கீதாவின் உருவிலே பூர்த்தியாகிவிடும் போல வந்து நின்றது.

அன்று அவன் தன் அலுவலகத்தில் மானேஜிங் டைரக்டரின் அறையில் அமர்ந்திருந்தான். ஜகதீஷ் தமது தொழிற்சாலைக்குப் போய் விட்டால் அந்த அலுவலகத் திற்கு அவன்தான் முதலாளி. அவ்வளவு தூரம் முதலாளிக்கு அவன் மீது நம்பிக்கை. அந்தப் பொறுப்பை மனமுவந்து தாமே தந்து விட்டிருந்தார்.

ரிஸப்ஷனிஸ்ட்டின் இனிய குரல்... போன் வழியே வழிந்தது. ''யாரோ மிஸ் சங்கீதாவாம். இங்கே வந்திருக் காங்க... உங்களைப் பார்க்கணுமாம்.''

''வரச் சொல்'' அவள் முடிக்குமுன், குப்பென்று மல்லிகை மலரின் மணம் முகத்தில் மோத... சங்கீதம் போல

இனிமையாக வந்து எதிரே அறையின் மேஜைக்கு முன்னால் நின்றாள்.

கல்லூரி மாணவி போல கஞ்சியில் மொடமொடத்த வாயில் சேலையில் உயரமாக அழகாக... கையில் கட்டு ஃபைலை அணைத்தபடி நின்ற அவளை ஏற இறங்கப் பார்த்து மலைத்துப் போனான்.

''மிஸ்டர் ஜகதீஷைப் பார்க்கணும்'' என்றபடி அவள்... கண்களால் சிரித்தாள்.

''மிஸ்டர் ஜகதீஸ் தமது தொழிற்சாலையில் அம்பத்தூரில் இருக்கார். அவர் இங்கே இல்லாதபோது நான்தான் ஆபீசைக் கவனிக்கிறது வழக்கம். நீங்க உட்காருங்க'' நாற்காலியைக் காட்டி உபசரித்தான்.

வாயில் சேலை கட்டிக் கொண்டு, கழுத்திலே மெல்லிய தங்கச் செயின் மட்டுமே அணிந்திருந்த போதிலும் அந்தப் பெண்ணின் செழுமையான தோற்றம் பணக்காரர் வீட்டுப் பெண் என்று பறைசாற்றியது.

''மோகன் இன்ஸ்ட்டிடியூட்டில் நான் செக்ரட்டேரியல் கோர்சுக்குப் படிக்கிறேன். அலுவலகத்துப் பயிற்சிக்காக என்னை இங்கே அனுப்பியிருக்காங்க'' கூறிக்கொண்டே அவள் பைல்களை மேஜை மீது வைத்து விட்டு நாற்காலியில் உட்கார்ந்தாள். தோளில் தொங்கிய பையிலிருந்து ஒரு கடிதத்தை அவனிடம் நீட்டினாள். அது மோகன் இன்ஸ்ட்டிடியூட்டின் தலைவரிடமிருந்து ஜகதீஸ் பிளாஸ்டிக் வொர்க்சின் டைரக்டருக்கு வந்தது... அலுவலகத்தைப் பற்றிய செய்தியாதலால் படித்தான்... மிஸ் சங்கீதா அலுவலகப் பயிற்சிக்காக அங்கு அனுப்பப்பட்டிருக்கிறாள்'' என்று... கடிதம் சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது.

அவளை அழைத்துச் சென்று அலுவலகத்தின் பல்வேறு பகுதிகளைக் காட்டி விட்டு... பயிற்சி பெற வேண்டிய



முக்கிய பகுதியில் உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்து விட்டு... அவன் தன் அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டான்.

பிற்பகல்... அலுவலகம் முடியும் தருவாயில் அவள் மீண்டும் உள்ளே வந்தாள்.

''மன்னிக்கனும்... போனை உபயோகிக்க விரும்புகிறேன். உங்க உத்திரவைக் கேட்டுக் கொண்டு ரிஸப்ஷனில் போய்...'' அவள் முடிக்குமுன் டைரக்டரின் பிரத்யேகமான தொலைபேசியை அவள் அருகே நகர்த்தி வைத்தான்.

''தேவையில்லை. இதில் நீங்க நேரிடையாகப் பேசலாம். ரிஸப்ஷனிஸ்ட்டின் குறுக்கீடு இருக்காது.''

மெல்லியதாகச் சிரித்தாள்.

அவள் சிரிக்கும்போது முகம் இன்னும் எத்தனை அழகாக மாறியது? பிரமிப்புடன் பார்த்தான்.

பரபரப்பாக அவள் எண்களை சுழற்றினாள்.

''சங்கீதா பேசறேன், காரைக் கொஞ்சம் ஜகதீஸ் பிளாஸ்டிக் ஒர்க்ஸிற்கு அனுப்ப முடியுமா மன்னி...?'' கேட்ட அந்தக் குரலின் இனிமை அவனை மெய் சிலிர்க்கச் செய்தது.

''டிரைவர் ஜுரம்னு வீட்டுக்குப் போயிட்டான்.''

''அண்ணா வரத்துக்கு நாழியாகுமா? பஸ்ஸிலே வரச்சொல்றேளே? பஸ் பிடித்து வரதுக்குள்ளேயே?'' முகத்தை சிணுங்கினாள் அவள். சுபாவத்தில் சட்டென்று யாருக்கும் உதவ முன் வரும் பரோபகார குணம் ஆத்மராமனுக்கு.

அதுவும் ஒரு அழகான பெண். வீட்டுக்குத் திரும்பிப் போக... வண்டி வசதியில்லாமல் அவர்கள் அலுவலகத்திலேயே தவிக்கப் போகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட

வுடன் அவனுக்கு உதவ வேண்டுமென்ற ஆசை பொங்கிக் கொண்டு வந்தது.

''மிஸ் சங்கீதா... உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா... நான் உங்களை என் காரிலேயே வீட்டில் விட்டுட்டுப் போறேன்.''

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் அவள் மௌனமாக நின்றாள். பின்னர் என்ன நினைத்துக் கொண்டாளோ... துணிவுடன் சரி என்று ஒத்துக் கொண்டாள்.

அதற்குப் பின்னர்... அவள் தொடர்ந்து பலமுறை அந்த அலுவலகத்திற்கு வந்தாள்.

ஒவ்வொரு தடவையும் திரும்பும்போது அவனது காரில் அவன் கூடச் சென்று தன் வீட்டு வாயிலில் இறங்கிக் கொண்டாள். முதல் நாள் அவளாகவேதான் காரின் முன் ஆசனத்தில் அவன் அருகில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

''நான் பின்னாடி உட்கார்ந்தால் நீங்க எனக்கு டிரைவர் ஆகிவிடுவீங்க... உங்க அலுவலகத்திலே உங்ககிட்டே வேலை கத்துக்க வந்துட்டு, அப்படி மரியாதைக் குறைவா நடக்க கூடான்னுதான் நான் முன் ஆசனத்திலே உட்கார்ந்திருக்கிறேன். தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே? இந்தப் பொண்ணுக்கு ரொம்ப துணிச்சல்னு நினைச்சுக் கொண்டீங்கன்னா?... சிரித்தாள்.

பயிற்சி முடிந்த பின்னரும்... அவர்கள் சந்திப்பது தொடர்ந்தது. ஒருமுறை அவன் துணிவுடன் அவளைத் தன்னுடன் காப்பி சாப்பிட அருகிலிருந்த ஹோட்டலுக்கு வரும்படி அழைத்தான்.

''இப்படித்தான் நீங்க எல்லாப் பெண்களையும்கூட காப்பி சாப்பிட அழைப்பேளா?''மிகவும் துணிவுடன் பரிகாசமாகக் கேட்டாள்.



''அப்போ நான் ஒரு கேள்வி கேட்கலாம்னு நினைக்கிறேன்- இப்படித்தான் நீங்களும் துணிவுடன்... கார் கதவைத் திறந்ததும் லிப்ட் எடுத்துக் கொண்டு... வீடு போய்ச் சேர்வீங்களா?''

''பார்த்ததும் எனக்குப் பிடிச்சுப் போச்சு. அதனாலே தைரியமா முன் ஆசனத்திலேயே ஏறி... உட்கார்ந்து வருங்காலத்து உறவை ஸ்திரப்படுத்திக் கொண்டேன்.''

முகம் சிவந்து போனான் ஆத்மராமன். நெஞ்சு மகிழ்ச்சியில் பூரித்து விம்மியது.

மிஸ் சங்கீதா அவனை விரும்புகிறாளே?...

''எனக்கும் பார்த்த அன்றே புடிச்சுப் போச்சு... ரொம்ப பணக்கார வீட்டுப் பெண். காப்பி சாப்பிடக்கூட அழைப்பது மரியாதையான்னு பயந்தேன். பழகின பிறகு பயம் விட்டுப் போச்சு... வருங்காலம் இனிமையாக தொடரட்டும்னு... ஏதாவது இனிப்பா வாங்கித் தரத்தான் இங்கே கூட்டி வந்தேன். பாதாம் ஹல்வா... குலோப்ஜாமுன் என்ன வரவழைக்கட்டும்... நமது ஸ்நேகிதத்தை இனிமையாக ஆரம்பிக்கலாமா?...'' கேட்டபடி அவன் சிரிக்க... அவள் சிரிப்பில் கலந்து கொள்ள அவர்களது நட்பு தொடர்ந்தது. இனிமையான பல சந்திப்புகள். முடிவில் துணிவுடன் அவன் அவளை மணக்க விரும்புவதாகச் சொன்னபோது அவள் மிகவும் ஆசையுடன் ஒப்புதல் கொடுத்தாள்.

இருவரும் முடிவு செய்து விட்டனர்... வீட்டில் இருப்பவர்களைப் பற்றி மறந்து போனது தவறில்லையா...?

ஒரு நாள் மாலை... அவன் வீடு திரும்பும்போது... அவளையும் தன்னுடன் தங்கள் வீட்டிற்கு காரில் கூட்டிக் கொண்டு வந்திருந்தான்.

''எங்க வீடு ரொம்ப சாதாரணம்... உங்க பங்களாபோலே இன்லேன்னு சொன்னேளே... இங்கே என்ன குறைச்ச லாம்... சோபாக்கள் இருக்கு... தரையில் கம்பளம் விரிச்சி

ருக்கு... டி.வி. இருக்கு... அட்டா ஜன்னலுக்கு அழகான திரைகள் போட்டிருக்கு... ரொம்ப சௌகரியமாகத்தானே இருக்கு... இது உங்க படுக்கை அறையா?... அது உங்கம்மாவா?'' கேட்டுக் கொண்டே சுற்று முற்றும் கண்களை ஓட்டியபடி உயரமான குத்துவிளக்கு போல தரையில் விரிக்கப்பட்ட கம்பளத்தில் நின்ற பெண்ணை அம்மா பார்வதி வந்து கலவரத்துடன் எட்டிப் பார்த்தாள்.

''அம்மா! இங்கே வாங்கோ... இவ பேர் சங்கீதா... இவ என் ஆபீசிலே வேலை கத்துக்க வந்தா...'' முடிக்காது குழப்பமும் சங்கோஜமுமாகத் தாயைப் பார்த்தான் ஆத்மராமன்.

''அப்படியா! உட்கார் அம்மா. சங்கீதா பேர் ரொம்ப அழகா இருக்கு... நீயும் அழகாவே இருக்கே... இந்தப் பக்கம் கிட்டத்திலேதானே குடியிருக்கே...'' கேட்டு விட்டு அம்மா காப்பி கலந்து வர உள்ளே சென்றாள்.

''மாமி... நீங்க வார்த்து போட்ட அடை ரொம்ப நன்னா இருக்கு. காப்பியும் ஏ ஒன்... எங்காத்து சமையல்காரர் பல வருஷமா எங்களோட இருக்கிறவர்... இன்னும் அவருக்கு சமையலில் கைமணம் வரலை. அடைசெஞ்சா... வரட்டிபோல... கடிக்க ரொம்ப கடினமாக இருக்கும்...'' வரிசையான பற்கள் பளிச்சிட சங்கீதா சிரித்தாள். அம்மா பார்வதியின் முகத்தில் கலவரம் கவ்விக் கொண்டது. அவள் வெளியேறிய பின்பு... மெல்ல பிள்ளை அம்மாவிடம் கேட்டான்.

''பெண் எப்படியிருக்கா?...''

''அழகா இருக்கா, சூதுவாதில்லாம வெளிப்படையா பேசறா. ஆனா பெரிய மனுஷா வீட்டுப் பெண்போலத் தோணறதே?''

''ஆமா அவ கொஞ்சம் பணக்கார இடத்துப் பெண்தான். அண்ணாசாலையிலே ரம்யா அட்வர்டைசிங் ஏஜன்சின்னு அவ அண்ணா ஒரு பிரபல விளம்பர நிறுவனத்துக்கு சொந்தக்காரர். அதுக்கு பல கிளை ஆபீஸ்கள் இருக்கு... அங்கேயே வேலை கத்துக்கலாம்... தோட்டத்து பச்சிலை வீட்டுக்குதவாதுன்னு எங்க கம்பெனிக்கு வேலை கத்துக்க வந்தா... அப்படி ஏற்பட்ட பழக்கம் மனம் ஒத்துப் போயிட்டது. அதனாலேதான் அவ வீட்டு அந்தஸ்தைப் பத்திக் கவலைப்படலை.''

''எனக்குக் கவலையா இருக்குப்பா. அவ எங்கே நாம எங்கே?'' அம்மா முடிக்கவில்லை. அவன் வாய்விட்டு பதிலுக்கு சிரித்து விட்டான். பார்வதி மிகவும் கவலையுடன் மகனைப் பார்த்தாள்.

''சங்கீதா தங்களைப் பத்தி விவரமாக எங்கிட்ட சொல்லியிருக்கா. அம்மா பரம்பரையா அவ குடும்பம் பணக்காரக் குடும்பம்தானாம். ஆனா அவ தாத்தா காலத்திலே கடன் சுமையிலே தரை மட்டத்துக்கு வந்து நொடிச்சுப்போய் பெருங்கரயம் வச்ச பாண்டமா இருந்துட்டுதாம். அதிர்ஷ்ட வசமா அண்ணாவுக்கு பெரிய இடத்திலே கல்யாணமானதினாலே மாமனார் மூலமா அந்தப் பெரிய நிறுவனம் கிடைச்சுதாம். அவ அப்பா சின்ன வயதிலேயே போயிட்டாராம். அவ பங்குக்குன்னு சொத்து ஒண்ணும் ஏதேஷ்டமா கிடைக்காதாம்... அந்தஸ்துன்னு எடை போட்டா ரெண்டு பேரும் சமமாத்தான் இருப்போம்னு சொன்னா...''

''நமக்கு வேண்டாம் இந்த இடம்'' என்று சொல்லத் துடித்தாள் பார்வதி. ஆனால் மகனின் முகத்தைப் பார்த்ததும் வார்த்தைகளை மாற்றிக் கொண்டு விட்டாள்.

''யாருக்கு யார்னுபோட்டிருக்கும்போது நம் கையில் என்ன இருக்கு?'' விரக்தியாக முடித்தாள்.

ஆனால் விஷயத்தைக் கேள்விப்பட்ட அண்ணா ராமசாமி சட்டென்று ஒத்துக் கொண்டு விடவில்லை.

மன்னி ஜெயாவின் முயற்சியில்தான் முடிவில் தொலையட்டும் என்று அரை மனதோடு சம்மதம் கொடுத்திருந்தான்.

அண்ணாவின் சம்மதம் கிடைத்ததும்... அவர்கள் பங்களாவுக்கு ஒரே ஒரு தடவைதான் ஆத்மராமன் போய் வந்தான்.

காப்பியையும் டிபனையும் கொடுத்து விட்டு நேர்முகத் தேர்வுக்கு வந்திருக்கும் வேலையில்லா பட்டதாரியைக் கேட்பதுபோலக் கேள்விகளால் துளைத்தான்.

சில கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது ஆத்மராமன் திணறிக்கூடப் போய் விட்டான்.

''எதுக்கும் உங்கம்மா கிட்டேயிருந்து உன் ஜாதகத்தை வாங்கிப் பார்த்திட்டுத்தான் மற்ற ஏற்பாடுகளில் இறங்க முடியும்... எனக்கு ஜாதகத்து மேலே அபார நம்பிக்கை... எங்களுக்கு குடும்ப ஜோசியர் கணியூர் சிவசாம்பன் பார்த்துச் சொல்லிட்டா கண்ணை மூடிண்டு கல்யாணக் காரியத்தில் இறங்கி விடுவோம்...'' ராமசாமி மிக்க எச்சரிக்கையுடன்... கடைசி நிமிஷம் ஜாதகத்தின் மேல் பழியைப் போடலாம் என்ற நம்பிக்கைபோலும், ஒப்புதல் கொடுத்திருந்தார்.

அந்தப் பெண் மூலம் பழி அவன் மேல் சுமத்தப்பட்ட தும்... அவருக்கு மறுப்புத்தர சாதகமாகி விட்டது. அவனது சம்பந்தத்தை வேரோடு களைந்து... பந்தத்தை வெட்டிக் கொள்ள... பாதகி... ஒரு பெண் உருவில் கொட்டும் மழையில்... கையை நீட்டிக்கொண்டு அவன் சென்ற பாதையில் வந்து நிற்பாளா... என்னென்னவோ எண்ணியபடி... தாயும்... மகனும்... உறக்கமின்றி அன்று இரவைப் போக்கினர்...

மழை வருவதற்கான அறிகுறிகள் வான வீதியில் மூண்டு கொண்டிருந்தன. ஆபீஸ் முடிந்து வெளியே வந்த ஆத்ம ராமன் சட்டெனத் தனது காரை நிறுத்தி வைத்திருந்த இடத்திற்குச் சென்றான்.

பின்னால், அவன் ஆபீஸ் சுகந்தி மற்ற நாட்களாக, இருந்தால், ''திருவல்லிக்கேணிதான் ஸார், நான்



இருக்கிறது. நீங்க 'பீச்' வழியாத்தானே போறீங்க 'ஹெல்ப்''' கொஞ்சலாகச் சிரிப்பாள்.

எத்தனையோ முறை அவள், வலியக் கேட்டு அவனிடம் 'லிப்ட்' வாங்கிக் கொண்டிருக்கிறாள். சுகந்தி மட்டு மல்லாது, இதர சக ஊழியப் பெண்மணிகள் அத்தனை பேருக்குமே அவன் ஆபத்பாந்தவனாய் விளங்கியிருக் கிறான்.

''இருட்டிப் போச்சு. எங்க தெருவில் விளக்குகூடக் கிடையாது.''

''இத்தினி நேரமாகும்னு தெரிஞ்சா, எங்கண்ணனை பஸ் நிலையத்துக்கு வரச்சொல்லி இருப்பேன்.''

''முந்தாநாள் எங்க வீட்டுத் தெருமுனையில் கழுத்துச் செயினை அறுத்திட்டு ஓடிட்டானாம், பயமா இருக்கு.''

பலவாறு பயந்து நடுங்கிய ஆபீஸ் பெண்களுக்கு ஆத்மராமன் உறுதுணையாக உடன் சென்று வீட்டில் இறக்கிடும் பாதுகாவலனாக இருந்திருக்கிறான்.

ஆனால் இன்று...? சுகந்தி இவனைக் கண்டதும் சரேலென விலகி டெஸ்பாட்ச்கிளார்க் சோமுவின் அருகில் ஒண்டியபடி நடக்கலானாள்.

ஒரு சமயம், சோமுவைப் பற்றிய அபிப்ராயத்தை அவள் கூறியது நினைப்பு வந்தது.

''அந்த ஆளு என்ன ஸார். கொஞ்சம்கூட வித்தியாச மில்லாம 'ஏ' ஜோக்கெல்லம் அடிக்கிறாரு எனக் கென்னவோ பிடிக்கலே. ஆபீஸ் விஷயமா ஏதாச்சும் கேட்டாலே பயம்மா இருக்கு ஸார்'' கண்களை அகல விழித்தபடி விமர்சித்து விட்டிருந்தாள்.

அப்பேர்ப்பட்ட 'ஏ' ஆசாமியே, இப்போது ஆத்ம ராமனைவிட நல்லவனாகிப் போனானா? வெறுப்புடன் சிரிப்பு வந்தது அவனுக்கு. மழைத்துளிகள் பலமாக விழ ஆரம்பித்தன. ஆத்மராமன் காரின் கதவைத் திறந்து உள்ளே

அமர்ந்தான். சுகந்தியும் சோமுவும், ஏதோ சொல்லி சிரித்தபடி பஸ் நிலையத்தை நோக்கி ஓடுவது தெரிந்தது. போகட்டும் எல்லோருமே அவனை வெறுத்து ஒதுக்கி விட்டுப் போகட்டும்.

பலமாகக் காரின் கதவை மூடினான். கோபத்துடன் உறுமியபடி கார் புறப்பட்டு வளைந்து, ஸாந்தோம் கடற்கரை வழியாக ஓடியது.

மழைத்துளிகள் பலமாக முன்புறக் கண்ணாடியின் மீது பட்டுத் தெறித்து பார்வையை மங்கலாக்கின. 'வைபரை'ப் போட்டவன் மீண்டும் சாலையைப் பார்த்தபடி வண்டியைச் செலுத்தினான்.

''பாவி! சண்டாளி! கிராதகி... அவன் குடியைக் கெடுக்க, இதே போல ஒரு மழை நாளில் எங்கிருந்துதான் வந்து சேர்ந்தாளோ'' மனம் ஆத்திரத்துடன் புலம்பியது. பற்களைக் கடித்தபடி, வேகத்தை அதிகமாக்கினான். அந்த நாளின் நினைவு அதிவேகமாக மனதில் மோதியது. பெண்கள் கல்லூரியைத் தாண்டி கொட்டும் மழையில்தான் அந்த ராட்சஸி அன்று நின்று கொண்டிருந்தாள்.

# 5

அன்று ஆபீசில் சிறிது வேலை அதிகமானதால், அவன் வெளியே வரும்போதே நன்றாக இருட்டத் துவங்கி இருந்தது.

''ஸார்! பிளீஸ்'' சுகந்தியின் கெஞ்சல் வழியில் அவளை இறக்கி விட்டு, நெடுஞ்சாலைக்குள் திரும்பும்போது, காரின் விளக்குகளை உபயோகிக்க வேண்டி வந்தது.

தலைக்குக் குடையில்லாமல், கொட்டும் மழையில் அவள் நின்றபடி, கட்டை விரலைக் காட்டி 'லிப்ட்' கேட்டாள்.



காரின் விளக்கொளியில் அவளை ஊன்றிக் கவனித்தான். பஞ்சாபி உடையில் இரட்டைப் பின்னலை தோள்களில் ஊசலாட கையை அசைத்தபடி நின்றிருந்தாள். நெற்றியில் நாகரீகம் காரணமாகவோ என்னவோ பொட்டைக் காணோம். முகத்தில் கூத்தாடியது, கெஞ்சலா, கொஞ்சலா எனப் புரியாத ஒரு கலப்படப் புன்னகை அவளது உதட்டுப் பூச்சுகளினூடே தவழ்ந்தது.

காரை நிறுத்தியதும், அவனது அனுமதியை எதிர் பாராதவளாய் லபக்கென கதவைத் திறந்தாள். 'தொப்' பென்று முன் ஆசனத்தில் விழுந்தவள், ''தேங்க்ஸ், மழையில மாட்டிக்கிட்டிருப்பேன்'' பெருமூச்செறிந்தாள்.

ஆத்மராமன், காரைக் கிளப்பி விட்டு, ''எங்க இருக்கீங்க?'' என்றான்.

''ஸாரி! ஸாந்தோம் ஹைரோட்லயே மெதுவாப் போங்க. நான் இறங்கிக்கறேன், உங்களைத் தொந்திரவு செய்யறேன். வெரி ஸாரி'' என்றாள் உதடுகளைக் குவித்து.

''அதனால் என்ன? உபகாரம் செய்யரது தப்பில்லையே? என்னால முடிஞ்சது'' அதற்குமேல் பேச்சுக் கொடுக்காத வனாய், சாலையைப் பார்த்தபடி வண்டியை செலுத்தினான் அவன்.

கனமான, 'ஸெண்ட்' நெடி அவனை அலக்காக தூக்கி அடித்தது. கண்களைச் சுழற்றியபடி அவனை நெருங்கி 'எங்கே உங்க ஆபீஸ்?' என்றாள்.

ஸ்டியரிங் வீலிலிருந்து கையை எடுக்க முடியாதவனாய் சிறிது எரிச்சலுடன், ''பாரிமுனையில், உங்க வீடு வந்திட்டதா பாருங்க'' என்றான். ''அதோ- அங்கதான்... ஒரு வீடு தெரியுதே...''

அவள் குறிப்பிட்ட இடம், ஸாந்தோம் நெடுஞ்சாலை யின், ஒரு தென்னந்தோப்புக்கருகில் இருந்த ஒரு சில ஓட்டுக்

கட்டடங்கள். அருகில் உயர்ந்த குடியிருப்புப் பகுதிகளின் நடுவே, இப்படியும் ஒரு பழைய குடியிருப்புப் பகுதியா? வியப்புடன் காரை நிறுத்தினான்.

காரின் கதவைத் திறந்து கொண்டு இறங்கியவள் அவனை விநோதமாகப் பார்த்து விட்டு முன்னால் சென்றாள்.

''ஒரு தேங்ஸ்கூட கிடையாது போலிருக்கிறது'' தனக்குள்ளே பேசியபடி காரின் கதவை மூடினான்.

''என்னா தங்கச்சி! இத்தனை நேரம் கழிச்சு எவனோட வந்தே?'' உறுமியது ஒரு குரல்.

திடுக்கிட்டுப்போன ஆத்மராமன் திரும்பிப் பார்த்தான். இடுப்பில் சிங்கப்பூர் லுங்கியும், முண்டா பனியனுமாக ஒரு கட்டையான ஆசாமி மீசையை முறுக்கியபடி, அவளைப் பார்த்து தனது பரட்டைத் தலையை ஒரு சிலுப்பு சிலுப்பினான்.

ஆத்மராமனுக்குச் சிரிப்பு பொங்கியது. ''என்ன ஆசாமி, வலுச்சண்டைக்கு முறைக்கிறான்?''

மறுகணம் அந்தப் பெண் வீட்டுக்குள் சென்று 'ஓ' என்று அலறியபடி வெளியே ஓடி வந்தாள். ஆடை கிழிந்து தலையெல்லாம் தாறுமாறான நிலையில்.

ஆத்மராமனுக்கு ஒரு விநாடி பெரும் குழப்பம். எங்காவது மழைச் சறுக்கலில் அடிபட்டு விழுந்து விட்டாளா? அலங்கோலமாக...? அது அவர்கள் போடும் நாடகத்தின் முன்னோட்டம் என்று அவனுக்கு அப்போது தெரியாமல் போய்விட்டிருந்தது.

''அண்ணே! அண்ணே! வழியில் மழையில் நனைஞ்சிட்டிருந்தேன்னு இந்த மனுஷன் என்னை... என்னை... கார்... ஏத்திக்கிட்டு வந்தான்... நானும் நம்பிட்டேன்... ஆனா...? என்னை'' என்று 'கோ'வென்று அழுது ஆர்ப்பரித்து ஒரு சூறாவளியையே அங்கு கிளப்பி விட்டாளே பூதகி.



இப்போது எண்ணினாலும் அந்தக்காட்சி ஆத்மராமனின் குடலைப் புரட்டியது. அவன் மீது வீண் பழி சுமத்தப்பட்டது என்பதை உணரவே சில விநாடிகள் பிடித்தன அவனுக்கு.

''என்ன இது? கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக இவள் என்ன சொல்கிறாள்?'' அவமானத்தாலும், சினத்தாலும் பொங்கி எழுந்தாள்.

''என்ன கதை விடுறே? ஆபத்துன்னு உதவப் போனா- இதெல்லாம் என்னது?'' அதட்டினான் கோபத்துடன்.

'ஐயா! பெரிய மனுஷா! கார் வச்சிக்கிட்டா ஊர் இருக்கிற பொம்பளையை... என்னய்யா நினைச்சுக்கிட்டிருக்கே...? இப்போ என் தங்கச்சிக்கு என்னா வழி சொல்றே...? ஊம்'' உரத்த குரலில் ஓங்கிப் பேசினான் லுங்கி.

''அடாப் பழியால் முகம் சிவந்தவனாய், யோவ்! மரியாதையாகப் பேசு'' என்றான் ஆத்மராமன்.

''மரியாதை கேக்கற மூஞ்சியைப் பாரு'' லுங்கி அரட்டலாகக் கத்தினான். அந்த வேஷக்காரியும் உரக்க ஒப்பாரி வைத்து அழ ஆரம்பிக்கவே, அக்கம் பக்கம் சிறிது சிறிதாகக் கும்பல் சேர ஆரம்பித்தது.

ஆத்மராமன் உடல் முழுவதும் ஆத்திரத்தால் வெடவெடத்தது. ''நான்ஸென்ஸ்''- உறுமினான் அவன்.

''அப்பிடி இங்கிலீஸ் பேச்செல்லாம் பேசிட்டா பயந்துடு வோம்னு பாக்குறியா? வாய்யா போலீஸ் ஸ்டேஷனுக்கு...'' என்று கூப்பாடு போட ஆரம்பித்தான் லுங்கி.

''நான் எதுக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரணும்? நீயே போ- இந்தா...'' தனது கோட்டுப் பையிலிருந்த விசிட்டிங் கார்டை விசிறி அடித்தான்.

லுங்கி அதை ஓடிப் போய் பிடிக்கும் சமயம் மற்றொருத்தன், கையில் தடியுடன் வெளியே வருவதை ஆத்மராமின் கண்கள் கவனித்தன. அடிதடிக்கும் கொலைக்கும் அஞ்சாத

நயவஞ்சகக் கூட்டத்தில் மாட்டிக் கொண்டு விட்டோம் என்பதை கணத்தில் ஊகித்தான். சரேலென வண்டியைக் கிளப்பி விரைவாகத் தனது வீட்டிற்குச் செல்லும்வரை, அவன் மனமும் உடலும் படபடத்தன.

காரை கராஜில் நிறுத்தி விட்டு இறங்கியபோது, குளிர் ஜுரம் அடித்து இறங்கியதுபோல தேகமுழுவதும் வியர்வை வெள்ளம் கை, கால்கள் துவண்டு போனது போன்ற உணர்வு "சே! எத்தகைய ஆபத்தில் மாட்டிக் கொள்ள இருந்தோம்" என்ற 'பகீர்' உணர்வு, கிலி... எல்லாமாக உள்ளே சென்றான். ஏறிட்டுப் பார்த்த அம்மா பார்வதி துணுக்குற்றுப் போனாள்.

பேயறைந்தவனைப்போல இருந்தவனைக் கண்டு, எந்தத் தாய்தான் பதைத்துப்போக மாட்டாள்? பார்வதி ஆத்திரத்துடன் மகனின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

"ஏன் ஆத்மா? உடம்புக்கு என்ன? மழையில ரொம்ப நனைஞ்சிண்டு வந்தியா...?" அடுக்கடுக்காகக் கேட்டபடி துவாலையைக் கொணர்ந்தாள்.

"தலையை நன்னா துடைச்சிக்கோ. ஜலதோசம் பிடிக்கப் போறது?"

"அம்மா அதைவிட பெரிய தோஷம் பிடிச்சுது" கத்த வேண்டிய மனதை அடக்கினான் அவன்.

அம்மாவிடம் நடந்ததைச் சொல்வதா வேண்டாமா என்ற தவிப்பில் அவன் தன் அறைக்குள் சென்று அலுவலக உடைகளைக் களைந்து வேறு உடுத்திக் கொண்டான். சில்லென்ற குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிக் கொண்டு முன்னறையில் வந்து உட்கார்ந்தான்.

நெஞ்சத்தில் ஏற்பட்ட படபடப்பு இன்னமும் அடங்க வில்லை. கதைகளில் வருவதுபோல இதென்ன அபாண்டம்?



அம்மா சொல்லியிருந்தாள். அவள் சின்னவளாக இருக்கையில் பார்த்த ஒரு நாடகம். அந்த நாளைய பிரபல நடிகர்கள் நடித்தது. சாரங்கதாரா என்ற கதாநாயகனைச் சுற்றிப் பின்னப்பட்ட கதை. தான் விரும்பிய படத்தி லிருந்த ராஜகுமாரியை... தந்தை தமது இரண்டாந்தாரமாக கல்யாணம் செய்து கொண்டு விடுகிறார். எதேச்சையாக பூங்காவில் சந்திக்கும்போது மிகவும் மரியாதையுடன் பழகுகிறான் அரசிளங்குமரன். ஆனால் அவளுக்கு அவன் மீது மோகம் தலைக்கேறி விடுகிறது. தனது அப்போதைய உறவை மறந்து அவள் தன் காதலைவெளிப்படையாகத் தெரிவிக்கிறாள். அரசிளங்குமரன் தர்ம நியாயங்களை எடுத்துச் சொல்லி அவள் மனதை மாற்றப் பார்க்கிறான். தன் காதல் நிராகரிக்கப்பட்டதை உணர்ந்து வெகுண்டு அவள் அவன் மீது வஞ்சகம் தீர்த்துக் கொள்ள தன் உடைகளைக் கிழித்துக் கொண்டு தலைவிரி கோலமாக அரசன் முன் நிற்கிறாள்.

அரசிளங்குமரன் அவளை மானபங்கப்படுத்த முயன்றதாகக் கூசாது பொய் சொல்கிறாள். வெகுண்ட மன்னன், மகன் என்று பாராது தன் சிற்றன்னையை பெண்டாளத் துணிந்த அரசிளங் குமரனின் கைகளை வெட்டி விடும்படி கடும் தண்டனை கொடுத்து விடுகிறார். கைகள் துண்டிக்கப்பட்டு விடுகின்றன. சிவபெருமானை அன்போடு வழிபட்டு வந்த சிவபக்தன் அவன். ஆதலால் கையை இழந்து வேதனையில் துடித்த அரசிளங் குமரன் கடவுளை அழைத்துத் துதிக்கிறான். கடவுள் இரங்கி மீண்டும் கைகளை வளரச் செய்து விடுகிறார். உண்மையை உணர்ந்த அரசன் மனைவியைச் சிறையில் அடைத்து மகனிடம் மன்னிப்புக் கேட்டு அவனுக்கு மணிமகுடம் சூட்டுகிறான். கதை கடவுள் குறுக்கீட்டில் சுபமான முடிவை பெறுகிறது.

ஏறக்குறைய ஆத்மராமனுக்கு ஏற்பட்ட அனுபவமும் அதே மாதிரிதான்... எந்தக் கடவுள் குறுக்கிட்டு அவனுக்கு ஏற்பட்ட அந்த இக்கட்டைத் தீர்த்து வைக்கப் போகிறார். அண்ணன் என்று சொல்லிக்கொண்டே லுங்கிக்காரன் முகம் எத்தனை கடுமையாக இருந்தது? போலீசுக்கு வா என்றானே? ஒரு சமயம் தங்கையை இழுத்துக் கொண்டு போலீசுக்குப் போயிருப்பானா?

''உனக்குப் பிடிக்குமேன்னு வெங்காய சாம்பார் வச்சிருக்கேன். அப்பளம் பொரிச்சிருக்கேன்... நெய் போட்டுக்கோ... ராத்திரி லேசா இருமினியே... பெரிய ஸ்தாபனத்திலே வேலை செய்யறே... எல்லோரோடயும் பேசறே... தொண்டை வறண்டு போயிடும்'' அம்மா பார்வதி தானே பேசியபடி உணவைப் பறிமாறிக் கொண்டிருந்தாள்.

சாதாரண நாட்களாக இருந்தால்... அவன் சாம்பாரை ஒரு கை பார்த்திருப்பான். வயிற்றைப் பசி முறுக்கிக் கொண்டு தான் இருந்தது. ஆனால் வழியில் சற்றுமுன் நேர்ந்த அதிர்ச்சியான சம்பவத்தின் கசப்பு உணர்வு நெஞ்சுவரை நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

அம்மாவைத் திருப்திப்படுத்த ஏதோ சாப்பிட்டான். அவசரமாகக் கையைக் கழுவிக்கொண்டு முன்னறைக்கு வந்து உட்கார்ந்தான். வாயிற் கதவு பலமாகத் தட்டப் பட்டது.

அம்மாதான் விரைந்து சென்று கதவைத் திறந்தாள்.

வெளியில் இரண்டு போலீஸ்காரர்கள் நிற்பதைக் கண்டு அவள் அரண்டு போய்விட்டாள்.

போலீஸ், கோர்ட் என்ற சங்கதிகளைக் கேட்டறியாது வாழ்ந்து பழக்கப்பட்டவள்.

''உள்ளே வாங்கோ... யாரைப் பார்க்கணும்... என்ன சங்கதி?'' படபடவென்று கேட்டாள்.



''மிஸ்டர் ஆத்மராமன் வீடுதானே? ஜகதீஷ் பிளாஸ்டிக் வொர்க்ஸில் வேலை பார்க்கிற ஆத்மராமன்தானே?...'' கேட்டபடி காவல்துறை அதிகாரி அவளைத் தாண்டிக் கொண்டு நடையில் புகுந்தார். ''என்னம்மா யார் அது?'' கேட்டுக் கொண்டு உள்ளேயிருந்து வந்த ஆத்மராமனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

''மிஸ்டர் ஆத்மராமன்! உங்களைத் தேடிக்கொண்டுதான் வந்திருக்கோம். கலைவாணி என்கிற பெண் கொடுத்த புகாரின் பேரில் உங்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்ல வந்திருக்கோம்.''

''கலைவாணி என்ற பெண்ணா? அப்படி ஒருத்தரையும் எங்களுக்குத் தெரியாதே...?'' பார்வதி வியப்பும் திகைப்புமாக பதிலளித்தாள்.

காவல்துறை அதிகாரிகளில் இளைஞர்போல காணப்பட்டவர் அவளை மிகவும் அனுதாபத்துடன் காலோடு தலை வரை பார்த்தார்.

பயமும்... பரபரப்புமாக நின்ற அந்தத் தாயாருக்கு நிலைமையை விளக்க வேண்டும் என்று நினைத்தார் போலும்.

''திருஆத்மராமன் உங்கள் மகன்தானே அம்மா! அவர் மேலே ஒரு வழக்குப் பதிவாகியிருக்கிறது.''

''வழக்கா?'' திடுக்கிட்டுப் போனாள் பார்வதி. அவளது முகம் வெளேர் என்று ரத்தமிழந்து போனது.

காய்ந்துபோன உதடுகளை நாவால் தடவிக் கொண்டு மகன் பக்கம் திக்பிரமையுடன் திரும்பினாள்.

''அம்மா! கலைவாணி என்கிற பெண் தன்னை மானபங்கப்படுத்தி விட்டதாகப் புகார்கொடுத்திருப்பதால் ஆத்மராமன் அவர்களை நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போக வந்திருக்கிறோம்.'' மிகவும் தாழ்ந்த குரலில் அனுதாபத்துடன் சொன்னார்.

''அப்படின்னா? அவனை அரெஸ்ட் பண்ணிண்டு போகவா வந்திருக்கேள்?'' பார்வதிக்கு மூச்சுத் தடுமாறியது.

காவல்துறை அதிகாரி கனிவுடன் அவளைப் பார்த்து விட்டுத் தலையை ஆட்டினார்.

''இன்ஸ்பெக்டர் ஸார், இதில் ஏதோ தப்பு நடந்திருக்கு. நீங்க சொன்னபடி என் மகன் ஒருபோதும் ஒரு பெண்ணோட மானத்திற்கு பங்கம் வராப்பல நடந்து கொண்டிருக்க மாட்டான். என்னை நம்புங்க.'' அம்மாவுக்கு அழுகை வந்து விட்டது.

''மிஸ்டர் ஆத்மராமன், நீங்கள் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்ததும் உடைகளை மாற்றிக் கொண்டிருப்பீர்கள் இல்லையா...? அந்த உடைகளை எடுத்துக் கொண்டு எங்களுடன் புறப்படுங்கள்.'' காவல்துறை அதிகாரி மிகவும் கண்டிப்பாகச் சொன்னார்.

''அம்மா! கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்துடுவேன். கவலைப்படாதீங்க. ஏதோ மோசடி நடந்திருக்கு'' சொல்லி விட்டுப் பதைபதைக்கும் நெஞ்சுடன் அவர்களுடன் புறப் பட்டான். வெளியே நின்ற போலீஸ் வேனில்... அந்த சண்டாளி... கலைவாணி... கிழிந்த சட்டையும் விரிந்த கூந்த லுமாக... விசும்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அருகில் அவளது ரௌடி அண்ணன் அதே லுங்கி பனியனில் அமர்ந்திருந்தான்.

டி.வி.யில் தமிழ்ச் செய்தி வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயம். எதிர் வீடு பக்கத்து வீடுகளிலிருந்து ஜன்னல் வழியே அவன் வீட்டு வாசலில் நின்றவனை பிரமிப்புடன் தலைகள் எட்டிப் பார்த்தன.

''ஆபீசில் கையாடி இருப்பான்...''

''கடத்தல் பொருள்களில் ஏதாவது சம்பந்தப்பட்டிருக்க லாம்'' இப்படிப் பலப் பல குற்றச்சாட்டுகளுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.



ஆபீசில் கையாடி விட்டிருந்தால்கூட தேவலை... கடத்தல்காரர்களுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் பரவா யில்லை என்று மறுநாள் பத்திரிகையைப் பார்த்தவர்கள் சொல்லும்படி அவனைக் கலைவாணி தன்னுடன் சம்பந்தப் படுத்தி விட்டாள்.

சாதாரணமான குற்றமா...? ஒரு பெரிய அலுவலகத்தின் பொறுப்பான ஊழியன் அவன் என்று எல்லோரும் நம்பிக் கொண்டிருக்கும் சமயம்- பாவி! அவனை ஒரு கேவலமான மிருகமாக எல்லோர் முன்னும் நிறுத்தி வைத்து விட்டிருந்தாள்.

நேரே காவல்துறை வண்டி அவர்களை அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றது.

டியூட்டி டாக்டரிடம், அவனது உடைகளும் உடலும் பரிசோதனைக்கு ஒப்படைக்கப்பட்டன.

கலைவாணியைப் பரிசோதிக்க பெண் வைத்தியரிடம் அனுப்பினர்.

ஆத்மராமன் தனக்கு இப்படி ஒரு சோதனைக்காலம் வரும் என்று கனவிலும் நினைக்கவில்லை.

அவனது உடலையும் உடைகளையும்... கூர்ந்து நல்ல வெளிச்சத்திலே இரண்டு வைத்தியர்கள் மாறி மாறி பரிசோதித்தபோது அவன் அவமானத்தில் குன்றிப் போனான். ஆனால் யாரும் அவன் உள்ளத்தைச் சோதித்து உண்மையை உடனடியாக தெரிந்து கொள்ள முன் வரவில்லை.

சட்டம் எனும் கழுதை தன்பாட்டில் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

அதற்கு பின்னர் அவன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத் துச் செல்லப்பட்டான். அவனிடம் அதிகாரிகள் சரமாரி யாகக் கேள்விகளைத் தொடுத்தனர். அவன் சட்டென்று

பதிலளிக்க மறுத்தான். என்னுடன் கூட என் கட்சிக்குப் பேச வக்கீல் ஒருவரை அமர்த்திக் கொண்டுதான் நான் வாயைத் திறக்கப் போகிறேன் என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டான்.

இரவு பதினோரு மணி அளவில் காவல்துறை அதிகாரியே அவனிடம் சொன்னார், ''அன்று இரவு அவன் அங்கேயேதான் தங்கவேண்டும், வீட்டிற்குப் போக முடியாது'' என்று.

அட கடவுளே இதென்ன வெடிகுண்டு! செய்யாத ஒரு குற்றத்திற்கு அவனுக்குச் சிறைத் தண்டனையா? கண் இமைகளை நீர் சுட அவன் கலங்கிப் போனவனாக அதிர்ந்து போய் நின்றான்.

அவன் மேற்கொண்டு சிந்திக்குமுன்... காரிலிருந்து இறங்கி உள்ளே வந்தார் அவனது நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டர். அவருக்கு எப்படி செய்தி தெரிந்தது? அவன் வியப்புடன் அவர் முகத்தைப் பார்த்தான்.

''கவலைப்படாதே. நான் எல்லாத்துக்கும் ஏற்பாடு செய்து விட்டுத்தான் வந்திருக்கேன். உன் தாயார் போன் செய்தபோது நான் ரமேசன் வீட்டு விருந்தில் கலந்து கொண்டிருந்தேன். வீட்டுக்குத் திரும்பியதும் என் மனைவி சொன்னாள். உடனடியாக உன் அம்மாவைப் போய்ப் பார்த்தேன். என் குடும்ப வக்கிலுக்கு விஷயத்தைப் போனில் சொல்லிவிட்டு உன்னை பார்த்து தைரியம் சொல்ல வந்திருக்கேன். கவலைப்படாதே. நானிருக்கப் பயமேன்'' மிகவும் ஆறுதலாக படபடவென்று பேசினார்.

''கற்பழிப்பு குற்றம் சாதாரண விஷயமல்ல. அவர்கள் ஜாமீனில் விடுதலை செய்ய சாத்தியப்படாது. நாளை அவர் மாஜிஸ்திரேட் முன் ஆஜராகும்போது வக்கீல் வைத்து ஜாமீனில் அழைத்துக் கொண்டு போகலாம்...'' கண்டிப்பாக சொல்லி விட்டார் காவல்துறை அதிகாரி.



இப்படி அவனுக்குத் துராக்கிரகப் பிரவேசம்... சில மணி நேரம் இருக்கும் என்று ஜாதகத்தைப் பார்த்த எந்த ஜோஸியரும் இதுவரை சொன்னதில்லை.

அமோகமாக வாழப் போகிறீர்... சுக்ரதசை வரப்போ கிறது, ஓகோன்னு இருப்பீர் என்றுதான் புகழ் பாடினார்கள்.

அன்று இரவு முழுவதும் அவன் உறக்கமின்றி தரையில் அப்படியே அந்த அறைக்குள் உட்கார்ந்திருந்தான்.

அவன் படிப்பு, அந்தஸ்து, அவனது உத்தியோகம் எல்லாவற்றையும் அடித்து வீழ்த்திவிடும்போல இப்படி ஒரு பயங்கர குற்றம் அவன் மீது சுமத்தப்பட வேண்டுமா? அழமாட்டாது- துயரம் நெஞ்சை அமுக்கி விடிய விடிய அவன் உட்கார்ந்தான். விடியாத இரவாக அப்படியே நேரம் ஸ்தம்பித்துப் போகக்கூடாதா என்றதொரு வெறுப்பு.

மறுநாள் காலை அவன் எந்த முகத்துடன் அம்மாவைப் பார்ப்பான்?... எப்படி அலுவலகத்தில் தொடர்ந்து வேலை செய்வான்.

சங்கீதா கேள்விப்பட்டால் எப்படித் துடித்துப் போவாள். இவ்வளவு அவமானத்தையும் தாண்டிக் கொண்டு பொழுது ஏன் விடிய வேண்டும்?...

நளாயினிக்கு மட்டுமே அடங்கிபோன சூரியன்... மறுநாள் காலை வழக்கம்போல் கீழ்த் திசையில் உதயமாகி... மேலே எழும்பத் தொடங்கியது... பொழுது விடிந்தது... அத்துடன் பல புதிய பிரச்னைகளும் வெடித் தெழுந்தன. அந்த இரவோடு இரவாக எங்கிருந்தோ பத்திரிகை நிருபர் வந்து அந்தச் சங்கதியை எப்படியோ சேகரித்து சுடச்சுட நாளேட்டிற்கு தந்து உதவ... மறுநாள் காலை... பொழுது முடியுமுன் நாளேட்டுப் போஸ்டர்கள் அந்தச் செய்தியைக் கொட்டை எழுத்துக்களில் தாங்கி நின்றன.

''கொட்டும் மழையில்... காரில் பெண் கற்பழிப்பு!''

''பிரபல நிறுவனத்தின் பெரிய அதிகாரி மீது கற்பழிப்புக் குற்றச்சாட்டு.''

''பதினெட்டு வயதுப் பருவப் பெண் காருக்குள் பலவந்தமாகக் கற்பழிக்கப்பட்டாள்.''

பலவிதமான தலைப்புகளின் கீழ்... நாலைந்து தினசரிகளில் காலையிலும் மாலையிலும் அந்தச் செய்தி... பளிச்சென்று பிரசுரமாகி விட்டது. யாரோ ஒரு வேண்டாதவன் வேலை... நாளேடு வாங்கி அவன் தாயார் பெயருக்கு தபாலில் அனுப்பி வைத்திருந்தான். புண்ணியவான்... அம்மா அதைப் பிரித்துப் படித்து விட்டு அழுத அழுகை...

ஜகதீஷ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு வக்கீலுடன் வந்திருந்தார். ஜாமீனில் வீட்டிற்கு வந்து சேர பிற்பகலாகி விட்டது. பார்தி கண்டதும் கோவென்று கதறி அழுதாள்.

''ஜகதீஷ் ஸார்... உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன். இந்த ஆபத்திலிருந்து என் பிள்ளையை நீங்கதான் காப்பாத்தனும் ஒரு எறும்புக்குக்கூட தீங்கு நினைக்க மாட்டான் ஸார்.'' அம்மா நிறுவனத்தின் முதலாளியைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டபடி விக்கி விக்கி அழுதாள்.

நெஞ்சே வெடித்து விடும் போன்ற வேதனையில் துடித்துப் போனான் ஆத்மராமன். உபகாரம் செய்ய வேண்டி இரங்கியதின் விளைவு அவனை வாழ்க்கையின் உயரத்திலிருந்து அடிமட்டத்துக்கு இறக்கி விட்டதே... அம்மாவுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சி? முதலாளிக்கு எப்பேர்ப்பட்ட தலை இறக்கம்?

இதெல்லாம் தேவைதானா...? வெளியே சொல்ல முடியாது குமைந்து துயரத்திலே துவண்டு போனான்.



''இதோ பார் ஆத்மன்! ரெண்டு நாள் லீவு எடுத்துக்கிண்டுட்டு பிறகு ஒண்ணும் நடக்காதது போல நீ பாட்ல வேலையை வந்து கவனிச்சுக்கோ. யாரும் ஒண்ணும் பேச மாட்டா... முதல் நாளைக்குதான் எல்லாம் பெரிய அதிசயம் போல பார்ப்பா... பிறகு புஸ்ஸுன்னு அடங்கிப் போய் விடும்...'' ஆறுதல் கூறி விட்டுப் போனார் முதலாளி.

அவர் கூறியபடி அவன் இரண்டு தினங்களுக்குப் பின்னர் தான் அலுவலகத்திற்கு மீண்டும் வேலைக்கு போனான்.

அதற்குள் ஆபீஸ் முழுவதிலும் கொல்லென்று செய்தி பரவி விட்டிருந்தது. இரண்டு நாளில் அடங்கும் விஷயமாக அது இருக்கவில்லை... நகரத்தின் இன்னொரு பிரபல மனிதர் எக்கச்சக்கமாக ஏதாவது ஒரு குற்றத்தில் மாட்டிக் கொண்டு சந்தி சிரிக்க போஸ்டர்களில் பெயர் தொங்கும்படி நேரும் வரை... அவனைப் பற்றிய பேச்சு அலுவலகத்தில் அடங்காதது போல... இன்னமும் கொஞ்சம் அதிகப்படியாகவே பரவிக் கொண்டிருந்தது.

கடந்துபோன அந்த மழைநாள் சம்பவத்தையும் தொடர்ந்து ஏற்பட்ட பல அனுபவங்களையும் எண்ணி மனம் வெகுண்டபடி அவன் காரை வீட்டுக்கு ஓட்டி வந்தான்.

சோவென்று கொட்டிக் கொண்டிருந்த மழை ஓய்ந்து லேசாக தூறல்கள் விழுந்து கொண்டிருந்தன. அம்மா அவன் வருகையை எதிர்பார்த்து குடையை விரித்துக் கொண்டு கேட்டை திறந்து வைத்து விட்டு நின்றாள். இந்த வயதிலும் அவளுக்குத்தான் எத்தனை பொறுப்பு உணர்வு?

''ஏம்மா மழையிலே வந்து வெளியிலே நிக்கறேள்? உங்களுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துட்டா?'' அன்போடு கடிந்தபடி வண்டியை உள்ளே மெல்ல ஓட்டி கராஜிற்குள் நிறுத்தினான். கேட்டை சாத்தி விட்டு அம்மா அவனுக்காக

நின்றாள். கராஜின் கதவைப் பூட்டி விட்டு குடைக்குள் ஒண்டியபடி அம்மாவுடன் வீட்டிற்குள் வந்தான்.

பூஜையறையிலிருந்த சாயிபாபா படத்திற்கு முன் அம்மா ஏற்றி வைத்திருந்த கத்தை ஊதுவத்தியின் நறுமணம் வீட்டைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

அம்மாவின் அருகாமை வீட்டின் சூழ்நிலை எல்லாம் மனதிலே அவனை உதைத்து கொண்டிருந்த துயரத்தைப் பாதியாக்கி உணர்ச்சிகளை லேசாக்கி விட்டது போன்ற தொரு பிரமை ஏற்பட்டது. ''அப்பாடா! வீடு என்பதற்கே ஒரு தனி மகிமைதான்'' பெருமூச்சு விட்டபடி அவன் வேகமாக தன் அறைக்குள் சென்றான். அலுவலக உடைகளை களைந்து விட்டு லுங்கியும் பனியனுமாக வந்தான். ஆவி பொங்க காப்பியுடன் அம்மா சாப்பாட்டறை யில் அவனுக்காகக் காத்திருந்தாள். முகத்தைக் கழுவி முடியை சிராக்கிக் கொண்டு வந்து உட்கார்ந்தவனிடம் அம்மா பார்வதி மெல்ல பேச்சுக் கொடுத்தாள். ''இன்னிக்கு ஆபீசிலே ரொம்ப வேலையா?'' ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் அம்மா பார்வதி இப்படி ஒரு பூர்வ பீடிகையுடன்தான் ஆரம்பிப்பது வழக்கம். ''கொஞ்சம் வேலை அதிகமாகவே இருந்தது, ஏன் கேட்கிறேள்?''

''காப்பியை சாப்பிடு. ஆறிப் போயிடும். மூஞ்சி சோர்ந்தாப்பல இருந்தது. அதனாலே'' அம்மா தயங்கி விட்டு திடீரென்று ''அந்தப் பெண் வந்திருந்தா!''

திகைப்புடன் நிமிர்ந்தான். உதட்டைச் சுட்டு விட்ட காப்பியை வேகமாக விழுங்கினான்.

''அவதான், அந்தப் பெண் சங்கீதாதான் வந்திருந்தா.''

முகம் சிறுத்துப்போய் அம்மாவை ஊன்றிப் பார்த்தான். அண்ணா ராமசாமி அல்சேஷியன் நாய்களுடன் கேட்டருகே நின்று அவமானப்படுத்தியதின் நினைவு நெஞ்சை



நெருப்பாகத் தகிக்கவே அவன் கோபம் சங்கீதாவின்மேல் திரும்பியது.

''எதுக்கு வந்தாளாம்?'' சீறினான் சினம் மிகுந்த குரலில்.

''ஆபீசுக்கு போன் பண்ணினாளாம். நீ அவள் குரலைக் கேட்டதும் பட்டுனு போனை வச்சுட்டியாம்.''

''பெங்களூருக்குப் போயிருந்தாளே அங்கேயிருந்து எஸ்.டி.டி. போட்டுப் பேசினாளா?'' கேலியும் குரோத முமாக கேட்டான்.

''இதோ பார் ஆத்மா. குதர்க்கமா பேசாதே. யார் மேலேயோ ஏற்பட்ட உன் கோபத்தை அவள் மேலே காட்டறது நியாயமில்லை.''

''அவளுக்காக நீங்க எதுக்குப் பரிஞ்சு பேசணும்?''

''என்ன இருந்தாலும் அவள் இன்னும் கொஞ்ச காலத்திலே இந்த வீட்டுக்கு நாட்டுப் பெண்ணா வரப்போறவ.''

''கனவு கண்டுகொண்டு இருங்கோ.''

''ஆத்மா! ஒரு பொண்ணுக்கு இன்னொரு பொண்ணோட மனதை புரிஞ்சுக்க முடியும்.''

''அவளை நீங்க புரிஞ்சு கொண்டால் சரி. எனக்கு இப்ப தெரிஞ்சுக்க அவசியமில்லை. பணத் திமிர் பிடிச்ச மேல் மட்டத்துக்காரி. அவளைப்பற்றி எனக்குத் தெரிஞ்சுக்கத் தேவையில்லை.''

''மேல்மட்டத்து வாசிகளுக்கு பணத் திமிர். சரி ஒத்துக்கிறேன். கீழ்மட்டத்திலிருக்கிற அந்தப் பெண்ணுக்கு ஏண்டா அப்படி ஒரு திமிர். வழியிலே தன் பாட்டிலே போயிண்டிருந்தவனை நிறுத்தி காருக்குள் ஏறிண்டது மில்லாமே வீண் பழியை சுமத்தி ஒரு நாடகம் ஜோடிச்சுட்டாளே?''

''அம்மா'' எரிச்சலுடன் கத்தினான் ஆத்மராமன். ''எல்லா மட்டத்திலும் நல்லவாளும் இருக்கா, பொல்லாதவாளும் இருக்கா. அதை முதல்லே புரிஞ்சுக்கங்கோ.''

''பாவம் அந்தப் பெண் சங்கீதா. அவ அண்ணா மன்னிக்குத் தெரியாம உன்னைத் தேடிண்டு இங்கே வந்தா. உன்கிட்ட பேசணும். இந்த அபவாதத்தை நான் நம்பலைன்னு உன்கிட்ட நேரடியாகச் சொல்லணும்னு வந்தா. நீ அதுக்குள்ளே இன்னிக்கு ஏனோ கொஞ்சம் அவசரமாக ஆபீசுக்குப் புறப்பட்டு போயிட்டே.''

''அம்மா! இந்த கேஸ் அடுத்தவார வாக்கிலே கோர்ட்டுக்கு வரும். நீதிபதி தீர்ப்புக்கு பிறகு சங்கீதா தனது தீர்ப்பைச் சொல்லட்டும். இப்போது என்கிட்ட எதுவும் பேச வேண்டாம்.''

தீர்மானமாகக் கூறிவிட்டு அவன் எழுந்து தன் அறைக்குள் சென்று நாற்காலியில் தொப்பென சரிந்து கொண்டான்.

சங்கீதாவை அவன் உயிருக்கு மேலாகக் காதலித்தான். ஆனால் அவள் அண்ணன் சொன்ன வார்த்தைகளை... அந்த அவமானத்தை, மன்னி போனில் பேசிய தோரணையை எப்படி மறக்க முடியும்? அப்படிப்பட்ட இடத்திலிருந்து பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டால் அவன் அவர்கள் வீட்டுக்கு வேண்டாத மாப்பிளையாகி இருப்பான். காலம் முழுவதும் கஷ்டப்பட்ட அம்மா முடிவில் வேதனைப்படுவாள். இப்போது ஏற்பட்டிருக்கும் வீண் அபவாதமும் வேதனையுமே அவளுக்கு எட்டு ஜென்மங்களுக்குப் போதுமே!

சாப்பாட்டிற்குப் பின்னர் அவன் தொலைபேசியில் வக்கீல் வரதராஜனை அழைத்துப் பேசினான்.

''ஆத்மா! நீ எப்பொழுதாவது அமெரிக்காவுக்குப் போயிருக்கியோ?''



''இதென்ன அசட்டுக் கேள்வி?'' எரிச்சலுடன் எண்ணியபடி ஆத்மராமன் லேசாகச் சிரித்தான்.

''சினிமாவிலே பார்த்திருக்கிறேன். ''நயக்ரா நீர்வீழ்ச்சிகள் படத்திலே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஏன் கேட்கிறீர்கள்?''

''சீக்கிரம் அங்கெல்லாம் போற யோகம் வரும் உன் கம்பெனி மானேஜிங் டைரக்டர் உன் மேலே ரொம்பப் பிரியம் வச்சிருக்கார்.''

''விஷயத்துக்கு வாரும். இதெல்லாம் என்ன கதை.'' தன்மானம் கப்பலேறிக் கொண்டிருக்கும்போது வக்கீல் ஜோக் அடிக்கிறாரே? ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு தொண்டையைச் செருமினான். ''தாங்யூ! முதலிலே இந்த வம்பிலிருந்து விடுபட்டாலே உலகம் முழுவதையும் சுத்திட்டு வந்துட்டாப்பல நினைச்சு சந்தோஷப் பட்டுக்குவேன்.''

''அமெரிக்காவிலே இரான் சன்யான் என்கிற இடத்தைப் பார்க்க நான் கிரேஹவுண்ட்ஸ் என்கிற பஸ்சில் போனேன். முதலிலே என் கண்களில் பட்டது என்ன தெரியுமா?

''ஓட்டுகிற பொறுப்பை என்னிடம் விட்டு விட்டு நிம்மதியாகச் சுற்றி அவளைக் கண்டு களி. பஸ்சில் கொட்டை எழுத்தில் போர்டு தொங்கறது.''

''நான் அமெரிக்காவுக்குப் போகறச்சே கட்டாயம் போர்டை கவனிக்கிறேன்.''

''அதை இப்பவே கவனி. அதாவது இந்த கேஸ் பத்தின கவலைகளை என்கிட்டே விட்டுட்டு நீ ரிலாக்ஸாக உன் வேலைகளைக் கவனின்னு சொல்லத்தான் வந்தேன்.''

''வந்து அந்த கேஸ்...'' மென்று விழுங்கினான் ஆத்மராமன்.

''அதான் சொல்லிட்டேனே. அது என் கடமை வாயை மூடிண்டு சுகமாக நிம்மதியாக இருக்க வேண்டியது உன் கடமை. புரிஞ்சுதா?'' கடகடவென்று சிரித்து விட்டு வக்கீல் வரதராஜன் போனை வைத்து விட்டார்.

நெற்றி மீது முத்தாக அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டான் ஆத்மராமன்.

அவனது சிநேகிதன் அடிக்கடி ஒரு ஜோக்கைத் திரும்பத் திரும்ப அலுக்காது சொல்வது வழக்கம்.

வக்கீல்களும் சரி, வைத்தியர்களும் சரி, கடைசி வரை தம்மால் ஆகாது என்று ஒட்டு மொத்தமாக கைவிரிக்கவே மாட்டார்கள். கைதி தூக்குக் கயிற்றைத் தழுவப் புறப்படும் வரை இந்த செக்ஷன் மூலம் அப்பீல் செய்து ஒரு கை பார்த்து விடலாம். கவலை வேண்டாம் என்று நம்பிக்கை கொடுத்துக் கொண்டேயிருப்பார் வக்கீல்.

''இப்ப லேட்டஸ்ட்டா ஒரு மருந்து வந்திருக்கு. அதையும் கொடுத்துப் பார்க்கலாம்னு எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கு.'' பலமாக தலையை ஆட்டுவார் டாக்டர்.

கடைசிவரை போராட வக்கீல் வரதராஜனுக்கு இந்தியன் பீனல்கோடில் பல செக்ஷன்கள் உதவலாம் என்கிற நம்பிக்கை ஒரு பாவமுமறியாத அவனை ஒரு இரவு போலீசில் அடைத்து வைத்தார்களே? அப்பொழுதே சட்டத்தின் மீது அவனுக்கு இருந்த நம்பிக்கையெல்லாம் சிதறிப் போய்விட்டிருந்தன.

ஏன் இத்தனை நாட்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்?

இந்தத் தவிப்பில் பயங்கர எதிர்பார்ப்பிலேயே அவன் அணு அணுவாக செத்துக் கொண்டிருக்கிறானே? இந்தத் தண்டனையே போதும். இனி ஆயுசுக்கும் எந்த அபலைப் பெண்ணுக்கும் உதவ அவன் சத்தியமாக முன்வரமாட்டான்.



மழையிலே நனையட்டும், வெய்யலில் காயட்டும். நமக்கேன் பாடு என்று யாரையும் பார்க்காது தெருவையே பார்த்த வண்ணம் வண்டியை ஓட்டிச் செல்வான் என்பது திண்ணம். ஆனால் சூழ்நிலையும் சந்தர்ப்பங்களும் அவனுக்கு சதி செய்து குற்றவாளி என்று அந்த நாடக கோஷ்டி அவன் மீது ஏற்படுத்திய பழியை நிரூபித்து விட்டால்... ஐயய்யோ...

படுக்கையில் புரண்டபடி உறக்கமில்லாது இன்னொரு இரவைக் கழித்தான்.

# 6

சங்கீதா சிந்தித்தபடியே மெல்ல மெல்ல பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள். அவள் ஒரு முடிவுடன்தான் வீட்டை விட்டுக் கிளம்பியிருந்தாள். அன்று காலை வந்த பத்திரிகையில் வெளிவந்திருந்த அந்தச் சங்கதியை அவள் பார்வைக்காக அண்ணா வேண்டுமென்றே அந்தப் பக்கத்தை மடித்து சாப்பாட்டறை மேஜையில் அவள் தட்டருகே வைத்திருந்தார்.

அண்ணா ராமசாமிதான் காலையில் முதல் வேலையாக தினசரி பத்திரிகையை பிரித்துப் படிப்பது வழக்கம். அதற்குப்பின் காப்பி சாப்பிடும்போது அவள் படித்தாக வேண்டும். இல்லாவிட்டால் தலை வெடித்து விடும் போன்றதொரு தவிப்பு ஏற்படும்.

குளித்துவிட்டு அவளுக்குப் பிடித்தமான நீலவண்ண மல்மல் சேலையை உடுத்திக் கொண்டு கண்ணாடி முன் கொஞ்ச நேரம் அதிகமாகவே அன்று அவள் நின்று கொண்டிருந்தாள்.

மனதில் கொப்பளித்த ஒரு உற்சாகமும் மகிழ்ச்சியும்தான் அதற்குக் காரணம்.

வேலைக்காரி பறித்துக் கொண்டு வந்து வைத்த கொடி சம்பகப்பூவை ஊசியால் கோர்த்து மலர்ச் சரத்தைத் தலையில் சூடிக்கொண்டாள். பட்டும் படாததுமாக உதட்டின் மீது சாயத்தைப் பூசிக்கொண்டு நாவால் ஈரப் படுத்திக் கொண்டு மினுமினுத்த தன் அதரங்களின் அழகைத் தானே ரசித்தபடி சிறிது நேரம் நின்றாள். அண்ணா முதல் நாள் இரவு உறங்கப் போகுமுன் மன்னியிடம் சொல்லியது அவளுக்குக் கேட்டு விட்டது. அவள் தூங்கி விட்டாள் என்று நினைத்துத்தான் அண்ணா பேசினார்.

''கனியூர் ஜோசியர்கூட நம்மை கைவிட்டு விட்டார்.''

''என்ன சொல்றேள்'' குழப்பத்துடன் கேட்டாள் மன்னி ஜெயா.

''இரண்டு பேர் ஜாதகத்தையும் கொடுத்தேன் இல்லையா, ரொம்ப பிரமாதமான பொருத்தம். இந்த இடத்திலேயே முடிச்சுடுன்னிட்டார்.''

''அவர் சொன்னா சரிதான்னு உங்கப்பாகூட நம்ப கல்யாணத்துக்கு ஒரு முட்டுக்கட்டை போடலையே? அவர் என் ஜாதகத்தைப் பார்த்துட்டு பேஷ்ன்னு தலையாட்டின தும்தானே நம்ப கல்யாணம் நிச்சயமாச்சு அதுபோல நீங்க உங்க தங்கை கல்யாணத்துக்கு ஜாதக்தை ஒரு சாக்காக வச்சிண்டு இருந்தேள். இப்போ அதுவும் முடியாதுபோல ஜேசியரே ஓ.கே. சொல்லி விட்டாராக்கும் முழிக்கிறேள்!'' கலகலவென்று சிரித்தாள் மன்னி.

''நீ என்ன சொல்றே?''

''சொல்லறதுக்கு என்ன இருக்கு? மனம்போல மாங்கல்யம்னு முடிக்க வேண்டியதுதான்.''

''அந்தஸ்துன்னு ஒண்ணு இருக்கே. அதனாலே...''

''ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி முடிக்கறதுக் குள்ளே எத்தனை முட்டுக்கட்டைகள். வரதட்சணை ஜாதகப்



பொருத்தம், அந்தஸ்து... அப்பப்பா? உங்க தங்கை ஜாதி மதப் பிரச்சனைகளைக் கொண்டு வராம சமத்தா ஒரு நல்ல பையனா பொருத்தமானவனைப் பார்த்துத்தான் காலிச் சிருக்கா. அதுவரை நீங்க பிழைச்சேன்னு நினைச்சுக்கோங்க. அந்தஸ்து நாமே பார்த்து ஏற்படுத்திக்கிறது. வாரச் சாப்பாட்டுக்கு வீடு வீடாக அலைஞ்சு படிச்சு முன்னுக்கு வந்தவா எல்லாம் பிற்காலத்திலே பேரும் புகழுமா வாழலையா? நான் சொல்றதைக் கேளுங்க. உங்க தங்கை வாழ்க்கைக்கு குறுக்கே நிக்காதீங்க.''

''நீ அவளுக்கு ரொம்பவே வக்காலத்து வாங்கறே?''

''நமக்கும் ஒரு பெண் குழந்தை இருக்கா. நாளைக்கு அவ என்னவெல்லாம் சொல்வாளோ? காலம் மாறிண்டு வரதை நாம் மறக்கக்கூடாது.''

''இருக்கட்டும். நாளைக்கு கனியூர்காரர்கிட்டே போய் மறுபடியும் கேட்டுப் பார்க்கிறேன். அவர் உத்தரவு கொடுத்தா...''

''உத்தரவுதான் கொடுத்துட்டாரே? ஏன் குட்டையைக் குழப்பிக் கொண்டு இருக்கேள். ஏதாவது ஒரு சாக்கு அகப்படாதான்னு பார்க்கிறேள். ரொம்ப தப்பு'' கண்டிப் பான குரலில் சொன்னாள் மன்னி... மன்னி ஜெயா ஆரம்பத்திலிருந்து தனக்காக வாதாடி காரியத்தை வெற்றி கரமாக முடித்துக் கொடுப்பாள் என்று பூரணமான நம்பிக்கையில் அவள் மகிழ்ச்சியுடன் உறங்கிப் போனாள். தன் வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கைகளுடன் அவள் அன்று காலை உற்சாகமாகத்தான் சாப்பாட்டறைக்குள் நுழைந்தாள். ஆமாம், மன்னி ஜெயாவின் முகத்தில் ஏன் இப்படி ஒரு கடுமை? அண்ணா ஏன் துர்வாசரைப் போல உறுத்துப் பார்க்கிறார்? கலவரத்துடன் அவள் தன் தட்டில் சமையல்காரர் பரிமாறின இட்டலிகளை சாப்பிடத் தொடங்கினாள்.. ஒரு விள்ளலை வாயில் போட்டு

விழுங்குமுன் கண்களை வெட்டுவதுபோல அந்தச் செய்தி பத்திரிகையின் இரண்டாவது பக்கத்தில் முதல் பகுதியில் பளிச்சென்று காணப்பட்டது.

அதைப் படித்து முடித்தவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இட்டலி விள்ளல் தொண்டையை இறுக்கிக் கொண்டு விட்டது போன்ற உணர்வில் மூச்சுத் திணறிப்போய் தம்ளரிலிருந்த நீரை வேகமாகப் பருகினாள். அதற்குள் கண்களில் நீர் பொத்துக் கொண்டு விட்டது.

''நான் சொன்னப்போ உனக்கு ஏற்கலை. இப்போ நீயே தெரிஞ்சுக்கோ. அந்த ஆத்மராமன் படு அயோக்கியன். நல்ல வேளை நாம் இந்த அவமானத்திலிருந்து தப்பினோம்.'' விர் என்று எழுந்து மாடிக்கு விரைந்து விட்டாள் சங்கீதா. குளியலறைக்குச் சென்று குழாயைத் திருப்பினவள் குமுறிக் குமுறி அழுதுகொண்டு நின்றாள். கையைக் கழுவி விட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டு அவள் வெளியே வந்ததும் அண்ணா மாடியின் முன்னறையில் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''இதோ பார். கடைசியா சொல்லிட்டேன். இந்த ஆசையை விட்டுட்டு உன் கவனத்தை வீணை வாசிப்பிலே-வீட்டை நிர்வகிப்பதிலே செலுத்து. அப்பாவுக்கப்புறம் உன் நன்மையைப் பத்தி தீவிரமா சிந்திச்சு செயல்படுகிறவன் உங்க அண்ணன் ஒருத்தன்தான் என்கிற நினைப்பிருக்கட்டும்.'' உறுமிவிட்டு கீழே இறங்கிப் போய் விட்டார். மறுப்பு சொல்ல... ஏதாவது ஒரு காரணம் கிடைக்காதா என்று தேடிக்கொண்டிருந்த அண்ணாவுக்கு இப்போது ஒரு பலத்த காரணம் கிடைத்து விட்டதே...

''இதோ பார்! பெரியவா பேச்சைக் கேள். இதுவரை நான் உன் கட்சியில்தான் இருந்தேன். இந்த அசிங்கத்தை பேப்பரில் பார்த்த பிறகு, எனக்கே மனம் மாறிப் போச்சு. என் சிநேகிதி யோகாம்பாள் அதுக்குள்ளே போன் பண்ணி



துக்கம் விசாரிச்சுட்டா. உன் நாத்தனாருக்குப் பார்த்துண்டிருக்கிறதா சொன்னியே, அந்தப் பையன் ஆத்மராமன்... அவனைப் பத்தி ஒரு விஷயம் பேப்பரில் வந்திருக்கு, பொய்யான்னு கேட்டார். ரொம்ப அவமானமா இருந்தது. நம்ப வீட்டு டிரைவர் சமையல்காரர்கிட்டே சொல்லிண்டு இருந்தேன். எதேச்சையாகக் கேட்டேன். உடம்பு வெட்கத்தில் குன்னிப் போச்சு...''

''நம்ம சின்னம்மாவோட பீச்சிலே பார்த்தீங்களே அந்த மனுஷன் செய்திருக்கிற செயலைக் கவனிச்சீங்களா? பெரிய மனுஷன் வீட்டு மாப்பிள்ளையாகப் போகிறோம்னு இப்பவே தமது லீலைகளை ஆரம்பிச்சுட்டான் போல இருக்கு...''

''உரக்கப் பேசாதே- நமக்கேன் பெரிய இடத்துப் பொல்லாப்பு அப்படின்னு சொல்லிட்டு சிரிச்சார். இதுக்குள்ளே எங்கெல்லாம் இந்த சங்கதியைப் படிச்சுட்டு யாரெல்லாம் நம்பளைப் பார்த்து சிரிக்கிறாளோ தெரியாது. ஆத்மராமன் இப்படி விவஸ்தை கெட்டுப் போக வேண்டாம். கன்னக்கோல் வைக்கிற இடம் சாத்திற இடம்னு தராதரம் இல்லையா...? ஸாந்தோம் பக்கத்திலே, போயும் போயும் யாரோ... ஒரு குடிசைப் பெண்ணைப் போய்...''

அதற்குமேல் அவளால் தாங்க முடியவில்லை... ''மன்னி இந்தக் காரியத்தைச் செய்யக்கூட அந்தஸ்து பார்க்கணுமா? குடிசைப் பெண்ணின் கற்புக்கும்- பங்களாவில் வசிக்கிற பெண்ணின் கற்புக்கும் வித்தியாசமான விலையா; வித்தியாச நியாயமா? மன்னி! நான் இதை நம்பலை... நம்பவே மாட்டேன்.''

''பத்திரிகையில் வந்திருக்கே...''

''என்ன வந்திருக்கு...! குற்றம் சாட்டப்பட்டதாக... விசாரணைக்குளடுத்துக் கொள்ளப்பட்டதாகத்தானே வந்திருக்கு...?''

''நீதிமன்றம்- நீதிபதி- சட்டம் இதெல்லாம் இருக்கு. இதை விசாரிச்சு தீர்ப்பு வழங்குகிறவரை ஆத்மராமன் இந்திய பீனல்கோட்படி குற்றம் அற்றவர். நம் நாட்டில் ஒரு கொலையாளியைக்கூட குற்றம் ருசுவாகிறவரை நீதிபதி தமது தீர்ப்பை சொல்லுகிறவரை நிரபராதி என்கிற கண்ணோட்டத்தில்தான் சட்டம் பார்க்கிறது. அதனாலே நீங்க பேப்பர்லே வந்ததை வச்சுண்டு அவர் மேலே பழியைப் போட்டா நான் ஒத்துக்கமாட்டேன்.''

''உங்கண்ணா இதுக்கு மேலே ஒத்துக்கமாட்டார்! அவ்வளவுதான்!''

ஜெயா மன்னி வேகமாக கீழே இறங்கிப் போய் விட்டாள்.

சிறிது பொழுதில் அவளைப் போனில் சிநேகிதி துளசி கூப்பிட்டாள். அவளும் துளசியும் இணை பிரியாத தோழிகள். ஒரே கான்வென்ட்டில் ஒரே வகுப்பில் ஒன்றாகப் படித்து, ஒரே மாதிரி பட்டதாரிகளாகி செக்ரட்டேரியல் கோர்ஸில் ஒரே நிறுவனத்தில் சேர்ந்து தேர்ந்து வெளி வந்தவர்கள். இப்போது ஜோடியாகக் கல்யாணத்தை எதிர் நோக்கி நிற்கும் பெண்கள்.

''காலை பேப்பரில் வந்ததைப் பார்த்தியா?'' துளசி வியப்புமிக்க குரலில் கேட்டாள்.

''பார்த்தேன். நான் நம்பலை... ''படக்கென்று போனை வைத்து விட்டாள். அவளுக்கிருந்த மனநிலையில் அவள் யாருடனும் பேச விரும்பவில்லை.

அண்ணா' அலுவலகம் போன பின்பு- அவள் கீழே இறங்கி வந்து தொலைபேசியில் ஆத்மராமனைக் கூப்பிட நினைத்தாள். ஜெயா மன்னி வேட்டை நாயாக... போனைப் பாதுகாத்து நிற்பதை ஜாடையாக உணர்ந்து தவித்துப் போனாள்.



இரண்டு நாட்கள் சென்றன. நரக வேதனையில் நாழியைப் போக்கிக் கொண்டிருந்த சங்கீதா மூன்றாவது நாள் காலை மெல்ல கீழே வந்தாள். மன்னி குளித்துக் கொண்டிருந்தாள். அண்ணா அலுவலகம் போய் விட்டிருந்தார்.

சட்டென்று போனை எடுத்து ஆத்மராமனது அலுவலகத் திற்கு போன் செய்தாள்.

அவன் டைரக்டருடன் இருப்பதாக ரிஸப்ஷனிஸ்டிட மிருந்து பதில் கிடைத்தது. அவன் விட்டிற்குப் போன் செய்து மாலை வேளையில் பேசலாம் என்றால் அண்ணாவின் கடுமையான கண்காணிப்பு. என்ன செய்வது, எப்படித் தொடர்பு கொள்வது என்று கலங்கிக் கொண்டிருந்த சமயம்தான் அன்று மாலை ஜன்னல் வழியாகப் பார்த்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

ஆத்மராமன் தானாகவே அவர்கள் வீட்டைத் தேடிக் கொண்டு வந்திருந்தான்.

ரோஷி-ரம்மி என்ற அவர்கள் வீட்டு இரு அல்சேஷியன்கள் பின் தொடர அண்ணா தோட்டத்திற்குள் உலாவிக் கொண்டிருந்தவர், அவன்மேல் நாயா எரிந்து விழுந்தார். அன்று அவள் அழுத அழுகை.

அடுத்த நாள் காலை மன்னிதான் போனை எடுத்தாள்.

''பெங்களூருக்குப் போயிருக்காள்'' என்று கூசாமல் ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு வைத்து விட்டாள்.

''மன்னி, ஆத்மா போன் பண்ணினாரா? ஏன் அப்படி ஒரு பொய் சொன்னேள்?'' என்று கோபத்தோடு கேட்டாள் சங்கீதா.

''இந்த கேஸ் விவகாரம் முடியும் வரை அவரைப்பத்தி வாயைத் திறக்காதே. அண்ணாவுக்குக் கோபம் வந்தால் பின் எங்கே போய் நிற்கும்னு சொல்ல முடியாது.''

இத்தனை நாள் தன் பக்கம் இருந்த மன்னி ஜெயா இப்போது கட்சி மாறத் தொடங்கி விட்டாள்.

இனி அவளாகவேதான் நிலைமையைச் சமாளிக்க வேண்டும். இதனால் வீட்டில் எந்த சண்டை சச்சரவு ஏற்பட்டாலும் சரி. அடாப் பழியால் மனம் நொந்து போயிருக்கிறவனுக்கு ஆறுதலாக அவள் ஏதும் சொல்லா திருப்பது முறையா?

''பயப்படாதீர்கள். நான் உங்களுக்குத் துணையாக உங்கம்மா பக்கம் இருக்கிறேன்'' என்று ஒரு வார்த்தை அவளே நேரில் சொன்னால் எத்தனை தெம்பாக இருக்கும்.

அண்ணா டெல்லிக்கு தமது விளம்பரக் கம்பெனி சம்பந்தமாக புறப்பட்டுப் போயிருந்தார்.

அண்ணா ஊரில் இல்லாவிடில் மன்னி தன் சிநேகிதி களைப் பார்த்துவரக் கிளம்பி விடுவாள்.

''வீட்டைப் பார்த்துக்கோ நான் திருவான்மியூர் வரை போயிட்டு வரேன்'' அவளிடம் சொல்லி விட்டு மன்னி கிளம்பியிருந்தாள்.

இதுதான் சமயமென்று சங்கீதா பஸ்சில் புறப்பட்டு விட்டாள்? மாலை அலுவலகம் முடிந்ததும் ஆத்மராமன் வீட்டுக்குத் திரும்புவான். அவனை வீட்டிலேயே சந்தித்துப் பேசிக் கொள்ளலாமே என்ற நம்பிக்கை.

கதவைத் திறந்த பார்வதி ஒரு கணம் அயர்ந்து போனாள். ''வாம்மா'' வாய் நிறைய அழைத்தாள்.

தனக்காக தம்ளரில் கலந்து வைத்திருந்த காப்பியை யையும்- மகனுக்காக ஆசையுடன் செய்து டப்பாவில் பத்திரப்படுத்தியிருந்த முறுக்கில் இரண்டையும் கொண்டு வந்து மேஜை மீது வைத்து உபசரித்தாள். பார்வதியைப் பார்த்ததுமே சங்கீதாவின் கண்கள் கலங்கி விட்டன. காப்பியை மட்டும் சாப்பிட்டாள்.



''மாமி! ஆத்மா பற்றிப் பத்திரிகையில் வந்திருக்கிற சங்கதியை நான் நம்பலை. தைரியமாக இருக்கச் சொல்லத் தான் அவரைப் பார்க்க வந்திருக்கேன்.''

''சந்தோஷம். உன்னைப்போல உங்கண்ணாவும்- மன்னியும் அவன் பேர்லே நம்பிக்கை வச்சிண்டு, இருந்தா இந்த சமயம் ரொம்ப தெம்பு இருந்திருக்கும்.

''மாமி அவருக்கு என்னுடைய அபிப்பிராயந்தான் மிகவும் முக்கியமானது. எங்கண்ணா- மன்னி அவரைப் பற்றி குறைவா நினைச்சா நினைச்சுக்கட்டும்.''

''அதெப்படி? அவா மதிப்பிலே என் பிள்ளை குறைஞ்சு போயிட்டா நாளைக்கு எந்த முகத்தை வச்சுண்டு அங்கே வர முடியும்? வந்தவனுக்குத்தான் சரியான வரவேற்பு கிடைச்சுதே?''

பார்வதியின் வார்த்தைகள் சுருக்கென்று முள்ளாக மனதில் தைக்க... சங்கீதாவுக்கு அழுகை தொண்டை வரை வந்து விட்டது.

கண்களில் பெருகிய கண்ணீரைச் சமாளித்தாள். தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''அப்படி நீங்க நினைச்சா நான் கட்டின புடவையோட உங்காத்திலேயே இருந்துடறேன். கேஸ் முடிஞ்சதும் கல்யாணத்தை நீங்களே எங்கேயாவது ஒரு கோவிலில் நடத்தி வச்சுடுங்கோ- மாமி!'' தழதழத்தாள்.

பார்வதி மெல்லியதாகச் சிரித்தாள். ஆதரவுடன் அருகில் வந்து தோளைத் தட்டினாள்.

''சங்கீதா, நீ படிச்ச பொண்ணு, புத்திசாலி அவசரப்பட்டு அசட்டு பிசட்டுன்னு எதுவும் செய்துடக் கூடாது. உங்கண்ணாவே மனம் மாறி அவசரமாக வந்து ஆத்மா கிட்டே மன்னிப்பு கேட்பார். உங்க கல்யணத்தை சந்தோஷமா எடுத்துச் செய்வார். நாலுபேருக்குப்

பயந்துண்டு நீ வீட்டை விட்டு ஓடி வந்துட்டதாக உன் மேலே வீண் பழி வேறே ஏற்படணுமா? ஆத்மா படற கஷ்டம் போதும்... நான் சொல்றதைக் கேளு. நீ உடனடியாக உங்க வீட்டுக்குத் திரும்பிப் போயிடு. இப்ப அவன் இருக்கிற மன நிலையில் உங்கிட்ட ஏதாவது கோபமா கத்திட்டா உன் மனம் கஷ்டப்படும். என் பிள்ளையைப் பத்தி எனக்குத் தெரியும். அதனால் சொல்றேன்...'' உபதேசித்தாள்.

அதற்குமேல் வருங்கால மாமியாரின் பேச்சை மீறிக் கொண்டு அங்கே தங்கியிருப்பது தவறு என்று தோன்றவே விரைவில் விடை பெற்றுக் கொண்டாள் சங்கீதா.

''நான் வந்ததாகச் சொல்லுங்க மாமி. ரொம்ப தாங்க்ஸ்'' கூறி விட்டு வெளியே வந்தாள்.

நேரே அவள் தன் வீட்டிற்குத் திரும்பவில்லை.

திருவல்லிக்கேணிக்குப் பஸ் பிடித்து நிலையத்தில் இறங்கி வராகசாமி தெரு நோக்கி நடந்தாள்.

தெருவுக்குள் நுழைந்ததும்... கம்பி போட்ட முதல் வீடு இன்னமும் அதே பச்சை சாயத்திலே தெரிந்த அந்த பழைய காலத்து வீடு... அவள் சிநேகிதி ரம்யாவின் வீடு. ரம்யா கல்யாணமாகி புக்ககம் போய் விட்டாள். ஆனால் அவள் இப்போது பார்க்கப் போகிறது அவளது அப்பா கோபால் சாமியைத்தான்.

அவர் ஒரு பிரபல வழக்கறிஞர். இத்தனை நேரம் கோர்ட்டிலிருந்து வீடு திரும்பியிருப்பார்.

யோசித்தபடி அவள் கம்பி கேட்டருகே வந்து நின்றதுமே ''வாம்மா!'' கோபால்சாமி அவளை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

நீதிமன்றத்து உடைகளைக் களைந்து விட்டு... வெள்ளை வேஷ்டியும் பனியனுமாக... நெற்றி நிறைந்த நாமத்துடன்



கோவிலுக்குக் கிளம்பும் தோற்றத்திலே வாயில் வராந்தாவில் தொங்கிய ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார்.

''வெளியிலே கிளம்பிண்டு இருக்காப்பல தோணறது. உங்ககிட்ட அஞ்சு நிமிஷம் பேசலாம்னு வந்தேன்.''

தயங்கினாள் அவள்.

''ஐந்து நிமிஷம் என்ன ஐம்பது நிமிஷம்னாலும் ஏதாவது முக்கியமான காரியமா இருந்தா அதை முதலில் கவனிச்சிட்டு கிளம்பறேன். இப்படிக் கோவில் பக்கம் கொஞ்சம் காலாற போய்ட்டு வர பழக்கம். அவ்வளவுதான் வா...'' உபசரித்தபடி, முன் பக்கமிருந்த தமது அலுவலக அறைக்குள் அழைத்துச் சென்றார்.

நாற்காலியில் உட்கார்ந்த சங்கீதாவுக்கு அடக்க முடியவில்லை. ''ஸார்! நான் இங்கே எதுக்காக வந்திருக்கேன்னா, என் பியான்ஸி ஆத்மராமனைப் பத்தி அவருக்கு ஏற்பட்டிருக்கிற அபவாதத்தைப் பத்தி...'' சொல்லிவிட்டு... பேச முடியாது... விசும்பி விட்டாள்.

''எனக்கு எல்லாம் தெரியும். என் சிநேகிதன் வரதராஜன் அந்தக் கேசை எடுத்துண்டு இருக்கான்... அடடா! எதுக்கு இப்படி அழறே?''

''கற்பழிப்புன்னு நிரூபிச்சா, சட்டம் இப்போ ரொம்ப கடுமையாயிட்டதாமே. இரண்டு வருஷத்திலிருந்து- ஏழு வருஷம் வரை உள்ளே தள்ளி விடுவாங்களாமே?''

''கற்பழிச்சுட்டதாக நிரூபிக்கப்பட்டால்தானே இந்தத் தண்டனை? இதோ பார் சங்கீதா... இந்தக் கற்பழிப்புச் சட்டம் இருக்கே அது ரொம்பவும் சிக்கலானது. பல ஓட்டைகள் அதிலே இருக்கு ஐ.பி.சி. (375) முன்னூத்தி எழுபத்தஞ்சு என்னும் சட்டத்தின் கீழே ஒரு பெண்ணை அவள் சம்மதமின்றி ஒரு மனிதன் பெண்மையை அழித்தான் என்றாலும், அவன் பலவந்தப் படுத்தி பெண்மையைச்

குறையாடினாலும் அல்லது அவள் உயிருக்கு ஆபத்து உண்டாவதாகப் பயமுறுத்தி அவளைக் கட்டுப்படுத்தி னாலும், வயது குறைவான அதாவது மைனர் என்று சொல்லப்படும் பதினாறு வயதுக்குட்பட்ட பெண்ணை அவள் பூரண சம்மதம் கொடுத்திருந்தாலும் பெண்மைக்கு பங்கம் என்று ஐயமற நிரூபிக்கப்பட்டாலும்தான் அவன் கற்பழித்த குற்றவாளியாகிறான்.

''சட்டத்திற்குள் இத்தனை கிளைப் பிரிவுகள் இருப்பதால் உண்மையாக கற்பழித்தவனே, சுலபமாக தப்பிக்கொள்ள முடிகிறது. மேலும் தன்னைக் கற்பழித்து விட்டதாக, மேலே புகார் செய்கிற பெண் அதைப் பூரணமாக நிரூபிக்க வேண்டும். ஆத்மராமன் வழக்கில் இந்த விவகாரங்களுக்கு இடமில்லை. நீயேன் அனாவசிய மாகக் கவலைப்படுகிறாய்?''

''தயவு செய்து ஒரு விவரம் எனக்கு அந்த வக்கீல் வரதராஜனிடம் இருந்து கேட்டுச் சொல்வீர்களா ஸார்? அந்தப் பெண் யார்? அவள் வசிக்கும் இடம், சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் நேரம் இத்யாதிகளை விவரமாகக் கேட்டு, நான் நாளைக்கு இந்த நேரம் போன் பண்றப்போ சொல்வேளா...?''

''நாளைக்கு என்னத்துக்கு? இப்பவே கேட்டுச் சொல்றேன். ஆமாம், நீ என்ன இந்த விவரமெல்லாம் கேட்டு அகதாகிரிஸ்டி கதையிலே வர மிஸ் மார்பிள் போல ஏதாவது துப்புத் துலக்கப் போறயா...?'' சிரித்தபடி அவர் தொலைபேசியில் தமது நண்பரை அழைத்தார்.

சிறிது பொழுதில் அவள் வீட்டுக்குள்ளே சென்று... திருமதி கோபால்சாமியையும் சந்தித்து, எலுமிச்சம்பழ சர்பத்தைச் சாப்பிட்டு விட்டு... கோபால்சாமி விவரமாக எழுதிக் கொடுத்த தகவல்கள் நிறைந்த கடிதத்துடன்... வீட்டுக்குத் திரும்பினாள்.



டெல்லியிலிருந்து திரும்பி வந்த ராமசாமி தங்கை சங்கீதாவிடம் பெருத்த மாறுதலைக் கண்டு வியப் படைந்தார்.

முன்போல் அவள் அண்ணாவைக் கண்டு பதுங்கிப் போகவில்லை.

நேருக்குநேர் அவனைப் பார்த்து வழக்கம் போல் குழந்தைத்தனமாக சங்கோஜத்துடன் புன்முறுவலித்தாள்.

''அண்ணா வந்திருக்கார். காரிலிருந்த ஃபிரிப் கேசை போய் எடுத்து உள்ளே வை.'' வேலையாளுக்கு உற்சாகமாக உத்தரவிட்டாள்.

காலையில் எழுந்து குளித்துவிட்டு வழக்கம் போல தோட்டத்திற்குள் சென்று பூஜை அறைக்கு வேண்டிய பூக்களைத் தானே பறித்து கூடையில் நிரப்பி எடுத்து வந்தாள்.

சாப்பாட்டறையில் யாரையும் நிமிர்ந்து பாராது... தட்டின் நாலு பக்கத்திலும் உணவை ஒதுக்கி விட்டு, பாதியில் எழுந்து போகாது... எல்லாவற்றையும் ருசித்து ரசித்து சாப்பிட்டாள்.

''மன்னி கடைக்குப் போகணுமா... நானும்கூட துணைக்கு வரட்டுமா...?'' தானே வலிய உதவி செய்ய முன் வந்தாள்.

தானே தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை- ஆத்மராமன், பெரிய அயோக்கியன் என்பதைப் புரிந்து கொண்டு விட்டாள்- அதனால்தான் அந்தப் பிடிவாதத்தை விட்டு முன் போல பழைய சங்கீதாவாக பணிவான தங்கையாக... மாறி விட்டிருக்கிறாள் என்று இருவரும் எண்ணிக் கொண்டி ருந்தார்கள்.

இந்த மாற்றத்திற்கு அவளைப் பொறுத்தவரை ஒரு அழுத்தமான காரணம் இருந்தது.

கண்ணீர் விட்டுக் கதறி தன் காதலனைப் பற்றி அண்ணா விடமோ மன்னியிடமோ பேசிப் பயனில்லை.

அவன் நூற்றுக்கு நூறு நிரபராதி. அவன் மீது வேண்டு மென்றே ஏதோ ஒரு காரணம் கொண்டு அந்தப் பெண் குற்றம் சுமத்தியிருக்கிறாள்.

இந்தச் சிக்கலை விடுவிக்க அவள்தான் முயற்சி செய்ய வேண்டும். அது அவளது வருங்காலத்தைப் பற்றிய ஒரு முக்கியமான பிரச்சனை. அவள் குடும்பத்தவர்கள் உண்மையை உணர வேண்டும். ஆத்மராமன் மனம் நோகும்படி பேசியதைப் பற்றி அண்ணா பச்சாதாபப்பட வேண்டும். ஆத்மராமன் நிரபராதி என்று வீட்டவர்களுக்கும் வெளி உலகத்திற்கும் பளிச்சென்றே தெரிய வேண்டும். வீணாக ஒரு மனிதனைக் குற்றவாளியாக்கி சொல்லாலும் செயலாலும் குறிப்பிடுகிறோமே என்று எல்லோரும் வருந்த வேண்டும். எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் எத்தனை இடர்கள் அவர்கள் பாதை முன் வந்து முட்டுக்கட்டையாக எதிர்த்தாலும், அவள் அவனுக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருப்பாள் என்ற ஆழமானதொரு நம்பிக்கை ஆத்மராமனுக்கு ஏற்பட அவள் ஒரு வழி செய்தாக வேண்டும்.

எப்படி?

வக்கீல் கொடுத்த விவரங்கள் அடங்கிய அந்தத் துண்டு கடிதத்தை அவள் தன் படுக்கை அறைக்குள் கதவைச் சாத்திக் கொண்டு பிரித்து கவனமாகப் படித்து ஞாபகத்தில் அடக்கிக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெண் பெயர் கலைவாணி.

ஸாந்தோம் அருகே... ஒரு திருப்பத்திலே... உள்ளே செல்லும் சிறுசந்து போன்ற தெருவில் புதிதாக உருவாகியுள்ள மாடிக் கட்டடங்கள் நடுவே... தென்னந் தோப்புக்குள் ஒரு பழைய ஓட்டு வீட்டில் வசிப்பவள்.



அவள் அண்ணன் அருகிலுள்ளதொரு சந்தில் சைக்கிள் ரிப்பேர் கடை வைத்திருப்பதாக தகவல் கொடுத்திருந்தாள். அவள் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவள்... படித்த பின்னர்... அம்மா இறந்து போனதால் மேற்கொண்டு படிப்பைத் தொடராது அண்ணனுக்கு உதவியாக வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்தாள் என்பது கிடைத்த மற்றைய விவரங்கள்.

அண்ணா, மன்னி யாருடைய உதவியும் இன்றி அவள் கலைவாணியை சந்தித்தாக வேண்டும்.

மெல்ல பேச்சுக் கொடுத்து உண்மையைக் கிரகிக்க முடியுமானால்? நாளின் பெரும் பொழுது இதே சிந்தனையிலிருந்தாள் சங்கீதா. வக்கீலின் விவரப்படி... அந்தக் கற்பழிப்பு வேலைக்கு வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட இன்னும் சில தினங்களேதான் இருந்தன. அதற்குள் அவள் செயல்பட்டாக வேண்டுமே? என்ன செய்வது... எப்படி செய்யத் துவங்குவது?

மன்னி ஜெயாவுக்குக் கார் ஓட்டத் தெரியாது. வீட்டு டிரைவர் மட்டம் போட்டு விட்டால்... அவள் வெளியே போய் வர தனியாகத்தான் போய் வருவது வழக்கம். அதை நிவர்த்திக்கத்தான், சங்கீதா கார் ஓட்டக் கற்றுக் கொண்டு லைசென்ஸும் வைத்துக் கொண்டிருந்தாள். டிரைவர் இல்லாத நாட்களில் அவள் மன்னிக்கு சாரத்தியம் செய்வாள். சில நாட்களாக அந்த சம்பவத்திற்குப் பின்னர் அவள் தனக்கேற்பட்ட மனத் துயரத்தில் ஜெயாவுக்கு உதவ முன்வராது ஒதுங்கிக் கொண்டிருந்தாள்.

இப்பொழுது அவள் காரியம் வெற்றியாக வேண்டும்... அதற்கு கார் அவசியம் தேவைப்பட்டது.

"அண்ணாநகர் போகணுமா மன்னி... நான் கொண்டு விடறேனே? ஏன் கவலைப்படறேள்" அவளே வலிய வந்து

கேட்டபோது, மன்னி ஜெயா மனம் குளிர்ந்துபோய் விட்டாள். கோபம் தணிந்து தானே பழைய நிலைக்கு மாறிக் கொண்டு வராள் சங்கீதா. நல்லதுதான் என்று நினைத்தாள்.

''உசிரைக் கையில் பிடிச்சுண்டு வெளியில் போய்ட்டு வரேன். ரொம்ப அலட்சியமாக ஓட்டுறாள்... நீ நிதானமா பதவிசா ஓட்டரே... எனக்கு மனம் நிம்மதியா இருக்கு...'' புகழ்ந்தாள்.

''இன்னிக்கு எங்கே போகணும்னு சொல்லுங்க கொண்டு விடறேன்... எப்ப திரும்பி வந்து அழைச்சிண்டு போகணும் சொல்லுங்க. அந்த நேரத்துக்கு வந்து அழைச்சுண்டு போரேன். நீங்க உங்க சிநேகிதி வீட்டிலே பேசிக் கொண்டிருக்கும்போது... நான் என் சிநேகிதியைக் கொஞ்சம் பார்த்துட்டு வந்துடறேன்... சரிதானே?''

கொஞ்சலாகச் சிரித்தாள்.

தன் காரியம் ஆக வேண்டும் என்ற ஆவல் ஜெயாவுக்கு. ''அதனால் என்ன... அப்படியே செய்தால் போச்சு'' உத்தரவு கொடுத்து விட்டாள்.

# 7

மன்னி ஜெயா தன் ஆருயிர்த் தோழியைக் காண அடையார் புறப்பட்டால் லேசில் திரும்பமாட்டாள் என்பது சங்கீதாவுக்குத் தெரியும்.

''எப்ப கார் வேணும்னு போன் பண்ணுங்க- எடுத்துண்டு வரேன்...'' கூறிவிட்டு... ஜெயாவை அடையார் சிநேகிதியின் பங்களா வாயிலில் இறக்கி விட்டு, வேகமாகத் திரும்பி- ஸாந்தோம் பீச்சை நோக்கி விரைந்தாள்.

வக்கீல் கொடுத்திருந்த விவரப்படி... அந்தத் திருப்பத்தில் நுழைந்து தென்னந்தோப்பு நிறைந்த பகுதியருகே



தெரிந்த அந்த வீட்டுக்கு முன் வண்டியை நிறுத்தினாள். நெஞ்சு பக்கென்று அடித்துக் கொள்ள காரை விட்டிறங்கி துணிவுடன் கேட்டுகள் இல்லாத மதில் சுவர் பகுதியைத் தாண்டி உள்ளே வந்தாள்.

வீடு பூட்டியிருந்ததைக் கண்டு திகைத்துப்போய் விட்டாள். உதட்டைக் கடித்துக் கொண்டு யோசனையுடன் அதை உற்றுப் பார்த்தபடி நின்றவள் பின்னால் காலடி ஓசை கேட்கவே அரண்டு போய் திரும்பிப் பார்த்தாள்.

''என்னம்மா பார்க்கிறே?'' பின்னாலிருந்த ஓலைக் குடிசையினின்று வெளிப்பட்ட ஒரு கிழவி... வினவினாள்.

''குடும்பக் கட்டுப்பாடு பத்தி பேச வந்திருக்கேன். அடையார் தெற்குப் பகுதி மாதர் சங்கத்திலிருந்து வந்திருக்கேன். உங்க வீட்டிலே எத்தனை பேர் இருக்கீங்க. குழந்தைகள் எத்தனை? இந்தப் பக்கத்திலே எத்தனை வீடுகள் இருக்கு... விவரம் சொல்ல முடியுமா பெரியம்மா?'' மிகவும் குழைவாக சர்க்கரையாக வினவினாள். தோள் பையிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகம்- பேனா இரண்டையும் குறிப்பெடுக்க விரும்புகிறவள் போலக் கையில் எடுத்துக் கொண்டாள்.

காரையும்- அவளையும் மாறிமாறிப் பார்த்த அந்தக் கிழவி ஒரு வழியாகத் தன் மதிப்பீட்டை முடித்துக் கொண்டாள்.

''இந்த ஓட்டு வீடு- என் குடிசை இரண்டையும் தவிர பின்னாலே சந்து. அப்பாலே ஒரு நாலு மண் வீடு இருக்கு. எல்லாரும் அன்றாடங் காய்ச்சிங்க... இந்தப் பகல் வேளையிலே யாரும் ஊட்லே இருக்க மாட்டாங்க. நானும் அந்த மேல் வீட்டுக் கிழவியுந்தான் வேலை செய்ய தள்ளாம குடிசையிலே விழுந்து கிடக்கோம்... மத்தவங்க ஆணும் பெண்ணும் வேலைக்குப் போயிருக்காங்க... விளக்கு

வைக்கிற நேரத்துக்கு வந்தா... விபரமா அவங்களைப் பாத்து விசயத்தைக் கேட்டுப்பே...''

''பெரியம்மா... நீங்களே கொஞ்சம் விவரம் கொடுத் தீங்கன்னா, மருந்துகளோட நாளை மறுநாள் எங்க சங்கத்துக்காரங்க யாராச்சும் வரும்படி ஏற்பாடு பண்ணுவேன்... அடிக்கடி வரத்துக்கு முடியாது. எங்களுக்கும் வேலை ரொம்ப இருக்கு...'' பர்சைத் திறந்து இரண்டு ரூபாய் நோட்டை இழுத்துக் கிழவியிடம் நீட்டினாள்.

''மகராசியா இரும்மா. நேத்துக்கு கையிலே இருந்த துட்டையெல்லாம் போட்டு வெத்திலை புகையிலை வாங்கிட்டேன். ஒரு பைசாகூட கிடையாது. அந்த மூலைக் கடைக்காரன் கிட்டே கடனா கேட்கப் பயந்துண்டு இருந்தேன். சாமியே அனுப்பிச்சாப்பல நீ வந்து... ஹி-ஹி...'' பொக்கை வாயைத் திறந்து பலமாக மகிழ்ச்சியுடன் சிரித்தாள். பணத்தை இடுப்பு சுருக்குப் பைக்குள் லபக்கென்று வைத்து செருகிக் கொண்டாள்.

''ஆமாம், என்ன வெவரம் வேணுங்கற தாயி... சொல்றேன்'' மகிழ்ச்சியுடன் முன்வந்தாள்.

''இங்கே இருக்கிறவங்களைப் பத்திதான்... வேற என்ன...'' சங்கீதா செல்லமாக அவளைப் பார்த்தாள்.

கிழவி சொன்னபடி பொழுது உச்சியைத் தாண்டி விட்ட அந்த வேளையில் தெருவில் ஜனநடமாட்டம்கூட காணப்படவில்லை. எங்கேயோ ஒரு ரிக்‌ஷாக்காரன் பள்ளிக்கூடக் குழந்தைகளை அடைத்துக் கொண்டு மறு திக்கில் விரைந்து கொண்டிருந்தான். நிம்மதியாக இரண்டு எருமை மாடுகள் தெருவில் கிடந்த காகிதங்களையும்- பாதையோரத்தில் தப்பித் தவறித் தலைநீட்டிய புல்லையும் சேர்த்து விழுங்கிக் கொண்டு நின்றன. ''இன்னும் செத்த பொறுத்து வந்தா பின்னாலே பக்கத்து குடிசையிலே



இருக்கிற சம்பகம் வருவா... அதுவரை உனக்குக் காத்திட்டிருக்க முடியாது போலத் தோணுது. இந்தப் பக்கம் அப்படி, குழந்தை குட்டிகள் ரொம்ப இருக்கிற குடும்பம் கிடையாது. காலி மனைகளையெல்லாம் வாங்கி... மாடி வீடுகள் கட்டிட்டான்கள் மகராசன்கள். சம்பகத்துக்கு மூணு குழந்தைகள்- அவ- கடைசி புள்ளைக்குப் பிறகு ஆபரேசன் பண்ணிக்கிட்டா. அந்தப் பக்கம் இருக்கிற வீராசாமிக்கு அஞ்சு புள்ளைங்க- போன வருஷம் வாந்தி பேதியிலே ஒரு புள்ளே செத்துப் போச்சு...'' கிழவி தொணதொண கதை பேச ஆரம்பித்து விட்டாள். ஏதோ எழுதுவது போன்று டைரியில் பேனாவால், கிறுக்கிக் கொண்டிருந்த சங்கீதா சன்னமாகச் சிரித்தாள்.

''உங்க வீட்டிலே நீங்க எத்தனை பேர் இருக்கீங்க பெரியம்மா?'' மிகவும் பவ்வியமாகக் கேட்டாள்.

''நானும் என் பேரனுந்தான் இருக்கோம்... என் பேரன் டவுனிலே ஒரு சேட் வீட்டிலே வேலை பாக்கரான்- பொழுது சாயும்போதுதான் வருவான். அவன் சின்ன வயசிலேயே...'' என்று ஆரம்பித்த கிழவியின் பேச்சின் இடையே குறுக்கிட்டாள் அவள்.

''ஆமாம், இந்த ஒட்டு வீடு பூட்டிக் கிடக்குதே- இதிலே யார் இருக்காங்க...?''

''ஒரு அண்ணனும் அவன் தங்கச்சியும் இருக்காங்க. அண்ணன்காரன் பக்கத்து சந்திலே சைக்கிள் ரிப்பேர் கடை வச்சிருக்கான்னு சொல்றாங்க...''

சங்கீதாவின் இதயம் வேகமாகத் துடித்தது. சரியான இடத்திற்குத்தான் வந்திருக்கிறாள் என்ற உணர்வில் உள்ளத்திலே ஒரு உற்சாக சிலிர்ப்பு...

''சொல்லிக்கிடறாங்கன்னா நீங்க நம்பலைன்னு அர்த்தமா பெரியம்மா''- மெல்லிய குரலில் கேட்டாள்.

கிழவி சுற்றுமுற்றும் பார்த்தாள். பைக்குள் அடங்கியிருந்த இரண்டு ரூபாய் நோட்டு அவளது உள் உணர்வைத் தூண்டி விட்டது.

''நான் நம்பலை... அந்தப் பக்கம் இந்த வூட்டுக்கு இவங்க குடி வந்து ஒரு வருசம்தான் ஆவுது... அதுக்கு முன்னாடி வண்ணாரப்பேட்டையிலே இருந்ததாகச் சொல்றாங்க... அந்தப் பொண்ணு கலைவாணி... அவன் தங்கச்சிங்கறதுகூட பொய்ன்னுதான் எனக்குப் படுது...''

''அப்படின்னா பெரியம்மா ஏதாவது தப்புத் தண்டா காரியம் செய்துட்டு இருக்கிறவங்கன்னு சொல்றீங்க...''

''என் பேரன் நாள் முழுக்க உழைக்கிறான். மாசக் கடைசிலே எண்பது ரூபாய் சம்பளம் எடுத்துட்டு வறான். இந்த விலைவாசியிலே எனக்கு ஒரு நூல் சேலை எடுத்துக் கட்ட அந்தக் காசிலே கட்டுப்படியாகலை- அந்தக் கலைவாணி பொண்ணு என்னன்னா நேரத்துக்கு ஒரு துணி ஆம்பிள்ளைகளாட்டமாகால்சட்டை மாட்டிக்கிட்டு பவுடர் உதட்டுச் சாயம்... எல்லாம் போட்டுக்கிட்டு வெளியிலே கிளம்பிடறா... பாடுபட்டு சம்பாதிக்கிற காசிலே வந்த வாழ்வு இது இல்லேன்னு எனக்குத் தோணுது... அந்தப் பயல் அவள் அண்ணன்னு சொல்ற தடியன்... சாயங்காலமானா பட்டை போட்டுக்கிட்டு ஒரே ஆட்டமா ஆடறான்... ராத்திரி வேளையிலே இந்த வீட்டிலே சிரிப்பும் பேச்சுமா- நான் சொல்லக் கூடாது... நல்ல குடித்தனக் காரங்க இருக்கிற இடம்போல இல்லே...''

''கலைவாணி ஏதாவது ஆபீசிலே வேலை பாக்குதோ என்னவோ பெரியம்மா? நீங்க தப்பா நினைச்சுட்டு இருக்கலாம் இல்லையா?''

''ஆபீசுக்குப் போற மூஞ்சியைப் பார்க்கலை... நான் ஆளை அளந்துக்கிடுவேன். அண்ணன் தங்கச்சின்னு வேஷம் போட்டுக்கிட்டு இரண்டு பேரும் இன்னும் இரண்டு ரவுடிப் பசங்களை சகாயத்துக்கு வச்சுக்கிட்டு- ரொம்ப தப்பு வேலை செய்யறாங்கன்னு கண்டு புடிச்சுட்டேன்...''



உண்மையின் அருகே ஒடுங்கவிட்ட உணர்வில் நெஞ்சு படபடக்க சங்கீதா மெல்லக் கேட்டாள்.

''அப்படியா? நீங்க சொல்றதைக் கேட்க ரொம்ப அதிசயமா இருக்கே.''

''நீயே பொறுத்து இருந்தீன்னா உன் கண்ணாலேயே பார்த்து தெரிஞ்சுக்குவே. நமக்கென்ன வீண் வம்புன்னு இந்தப் பக்கத்துக் குடிசைக்காரங்க சும்மா கண்டும் காணாததுமாக இருக்காங்க. ஆனால் எனக்கு மட்டும் மனசு அடிச்சுக்குது. ஒரு நாளைக்கு இல்லாட்டா ஒரு நாள் எவனாவது அவளைப் பிடிச்சு செம்மையாக உதைக்கணும். அப்பத்தான் என் மனசு ஆறும்.''

''அப்படி என்னதான் தப்பு செய்துடறாங்க...''

''அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறே அம்மா. சாயங்காலமானா அந்தக் கலைவாணி நாளைக்கு ஒரு அலங்காரத்திலே வெளியே புறப்பட்டுடுவா. பீச்சு ஓரத்திலே போய் நின்னுக்கிட்டு என்ன ஜாலம் பண்ணுவாளோ தெரியாது, வரும்போது காரிலோ அல்லது மோட்டார் சைக்கிள் பின்னாலோ ஒரு ஆளோட வருவா.''

''ஓகோ! அந்தக் காரியம் செய்யறாங்களா?''

''விபசாரம் பண்ணினாகூட தேவலைன்னு சொல்லுவேன்- வயத்துக்கில்லே இந்தத் தொழிலிலேயே இறங்கிட்டான்னு மன்னிச்சுடலாம். ஆனால் இரண்டு பேரும் அக்கிரமம் செய்யறாங்க- அதுதான் எனக்குப் பார்க்க பார்க்க ஆத்திரமா இருக்கு. காரிலும்- சைக்கிளிலேயும் கூட்டியார ஆளை வீட்டுக்குள்ளே இட்டுட்டு போய்

கொஞ்ச நேரத்திலே கலைவாணி ஒன்னு கத்துவா. தயாரா காத்துக்கிட்டே நிக்கற ரவுடிப் பசங்க ஓடியாருவான்க. என் தங்கச்சியைக் கையைப் பிடிச்சு இழுத்து அக்கிரமம் செய்யிறியா அயோக்கிய நாயேன்னு அண்ணன் கை நீட்டிக் கிட்டு கலாட்டா பண்ணுவான். பாவம், வந்தவன் பயந்து போய், அவங்க கேட்டபடி கைக் கடிகாரம், சட்டைப் பையில் இருக்கிற பணம் எல்லாத்தையும் கொடுத்திட்டு ஓடிப் போயிடுவான்.''

''இதையெல்லாம் நீங்க பார்த்துட்டு சும்மா இருக்கிங்களே?'

''நாம என்ன செய்ய முடியும்? பொருளை இழந்தவன் போலீசிலே போய் புகார் பண்ணனும். முதலிலே நான்கூட உண்மையினு நினைச்சுட்டு, உலக்கையைத் தூக்கிட்டு சண்டைக்குப் போனேன்- பிறகுதான் இது ஒரு நாடகம்னு புரிஞ்சுது.''

''எப்படிப் புரிஞ்சுது?''

''ஒரு தடவை நடக்கும். மிஞ்சினா ரெண்டு வாட்டி இதுமாதிரி அத்துமீறி பசங்க பெண்கிட்ட வாலாட்டுவாங்க. திரும்பத் திரும்ப இதே மாதிரி நடந்தா அது நாடகம் இல்லாம மெய்யான சங்கதியாவா இருக்கும்?''

''பலே பெரியம்மா! நீங்க ரொம்ப உஷாரான ஆசாமிதான்.''

''ஒரு தபா ஒரு முரட்டுப் பயகிட்ட அண்ணனும் தங்கச்சியும் போட்ட நாடகம் பலிக்கலே. சக்கையா ரெண்டு பேரையும் நொறுக்கிட்டுப் போயிட்டான். ஆனால் பாவம் பிள்ளையாண்டான் ஒருத்தன், கொஞ்ச நாளுக்கு முன்னாடி பெய்த மழையின்போது காரிலே இந்தப் பெண்ணோட வந்துட்டு ரொம்பப்பாடுபட்டான்.''

சங்கீதாவின் மார்பு வேதனையில் விரிந்தது.



''அண்ணன்காரன் அவனை அடிச்சுட்டானா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. பையன் சாமர்த்தியக் காரன்தான். போலீசுக்குப் போய்க்கோன்னுட்டு, பேசாம காரை ஓட்டிக்கிட்டுப் போயிட்டான். அத்தோட கதை முடிஞ்சுதுன்னு நினைச்சேன். ஆனா பாவம் அந்தப் பையன் மேலே தப்புக் குற்றம் வந்து சேர்ந்துட்டுதுன்னு பத்திரிகை யிலே போட்டுட்டாங்களாம். இங்கே பேசிக்கிட்டாங்க.''

''யாராவது துணிஞ்சு உண்மையைப் போலீசுக்கு ஏன் எடுத்துச் சொல்லக்கூடாது?''

''அட போம்மா, நீ ஒண்ணு... இதுமாதிரி போக்கிரி களோட வம்பு செய்துட்டு இங்கே நிம்மதியா இருக்க முடியுமா? நமக்கேன் பொல்லாப்புன்னு வாயை மூடிக் கிட்டு இருக்கோம். அவ்வளவுதான்.''

''ஆமாம், அந்தப் பொண்ணை இப்போ காணலையே?''

''காத்தாலே ஏதோ காரியமா டவுனுக்கு அண்ணனும் தங்கச்சியும் போனாங்க. அந்த வம்பு விஷயம் கோர்ட்டுக்கு வருதாமே? அதைக் கண்டுகிட்டு வரப் போனாங்களோ என்னவோ?''

''ஆமாம் அந்தப் பெண் அந்த வம்புக்குப் பிறகு ஒழுங்காத்தானே இருக்கா.''

''அவ எப்படி ஒழுங்கா இருப்பா? அதானே அவங்க பிழைப்பு. இதோ பார் தாயி! உனக்கு இதைப் பத்தி விவரமாத் தெரியணும்னா விளக்கு வைக்கிற சமயம் இந்தப் பக்கமா வந்து பாரு, இந்தக் குட்டி சோக்கா பவுடர் அடிச்சுக்கிட்டு... ஆண்களை மடக்க புறப்படற ஜோரை நீ பார்க்கலாம்.''

''நிதமும் நடக்கிற நாடகமுன்னா சொல்றீங்க?''

''அடிக்கடி நடக்கிற நாடகம்ன்னு சொல்றேன். நேத்து கூட ஒரு ஏமாளி அகப்பட்டான் பாவம்...''

கோபத்தில் கொதித்துப் போனாள் சங்கீதா.

உண்மை இவ்வாறு இருக்கும்போது இதைப்பத்தி ஆராய மறுத்து அண்ணாவும் மன்னியும் அத்மராமனைப் பற்றி எவ்வளவு துச்சமாகப் பேசி விட்டனர்.

''சரி பெரியம்மா! ரொம்ப நன்றி- பிறகு உங்களை மறுபடி வந்து பார்க்கிறேன்.''

விரைவாக விடை பெற்றுக் கொண்டாள்.

மன்னி ஜெயாவைத் திரும்ப வீட்டில் கொண்டு வந்து விட்டபோது பொழுது மங்கத் தொடங்கி விட்டிருந்தது. அதைக் கண்டதுமே அவளுள் ஏகப் பரபரப்பு. ''என் சிநேகிதி ஒருத்தியைப் பார்த்துட்டு உடனே வந்துடறேன் மன்னி.''

பதிலை எதிர்பார்க்காது காருடன், பங்களாவை விட்டு வேகமாக வெளியேறினாள்.

சாந்தோம் பீச்சின்... அந்தத் திருப்பத்தின் அருகே நெருங்கியபோது... அவள் நெஞ்சு இரண்டாகப் பிளந்து விடும்போல, வேகமாக அடித்துக் கொண்டது. அந்த ஓட்டு வீட்டிலிருந்து... அந்தப் பெண்- கிழவி சொன்ன கலைவாணி... அந்திவேளையின் நாடக ஆரம்பத்திற்காகப் பலத்த ஒத்திகைகளுடன்... தெருவுக்குள் புகுந்து கடற்கரையை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

மாலையிலிருந்தே மேக மூட்டத்தினால் வானம் கருக்கத் தொடங்கி விட்டிருந்தது. விளக்குகள் எரியத் தொடங்க வில்லை. இருட்டு கனமாக அப்பிக் கொள்ளத் தொடங்கியது.

முன்னும் பின்னும்... திரும்பிப் பார்த்தபடி சாலை ஓரமாக- பெண்கள் கல்லூரியைத் தாண்டி அவள் நடந்து கொண்டிருந்தாள். ஆரஞ்சு வண்ண ஷிபான் சேலையும்... கையில்லா ரவிக்கையுமாக சிலும் சிலும் என்று ஹை ஹீல்



ஷூவால் நடந்த அந்தப் பெண்ணை இருள் கவ்விக் கொண்ட போதிலும்... சற்றுத் தொலைவிலிருந்தபடியே மெல்லக் காரில் பின்பற்றிக் கொண்டிருந்தாள் சங்கீதா.

தன்னைத் தாண்டிச் செல்லும் வாகனங்களை திரும்பிப் பார்த்தபடி நின்று... நின்று மேலே அவள் நடப்பதைக் கண்டு பொறுமை குறைந்து போனாள் சங்கீதா.

வலையில் அகப்பட்ட மீன் நழுவி விட்டால் என்ற கவலையில் ஆக்ஸிலேட்டரைச் சற்று அழுத்தமாகவே மிதித்துக் காரை சர்ரென்று அந்தப் பெண்ணின் அருகே நிறுத்தினாள்.

சாலை விளக்குகள் எரியத் தொடங்காததினால் மழை மூட்டத்து இருளில் அந்தப் பெண் உள்ளே இருக்கும் ஆளை இனங்கண்டு கொள்ளாத அவசரத்திலே முன் ஆசனத்தின் கதவைத் திறந்து கொண்டு ஏறி உட்கார்ந்தாள்.

சங்கீதா வேகமாகக் காரை செலுத்திக் கொண்டே அவள் பக்கம் மெள்ளத் திரும்பினாள்.

''மிஸ் கலைவாணி- எங்கே போகணும்?

திடுக்கிட்டுப் போய் விட்டாள் அந்தப் பெண். ''நான்... வந்து... என் பெயர் வந்து...'' எதிர்பாராத அதிர்ச்சியிலே குழப்பத்துடன் குளறியதைக் கேட்டு சங்கீதா கோபத்துடன் சிரித்து விட்டாள்.

சாலை விளக்குகள் பளீரென்று எரியத் தொடங்கியபோது சங்கீதா கல்லூரிப் பகுதியைத்தாண்டி வெகு தூரம் வந்து விட்டிருந்தாள்.

''இதோ பார் கலைவாணி! உன் பெயர், நீ செய்கிற காரியம் இதையெல்லாம் பத்தி என்கிட்டே மறுப்பதில் பிரயோசனம் இல்லை. நான் பெண் போலீஸ் படையைச் சேர்ந்த சி.ஐ.டி. உன்னைப் பத்திப் பல புகார்கள் மேலே போலீஸ் உன்னைக் கண்காணிச்சிக் கிட்டிருக்காங்க.

இப்போ உன்கிட்ட சில கேள்விகள் கேட்கப் போகிறேன்.''

மேல் துணியைக் கிழித்துக்கொண்டு ஆகா ஊஹஊ ன்னு கத்தி கூச்சலிட்டு ரகளை செய்து ஆத்மராமனை குற்றவாளி யாக எல்லார் முன்னிலும் நிறுத்தி வைத்தவள். இப்போது ஆடிப் போய் விட்டாள். உதடுகள் பயத்தில் துடிக்க, கண்களில் நீர் புரள, பதற்றமாக சங்கீதாவைப் பார்த்தாள்.

''யாரோ ஆம்பிள்ளை ஒட்டற வண்டின்னுதானே துணிச்சலா ஏறி உட்கார்ந்தே? பொம்பளை உள்ளே உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஏமாந்துட்டே. அதுவும் ஒரு சி.ஐ.டி.ன்னு கேட்டதும் பயமா இருக்கு இல்லையா- உண்மையை என்கிட்ட ஒப்புக் கொண்டுடு. உனக்கு நான் இந்தச் சிக்கலிலிருந்து விடுதலை வாங்கிக் கொடுக்கிறேன். பாவம் சின்னப் பெண். அண்ணன்னு சொல்லிக்கிட்டு உன்னை ஆட்டிப் படைக்கிறவன்கிட்டே அகப்பட்டுக் கிட்டு நீ... முழிக்கிறே. இல்லையா?''

திடீரென்று கலைவாணி முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு விசும்பி அழுதாள்.

''நீங்க சொல்வது உண்மைதான். அவரு என் அண்ணன் இல்லை. என்னை கிராமத்திலிருந்து இட்டுக்கிட்டு வந்தவர். வழியோட போறவங்களை வழி மறிச்சு, இப்படி ஒரு நாடகம்போட்டு பயமுறுத்தி துட்டுச் சம்பாதிக்கிற ஒரு கூட்டத்திலே நான் சிக்கிக்கிட்டேன். என்னை நீங்க காப்பாத்தறதா வாக்குக் கொடுத்து...'' தாங்க முடியாது அவள் விம்மினாள்.

சங்கீதாவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை இத்தனை சுலபமாக அவள் வெற்றியடைவாள் என்று எதிர்பார்க்க வில்லை.

''அப்படியே வாக்குத் தர்றேன். என்னை சந்திச்சது பத்தி உன் அண்ணன் கிட்டே மூச்சு விட்டியோ காரியம் கெட்டுப் போயிடும். நீ ஒண்ணு செய்யணும். நடந்த உண்மையை



மறைக்காம கோர்ட்டிலே நீதிபதிகிட்டே சொல்லிடணும். அப்போ தப்பிச்சுப்பே. பொய் பேசினியோ உன்னை உள்ளே தள்ள என்னால் முடியும்... உன்னைப் பத்தின மத்த புகார்களை தயாரா எடுத்து வச்சிருக்கேன்.''

''வேண்டாங்க... என்னைக் காப்பாத்திடுங்க... நான் எங்க ஊர் போய், திரும்ப அம்மா அப்பா கால்லே விழுந்து அவங்களோட சேர்ந்துக்கறேன். இந்த பொழைப்பு எனக்கே பிடிக்காம போயிடுச்சி...''

''ஆமாம், அன்னிக்கி அந்த கார்லே வந்தவர்கிட்டே என்ன கேட்டே.''

''லிப்ட் கேட்டேன். மழை பெய்துக்கிட்டு இருந்தது. உதவி செஞ்சார். பாவம்... அவரையே நான் போலீசில் குற்றவாளியா காட்டிக் கொடுக்க நேர்ந்திடுச்சு. எல்லாம் வேஷக்கார அண்ணன் வேலை. நான் மறுத்திருந்தா உதைச்சு கொன்னுட்டிருப்பார்.''

''பொய்யா கேஸ் ஜோடிச்சா அது கோர்ட்டிலே நிக்குமா... யோசிச்சியா?''

''எனக்கு ஒண்ணும் தெரியாது. அவங்க சொன்னபடி கத்தி கூச்சல் போட்டேன். இந்தக் கார்க்காரர் பயப்பட வில்லை. போலீசுக்கு இழுத்துட்டு போய் என் அண்ணன் என்கிறவர்தான் கேஸ் பதிவு செஞ்சார். பிறகு போலீசில் நடந்தது எல்லாம் உங்களுக்குத் தெரிஞ்ச கதைதானே?''

''வீணாக அந்த மனிதன் மேலே நீ குற்றம் கற்பிச்சேன்னு நீதிபதிகிட்டே உண்மையைச் சொல்லி, அழுதுட்டின்னா உன்னை மன்னிச்சு விட்டுடுவார். இல்லாட்டி நீ ஒரு அஞ்சு வருஷத்துக்கு உள்ளே போயிடுவே புரிஞ்சுதா?''

''அப்படியே செய்கிறேன். ஆனால் அண்ணன்.''

''நீ உண்மையைச் சொன்னால் நீதிபதி அவனுக்குத் தக்க தண்டனை கொடுப்பார். உனக்கு இந்தக் கூட்டத்திலிருந்து

விடுதலை கிடைக்கும். உன் ஊருக்குப் போய் உன் மனுஷாளோட நீ சேர்ந்துக்கலாம். நல்லா யோசிச்சுப் பார்.''

அழுது கொண்டே அவள் தலையை ஆட்டினாள். சிறிது பொழுதில் ஸாந்தோம் பீச் அருகே அவளை இறக்கி விட்டாள் சங்கீதா.

''சொன்னது ஞாபகமிருக்கட்டும். கோர்ட்டிலே வந்து குழப்பக் கூடாது. உண்மையைப் பளிச்சின்னு சொல்லிடணும். செய்யறியா?''

மிரட்டலாக உத்தரவிட்டு விட்டு வேகமாகக் காரை செலுத்திக் கொண்டு சென்றாள்.

ஆத்மராமன் மீது கற்பழிப்புக் குற்றம் என்றதுமே அழுது கொண்டு துவண்டு கிடந்த அவளா இப்படித் திடீரென்று எக்கச்சக்கமான துணிவுடன் செயல்படுகிறாள்? அவளுக்கே அவளது செய்கையில் நம்ப முடியாத ஒரு வியப்பு.

# 8

விசாரணை நடக்கவிருந்த நாள் அன்று காலை அவள் வழக்கம்போல சீக்கிரம் குளித்து விட்டு வெளியே செல்ல ஆயத்தமானாள். காலை காப்பி டிபனுக்கு அவர்கள் எல்லோரும் சாப்பாட்டறையில் கூடியிருந்தபோது சங்கீதா ஆரம்பித்தாள்.

''அண்ணா! இன்னிக்குத்தான் ஆத்மராமனின் கேஸ் விசாரிக்கப்படப் போகிறது.''

''அதுக்கென்ன இப்போ... அவனுக்கு ஆரத்தி சுத்தி வழியனுப்பணுமா?''

கோபத்துடன் அண்ணா கேட்டதை அவள் பாராட்டவே யில்லை.

''நாமெல்லாம் அங்கே போகணும்- கேஸ் எப்படி முடியுதுன்னு பார்க்கணும்.''



''எதுக்காக... நமக்கும் அந்த கேஸுக்கும் என்ன சம்பந்தம் வச்சுக் கிடக்கு?''

''ரொம்பவே சம்பந்தம் இருக்கு. கனியூர் ஜோசியர் பொருத்தம் சரின்னு சொல்லிட்டதாலே நீங்களும் ஆத்ம ராமனை மாப்பிள்ளையா ஏத்துக்கத் தயாராயிருந்தேள். நடுவில் இப்படியொரு அபத்தம் ஏற்பட்டுடுத்து. இதை ஒரு சாக்காக வச்சுண்டு, என் மனசை மாத்தப் பார்த்தேள். ஆனால் நான் ஒரே புடியா இருக்கேன்.''

''என்ன உளர்ரே? உனக்கு இப்படிப் பேச யார் கத்துக் கொடுத்தா- என்ன தைரியம்?''

''யாரும் கத்துக் கொடுக்கலை. என் மனசாட்சிதான் தெம்பைக் கொடுத்திருக்கு. உண்மையைப் பேச நான் ஏன் பயப்படணும்? எனக்குப் பிடிக்காத இடத்திலே என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க நீங்க வற்புறுத்த முடியாது. அதனாலே கோர்ட்டுக்கு என்னோட வாங்க. கேஸ் எப்படி முடிகிறதுன்னு பாருங்கோ.''

''என் பேர் இன்னும் பேப்புரில் வரலைன்னு உனக்குக் கவலை, இல்லையா?''

''கோர்ட்டுக்கு வேடிக்கை பார்க்க வர்றவாளையெல்லாம் பற்றி பத்திரிகைக்குக் கவலை கிடையாது. நீங்க வாங்கோ... ஆத்மராமன் குற்றவாளின்னு நிரூபிக்கப்பட்டால், அவரை மறந்துட்டு நான் உங்க பின்னாடி வீட்டுக்குத் திரும்பிட றேன். ஏன் அதுக்கப்புறம் கல்யாணம் என்கிறதையே நான் ஒரேயடியாக மறந்துடறேன்.

''சங்கீதா! என்ன பேச்சு இது...'' இரைந்து கத்தினார் அண்ணா.

''நான் ரொம்பவே துணிஞ்சுட்டேன் அண்ணா! இதுக்கு நீங்கதான் பொறுப்பாளி. இந்த மாதிரி சங்கடம் வந்த போது, கூட இருந்து துணை செய்யாம எங்களுக்குள்ளே ஏற்பட்ட

அன்பைத்துண்டிக்கப் பார்த்தேள்- அதுவே எனக்கு ரொம்ப வைராக்யத்தை ஏற்படுத்திடுத்து. அவர் நிரபராதின்னு நிரூபிக்கப்பட்டால் நீங்க அவர்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிண்டு எங்க கல்யாணத்தை நடத்தி வைக்கணும்...

''நான் மறுத்தால்?''

''நாங்களே அதுக்கப்புறம் பெரியவா குறுக்கீடு இல்லாம எங்கள் கல்யாணத்தை நடத்திப்போம். நிரபராதின்னு தெரிஞ்ச பிறகு அவரை நான் கைவிடறது ரொம்பத் தப்பு. இதே போல நீங்க இருந்து, மன்னி உங்களைப் புறக்கணிச்சா எப்படி இருக்கும்னு யோசிச்சுப்பாருங்க.''

''நான் கொஞ்சம் முன்னாடியே கோர்ட்டுக்குப் போய்க் காத்திருக்கிறதுன்னு தீர்மானிச்சுட்டேன். கார் கொடுத்து உதவினா சரி, இல்லாட்டா பஸ் பிடிச்சு போயிடுவேன்.'' சொல்லிக்கொண்டே எழுந்திருந்தாள்.

ராமசாமி திகைத்துப் போய்விட்டார். இந்தத் திடீர் மாறுதலை அவர் தன் தங்கையிடம் சிறிதும் எதிர் பார்க்கவே யில்லை. பணிவும், பரிவுமாகப் பேசும் வழக்கமுள்ள இந்தப் பெண் இத்தனை ஆக்ரோஷமாக, காளிபோல மாறி விட்டாளே... இதுக்கு நானா பொறுப்பாளி... அசந்து போய் விட்டார் அண்ணா.

நீதிமன்றத்து வாயிலில் ராமசாமியையும், சங்கீதாவை யும் பார்க்க நேர்ந்தபோது வெட்கத்தில் குறுகிப் போனான் ஆத்மராமன்.

அவன் அனுபவிக்கப் போகிற அவமானத்தைக் கண்டு களிக்கவா அவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள்? நெருப்பாக அவன் நெஞ்சு எரிந்தது.

நீதிபதி முதலாவதாக அந்தக் கேசை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு விட்டிருந்தார்.



கலைவாணியைக் கூண்டில் ஏற்றி விசாரிக்கத் தொடங்கியபோது அவள் பொடியாகிப் போனாள்.

''நீதிபதி அவர்களே, நடந்ததாகச் சொல்லப்பட்ட அந்த சம்பவம் அத்தனையும் என் அண்ணன் ஜோடித்தது. மழை பெய்த நாள் அன்று நான்தான் அவரை நிறுத்தி லிப்ட் கேட்டேன். தயங்கிக் கொண்டேதான் உதவினார். அபாண்டமாக ஒரு நிரபராதிமேல் நான் வீண்பழி சுமத்தினதுக்கு ரொம்ப வருத்தப்படறேன். இப்படி பொய்க் குற்றம் சாட்டினதுக்கு நீங்க எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கிடறேன்...'' படபடவென்று பேசி விட்டு கோவென்று அழுது விட்டாள்.

இருசாரார் பக்கமும் கற்பழிப்பு ஏதுமில்லை என்று வைத்தியப் பரிசோதனை முடிவுகள் அறிவித்தன.

கலைவாணியின் இளம் வயதினையும்- வாழ்ந்த சூழ் நிலையையும் கருத்தில் கொண்ட நீதிபதி கருணை காட்டி அவளை எச்சரித்து விட்டு ஆத்மராமன் மீது கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டு எந்த வகையிலும் நிரூபிக்க முடியாது போய் விட்டதினால் அவர் நிரபராதி என்று தான் நம்புவதாகக் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார். கற்பழிப்பு குற்றம் சாட்டிய பெண்ணை நீதிபதி கடுமையாக எச்சரித்தார்.

திரு.ஆத்மராமன் நிரபராதியாக விடுதலை அடைந்தார்.

நாளேடுகளில் அன்று மாலை செய்திகள் எப்படிப் பிரசுரிக்கப்படும் என்று எண்ணியவளாக மகிழ்ச்சியுடன் ஆத்மராமன் அருகே நெருங்கினாள் சங்கீதா.

ஆனால் அவன் யாரையும் கவனிக்காது விர்ரென்று வெளியேறி தனது வக்கீலுடன் காரில் கிளம்பிப் போய் விட்டான்.

''அம்மா!'' பரபரப்புடன் அவன் கதவைத் தட்டியபோது சங்கீதா வந்து கதவைத் திறந்தாள்.

''அம்மா கோவிலுக்குப் போயிருக்கார். நீங்க வந்ததும் சூடா ஹார்லிக்ஸ் கலக்கித் தரும்படி சொல்லி விட்டுப் போயிருக்கார்.''

சொல்லிக்கொண்டே அவள் சுவாதீனமாக அவனது வீட்டுச் சமையலறைக்குள் சென்று விட்டாள்.

வியப்பும் கலவரமுமாக விழித்தவன் முன்- ஆவி பறக்கும் ஹார்லிக்ஸ் டம்ளரை வைத்தாள்.

''சூடு ஆறுமுன் சீக்கிரம் சாப்பிடுங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் என் அண்ணனும் மன்னியும் வந்து உங்ககிட்ட மன்னிப்புக் கேட்கப் போறா. என் தங்கையைக் கல்யாணம் செய்துக்கணும்னு அண்ணா கேட்கப் போறார். அப்போ என்ன சொல்லப் போறேள்?'' உற்சாகமாக- பரிகாசமாக மகிழ்ச்சியுடன் கேட்டாள்.

கோவிலுக்குச் சென்ற அம்மா அவசரமாகத் திரும்பி வந்து ''உண்டியிலே பணம் போட எடுத்து வச்சிருந்தேன்... அதை மறந்துட்டு கிளம்பிவிட்டேன். ஆனால் நல்லதா போச்சு நான் திரும்பி வந்தது. நீ சொன்னது நன்னா கேட்டது. அவன் என்ன பதில் சொல்வான்னு நான் சொல்லிடறேன்! 'உன்னைப்போல ஒரு நல்ல பெண்ணை மாட்டுப் பெண்ணா அடைய எங்கம்மா கொடுத்து வச்சிருக்கணும்' அப்படின்னு சொல்வான். சங்கீதா! நடந்ததையெல்லாம் விவரமா நான் ஆத்மாகிட்ட அப்புறம் சொல்றேன். நீங்க ரெண்டு பேரும் பேசிண்டு இருங்கோ. சீக்கிரம் கோவிலிலிருந்து திரும்பி வந்துடறேன்.''

அம்மா சொல்லிக் கொண்டே அலமாரித் தட்டிலிருந்த மணி பர்சை எடுத்துக் கொண்டு வாயிற் கதவை சாத்திக் கொண்டு வெளியேறினாள்.

''அப்படின்னா! நீ என்னை ஆரம்பத்திலிருந்தே நிரபராதின்னு நம்பினியா சங்கீதா?''



அவன் குரல் உணர்ச்சி வசத்தில் நடுங்கியது.

''ஒரு எறும்புக்குக்கூட தீங்கு செய்ய முடியாத ஒரு நல்ல மனிதர் நீங்க. அப்படியிருக்கும்போது ஒரு பெண்ணை அவமானப்படுத்துவீங்கன்னு யார் நம்புவா? என்னைப் பத்தி என்ன நினைச்சுண்டு இருந்தேள்?''

கனிவுடன் கேட்டபடி அருகில் வந்து அவனது கரங்களை அன்போடு பற்றினாள்.

தன் முகத்தோடு அவள் கைகளைப் பதித்துக் கொண்டு ஆத்மராமன் கட்டுக்கொள்ள முடியாது குலுங்கி அழுது விட்டான்.

''அடடா! என்ன இது... ஆண்பிள்ளைகள் தைரியசாலின்னு சொல்வா... நீங்க இப்படி...''

''இது ஆனந்தக் கண்ணீர். எந்த நிலையிலும் என்னை நேசிக்க, எனக்குத் துணையா இருக்க ஒருத்தி இருக்காங்கிற உண்மையின் அழுத்தத்தைத் தாங்க முடியாது பொங்கியெழுந்த மகிழ்ச்சி உதிர்க்கும் கண்ணீர் இது'' என்றான் ஆத்மராமன். தனது முந்தானையால அவன் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள் சங்கீதா.

''இந்த அனுபவம் எனக்கு பாடமாக அமைஞ்சது. கற்பழிக்கப்பட்ட பெண் அவமானத்தில் சித்ரவதைப்பட்டு துடிச்சுப் போகிறாள் என்று எப்பவும் நான் பெண்கள் பக்கமே அனுதாபப்படறது வழக்கம். கற்பழித்ததாகப் பொய்யாகக் குற்றம் சாட்டப்படும் ஆணும் அவமானத்தால் துடித்து மிகவும் வேதனை அடைகிறார் என்பதைப் புரிஞ்சுண்டேன். அவமானம் எனும் உணர்வு இருவருக்கும் பொதுவானதுன்னு தெரிஞ்சுண்டேன்.''

''அது சரி... இப்போ சட்டுனு எழுந்து முகத்தை அலம்பிண்டு தலையை வாரிண்டு தயாரா முன் அறையிலே உட்காருங்க. எங்க அண்ணாவும் மன்னியும் வர நேரம்'' உற்சாகப்படுத்தினாள் அவள்.

''நானும் ஒண்ணு இப்ப தெரிஞ்சுகண்டேன். உங்கண்ணா கேட்கிறதுக்கெல்லாம் சரின்னு ஒத்துக்கொண்ட மறு நிமிடமே என் சுதந்திரம் எல்லாம் பறிபோய், உட்கார்ன்னா உட்கார்ந்து... நில்லுன்னா நிற்கப் போறேன். அப்படி நீ என்னை விரட்டி அடிக்கப்போறே...'' கொஞ்சலாகச் சொல்லிக்கொண்டு அருகில் நெருங்கியபோது சங்கீதா சிரித்துக் கொண்டு உள்ளே ஓடி விட்டாள்.

அந்தச் சிரிப்பு சதங்கை எழுப்பிய சங்கீத நாதமாக... அவன் காதுக்கும் மனதிற்கும் எத்தனை இனிமையாக... நிறைவாக இருந்தது.

முற்றும்